பூவை. எஸ். ஆறுமுகம்

PSA-2

# அந்தி நிலாச் சதுரங்கம்



மணியம் பதிப்பகம்

# அந்தி நிலாச் சதுரங்கம்

பூவை எஸ். ஆறுமுகம்

மணியம் பதிப்பகம்
39, இரத்தின முதலித் தெரு,
குறிஞ்சிப்பாடி, 607302,
தெ. ஆ. மாவட்டம்

முதற்பதிப்பு: ஜூன், 1982

உரிமை ஆசிரியருக்கு:
(C) பூவை எஸ். ஆறுமுகம்

தயாரிப்பு: சு. சம்பத் M.A.,

விலை ரூ. 13/-

அச்சிட்டோர்:
எம். ஆர். பிரிண்டர்ஸ்
சென்னை-600 033.

# பதிப்புரை

புறக்கவர்ச்சியில் பரபரப்பூட்டி ஆரவாரிக்கும் மின்மினிக் கூட்டமாகிய நவீன எழுத்தாளர்களுக்கு மத்தியில், பண்பாடு சிதையாமல், சீரிய நோக்கோடு எழுத்துப் பணி புரிந்து வரும் முதிர்ந்த எழுத்தாளர், திரு. பூவை. எஸ். ஆறுமுகம் ஆவார். அவர்தம் சிறப்பினைத் தமிழ் கூறு நல்லுலகம் மிகுதியாய் அறியும். கிராமிய மணமும் வளமும் அவரது எழுத்துக்களில் சிறக்கக் காணலாம்.

அவர்தம் பல்வகைப் படைப்புக்களையும் தொடர்ந்து எங்கள் பதிப்பகம் வாயிலாக வெளியிட்டுப் பெருமை பெற விழைகின்றோம்.

இந்நாவலை வெளியிட வாய்ப்பளித்த ஆசிரியர் திரு. பூவை எஸ். ஆறுமுகம் அவர்கட்கும், இதனை அச்சேற்றி உதவிய திரு. எம். ஆர். பிரிண்ட்டர்ஸ் அவர்கட்கும், எழிலுற முகப்போவியம் படைத்த ஓவியர் திரு. ஆனந்தன் அவர்கட்கும் எங்கள் நன்றி உரியதாகும்.

குறிஞ்சிப்பாடி
19-6-1982

மணியம் பதிப்பகத்தார்

## தமிழுக்கு மீண்டும் நன்றி

● இலக்கியச் சுவை ததும்பப் பிறந்திருக்கிறது, இந்த 1982 ஆம் ஆண்டு!— முப்பது ஆண்டுகளுக்கும் கூடுதலான என்னுடைய இலக்கிய வாழ்க்கையில் உறுதுணையாக இருந்து வருகின்ற நல்ல தமிழ்ப் படைப்பு இலக்கியத்தின் உண்மையான ஆர்வலர்களாகிய உங்கட்கெல்லாம் புதிதான, தரமான, சுவையான, பண்பான, வித்தியாசமான ஓர் இலக்கியப் படையலை அன்பு தழுவிய விருந்தாக மீண்டும் படைத்திட நல்வாய்ப்புத் தற்போது எனக்கு வசதியாகவே ஏற்பட்டு விட்டது அல்லவா?— இந்த 'அந்தி நிலாச் சதுரங்கம்' உங்கள் சிந்தனைகளை நிச்சயம் தூண்டும்!—எழுதுங்களேன்!

● கேரள வாசத்தில், என் வரையிலும் ஒரு தேக்கம் ஏற்பட்டதென்னவோ உண்மைதான்!—ஆனாலும், பின்னர் தமிழ் மண்ணுக்குத் திரும்பியதும், என் உற்சாகம் புத்துயிர் பெறத் தொடங்கியது; நூல்கள் சிலவற்றை வெளிப்படுத்தினேன். அவற்றில், 'இதோ, ஒரு சீதாப் பிராட்டி' என்னும் நாடக நூலும், 'தெய்வம் எங்கே போய்க் கொண்டிருக்கிறது?' என்கிற கதைக் கொத்தும்இவ்வாண்டில் தமிழக அரசின் முதற் பரிசைப் பெற்றிருக்கின்றன. 1966ல் என்னுடைய 'பூவையின் கதைகள்' தமிழக அரசின் முதற் பரிசினைப் பெற்ற சேதியை நீங்கள் எப்படி மறக்க முடியும்?

● எனக்கு மற்றுமொரு சடையப்பர் கிட்டிவிட்டார்!

● எல்லோருக்கும் தூய்மையான, நன்றியறிவுமிக்க என்னுடைய வணக்கத்தை அன்போடும் பண்போடும் தெரியப் படுத்திக் கொள்கிறேன்.

ஏலக்காய் வாரியம்
சென்னை-600 018
19-6-1982

பூவை எஸ். ஆறுமுகம்

# அந்தி நிலாச் சதுரங்கம்

## 1: பொருள் பொதிந்த பொருள்

ஓ!...

ரஞ்சனியைக் காணவில்லையே?...

எங்கே போய்விட்டாள்?.

இருப்புக் கொள்ளாமல் தவித்தார் ரஞ்சித். 'சொல்லி வச்ச மாதிரி, சரியாகப் பத்து நிமிஷம் ரஞ்சனி என்னுடை கண்களிலே தென்படவே இல்லே!' நெஞ்சை என்னவோ செய்தது. தடவிக் கொடுத்தார். எதிர்ப்புறத்தில் மீண்டும் அவரது பார்வை நிலைத்தது.

கூடத்தில் பிஞ்சுக் கதிர்கள் கூடிப் பிடித்துக் கண்ணு மூச்சி ஆடிக் கொண்டிருக்கின்றன.

டெலிஃபோன் மணி நிற்கவில்லை; நிலைக்கவில்லை; இன்னமும் அடித்துக்கொண்டே யிருக்கிறது.

'ரஞ்...!'—பாங்கருக்கு ஏனோ திகீரென்றது. சாந்தி மூகூர்த்த இரவில் லயித்துச் சிலிர்த்து மெய்ம் மறந்திருந்த மனநிலையில், ஊதா டைரியின் ஏடுகளைப் புரட்டிக் குறிப்பிட்டதொரு பக்கத்தைப் பரபரப்போடு படித்துக் கொண்டிருந்தவரை, சமய சந்தர்ப்பம் புரியாமல் தொலைபேசி சோதிப்பதை அவரால் அனுமதிக்க முடியவில்லை. அந்த நாட் குறிப்பை ஊதுவத்தி மணம் தேங்கிய மேஜையின் ட்ராயரில் நிதானமாகத் திணித்து மூடிவிட்டு, பேனுவில் பொன்வண்ண மூடியைச் செருகுவதற்குள், ரஞ்சித் பதற்றம் அடைந்தார். சோதனை மிகுந்த இப்படிப்பட்ட நேரங்களிலே, அவர் ரஞ்சனியை அன்போடும் ஆவலோடும் எதிர்பார்ப்பது உண்டு. அவள் அன்புடனும் அக்கறையுடனும் உதவுவதும் உண்டுதான்!—ரஞ்சனியின் நேர்மையான சாதுர்யமும் முறையான நிதானமும் யாருக்கு வரும்?—பெருமிதம் தாங்கவில்லை; பெருமை பிடிபடவில்லை: பெருமிதமும் பெருமையும் கலந்த புன்சிரிப்பு கண்களிலும் உதடுகளிலும் நிழலாட, அந்தரங்க அறையிலிருந்து வெளியேறி, நடைக் கூடத்தை அடைந்தார்.

கண்பொத்தி ஆட்டம் தொடர்கிறது.

தொலைபேசியின் கூப்பாடும் தொடர்கிறது.

ரஞ்சித் ரிஸீவரைக் கைப்பற்றினுர்; என்னவோ ஒரு திகில்; ஏதோ ஒரு தவிப்பு; வேர்த்துக் கொட்டுகிறது. யார் அழைப்பதாம்? ஒருவேளை, இங்கே ராமகிருஷ்ண மிஷன் ஹாஸ்டலிலிருந்து பாபு அழைத்தாலும் அழைப்பான்! இன்றைக்கு லீவ்; ஞாயிற்றுக்கிழமை அல்லவா?

ஹபிபுல்லா சாலையிலே, நெரிசல்களும் சந்தடிகளும் வரவர அதிகமாகிவிட்டன.

ரஞ்சித் சுழல் நாற்காலியில் அமர்ந்த நேரத்தில் அவர் மனம் தெளிவாகவே இருந்தது; "ஹெல்லோ!"..." என்று குரல் கொடுத்தார். எதிர்முனையில் ஒலித்த குரல் சரிவர விளங்காததால், மீண்டும் சத்தம் போட்டு "ஹெல்லோ!" என்றார். இப்பொழுது கேட்ட தொனியில் சற்றே தெளிவு இருந்தது. "எஸ்...ப்ளீஸ்...நந்தினி விலாசம் ஹியர்!"

எதிர்முனையிலிருந்து சன்னமாக இழைந்து வந்த குரலில் சுருதி கூடிற்று.

ஓ!...மகேஷ்!...

ரஞ்சித் சலனம் அடைந்தார்; மூச்சு அடைத்தது. சூறைக் காற்றில் சிக்கிக்கொண்டாரா, என்ன? வேர்வை பெருகியது; பெருக்கெடுத்தது. கண்ணாடி ஜன்னல் மூடிக் கொண்ட மாதிரி திறந்துகொள்ளவே, தென்புறக் காற்று வீசியது; நிலைமை சீரடைந்திருக்கவேண்டும். மகேஷ் கொச்சியிலிருந்து பேசுகிறாரா?—"ஆமாங்க, நல்ல சுகந்தான்! நீங்க நல்லா இருக்கீங்களா?...ம்...ம்...சந்தோஷம். ரஞ்சனிதானே?..ஊம்; ஷி இஸ் ஆல் ரைட் நௌ!— நெஞ்சு வலி இப்பவெல்லாம் வாரதில்லேங்க. நந்தினி, பாபு எல்லோருமே சௌக்கியம்தான்! ஓ!— இங்கே மெட்ராஸிலேருந்துதான் பேசறீங்களா?...ஆபீஸ் ஜோலி யாக்கும்!..சரி..ம்..சரி!.. இப்பவே புறப்பட்டு வர்றீங்களா?— பேஷா வாங்களேன்! உங்க வீட்டுக்கு நீங்க வாரதுக்கு யாரைக் கேட்கணும்? உங்களை வரவேற்கக் காத்துக்கிட்டிருக்கோம்! ..ம்..என்ன..?" தொடர்ந்த பேச்சைத் தொடர வாய்ப்பு இல்லை; தொலைபேசி இணைப்பு துண்டிக்கப்பட்டது.

சுகமான காற்று சுகமாக வீசியது.

நெஞ்சிலே படரத் தொடங்கிய பூங்காற்று, நெஞ்சின் சுமையைக் குறைக்க முயற்சி செய்ததை உணர்ந்தபோது,

ரஞ்சித் ஆறுதல் அடைந்தார்; சுயப் பிரக்ஞையின் ஆதிக்கத்திற்குத் திரும்பிய அவருக்குக் கூடை நாற்காலியின் இனிய சுகம் இனிமையாகவே புரிகிறது; என்றாலும், உள்மனத்தின் அடிவாரத்திலே சலனமும் சாந்தியும் விளையாடிக்கொண்டு தான் இருக்கின்றன: ''ரஞ்..மை டியர்!..''

'ஓமேகா' குருவி அந்தம் சேர்த்துச் சந்தமும் சேர்த்துக் கூவுகிறது; கூவிக்கொண்டிருக்கிறது.

மணி எட்டு.

ரஞ்சனி இப்படியும் இருப்பாளா, என்ன?

தலையை நிமிர்த்தினார் ரஞ்சித்; நிமிர்ந்து நின்ற நிலைக் கண்ணாடியில் பளிச்சிட்ட கண்ணீரைத் தரிசித்ததும், ஓர் அரைக்கணம் தியான நிலையில் கண்களை மூடிக்கொண்டார். அரைக்கணம் கழித்து, கண்களைத் திறந்தபொழுது, மனச் சலனம் கட்டுப்பட்டதை, கட்டுப்படுத்தப்பட்டதை அவரால் உணர முடிந்தது; அவசரம் அவசரமாகக் கண்ணீரை வழித்துவிட்டார்!— ரஞ்சனி பார்த்துவிடப் போகிறாள்! அவள் வருவதும் போவதும் தெரியாது!

இரண்டாங் கட்டில் காலடி ஓசை கேட்கிறது.

நிலைக்கண்ணாடி புன்னகை செய்தது.

ஆர்வத் துடிப்புடன், ''ரஞ்..'' என்று விளித்தார் பாங்கர்.

ஆனால்—

வந்தவளோ நந்தினி. ''டாடி...'' என்று குழைந்தாள்; மாக்ஸியில் எடுப்பாகவே தோன்றினாள்; தூக்கத்தின் கலக்கத்தை மூடி மறைத்திட, 'இமாமி' பவுடரைக் கொஞ்சம் கூடுதலாகவே அள்ளித் தெளித்துக்கொண்டு வந்திருக்க வேண்டும். ''என்னங்க, அப்பா?'' என்றாள்.

"அம்மா எங்கே?" ஆர்வமும் துடிப்பும் பொங்க, பாசமும் நேசமும் பொங்கி வழியக் கேட்டார் ரஞ்சித்.

"அம்மா பூஜைக்கு ரெடி பண்றுங்க; உங்க கையிலே சொல்லலீங்களா, அப்பா?"

அப்போதுதான் பனி முத்தம் கலந்து மலர்ந்த புத்தம் புதிதான ரோஜாப்பூவாகப் புன்னகை செய்கிறுள் நந்தினி; குறும்புத்தனம் அழகான இதழ்களில் மாத்திரமல்ல, அழகான விழிகளிலும் விளையாடுகிறது; விளையாட்டுக் காட்டுகிறது.

பூஜை அறையில் பாத்திரம் பண்டங்கள் புழங்கப்படும் சத்தத்தை இப்போது அவரால் துல்லிதமாக உணர முடிந்தது. மகளை அன்போடும் பாசத்தோடும் ஏறிட்டுப் பார்த்தார். 'அம்மா பூஜைக்கு ரெடி பண்றுங்க; உங்க கையிலே சொல்லலீங்களா, அப்பா?' நந்தினியின் கேள்வியிலே குரல் கொடுத்த நமட்டுச் சிரிப்பு அவரைச் சிரிக்க வைத்திருக்கலாம். எவ்வளவு நுட்பமாகக் கேட்டுவிட்டாள்!— சுட்டிப் பெண்!— "என்கிட்டே சொல்லாமலும் உன் அம்மா காரியங்கள் செய்வது இல்லையா, என்ன?" இருதயத்திலே எங்கேயோ ஓர் இடத்தில் வலிக்கத் தொடங்கியிருந்தது. பெருந்தன்மையோடு பொறுத்துக் கொண்டார்; சகித்துக்கொண்டார். "ஊம், பதில் சொல்லேன், நந்தினி," என்று தூண்டுதல் செய்தார்; மனிதர் மகா கெட்டிக்காரரர்!...

"ஊஹூம்!" என்று பதில் சொன்னுள் நந்தினிப்பெண்.

"இஸ் இட்...?" என்று கேட்டார் அப்பா. வியப்பில் விழிகள் கீறல் பட்ட மாதிரி விரிந்தன. நெகிழ்ச்சியுடன் விரிந்தன. புதல்வியின் பேச்சில் தொனித்த அழுத்தமும் இறுக்கமும் மென்மையான அவரது மன உணர்வுகளைச் சுண்டி விட்டிருக்கக்கூடும். இதயம்

கசிந்தது; கண்களும் கசிந்தன. "ரஞ்...!" என்று அன்பைக் கட்டுப்படுத்திக் கொள்ளமுடியாத அவசரத்துடன் கூப்பிட்டார் ரஞ்சித். அன்புச் சுமையால் அவருடைய உள்ளம் கனத்துக் கிடந்தது போலும்! சுமையை இறக்கி வைக்கவோ என்னவோ, மீண்டும் அழைப்புக் கொடுத்தார்.

அன்பின் மகிமையை அன்புதான் உணர முடியும்!

அடுத்த இரண்டாவது நிமிஷத்திலே, ஜாதிமல்லிப்பூ மணக்கத் தொடங்கிவிட்டது.

இளங்காலைப் பொழுதின் இனிமையான புனிதத்துக்கு மத்தியில், பரிசுத்தம் நிரம்பின சுகமான பொலிவோடு வந்து நின்றாள் ரஞ்சனி! "அத்தான்!" என்றாள்; பாசமும் நேசமும் பொங்கின; வழிந்தன; "வாங்க அத்தான். சீக்கிரம்!...மணியடிக்கப் போறேன்!" என்று அன்பின் மகிமையை உணர்ந்த நெகிழ்வுடன் தொடர்ந்தாள்.

"மணியடிக்கப் போறது சாப்பாட்டுக்குத்தானே?"

"ஊகூம், இல்லேங்க; பூஜைக்கு!"

"ஓஹோ, அப்படியா?"

"ஆமாம்; அப்படியேதான்!"

பூஞ்சிரிப்பும் புன்சிரிப்பும் சந்தித்துக் கொண்டன.

கண்சிமிட்டலும் கண்ணடித்தலும் கண்பொத்தி விளையாடின.

பெருமூச்செறிந்த மயில் டாலரை மோதிர விரலால் நெருடிக்கொண்டிருக்கிறாள் குமாரி நந்தினி; அவள் செய்கை சிந்தனை வசப்பட்டிருந்தது; அப்பாவும் அம்மாவும் பரிவர்த்தனை செய்துகொண்ட கேள்வி—பதிலைக் கேட்டது தான் தாமதம்; உடனடியாக ரசிக்கவே செய்தாள்; அந்த

ரசிப்புத்தன்மையை வெளிப்படுத்த எண்ணிச் சிரிப்பை உதிர்க்கவும் நினைத்திருந்தாள்.

ஆனால்—

அதற்குள், தந்தையும் தாயும் முந்திக்கொண்டு விட்டார்களே?—அவர்களின் ஜோடிச் சிரிப்பு ஜோடியாக வெடித்து, ஜோடியாகவே சிதறியது.

அவ்வளவுதான்.

நந்தினியின் முகம் தொடாமலே சுருங்கிவிட்டது. காரணம் இல்லாமலா? அப்பா—அம்மாவின் பேச்சில் இழைந்திருந்த அந்நியோன்யத்தை உணர்ந்தறிந்து, நான் ரசித்துச் சிரிப்பதற்குள்ளாக, அவர்கள் ஏன் முந்திக் கொண்டார்களாம்?—நல்ல கேள்விதான்!

ரஞ்சித்—ரஞ்சனி தம்பதிக்கு நந்தினியைப் பற்றித் துல்லியமாகத் தெரியும். இருவரும் அர்த்தச் செறிவோடு பார்த்துக்கொண்டனர்; பிறகு, அருமைத் திருமகளைப் பார்த்தனர்; "புறப்படம்மா, நந்தினி. பூஜைக்கு டைம் ஆச்சு," என்று இருவரும் ஒரே குரலில் பாசத்தோடும் பரிவோடும் சொன்னார்கள்.

போதாதா?

நந்தினிக்குப் பெருமை வந்துவிட்டது, பெருமை! ஐம்பொன் விக்கிரகம், உயிர் பெற்ற மாதிரி நடை பயின்றாள்; மலர்ந்த சிரிப்பு; மலராத குறும்பு; அம்மாவின் இஷ்டப்படி, பூஜையில் கலந்து கொள்ளவேண்டும். இம்மாதிரியான சம்பிரதாயங்களில் அம்மாவுக்குக் கண்டிப்பு அதிகம்; ஈடுபாடும் கூடுதல். ஆர்வத் தூண்டுதலுடன் கால்களை எட்டிப்போட்டாள் நந்தினி.

அலைகள் இல்லாமல், கடல் இல்லை.

மனமும் அப்படித்தான்.

சிந்தனையின் வசப்பட்டு நின்றார் ரஞ்சித்.

ரஞ்சனியின் மனத்தில் ஏதோ சலனம் கண்டது. சதா சர்வகாலமும் அத்தானுக்கு என்னதான் மாளாத சிந்தனையோ? பெருமூச்சு கூனிக்குறுகிப் பூநாகமென நெளிந்தது. கைத்தலம் பற்றியவரின் கைகளைப் பற்றுதலோடு தொட்டாள். அவளுக்கும் சிலிர்த்தது. "அத்தான், கிளம்புங்க; பூஜைக்குத் தாமதமானால், அம்மன் கோபிச்சுக்கிட மாட்டா; ஆனா, நம்ப பொண்ணு கோவிச்சுக்கும்," என்று சொன்னதும் சொல்லாததுமாக, நடையைத் தாண்டி, நடை தொடர்ந்து உள் பக்கம் சென்றாள்.

மகேஷ் பேசியதை ஆருயிர் ரஞ்சனியிடம் சொல்லிவிட வேண்டுமென்றுதான் துடித்துக்கொண்டிருந்தார் ரஞ்சித்; முடியாமல் போய்விட்டது! ஓரிடத்திலே, ஒரு நிமிஷம், இரண்டு நிமிஷமென்று நின்றால்தானே? அவளுக்கு அம்மன் கவலை. ஆகவே, உடனடியாகப் பூஜைக்கு ஆஜராகிவிட வேண்டும். 'ரஞ்சனியும்கூட தொட்டால் சுருங்கிதான்!' பரபரப்படைந்தார் பாங்கர்.

பூஜை மணி முழங்குகிறது.

ஸ்ரீ மாங்காட்டுக் காமாட்சிக்குக் கற்பூர ஆராதனை என்றால், ரொம்பவும் பிடிக்கும் அல்லவா? கொழுந்து விட்டெரிந்த கற்பூரத்தின் ஒளியில் அம்மனின் அருட்பெருஞ் சிரிப்பு ஜோதிமயமாகப் பளிச்சிட்டது.

ரஞ்சனி மெய்ம்மறந்தாள்.

மூடியிருந்த ரஞ்சித்தின் கண்கள் இன்னமும் திறக்கவில்லை; திறந்திருந்த இதயத்தை இன்னமும் அவர் மூடவில்லை. பக்தியின் பரவசத்தில், முத்துக்கள் தோன்றின; உதிர்ந்தன; அன்பின் நெகிழ்ச்சியில் நெஞ்சம் உருகியது; கரைந்தது. கைகளின் அஞ்சலி முத்திரை தொடர்ந்தது; தொடர் சேர்த்தது.

வேடிக்கையாகப் பார்த்துக்கொண்டிருக்கிருள் நந்தினிப் பெண்.

"அ..த்..தான்!..."

மேனியின் சிலிர்ப்பை உணர்ந்தவராக, மெள்ள மெள்ளக் கண்களைத் திறக்கின்றார் ரஞ்சித்.

அம்பிகையான மஹாலக்ஷ்மி திருஅவதாரம் எடுத்த பாவனையில், கற்பூரத் தட்டும் கையுமாக வந்து நின்ருள் ரஞ்சனி. அவளுடைய கவர்ச்சி கனிந்த விழிகளும், உணர்ச்சி நிரம்பின உதடுகளும் சுடரொளியில் ஏற்றம் கூடின; ஏற்றத்தைக் கூட்டின.

ரஞ்சித் பார்த்த அந்தப் பார்வையில் இப்பொழுது ரஞ்சனியா தரிசனம் தந்தாள்?—ஊஹூம்!—மஹாலக்ஷ்மி!... இரண்டு கைகளாலும் நிவேதனத் தீபத்தைப் பக்திப் பரவசத்துடன் ஒற்றிக் கண்களிலே ஒற்றிக்கொண்டார் அவர். பிறகு, தாம்பாளத்தில் இருந்த குங்குமத்தில் துளி எடுத்து நெற்றியில் இட்டுக்கொண்டு நிமிர்ந்தபோது, தம்முன்னே உணர்ச்சிகள் சுழித்திட்ட நிலையிலே ரஞ்சனி—ஆருயிர் ரஞ்சனி தலையை நீட்டிக்கொண்டிருந்ததைக் கண்டார். உடல் புல்லரித்தது; உள்ளம் சிலிர்த்தது. ரஞ்சனியை அவருக்குப் புரியாதா, என்ன? நெஞ்சு நுங்கும் நுரையுமாகப் பொங்கிப் புரள, அவளை ஏற இறங்கப் பார்த்தார். கண் மூடிக் கண் திறக்கும் நேரத்திற்குள், அவர் நிதானம் அடைந்தார். பாண்மையோடு புன்னகை செய்தவராக, தமது நுனி விரலால் மிளகு அளவுக்குக் குங்குமத்தை எடுத்து, அவளுடைய செக்கச் சிவந்த நெற்றியில் இட்டார் ரஞ்சித். கைவிரல்கள் இப்பொழுது கொஞ்சங்கூட நடுங்கவில்லை!—எத்தனையோ நாட்களுக்கு முந்திய அந்த ஒரு மாலைப்பொழுதிலே, மிஸ்டர் மகேஷ் முன்னிலையிலே, அவர் தம்முடைய இன்னுயிர்த் துணையான ரஞ்சனியின் அழகான நெற்றியில் இதுபோலவே அம்மன் குங்குமத்தை

இட்டபோது, அவரது கைவிரல்கள் என்னமாய் நடுங்கின!—அன்றும் சரி, இன்றும் சரி, ரஞ்சனி மனம் திறந்து கேட்ட எதைத்தான் ரஞ்சித் மறுத்திருக்கின்றார்? நெடுமூச்சு சூறைக்காற்றாக மோதி நெளிந்து வெளியேறிக் கொண்டிருக்கிறது; இனம் பிரித்துக் காண்பித்த வெண்ணிற முடிகள், இனம் பிரிந்துவிடாமல் பளபளக்கின்றன. நெஞ்சக் கடலில் நினைவலைகளின் ஆரவாரமே தெரியவில்லை!

குனிந்திருந்த தலையை உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொண்டவளாக நிமிர்த்தினாள் ரஞ்சனி. உயிரில் நிறைந்தவரை உயிரால் நிறைத்துக் கொள்பவளாகப் பார்த்தாள். தயவுடன் தாயைப் பார்க்கும் சிறுமியின் பார்வையாக அது அமைந்திருந்தது.

பேசும் கண்களைப் பேசாமல் துடைத்து விட்டார். ரஞ்சனிக்கு உடையவர்.

பூங்காற்றுக்கு இடம், பொருள், ஏவல் என்கிற மந்திர தந்திரமெல்லாம் அத்துபடி.

வேடிக்கை பார்க்க அப்பாவும் அம்மாவும் மீண்டும் ஜோடியாகக் கிடைத்ததில், நந்தினிக் குட்டிக்குப் பரம திருப்தி!—எப்போதாகிலும் அபூர்வமாக இங்கே நந்தினி விலாசம் பங்களாவிற்கு வருகை தருகின்ற போதெல்லாம், "நந்தினிக் குட்டி!...நந்தினிக் குட்டி!" என்றேதான் வாய் கொள்ளாமலும், வாய் ஓயாமலும் அழைப்பார் மகேஷ்! இவ்வாறு அழைக்கப்படும் போதெல்லாம், நந்தினியின் மனத்திலே இனம் விளங்காத மகிழ்ச்சிப் பாசம் பனித் தூறலாகப் பட்டுத் தெறிப்பதும் சகஜம். அது ஒரு காலம்! ஆனால், ஒரு சிதம்பர ரகசியம்!—பாபுப் பயல் சுட்டித்தனமான பாசத்தோடு, "ஏ, நந்தினிக் குட்டியே!" என்று மகேஷை நினைவு படுத்துகிற மாதிரி, ஒரு தடவை, ஓரேயொரு

நடவை கூப்பிட்டுவிட்டால் போதும்; அக்காளுக்குக் கோபமான கோபம் 'ஜெட்' பாய்ச்சலில் வந்து தொலைத்து விடும். அதுவும் ஒரு காலம்தானே?

"அத்தான்," என்றாள் ரஞ்சனி.

"என்ன, ரஞ்...?" என்றார் ரஞ்சித். அவர் தமது வாழ்வின் ஜீவனை 'ரஞ்' என்றே செல்லமாகக் கூப்பிடுவார். 'ரஞ்' என்றால், ரஞ்சனி என்பதாக அவர் அகராதியில் பொருள்; பொருள் பொதிந்த பொருள் அல்லவா அவள்!

அவள் என்னவோ சொல்ல, அல்லது, என்னவோ பேச நினைத்திருக்க வேண்டும்.

அவர், அதற்காகவே காத்திருந்தார். மரத்துப் போயிருந்த பாதங்களைச் சற்றே அவசரமாக நகர்த்த எத்தனம் செய்த நேரத்தில், மயில்கண் ஜரிகை வேட்டியின் கரை இழைகளில் வலது கால் பெருவிரல் சிக்கிக் கொண்டது; தட்டித் தடுமாறினார் சமாளித்துக் கொண்டு வேட்டியைச் சீராக்கிக் கொண்ட வேளையில்தான், தொலை பேசிக் கருவி அவர் பார்வையில் சுழன்றது; அவரும் சுழன்றார். நினைவுகள் தோல் உரித்துக் கொண்டன: இதயத்தின் இதயத்தில் மௌனமானதொரு சோகம் உள் வட்டமாகத் திமிறிக்கொண்டே யிருக்கிறதே?— பாவம்!... எதை நினைப்பார்? எதை மறப்பார்? நினைவும் மறதியும்தான் வாழ்க்கையா?—சரி, சரி!— மிஸ்டர் மகேஷ் கொச்சியிலிருந்து இங்கே பட்டணத்துக்கு வந்ததும் வராததுமாக, அன்போடும் ஆசையோடும் விசாரணை செய்ததை இப்போதாவது ரஞ்சனியிடம் ஞாபகமாகத் தெரிவித்துவிட வேண்டும்!—ரஞ்சனி மிரண்டால், காடு கொள்ளும்; ஆனால், இந்த வீடு கொள்ளாது; கொள்ளவே கொள்ளாது! ஊமைத்தனமான புன்னகையில், சோகத்தின் கனம் கரைந்து கொண்டிருக்கலாம்.

எதிர்ப் புறத்துப் பூந்தோட்ட வெளியில் மொய்த்திருந்த கண் விரிப்பை இழுத்துப் பக்கவாட்டில் திருப்பினார் பாங்கர் ரஞ்சித்.

நல்ல காலம். 'மாக்ஸி' தளதளக்க, மாடிக்கு ஓடிக் கொண்டிருந்தாள் நந்தினி. பாதித் தூக்கத்தில் வந்தவள் ஆயிற்றே? இனிமேல், காலைச் சிற்றுண்டிக்கும், பிறகு, டி.வி. பார்க்கவும்தான் கீழே வருவாள்!

ரஞ்சித்துக்கு நல்ல மூச்சு வந்தது; ''ரஞ்...'' என்று விளித்தார்; பாசம் துடிக்க, நேசம் துள்ள விளித்தார்.

அப்பொழுதுதான் 'மைனர்' நீங்கிய பிள்ளையாண்டான் மாதிரி, தன் மார்பிலே உரசிக் கொண்டு வந்து நின்ற அத்தானை நாணம் விழி பிதுங்க ஏறிட்டு நோக்கினாள் ரஞ்சனி. பேசும் அந்தக் கண்கள், தனக்குத் திருப்பூட்டின இந்தப் புண்ணியவானின் 'ராசலீலை'க் காட்சிகளைப் பேசினபோலும்!—நாணிக் கண் புதைக்கிறாள்.

ரஞ்சித் மகா ரசிகர். ஆசையான மனைவியின் கண்கள் ஆசையாகச் சொன்ன அந்தக் கதைகளில் அவரும்தான் மயங்கி விட்டிருக்க வேண்டும். சுயப் பிரக்ஞை உறைத்தது. பொட்டிட்டு அழகு பார்த்த பொன் முகத்தைப் பூ விரல் நீக்கி, ஒரு பொன் சிரிப்புடன் அவர் நிமிர்த்திவிட்ட கோணமும் பாவனையும் நுட்பமான கலைச் செறிவோடு அமைந்திட, அருமையான ரஞ்சனியைப் பெருமையாக ஊடுருவினார்.

அப்போது:

நாணம் மேலிட்ட முதலிரவுப் பதுமையெனவே இன்னமும் நின்று கொண்டிருந்தாள் ரஞ்சனி. நிமிர்ந்திருந்த முகத்தில், நெற்றித் திலகம் கம்பீரமாக உயர்ந்திருக்க, கண்கள் மட்டிலும் கலக்கம் அடைந்து, ஏன் அப்படித் தாழ்ந்திருக்கின்றன?

ரஞ்சித் மீண்டும் சலனம் அடையநேரிட்டது. கண்ணீர்த் துளிகள் அவரைக் காட்டிக் கொடுத்து விடுவதாகப் பயங்காட்டின. சுதாரித்துக் கொண்டார்; அவருடைய நயமான சமர்த்து யாருக்கு வரும்? கண்ணீரை நாகரிக மாகக் கட்டுப் படுத்திக் கொள்ளவும் செய்தார். பேஷ்!— ரஞ்சனி கவனித்திருக்க மாட்டாள்!—''ரஞ்!''

ரஞ்சனியின் விழிகள் சலனத்தைக் கடந்து இப்பொழுது கம்பீரமாகவே உயர்ந்தன.

ரஞ்சனியின் ரஞ்சித்துக்கு இப்போது தான் நல்ல மூச்சுத் திரும்பியிருக்க வேண்டும்.

''கூப்பிட்டீங்களே?''

''ஆமாம்.''

''சொல்லுங்களேன்.''

''ஊம்!''

''புதுசாஏதாச்சும் சொல்லப்போறீங்களா, அத்தான்?''

கண்களை உயர்த்தியபடி, ''ஆமாம்'' என்றார் ரஞ்சித். ''ரஞ்சனி, கொஞ்சம் முந்தி, மிஸ்டர் மகேஷ் டெலிஃபோன்லே உன்னை ரொம்பவும் விசாரிச்சாராக்கும்!'' என்று தொடர்ந்த அன்புடன் தொடர்ந்தார். அமைதி கனிந்த மனைவியின் அழகான கண்கள் அவளையும் அறியாமலோ, அல்லது, அவளையும் மீறிய விதத்திலோ, மின் அதிர்ச்சி அடைந்து, சலனமும் அடைந்து, மீண்டும் தாழ்ந்து விட்ட துர்ப்பாக்கியத்தை அவர் நுட்பமாகவும் கவனமாக வும் கண்டு உணர்ந்த மாத்திரத்தில், அவரது மனிதாபி மான உணர்ச்சிகளிலே ரத்தம் கசியத் தொடங்கியது. நெஞ்சு வலிக்கு நேரம், காலம் தெரியும். வலிக்கட்டுமே?— 'டொலாஜின்' மாத்திரை இருக்கவேஇருக்கிறது. ''ரஞ்!...'' ஒரு சுண்டு சுண்டி விட்டுப் பேசலானார்: ''நம்ம மகேஷ்

காலம்பறத்தான் இங்கே வந்து சேர்ந்திருக்கணும்னு தோணுது: நம்ப எல்லாருடைய க்ஷேமலாபத்தையும் வழக்கமான பாசத்தோடவும் அன்போடவும் விசாரிச்சார்; உன்னோட நெஞ்சுவலி இப்போ தேவலாம்ன்னு சொன்னடியும், சந்தோஷப்பட்டார்; பாபுவைப் பற்றியும் அக்கறையோடு கேட்டார். ஆனல், பேச்சு நட்டநடுவிலே 'கட்' ஆகிப் போச்சு; மறுபடி பேசுவார்னு நம்பிக்கையோட எதிர்ப்பார்த்தேன்; மகேஷ் இதுவரையிலும் பேசவே இல்லே!..."

ரஞ்சனி சிலையாகவே ஆகிவிட மாட்டாள்!

உண்மைதான்.

"ரஞ்..."

"......"

ரஞ்சித் தண்ணீராய் உருகினர்!—மௌனத்துக்குப் பாஷை ஒரு கேடா, என்ன?—அப்படி நினைத்துத்தான் ரஞ்சனி இப்படிப் பேசாமல் இருக்கிருளா?—இருப்புக் கொள்ளவில்லே; ஏக்கத்தின் இருப்பும் கொள்ளவில்லை. சோதித்த மௌனத்தைச் சோதிக்க அவருக்குத் தெரியும். கருணையும் அன்பும், பாசமும் நேசமும் புன்னகையின் அவதாரம் எடுத்தன: "ரஞ்சனி!" மௌனத்தைத் தூள் பரப்பிக் கூப்பிடலானர் அவர்.

ரஞ்சனி சில்லிட்டுப் போயிருப்பாளோ? சிலிர்த்தெழுந்தவள் புதிய கம்பீரத்துடன் விழிகளை உயர்த்தினுள். அள்ள அள்ளக் குறைந்திடாத பாசத்தோடு, "அத்தான்!" என்றுள். இதழ்கள் பிறந்த மேனியாகப் புன்னகை சூட்டின. சலனத்தின் சுவடே தெரியவில்லையே!

பாங்கருக்குக் கொள்ளை கொண்ட குதூகலம் கொள்ளை கொள்ளையாக வரவு ஆயிற்று.

முற்றத்தில் வெயில் கண் சிமிட்டுகிறது

''ரஞ், எங்கே இருக்கிறாய்?''

''உங்க பக்கத்திலே!''

''எங்கே இருந்தாய், ரஞ்?''

''உங்க பக்கத்திலேயேதான்!''

''வெரி குட், மை டியர்!''

''தாங்க் யூ, அத்தான்!''

''உன்கிட்டே மிஸ்டர் மகேஷைப் பற்றிச் சொல்லிக்கிட்டிருந்தேன்.''

''ஓ! புரிஞ்சுதுங்களே!''

''பேஷ்!'' என்று புன்னகையை மாற்றாமல் சொன்னார், ரஞ்சித்.

காலைச் செய்திப் பத்திரிகை சூடான காற்றில் சூடு பறக்கப் படபடத்துக் கொண்டிருக்கிறது!—பாரதத்தின் புதிய பிரதமமந்திரியாகப் பதவியேற்றிருந்த இந்திராகாந்தி தலைநகரிலே ஜனதா ஆட்சியின் அவலங்களைச் சாடியிருந்தார்!

தோட்டக்காரக் கிழவர் சோமையா எடுத்து வந்து போடும் பத்திரிகையைப் புத்தம் புதிதான ஆர்வத்துடிப்புடன் கூந்தல் நீர் சொட்டச் சொட்ட மேலோட்டமாகப் பார்த்தால்தான் ரஞ்சனிக்கு நிம்மதியாக இருக்கும்; காப்பியும் கையுமாக விரைந்து மாடிக்குச் சென்று, கணவரை எழுப்பி, வாய் கொப்புளிக்கச் செய்து, காப்பியை ஆற்றிக் கொடுத்துக் கொண்டே அன்றைய முக்கியச் சேதிகளை அவள் வாயாலேயே ஒரு தனி லாகவத்துடன் தெரியப்படுத்துவதில் அவளுக்கு என்றுமே ஓர் சடுபாடு உண்டு. அப்புறம் தான், மற்றக் காரியங்களில் மனம் செலுத்த அவளுக்கு மனம் வரும்.

செய்திகள் காற்றில் பறக்கலாம்; செய்தித்தாள் காற்றில் பறக்கலாமா?

கிடைத்ததை எடுத்துப் பத்திரிகையின் தலையிலே போட்டார் ரஞ்சித்; போட்டது, ரஞ்சனிக்குச் சொந்தமான சிகப்புடைரி என்ற துப்பு அப்புறம்தான் அவருக்குத் தெரிந்தது. 'நெற்றிக் கண்ணைத் திறந்து விடாதே, தாயே!' என்று பச்சைப் பிள்ளை மாதிரி கண்களால் கெஞ்சினார்.

'ஓ.கே!' கிடைத்தது.

''ரஞ், நம்ப மகேஷ் போன தடவை இங்கே எப்போது வந்தார்னு நினைப்பு இருக்குதா?''

''ஏன், உங்களுக்கு நினைப்பு இல்லையா, என்ன?''

''எனக்கு இருக்கு!''

''என்ன இருக்கு உங்களுக்கு?''

''நினைப்பு.''

''பின்னே, என்னவாம்?''

''பின்னே, ஒண்ணுமில்லே; சும்மா ஒரு பேச்சுக்குக் கேட்டேன்; ப்ளீஸ்...சொல்லேன், ரஞ்!''

''ஓஹோ!...'' என்று அழகு காட்டினாள்; அழகு கூட்டினாள் ரஞ்சனி. காற்றில் தவழ்ந்து வந்த பவளமல்லிப் பூக்களின் சுகந்தத்தை அவளும் அனுபவிக்கத் தப்பவில்லை. இந்தப் பொங்கலுக்குத்தான் வந்து சேர்ந்தது ரூபியா வாயில்; அதற்குள் குறும்பு வந்துவிட்டது; சரிந்து நழுவத் துடித்தது. ரஞ்சனியிடமா ஜம்பம் சாயும்?—இப்போது: 'கப்சிப்!'—''அத்தான்,'' என்று நினைவுக் குரல் கொடுத்தாள். பிறகு, ''நீங்க அநேகமா இங்கே மெட்ராஸிலேயேதான் இருந்துகிட்டு இருப்பீங் கண்ணு நம்புகிறேன்,'' என்று 'டக்'கென்று சொல்லி,

'டக்'கென்று நிறுத்திவிட்டு, மறுபடி தொடரலானாள்: ''மிஸ்டர் மகேஷ் முந்தின தடவை இதே ஜனவரியிலே கொஞ்சம் முன்னதாக, அதாவது, தைப் பொங்கல் போகிப் பண்டிகைச் சமயத்திலே இங்கே வந்திருந்தார். சரிதானே, அத்தான்?'' என்று கேட்டாள்.

''ரஞ், நீ சொல்வது சரியில்லாமல் இருக்குமா?''

''அத்தான், உங்களை எனக்குத் தெரியாதாக்கும்!''

''ரஞ்...!''

''......''

மௌனத்தில் மௌனம் சிரிக்கிறது.

''சாதாரணமாகத்தான் சொன்னேனுங்க, அத்தான். அப்புறம், என்னுங்க விசேஷம், அத்தான்?'' என்று புதிய பேச்சுக்கு அவரைத் தூண்டினாள் தலைவி.

''ஓ!—என்னை உனக்குத் தெரியாதா, என்ன? பேஷாகத் தெரியும்!—அது போகட்டும். ரொம்ப நாளைக்கு ரொம்ப நாளாய், அத்தி பூத்த மாதிரி, இங்கே, பட்டணத்துக்கு வந்திருக்கிற நம்ப குடும்ப நண்பர் மகேஷ் இந்தத்:தடவையும் நம்ம பங்களாவிலே ஒரு ராத்திரியாகிலும் டின்னர் சாப்பிடாமல் திரும்பமாட்டார்னு நான் நினைக்கிறேன்; நீ என்ன நினைக்கிறாய்?'' என்று வினவினார், ரஞ்சனிக்கு உடையவர்.

மனத்தின் உள் வட்டத்தில் சுழித்த அதிர்ச்சி, முகத்தின் வெளிவட்டத்திலும் சுழிக்க, கன்னங்களிலும் தாழ்வாயிலுமாக வேர்வை தெறித்தது. இமைகளின் விளிம்புகளைமோதிர விரல் நீவி விட்டது. என்னவெல்லாமோ கேள்வி கேட்கிறாரே அத்தான்காரர்?—''நீங்க என்ன

நினைப்பீங்களோ, அதையேதானே நானும் நினைப்பேன்? உங்களுக்குத் தெரியாதுங்களா, அத்...அத்தான்?'' என்றாள் ரஞ்சனி. இப்பொழுதுதான் புன்னகை பிறக்கிறது; மணக்கிறது.

''சபாஷ்!'' என்று வெகு அட்டகாசமாகச் சிரித்தார் ரஞ்சித். ''அப்படிச் சொல்லடி, ரஞ்சனிக் குட்டி!''

ரஞ்சனி வலது கன்னத்தைத் தடவி விட்டுக் கொள்ள நேர்ந்தது.

பயம் ஒன்றும் இல்லை.

கிள்ளி விட்டார்.

செல்லக் கிள்ளல்.

அவ்வளவுதான்!

''கோபமா?''

''இல்லே, சந்தோஷம்!''

அவளுடைய மனப்பூர்வமான சிரிப்பை இப்போதும் அவர் மனப்பூர்வமாக நம்பினார்!...

# அந்தி நிலாச் சதுரங்கம்

## 2: கண்ணீர் நிவேதனம்

ஒமேகா பூஞ்சிட்டுக்குப் பொய் பேசத் தெரியாது. காலத்தைப் பேச வைக்கத்தான் தெரியும். மணி ஒன்பது ஆகிவிட்டதாம்!

சுவர்க் கடிகாரம் நேரத்தை அறிவித்ததோ இல்லையோ, ரஞ்சித்தின் ஒரு சாண் வயிறு, தமது பசியான பசியை இரண்டு சாண் நீளத்துக்குச் சாங்கோபாங்கமாக அறிவித்தது.

தன் உயிருக்கு ஒரு மங்கலச் சின்னமாகத் திகழும் ஆருயிர் அத்தானை முழுமனத்தோடு நம்புகின்ற மிஸஸ் ரஞ்சித், அவர் நாகேஷ் பாணியில் வெளிப்படுத்திய பசியின் தத்ரூபமான உணர்ச்சிக் குறியீடுகளை மாத்திரம் நம்பாமல் இருப்பாளா, என்ன? அன்புத் துணைவரின் மௌனக் கூத்தைக் கண்டதும், அவளுக்கு வாயெல்லாம் பல்; முழுசான முப்பத்திமூன்று பல் சிரிப்பு; அதாகப்பட்டது, தெற்றுப்

பல்லையும் சேர்த்து! சிரிப்பின் நிறம்: வெள்ளை: அது வெள்ளைச் சிரிப்பும்கூட. வெறிக்க வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்த அத்தானைச் சிரிக்கச் சிரிக்கப் பார்வை யிட்டவளாக, ''டிபன் சாப்பிடலாம், வாங்க,'' என்று அழைத்தாள், ரஞ்சனி.

பாங்கருக்கு ஆறுதலான ஆறுதல் கனியத் தொடங்கியது. கொண்டவளை விழுங்கிவிடுகிற மாதிரி பார்த்தார். பசியைப் போக்கிக்கொள்ளவா? இல்லை; பசியைத் தூண்டி விட! மணிமேகலை தன்னுடைய அமுதசுரபியை என் ரஞ்சனியிடம்தான் கொடுத்துவிட்டுப் போயிருக்கவேண்டும்! பிடிபடாத பெருமிதத்தைப் பிடிக்குள் நிறுத்தியவராக, மெல்லிய ஊதா நிற ஜிப்பாவில் சாண் வயிறு அண்டி ஒண்டிக் கிடந்த இடத்தைக் கனகச்சிதமாக அளந்தறிந்து தட்டிக் கொடுத்துக்கொண்டே ரஞ்சனியின் சிரிப்பைத் தொடர்ந்தவர், ரஞ்சனியையும் தொடர வேண்டியவர் ஆனார்.

ரவி வர்மா முதல் கே. மாதவன் வரை கொலு அமைத்துக் கொலு வீற்றிருந்த அந்த உணவுக்கூடம், ரஞ்சித்—ரஞ்சனி தம்பதியின் மிக அந்நியோன்யமான குடும்பச் சிநேகிதரான மகேஷின் மிகப் பெரிய பாராட்டுதலுக்கும் இலக்காகியிருந்தது குறிப்பிடத்தக்கது.

நான்கு பக்கத்துச் சுவர்களிலும் திறந்து கிடந்த கண்ணாடி ஜன்னல்கள்; அந்த ஜன்னல்களின் அழகுக்கு அழகு செய்வதுபோல் இழுத்து விரித்து மறைத்துத் தொங்கவிடப்பட்டிருந்த பூத்திரைகள்.

கூடத்தில் சன்னமான நீலப் பாதரச ஒளி சிந்தியும் சிதறியும் கிடக்கிறது.

இளமையைக் கடந்திருந்த காற்று பனி வாடையையும் கடந்திருந்தது.

மேலே, 'ப்ளாஸ்டர் ஆஃப் பாரிஸ்' பூக்கோலங்களுக்கும் மாக்கோலங்களுக்கும் இடைநடுவில், விஷப்பல் பிடுங்கி வீசப்பட்ட நாகமாக மின்காற்று ஓங்கார உறுமலைக் கக்கிக் கொண்டிருப்பதும் இயற்கைதான்.

பாங்கர் ரஞ்சித்துக்கு இந்த நந்தினி விலாசத்தில் மிக மிகப்பிடித்தமானது இந்த உணவுக்கூடம் ஒன்றேதான்!...

அதோ, ஊதுவத்தியின் இன்பச் சுகந்தம் அழகாகவும் ஆனந்தமாகவும் அற்புதமாகவும் மணம் சிந்திக்கொண்டே இருக்கிறது!

ரஞ்சித் அழகை ரசிப்பவர் மட்டுந்தானா?—ஊஹூம்!—அவர் அழகை ஆராதிப்பவரும் அல்லவா?

"உங்க டைனிங் ஹாலை வெள்ளம் ஒண்ணும் கொண்டு போயிடாதுங்க, அத்தான்; இட்டிலி ஆறிடப் போகுது; சாப்பிடுங்க!"

"உத்தரவு, டியர்!"

மான் விழிகள் மருள்வதோடு, மயங்கவும் செய்கின்றனவே!

சின்னச் சின்ன இட்டிலி; கைப்பதமான சூடு; பச்சைக் கொத்தமல்லித் தழைகள் துணை இருந்த தக்காளிப்பழச் சட்டினி. அவர் சுவைத்தும் ருசித்தும் சாப்பிட்டார். ஆக, மொத்தம் சாப்பிட்டது பன்னிரண்டுதான். இது ஒன்றும் அதிகம் இல்லை. இன்னும் ஒன்றிரண்டு கூடுதலாகச் சாப்பிடத்தான் ஆசை. தீராத ஆசையுடன் ஆசை மனைவியை ஏறிட்டார்.

ரஞ்சனிக்கு என்னதான் அப்படி மாளாத—மீளாத சிந்தனையோ?

அவர் வாயைத் திறக்கவில்லை, நாக்கை 'நப்பு'க் கொட்டினார். ரஞ்சனி எங்கே இருக்கிறாளோ?

உறைப்பு சற்றே தூக்கலாக இருந்துவிட்டால், அத்தானுக்குக் கொண்டாட்டம் வந்துவிடும் அந்தரங்கத்தை அந்தரங்க சுத்தியோடு உணர்ந்தவள் ரஞ்சனி. அத்தான் இம்மாதிரி ருசி பார்த்து, சுவை பார்த்து, ஒய்வாகச் சாப்பிட வேண்டுமென்பதற்காகத்தானே, ஞாயிற்றுக் கிழமைகளில் மட்டுமே தக்காளிச் சட்டினியை ஸ்பெஷலாகத் தயாரிக்கிறாள் அவள்!—'அ...த்...தான்!'—உள்ளத்தின் உள்ளம் உருகுகிறது.

ரஞ்சித்தின் பார்வை முகப்பு மண்டபத்திற்கு நாலு கால் பாய்ச்சலில் ஓடியது. என்னவோ சத்தம் கேட்டது. மகேஷையும் காணவில்லை; பாபுவையும் காணோம். சோமையா எதையாவது சீராக்கிக்கொண்டிருக்கலாம்! அன்றிருந்த சுறுசுறுப்பு இன்றுங்கூட தேய்ந்து விடவில்லை. மனக் குதிரைக்கு 'லகான்' போடவில்லையென்றால், அது கண்மண் தெரியாமல், கிண்டி ஞாபகத்தில் ஓடிக்கொண்டு தான் இருக்கும். நிதானம் பரப்பிக் கண் பார்வையை எதிர்வசமாகப் பரப்பினார் அவர். தெளிவாகவே நின்றிருந்த மனைவியை ஆழமாக நோக்கினார். ''ரஞ், என் பசி இன்னமும் அடங்கவில்லையே?'' என்றார்.

அவள் உணர்ச்சி எதையும் வெளிக்காட்ட விரும்பாதவள் போன்று காணப்பட்டாள்; அமுதசுரபியாகக் காட்சி கொடுத்த இட்டிலிப் பாத்திரத்தை நிதானமாக நகர்த்தினாள்; அம்பாரமாகக் குவிந்திருந்த இட்டிலியில் ஒன்றை எடுத்துக் கணவரின் எச்சில் பிளேட்டில் போட்டாள்; ''இதோட உங்க கணக்குச் சரி!'' என்றாள் ரஞ்சனி.

ரஞ்சித் திகைத்துத் திடுக்கிட்டுத் தடுமாறினார்; ''என்ன சொல்றே, ரஞ்சனி?'' என்று பதற்றத்தோடு கேட்டார். குரல் பொருமிற்று. பற்பல மாதங்களுக்கு முந்தின சோதனை மிகுந்த, துரதிர்ஷ்டவசமானதோர் அந்தி மாலை நேரத்திலே நடந்த அந்தச் சோகச் சம்பவம்—'விதி' முன்னே நின்று

நடத்தி வைத்துவிட்டுச் சிரித்துத் தீர்த்த அந்தப் பயங்கர நிகழ்ச்சி அவரையும் திமிறிக்கொண்டு அவரது நெஞ்சில் ஊடுருவிப் புகுந்து, நச்சு வண்டாகத் துளைத்தது; ஐயையோ!—கடுப்பு தாங்கவில்லை!—'ரஞ்...!' நேத்திரங்களிலும் ரத்தம் கரைகிறது.

ரஞ்சித் அடைந்த பதற்றத்திற்கு லவலேசமும் குறைவு படாமல் கேட்டாள் ரஞ்சனி— "அழறீங்களா, அ...த்...தான்..?"

"ஆமா!" ஒப்புக்கொண்டார் ரஞ்சித்.

"நிஜமாகவேதான் அழறீங்களா?"

"பிறகு, பொய்யாகவா அழுவேன்?"

"நீங்க ஏன் அழவேணும்?"

"அதை என்னைக் கேட்டால்..?"

"பின்னே, யாரைக் கேட்கணும் நான்?"

"உன்னையே நீ கேட்டுக்க!"

"என்னையே நான் கேட்டுக்கிடவா?"

"ஆமா!"

"ஆமாவா?"

"ஊம்!"

"..............."

"புரியலையா இன்னம்?"

"புரியும்படியாவோ, இல்லே, புரிஞ்சுக்கும்படியாவோ சொன்னால்தானுங்களே புரியும்?"

"அப்படியா?"

"ஊம்!"

"சொல்றேன்."

"சொல்லுங்க."

"என்னமோ கணக்குப் போட்டியே கொஞ்சம் முந்தி? அது என்னவாம்?"

"கணக்குப் போடலேங்க; கணக்குச் சொன்னேன்."

"என்ன கணக்கு?"

"இட்லிக் கணக்கு!"

"மெய்யாவா?"

"பின்னே, பொய்யா?"

"ரஞ்...!"

"அத்...!"

அவர் அழுதுகொண்டே சிரிக்கிறார்.

அவளோ சிரித்துக்கொண்டே அழுகிறாள்.

அவள் கண்ணீரை அவர் துடைத்தார்.

அவரது கண்ணீரை அவள் துடைத்தாள்.

ரஞ்சனியின் அன்பினாலும் தயவினாலும் கிட்டிய பதின் மூன்றாவது இட்டிலியை ஒரே வாயில் போட்டுக் கொண்டு விழுங்கினார்; விழுங்கின ஆத்திர அவசரத்தில் விக்கல் எடுத்தது. தேடி வந்த தண்ணீரை ஒரே வாயாகக் குடித்தார்; ஓவல்டின் ஓடிவரவே, அதை இரண்டு வாயாகப் பருகினார். இத்தனை ஆர்ப்பாட்டங்களும் யாதொரு விக்கினமும் இல்லாமல் சுபமாக நிறைவெய்தியது தான் தாமதம்; ஏப்பம் ஒன்று தாமதமின்றிப் பறிந்தது. லாலி பாட வேண்டாமோ?

வாசெனியில் சலசலப்பு.

மனம் கொண்ட மகிழ்வு, வாய் கொள்ளாமல் சிரிப்பாக வெடித்தது. குறும்புத்தனம் விகிதாசார அளவில் கூடி நின்றது.

'ஆனாலும், ரஞ்சனிக்கு இத்தனை குறும்பு உதவாது. ரஞ்சனி இதயத்தால் சிரித்து விட்டால், எனக்கு எல்லாமே மறந்து போய் விடுகிறதே?'— அவளை ஏற இறங்கப் பார்த்தார் ரஞ்சித்; இறங்க ஏறவும் பார்வையிட்டார் அவர். 'இதோட உங்க கணக்குச் சரி!' என்று இட்டிலிக் கணக்குத்தான் போட்டிருப்பாள் ரஞ்சனி, என் ரஞ்சனி! உண்மையை மறைக்கத் தெரியாத புண்ணியவதியாக்கும்! —மெய்ம்மறந்தார். வீப்பு படித்துக் காற்றிலே வம்பு பிடித்த புடவையைச் சரிசெய்து கொண்டிருந்தவளை நெருங்கி, மார்பகத்திலே அலங்கோலமாகக் கிடந்த இரட்டை வடத் தென்னம்பாளைத் தாலிச் சங்கிலியைச் சரிசெய்து சோளியின் இருமருங்கிற்கும் மையமாக அதைப் பதிய வைத்தபோது, தேள் கொட்டினாற்போன்று ஏனோ ஓர் அரைக்கணம் திடுக்கிட்டுப் போனார். 'மாங்காட்டுத் தாயே!'—மனம் ஒன்றின பிரார்த்தனையில், மனம் தெளிந்து வருகிறது; நிம்மதியும் தெளிந்து வருகிறது. ஓ!—ரஞ்சனிக்கு இன்னமும்கூட வெட்கம் தெளியவில்லை. அதுவும் நல்லதற்குத்தான். நிதானம் அடைந்துவிட வேண்டும். பசித்தவன்தான் பழங்கணக்கைப் பார்ப்பான். இப்போதைக்கு எதையும் நினைக்கக் கூடாது. நினைப்பதற்கும் மறப்பதற்கும்தான் வாழ்க்கைத் தவமோ?

பால்கனியில் இசைத் தட்டுக்களோடு விளையாடிக் கொண்டிருக்கிறது 'ரெகார்ட் ப்ளேயர்'!

மேலைநாட்டுச் சங்கீதத்துடன் விளையாடுவதென்றால், நந்தினிக்கு மிகவும் இஷ்டம்.

காலைச் சிற்றுண்டிக்காக அருமைத் திருமகளை அன்புடன் தேடிக் கொண்டிருந்த தாய்க்கு இப்போது 'உளவு' புரிந்திருக்க வேண்டும்.

தந்தையின் நெஞ்சக்கரையிலும் 'பாப் இசை'யின் நாத அலைகள் மோதிக் கொண்டிருக்கின்றன. ஊடாக, பழைய நினைவலைகளும் சங்கமம் ஆகிக் கரை சேருகின்றன.

ஒரு நடப்பு:

பாபு இதே மாதிரியான ஒரு ஞாயிற்றுக் கிழமையில் ஹாஸ்டலிலிருந்து இங்கே வந்திருந்தான். துரைசாமி ரோடிலிருந்து மடங்கி, பனகல் பார்க்கைக் கடந்து, முப்பாத்தம்மனுக்கும் ஒரு கும்பிடு கொடுத்துவிட்டு, வடக்கு உஸ்மான் சாலை நெடுகிலும் கால் நடையாக நடந்தே வந்திருந்தான்!—அவன் ஓர் அபூர்வரகம்!—அபூர்வ ராகம் மாதிரி! கால் தூசு போக, பங்களாவின் பூந்தோட்டக் குழாயைத் திருகி மூடிவிட்டு, கனிந்து வரும் பசுவின் கன்றுகப் பாய்ந்து வந்து, முகப்பு மண்டபத்தில் இளையராஜாவாக நின்றான்; சீரணி உடுப்புக்களைச் சீராக்கிக் கொண்டான்: ''அப்பா!''

ரஞ்சித் ஓடி வந்தார்.

''அம்மா!'' என்று கூவினான் பாபு.

ரஞ்சனி தேடி வந்தாள்.

இருவருக்கும் ஆளுக்கொரு முத்தம் கிடைத்தது.

இருவரும் ஆளுக்கொரு முத்தம் கொடுத்தார்கள்.

பாசத்திற்குச் சிரிக்கத் தெரிந்தது போலவே, அழவும் தெரிந்திருந்தது. பாசத்தின் முதலுக்கு உண்டான வட்டியைக் கணக்குப் பார்த்து நேர் செய்து விடுவதென்பது அவ்வளவு லகு இல்லை என்பதற்கு அடையாளங்களா இந்தச் சிரிப்பும் அழுகையும்?

பெற்றவர்கள் இருவரும் தங்களது ஆஸ்திக்கு ஒரு பிள்ளையான பாபுவின் அன்புப் பிடிப்பினின்றும் இப்போது தான் விடுதலை பெற்றனர்.

"அக்காவை எங்கே காணோம்?" விசாரணை செய்தான் சிறுவன். மரியாதையுடன் கேட்கப்பட்ட கேள்விக்கு மரியாதையாகப் பதில் சொல்லப்படுவதைப் போன்று, 'பாப் ம்யூஸிக்' மாடிப்படிகளில் அன்னநடை பயின்று வந்ததைக் கேட்டான்; கண்டான்; சிரித்தான்; சிரித்துக் கொண்டான். ஒரு தேக்கரண்டி ஊத்துக்குளி நெய்யில் அரைக் கரண்டி ஜீனியைக் கொட்டிப் பிசைந்த மல்லிகைப் பூ இட்டலியைச் சின்னச் சின்ன உருண்டையாக உருட்டி, அம்மாவும் அப்பாவும் போட்டி போட்டுக் கொண்டு மாறி மாறி—மாற்றி மாற்றி ஊட்டவே, பையன் பாடு கொண்டாட்டமாக மட்டுமல்லாமல், திண்டாட்டமாகவும் போய்விட்டது.

முக்கோணப் பாசம் மூன்று தனித் தனிப் புள்ளிகளில் நின்று திக்குமுக்காடிக் கொண்டிருந்த இப்படிப்பட்ட வேளையிலேதான், மகேஷ் அனுமதி இல்லாமலேயே, உரிமையுடன் உள்ளே நுழைந்தார்; நந்தினி விலாசம் பங்களாவில் நுழைவதற்கு அவருக்கு இல்லாத உரிமையா?—அன்பும் பாசமும் புதுப் புனலாகப் பொங்கிட, முகப்பு மண்டபத்தில் அடியெடுத்து வைத்திட்ட அவர், படிகளை ஒன்று, இரண்டு, மூன்று என்று கடக்கக் கடக்க, திடுதிப்பெனப் புனல் சுழியில் அகப்பட்டுக் கொண்டவர் போலே, சஞ்சலமும் திகிலும் அடைந்திட, அப்படியே செயலிழந்து கடைசிப் படியிலேயே நின்றுவிட்டார்!

"ஓ, மகேஷ்!...வாங்க, வாங்க!" இன்பப் பூஞ்சிட்டாக, இன்பமயமான குதூகலத்துடன் வரவேற்றுள், நந்தினி விலாசம் குடும்பத்தின் தலைவி ரஞ்சனி.

மகேஷ் தன்னுணர்வு பெற்ருர்; இறுகிச் சில்லிட்டிருந்த உதடுகளில் பற்கள் தெரிய, மாம்பழக் கீற்ருகப் புன்னகை ஒன்று வாய் பிளந்தது.

''வாங்க, மிஸ்டர் மகேஷ்!'' என்று குடும்பத்தின் தலைவர் ரஞ்சித் தம் தம் பங்கிற்கும் முகமன் மொழிந்தார்.

ஆறுதல் சுவீகாரம் எடுத்துக்கொண்ட அமைதியில், மகேஷின் முறுவல் வாய் கொண்ட மட்டிலும் விரிந்தது; பெருக்கெடுத்த வேர்வையில் 'ஜோஸ்'டவல் நனைகிறது!—எர்ணுகுளத்தில் ஜோஸ் ஜங்க்ஷன் ஸ்தலத்தில், கன்னி இளமாருகக் கண்ணடித்துக் கொண்டிருக்குமே ஜோஸ் துணிக்கடை, அக்கடையின் முதலாளியான எம்.எம்.மேனேன் இவருக்கு ரொம்ப வேண்டப்பட்ட புள்ளி; ஆப்த சிநேகம். ஒரு திருவோணச் சமயத்திலே, மேனேன் சிநேகம் ரஞ்சித் தம்பதியருக்கும் கிட்டியது; பாபுவுக்கு மலையாளம் ஒட்டியது!

''மகேஷ் ஸாரே! சுகம்தன்னே? எந்தா விசேஷம்?'' என்று குரலை நீட்டி இழுத்துக் குசலம் விசாரித்தான் வாண்டுப் பயல் பாபு; வாயெல்லாம் நெய் மணக்க, அன்பும் மணக்க விசாரணை செய்தான்.

மகேஷுக்கு வாயெல்லாம் பல்!—இப்போதெல்லாம் பாபு தன்னை 'அங்கிள்' என்று விளிக்காதது அவர் மனத்தை என்னவோ பண்ணியது. ஆக, தன் நெஞ்சுக்குத் தற்போது ஓர் உணர்வு மாற்றம் தேவை என்பதைப் புரிந்துகொண்டார் அவர். கவர்ச்சியான உதடுகளில் கவர்ச்சியான புன்முறுவல் ஒன்றை நெளியவிட்டார். மாடியினின்றும் சிதறிய இசை அலைகளில் கண்கள் சொக்கின. மாடியை அண்ணுந்து பார்த்த பிறகு, ''நம்ம நந்தினிக் குட்டிக்குப் 'பாப் ம்யூஸிக்' என்ருல், பசிக்கவே பசிக்காது போலிருக்குதே? நான் சொல்றது சரிதானே, ரஞ்சனி?'' என்று வினவினுர். மலையாள வாடை அடிக்காமல் பேசியதில் அவருக்குத்

திருப்தி. இல்லாவிட்டால், அதற்கு வேறு கிண்டல் செய்து விடுவானே பாபு?—ஊம், சுட்டிப் பயல்!

மகேஷ் அபிப்பிராயம் கேட்டதற்கு ரஞ்சனி சொல்கிறாள்: ''மகேஷ், நீங்க சொல்றது பொதுவாச் சரியாய்த் தான் இருக்கும். ஆனா, இப்ப நிலைமை வேறே. நம்ப நந்தினிக்குட்டி இப்போ பசியாறிட்டுத்தான் பாப்ம்யூஸிக்கை ரசிச்சுக்கிட்டு இருக்குதுங்க.'' நமட்டுச் சிரிப்பு வசீகரப் பாவனையில் நழுவுகிறது.

''ஓஹோ? அப்படியா சங்கதி?''—மகேஷ் ஆர்ப்பாட்டமாகவே சிரித்து வைத்தார்; ஆனால், கடுகத்தனை அசடாவது வழிய வேண்டுமே!...மூச்!...

உயிர் வாழ்க்கைக்குத் துணையாக இருப்பவளின் மெல்லியதான நகைச்சுவைப் பண்பைச் சிரித்து அனுபவிக்க ரஞ்சித் ஒருநாளும் தவறியதே கிடையாது.

அந்தப்புரத்தில் வேலைக்காரச் சிறுமி கைதவறிப் போட்டுவிட்ட பாத்திரத்தின் ஒலி நாலுபுறத்திலும் எதிரொலிக்கிறது. செவகி அசமந்தம்!...

ரஞ்சனியும் ரஞ்சித்தும் சொல்லி வைத்த மாதிரி ஒரே தருணத்தில் சிந்தனை விழிப்புப் பெற்றனர். இருவரும் ஒரே சமயத்தில் அண்ணாந்து பார்த்தபின், ஒருவரையொருவர் ஆழமாகப் பார்த்துக் கொள்ளவும் தொடங்கினர். அர்த்தமுள்ள இளநகை இருதரப்பிலும் மலர்ந்தது.

மேற்கத்தியச் சங்கீதம் நந்தினியுடன் இன்னுமா விளையாடிக் கொண்டிருக்கவேண்டும்?

நந்தினியின் மேலை நாட்டு இசை மோகம் பற்றி ஒரு சமயம் மகேஷ் விமர்சனம் செய்த பழைய சம்பவத்தை இருவருமே அசை போட்டிருக்கிறார்கள் என்பதற்கு விநயமான இளநகை அர்த்தம் சொல்லியிருக்கலாம்.

வெய்யலின் சூடு சாளரத்திலே கள்ளத்தனமாய் எட்டிப் பார்த்தது.

"நந்தினிப் பெண் இன்னம் டிஃபன் சாப்பிடவில்லை தானே?" என்று கேட்டார் ரஞ்சித்.

"ஆமாங்க," என்றாள் துணை.

"தீர்க்கதரிசியாக்கும் நம்ப மகேஷ். பாப் மியூஸிக் என்றால், நந்தினிக்குப் பசிகூடத் தோணுது போலிருக்கேன்னு அவர் அன்றைக்குச் சொன்னது இன்றைக்கு நூற்றுக்கு நூறு பலித்திருக்கிறதே?"

அத்தானின் பேச்சை ஆமோதிக்கிற பாவனையில், தஞ்சாவூர்த் தலையாட்டிப் பொம்மையாக இயங்குவதோடு நின்றுவிட்டாள் ரஞ்சனி.

ரஞ்சித்துக்கு முகம் மேலும் கறுத்தது. இந்த ரஞ்சனி வாயைத் திறந்தால் என்னவாம்? அவருக்குப் பொறுக்க வில்லை. "என்னடி அம்மா ரஞ், நான் சொல்றது சரி தானே?" என்று 'நிமிண்டி' விடலானார்.

ரஞ்சனியா சுதாரித்துக்கொள்ளாமல் இருப்பவள்?— "ரொம்ப ரொம்பச் சரிதானுங்க. மகேஷ் சொல்றது பொதுவாச் சரியாத்தான் இருக்கும்னு அவர்கிட்டவே அன்றைக்கே நானும் தீர்க்கதரிசனத்தோடே சொல்லலீங் களா, அத்தான்?" என்பதாக மடக்கினாள்.

"உன்கிட்டேயிருந்து நான் எப்பவுமே தப்பமுடியாது தான்!"

"அப்படி, வாங்க வழிக்கு!"

"உன் வழிக்குத்தானே?"

"ஆமாம்; என் வழிக்கேதான்!" சொற்கள் அழுத்த மாகவும் அமர்த்தலாகவும் விழுந்தன. அவளுக்கு அவள்

கவலை. அட்சயப் பாத்திரத்தில் இருந்த இட்டிலிகளைச் சரிப்படுத்தும் கருமத்தில் கண் ஆனாள். என்னவோ மனக் கணக்குப் போட்டுப் பார்த்ததில், ஓர் இட்டிலி மாத்திரமே மிச்சக் கணக்குக் காண்பிக்கவே, ''அத்தான், உங்களுக்கு இட்லி போதுமா? இல்லே...'' என்று இழுத்தாள்.

அதற்குள் ஒரு தடுமாற்றம்; ''இட்லி மீதம் இருக்குமா?'' என்று கேட்டார். இட்டிலிக் கணக்கில், மகேஷை மறந்திருப்பாளோ? 'நினைத்தீர்கள்; வந்துவிட்டேன்!' என்கிற போக்கில் மனிதர் பிரசன்னமாகிவிட்டால், கதை எப்படி முடியுமாம்? ''ரஞ், கேட்டேனே?''

''ஒண்ணே ஒண்ணு மிச்சப்படலாமுங்க!''

''புள்ளி போட்டுப் பார்த்தியாக்கும்?''

''ஊம்.''

''என்ன கணக்கு?''

''அடுக்கிலே அடுக்கி வச்சிருக்கக்கூடிய இட்லி பதினேழு. இதிலே, நந்தினிக்கு அஞ்சும், எனக்கு நாலும் போனால், பாக்கி எட்டு. பாபு மூணுக்கு மேலே சாப்பிடமாட்டான். மகேஷ் வந்திட்டா, அவருக்கும் நாலு இட்லி வேணும். இந்தக் கணக்குப் பிரகாரம் பார்க்கையிலே, ஒரேயொரு இட்லிதான் மிஞ்சும்; அதுதான் உங்களைக் கேட்டேன்!''

அவரது ஜீவன், திக்கணப்பில் எதிர்பாராமல் கால் தடுக்கி விழுந்துவிட்டதெனத் துடித்தது. ''ரஞ்! கொஞ்ச நேரமாய் நான் உன்னை ரொம்பவும் சோதிச்சிட்டேன்!'' என்று நா தழதழக்க வருந்தினார் ரஞ்சித்.

ரஞ்சனி உருகினாள்: ''தெய்வம் சோதிக்கிறதுதாங்க தருமம்!...தெய்வம் சோதிக்கவேண்டியதுதானுங்க நியாயம்! ஆமாங்க, அத்தான்!'' நன்றியறிவின் கண்ணீர் முத்தங்கள்

தாலிப்பொட்டில் 'நிவேதனம்' ஆகிக்கொண்டிருக்கின்றன!

டக்—டிக்—டக்..!

"அழாதே, ரஞ், அழாதே! நீ அழுதால், நான் செத்துப் போயிடுவேன்!"

சுடர் விளக்கானுள் ரஞ்சனி. "ஐயைய்யோ! அப்படியெல்லாம் சொல்லாதீங்க, அத்தான்!" மனம் பதற, கைகளும் பதற, மங்கலத் திருமாங்கல்யத்தை எடுத்துக் கண்களிலே ஒற்றிக்கொண்டாள். "என்னோட அன்புத் தெய்வமே அநியாயமாய்ச் செத்துப்போயிட்டா, அப்புறம் நான் எந்தக் கோயிலிலே போய் விழுந்தழுவேன்?" தாய் முலைப் பாலுக்காக ஏங்கித் தவித்து, 'அரைமுடி'ப் பாப்பா வீரிடுமே, அந்தப் பாங்கிலே வீரிட்டாள் ரஞ்சனி. "உங்களுக்குக் கோடிப் புண்ணியம் உண்டுங்க; அசந்து மறந்துங்கூட, செத்துப் போயிடாதீங்க, அத்தான்! நீங்க உயிரும் உடம்புமாய் இருந்தால்தானுங்களே, நீங்கள் பாசத்தோட கட்டிக் காத்துப் பரிவோட காபந்து பண்ணி வச்சுக்கிட்டு இருக்கிற இந்தப் பாவியோட உயிருக்குத் தாலிப்பாக்கியம் கிட்டமுடியும்? அத்தான்....அத்தான்!" கையெடுத்துக் கும்பிட்டாள் ரஞ்சனி.

பொற்கரங்களைக் கண்களில் ஒற்றிக்கொண்டார் ரஞ்சித். விம்மல் வெடிக்க, நெஞ்சும் வெடித்துவிடும் போலிருந்தது.

"அழாதீங்க, அத்தான், அழாதீங்க; நீங்க அழுதால் எந்தத் தெய்வத்துக்குமே பொறுக்காதுங்க!" கெஞ்சினுள் ரஞ்சனி. அன்புக் கண்ணீரைச் செருமிக்கொண்டே துடைத்துவிட்டாள்.

திடீரென்று மாடியில் நிசப்தம்.

மனைவியின் கண்ணீரை அவசரம் அவசரமாகத் துடைத்துவிட்ட பாங்கர், "ரஞ்சனி, நம்ப ஸி. ஐ. டி.

பொண்ணு ஓடிவந்து பார்த்திடப் போகுது; ஓடிப்போய் முகத்தைக் கழுவிக்கிட்டு வந்திடு,'' என்று உஷார்ப்படுத்தினார்; சவரன் மார்க் வேட்டியின் ஒரு தலைப்பைப் பிரித்துத் தம் முகத்தை வேகம் வேகமாகத் துடைத்துக் கொள்ளலானார்.

ரஞ்சனியின் கண்கள் பளிச்சென்று இருந்தன; நிர்மலமாகவும் இருந்தன. ''நந்தினி,'' என்று குரல் கொடுத்தாள்.

மாடிப் படிகளை எண்ணிக் கணக்கெடுத்தவளாக, ஆடி அசைந்து 'அம்மானை' பாடிக்கொண்டே இறங்கி வந்து கொண்டிருந்தாள் குமாரி நந்தினி. ஷிஃபான் ஸில்க் பாவாடை, தாவணியில் அவள் அழகு ஓங்கியிருந்தது. சந்திரப்பிறைச் சாந்துப் பொட்டில் ஒச்சம் சொன்னால் பாவம். இப்போதெல்லாம் நெற்றிக்கு இட்டுக்கொள்ளப் பழகிவிட்டாள். அம்மாவின் தயவு தேவை இல்லை. பெற்றவளின் அழைப்பு காதில் விழுந்ததாகவே காட்டிக் கொள்ளவில்லை. உதடுகளுக்குள்ளே புன்சிரிப்பு ஒளிந்து கொண்டிருக்கிறது! வெளிப்புறத்திலே டால்கம் பவுடரின் இனிய மணம் வீசும். படிகளைத் தாண்டி வந்த அயர்வில் வேர்வை மின்னுகிறது; சற்றுமுன் மிதந்து வந்த இசை வெள்ளத்தில் சாமர்த்தியமாக மிதந்து வந்திருக்கக் கூடாதோ இந்தப் பெண்?

ரஞ்சனியை முந்திக்கொண்டு, ''வா, மகளே,'' என்று வரவேற்றதில் ரஞ்சித்துக்குத் திருப்தி ஏற்படவே செய்தது.

'உம்' மென்று முகத்தை வைத்துக்கொண்டு தந்தையை மட்டும் பார்த்த நந்தினி, ''நாடக பாணியிலே வசனம் பேசக்கூடத்தான் உங்களுக்குத் தெரியுமே?— என்னை வரவேற்கையிலே, 'வா, மகளே, வா' அப்படின்னு அழைச்சால் என்னங்க, அப்பா?'' என்று கேட்டாள்.

ரஞ்சித்துக்குச் 'சுரீர்' என்றது. கொஞ்சம் முந்தி தமக்கும் ரஞ்சனிக்கும் இடையில் நடந்த பேச்சுவார்த்தைகளையெல்லாம் ஒட்டுமொத்தமாகவே ஒட்டுக்கேட்டிருப்பாள் போலிருக்கிறதே இந்தப் பொல்லாத பெண்? இந்தக் கைங்கர்யத்திலும் பால்கனி இசை இவளுக்குக் கை கொடுத்திருக்கத்தான்வேண்டும். ''நந்தினி, உன் ஆசை நியாயமானது; அதை நியாயப்படுத்திடுறேன். ஒரு காரியம் செய்யேன். பெரிய மனசு பண்ணி மறுபடி ஒரு வாட்டி மாடிக்கு ஓடித் திரும்பி வந்திடு; நீ வந்து சேர்ந்தானதும், நீ ஆசைப்பட்ட விதத்திலே, நீ கேட்டு ரசிக்கிற மாதிரி, நேருக்கு நேர் நான் டயலாக் பேசிடுறேன். என்ன, சரிதானே?''

நந்தினியின் முகப் பருக்கள் தோன்றியிருந்த கன்னங்களில் குழி விழும் இடங்கள் 'சோ' வென்று வெறிச்சோடிக்கிடக்கின்றன. ஒரு விஷயம் மாத்திரம் அவளுக்குப் புரிந்தது. அப்பா யதார்த்தமாகப் பேசவில்லை; நெஞ்சுக்குள்ளே என்னவோ குறுகுறுக்கிறதே!— ''எனக்கு இப்ப டைம் இல்லை: உங்க வசனங்களை இனிமேல்தான் நான் ரசிக்கணும் என்கிறதும் இல்லேங்க, டாடி!''

பாபு தப்பிப் பிறந்ததிலிருந்துதான் நந்தினியின் இளவரசித் தர்பார் ஓரளவிற்கு ஆட்டம் காணத் தொடங்கியது; மகேஷ்கூட அறிவார், ''அப்படியா? ஆல்ரைட், மை டியர் மகளே!'' என்று துளியும் சிரிக்காமல், கண்டிப்பான— அழுத்தமான குரலெடுத்துச் சொன்னார் ரஞ்சித்.

ஆனால்—

திருமதி ரஞ்சித்துக்குச் சிரிப்பைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடிய வில்லை. ''அம்மாடி, உனக்குப் பசியெடுக்கிறதுக்காச்சும் டைம் இருக்குமா?'' என்று விசாரித்தாள்.

கைந்நொடிப் பொழுதுக்கு மட்டுமே பற்கள் வெளியே தெரிந்தன. ''எனக்குப் பசி எடுத்து ரொம்ப ரொம்ப

டைம் ஆச்சு!'' என்றாள் நந்தினி விலாசத்தின் செல்லக் குமாரி; செல்வக்குமரி!

''பின்னே, நீ இறங்கி வர வேண்டியதுதானே?'' என்று குறுக்கிட்டார் தந்தை.

''நீங்களோ, அம்மாவோ இரங்கிக் கூப்பிட்டால் என்னவாம்?''

ரஞ்சித்திற்குச் சிரிப்புப் பீறிட்டது.

''ஏங்க! நம்ப ராசாத்திக் குட்டிக்கு 'றகர'—'ரகர' வித்தியாசம் இப்ப நல்லாத் தெரிஞ்சு போச்சுங்க!''

''இரங்கி' என்கிறதை நைஸாகவும், லாகவமாகவும் நந்தினி சொன்னப்பவே, நான் கவனிச்சிட்டேன். நம்ப மனசிலே பால் வார்த்திருச்சு நம்ம பொண்ணு. ஆமா, ரஞ்...!''

பெற்றவள் சேலை முந்தானையைக் கொய்து வாயில் அமுக்கிக் கொண்டாள்.

எத்தனை நாழிகைதான் அசடு வழியாமல் இருக்கும்? ''நான் ஒண்ணும் உங்க மனசிலே பால் வார்க்கலே: நிஜமா கவே பாலை வார்த்தது உங்க பாபுவாகத் தான் இருப்பான்! ஏன்னா, அவன் அதிசயப் பிள்ளையாச்சே? அதிசயமான பிள்ளையும் ஆச்சுதே?'' என்று பொரிந்து தள்ளினாள் குமரிப்பெண்.

மின்னாமல் முழங்காமல் இடிச் சத்தம் கேட்டால், யாருக்கும் திகைப்பாகவே இருக்கும்.

பெற்றவர்கள் திடுக்கிட்டனர்.

ரஞ்சித் தவிப்பை மறைத்தவராக, ''நந்தினித் தங்கமே! நம்ப பாபு அதிசயப் பிள்ளைதான்; அதிசயமான பிள்ளையுந் தான். அதிலே சந்தேகமே இல்லை!—அது மாதிரியே

நீயும் அதிசயப் பெண்தான்; அதிசயமான பெண்ணும் தான்!'' என்று நறுக்குத் தறித்தாற் போன்று விடை கூறினார் ரஞ்சனியின் கணவர்.

ரஞ்சித்தின் மனைவியும் 'ஊம்' போட தவறிவிடவில்லை.

தொட்டால் சிணுங்கிப் பெண் மறு பேச்சுப் பேச வில்லை. சிறை வைத்திருந்த மென் சிரிப்பிற்கு விடுதலை தர இப்போதாவது நந்தினிக்கு மனம் இறங்கியும், இரங்கியும் வந்ததே?

தாய்க்கும் தந்தைக்கும் இப்பொழுதுதான் நல்ல மூச்சு வெளிவாங்கியது போலும்!

''பசியெடுத்து ரொம்ப டைம் ஆச்சுதின்னு நம்ப பொண்ணு சொன்னிச்சில்லே?''

''ம்...''

''பசி போயும் ரொம்ப டைம் ஆச்சின்னு உங்க பொண்ணேதான் சொல்லுது!'' என்று கோபாவேசத்தோடு குறுக்கிட்டாள் நந்தினி.

''அப்படி யெல்லாம் நீ கோபிச்சுக்கிட்டா, அப்புறம் நாங்க என்ன ஆகிறதாம்:''

''ஆமாடி, ராசாத்தி!''

''கரிசனத்தைப் பாரு கரிசனத்தை! நீங்க ஒண்ணும் ஆகமாட்டீங்க; என்னோட டாடியாவும் மம்மியாவும்தான் இருப்பீங்க!''

''சரி, சரி. வார்த்தையாடாம, இட்டிலியை எடுத்துவை. ரஞ்சனி. ஒரு சங்கதியைக் காரசாரமாவே சொல்லிட்றேன். இங்கிட்டு நம்ப நந்தினிப் பெண் எழுந்தருளிடுச்சின்னு, நீ ஒட்டமா ஓடிப் போய்ப் பின்கட்டுக் கதவைத் திறந்து வச்சுக்கிட்டு, நம்ப முருங்கை மரத்தையும் ஒரு பார்வை

பார்த்துக்கிட்டிருக்கிறது நல்லது. சரி, சரி, நீ போய் உன்னோட எதாஸ்தானமான ஊதாநிறக் குஷன் சோபாவிலே உட்காரம்மா!''

''நான் வேதாளம் ஒண்ணும் கிடையாது. அப்பா ஆர்டர்ப்படி, என்னோட ஊதா நீலச் சோபாவிலேயே தான் உட்காரப் போறேன். அப்பாவுக்குத்தான் ஊதா நிறம்னு, ரொம்பப் பிடிக்குமே?''

மறுபடி ஒரு 'சுருக்!' பூனைக்குப் புறப்படுவதற்கு முன் சுவைத்துக்கொண்டிருந்த ஊதாநிற அந்தரங்கடயரியையும் ஒண்டியிருந்து பார்த்திருப்பாளோ நந்தினி?-அதைப்பத்திரப் படுத்தியதை ஒரு முறைக்கு இரு முறையாக ஞாபகப் படுத்தி ஊர்ஜிதப் படுத்திக் கொண்ட பின்னர்தான், அவருக்குத் தவிப்பு நீங்கியிருக்கலாம். ''அப்புறமா நாம வாயாடலாம். முதலிலே நீ சாப்பிடேன்!'' என்றார் ரஞ்சித். ''அந்தக் காலத்திலே நான் சின்னவனு, நம்ம பாபு மாதிரி இருந்த நாளையிலே, குந்திச் சாப்பிடுறதுக்கு எனக்கு வெறும் மண் தரைதான் கிடைச்சுது: என் தாய் தகப்பனோலே முடிஞ்சது அவ்வளவு தான்! என்னமோ, விதி, திசையைத் திருப்பினதாலே, சிதேவியான உன் அம்மாக்காரி எனக்குக் கிடைச்சாள்; சீதேவியான மஹாலக்ஷ்மியும் எங்களைத் தேடிவந்தா; ஜாம் ஜாம்னு உட்காருறதுக்கு பட்டு மெத்தை போட்ட சோபா கிடைச்சிருக்கையிலே, நீ ஏன் முருங்கை மரத்திலே ஏறிக்கிடுற வேதாளமாய் உன்னைப் பாவிச்சுக்கிடணும்? விழுந்திடப் போறே; நல்லா உட்கார்ந்துக்க, மகளே!'' பேச்சை நிறுத்தினார், குடும்பத்தின் தலைப்புள்ளி.

அப்பாவின் விநயபூர்வமான நயமான பேச்சை ஏற்றுக் கொள்ளத் தவற வில்லை நந்தினி. மிக லேசாய் நாணப்பூ மொட்டவிழ்ந்தது. நாணம் மணக்காமல் இருந்து விட இயலுமா?—ஆகவே தான், அவள் கம்பீரமான 'க்வீன் மேரிஸ்' மாணவியாகச் சாய்மான இருக்கையில் கால்மேல் கால் போட்டுச் சாய்ந்து கொண்டிருக்கிறாள். போட்டுக்

காட்டிய புள்ளிப்படி, அன்னை நீட்டிய வெள்ளி இட்டிலிப் பிளேட்டை அதாவது, இட்டிலி நிரம்பிய வெள்ளிப் பிளேட்டைப் பத்திரமாக ஏந்திக்கொண்டு நர்ஸரி சிறுமி மாதிரி 'ஒன், டூ, த்ரீ' போட்டு எண்ணி முடித்ததும் தான், தக்காளிச் சட்டினி கண்ணிலே பட்டது முகத்தைச் சுளித்துக் கொண்டாள். உறைப்பு தூக்கலான பச்சைக் கொத்தமல்லித் துவையல் என்றால் தான் அவளுக்கு நாக்கில் நீர் சொட்டும். ஆனால், அம்மாவுக்கும் பாபு பையனுக்கும் பிடிக்கக்கூடிய மிளகாய்ப் பொடி, அப்பாவுக்குப் பிடிக்காதது போலவே, இவளுக்கும் பிடிக்காது. துவையல் கிடைக்காத ஏமாற்றத்தை அவளால் ஒதுக்கி விட முடியவில்லை. நாற்காலியில் வீற்றிருந்த தந்தையை ஒட்டி உரசிக் கொண்டு, ஒற்றைக் கால் தவம் இயற்றிய பார்வதிதேவியாக நின்றிருந்த தாயின் பக்கம் திரும்பினாள்.'' டிஃபன் நேரத்திலே உங்களிலே யாருமே என்னைக் கூப்பிடவேணும்னு நினைக்கல்லே; அது உங்க சொந்த விருப்பு வெறுப்புசம்பந்தமான சொந்த விஷயம். பாப் ம்யூஸிக்கு எனக்குப் பசிக்கக் கூட பசிக்காது போலிருக்கேன்னு சும்மா ஒரு பேச்சுக்கு எப்போதோ திருவாளர் மகேஷ் சொன்னது ஒண்ணும் வேதவாக்கா ஆகிட முடியாது. அது போகட்டும். இன்னொரு விஷயம்!—என்னை யாருமே அத்தனை சுலபமாய் அவாய்ட் பண்ணிட இயலாது; அதை நான் அனுமதிக்கவும் மாட்டேன்; பொறுத்துக்கவும் மாட்டேன்! எனக்கு எல்லாம் தெரியும்! ஆமாம்!'' ஆவேசத்தில் ஆரம்பித்த பிரசங்கம் ஆத்திரத்தில் முடிந்தது.

நேற்று இந்நேரம் பருவமழை.

இன்று இந்நேரம் பேச்சு மழை.

ஆசைக்கு ஒரு பெண்ணாக வாய்த்திட்ட புதல்வியின் சிடுமூஞ்சிக் குணத்தைக் கண்டு ரஞ்சனிக்குச சிரிக்கத் தான் தோன்றியது. ஆனால், 'எனக்கு எல்லாம் தெரியும்'

என்று ஏன் அப்படி முத்தாய்ப்பு வைத்தாள்? இந்தப் பேச்சு அவளை அழவைத்துவிடும் போலிருந்தது.

ரஞ்சித்துக்குக் கோபம் வீரிட்டது. 'எனக்கு எல்லாம் தெரியும்!'—பெற்ற மகளே பெற்ற அப்பனிடம் பூச்சாண்டி காட்டுவதா? சே!... ஆத்திரம் பீறிட்டது. '' ஏ, நந்தினி!'' என்று சிம்ம கர்ஜனை செய்தார்; வீரபாண்டியன் மீசை கோபாவேசமாகத் துடிதுடித்தது!

நந்தினியின் ஈரல் குலை நடுங்கி விட்டது!— ''அப்பா, உங்க மகள் ஏதாச்சும் தப்பாய்ப் பேசிட்டாளா?'' சுடு நீர் மடை கட்டியது.

ரஞ்சித்தின் விழிகள் விரிந்து விரிந்து உருண்டன; உருண்டு உருண்டு விரிந்தன. ''என் மகள் தப்பாகப் பேசுவாளா?... நீதான் தப்பாகப் பேசிட்டே!'' கருமணிகளுக்குக் கரை கட்டி நின்ற ரத்தம், அவரது பேச்சுக்குக் கரை காட்டிற்று.

''அ...ப்...பா!''

நந்தினி கதறினாள்.

ரஞ்சனியின் நீலநயனங்களில் ஆடிப்புனல் ஓடுகிறது.

முகப்பு மண்டபத்தில், காவற்காரரின் தலை தெரிந்தது.

சூட்டோடு சூடாக, ரஞ்சித் எட்டிப் பார்த்தார். அவரது பார்வையிலே, அவருடைய 'இம்பாலா'வுக்கு அருகில் வந்து நின்ற 'செவர்லே' பட்டுத் தெறிக்கிறது. ஓர் அதிசயம்!—செவர்லே ஓ—கே!—விடிந்ததும் பணம் கிடைத்தால்தான், தன் வாழ்க்கை விடியுமென்று ராத்திரி கெஞ்சிக் கூத்தாடினார் படத் தயாரிப்பாளர் கைலாசம். சொன்ன சொல்படி வந்து குதித்துவிட்டார்!—அவருடைய கால்கள் பத்திரமாகவே இருக்கவேண்டும்!—வரவேற்புக் கூடத்திற்குச் செல்ல ஆயத்தப்பட்டார் பாங்கர் ரஞ்சித்.

நந்தினி தவித்தாள்.

தடுமாறினுள் நந்தினி: 'அ...ப்...பா!'

இந் நிலையில்:

தொலைபேசி, மணி அடித்தது.

ரஞ்சனி விரைந்தாள். ''நம்ம பாபுவாகத்தானுங்க இருக்கும்!''

''ஏன், நம்ம மகேஷாகவும் இருக்கலாமே?...''

''பேஷாக அப்படியும் இருக்கலாமுங்க!''

''ஓஹோ?''

''ஆனுல்...?''

''சொல், ரஞ்சனி, சொல்!''

''அது நம்ப பாபுவாகவும் இருக்கலாம்தானே, அத்தான்?''

''ஓ! அப்படியும் இருக்கலாம்தான்!''

''அப்படியே இருந்திடட்டுமே!''

''ஆஹா! அப்படியே இருந்திடட்டும், ரஞ்சனி!''

பாசம் பந்தயக்குதிரை ஆயிற்று...!

# அந்தி நிலாச் சதுரங்கம்

## 3: பாபு!—ஒரு பிரச்சினை!

பிரச்னைதான்!...

தொலைபேசியில் அழைப்பது யாராக இருக்கும்?

ரஞ்சித்தின் சிந்தனைகள் தாயம் ஆடுகின்றன.

'கண்மணி பாபுவா?—விடுமுறை தினங்களில் ஹாஸ்டலிலிருந்து நேராக வீட்டுக்கு வருவதானால், இந்நேரம் வந்திருப்பான்; இம்பாலாவில் ஏறமாட்டான்; வினோபாஜி மாதிரி நடந்துதான் வருவான்; நடந்துதான் போவான்; இந்தச் சின்ன வயதிலேயே, பற்றற்ற—பற்றறுத்த நிலை ஏன்தான் ஏற்பட்டதோ? எப்படியும் வந்துவிடுவான்; வாரத்திலே, ஆறு நாட்களில் சுமக்க முடியாமல் சுமந்து வைத்திருக்கும் பாசத்தையும் அன்பையும் ஒரு லீவு நாளில் எங்கள் முன்னிலையில் கொட்டி அளக்காமற் போனால்,

அவனுக்கு உறக்கம் பிடிக்காது; ஊண் பிடிக்காது: நல்ல படியாக வந்து சேர்ந்து விடவேண்டும். அம்மாக்காரிக்கு இப்போதே இருப்புக்கொள்ளவில்லை; வெளியில் காட்டிக் கொள்ளாமல் இருக்கிறள், பாவம்!...பாபு!...

'ஒருவேளை, எங்கள் குடும்ப நண்பரான மிஸ்டர் மகேஷ்தான் கூப்பிட்டிருப்பாரோ? இரண்டு, இரண்டரை நாழிகைக்கு முன்னதாக, அந்த ஊதாப்பூ நிற நாட் குறிப்பில் நான் மூழ்கிப்போயிருந்த, நெருக்கடியானதும் சோதனையானதுமான வேளையில்—என் ரஞ்சனியும் காணமற் போய்விட்ட சமயத்தில், என்னை நிர்ப்பந்தப்படுத்திக் காதுக்கும் காதுக்குமாகப் பேசித் தன் உள்ளத்தின் அன்பை யும் பாசத்தையும் வெளிப்படுத்திய உயிர் நண்பர் மகேஷ் பேசிக் கொண்டிருக்கையில், தொலைபேசி இணைப்புத் துண்டிக்கப்பட்டது. அது சரி; அது இயற்கை; செயற்கைச் சக்தியின் விதிகூட சோதிப்புக்கு ஆளாவதும் இயற்கையாகத் தான் இருக்குமோ?—அவர் விரும்பியிருக்கும் பட்சத்தில், எத்தனையோ தரம் கூப்பிட்டிருக்கலாம்; கெட்டும் பட்டணம் சேர் என்பார்கள். அவரோ, பட்டணத்தைத் துறந்து ஓடிப்போனவர்; இப்போது திரும்பியிருக்கிறர். அவருக்குத் தொலைபேசிக்கா பஞ்சம்? ...ம்... என்னவோ, பேசவில்லை. வாழ்க்கையிலே ஒரு பற்று, பற்றுதல் இருக்கவேண்டாமோ? —அசல் சாமியார்தான்!—சாமியாரிலும் சாமியார், ஒண்ணும் நம்பர் நவநாகரிகச் சாமியாராக்கும்!...'

டங்...!

சிந்தனை நமைச்சல் ஓய்ந்தது; மனம் விழித்துக் கொண்டது. உயிருக்கு இனியவள் நின்ற திசைக்குப் பார்வையைத் திசை திருப்பியபோது, செய்திகளை வாங்கிக் கொடுக்கும் உபகரணத்தை ஆத்திரத்துடன் 'டங்' என்று 'ரெஸ்'டில் வைத்துவிட்டு, நிச்சலனமாக ரஞ்சனி திரும்பி விட்டதைக் காண நேர்ந்தது. ரஞ்சித் புழுங்கினர்!

"பேச்சு மூச்சைக் காணல்லே; ரெண்டு செகண்ட் பார்த்தேன்; பேச்சுமூச்சுக் காட்டாம", வச்சிட்டேன். நாங் நம்பரோ, என்னமோ?—ஊம்...அவசிய அவசரம் உள்ளவங்க, முறையோட கூப்பிடுவாங்க; நீங்க கிளம்புங்க, அத்தான்," என்று சொல்லி, புருஷனை வழிகூட்டி வைத்து விட்டு, உணவுக் கூடத்துக்கு விரைந்தாள். 'முசுட்டுப் பொண்ணு பலகாரத்தைத் தின்னுதோ, என்னமோ?'—அத்தானுக்கு வராத கோபம் வந்துவிட்டால், அகப்பட்டவர்கள் பாடு சந்தி!—'என் மகள் தப்பாகப் பேசமாட்டாள்; நீதான் தப்பாகப் பேசிட்டே!'—எவ்வளவு நிர்த்தாட்சண்யமாகப் பேசிவிட்டார் இவர்? ஆனாலும், என்னுடைய நந்தினிப் பெண்ணுக்கு இப்படி வாய் நீளக்கூடாது. 'எனக்கு எல்லாம் தெரியும்' என்று நந்தினி போட்ட குண்டு அவள் மனத்தில் வெடிக்கவில்லை; உறுத்தியது; கனத்தது; நீள்மூச்சில் தவித்தாள் ரஞ்சனி.

வேடிக்கைதான்!

சுவரிலும் காலம் ஓடுகிறது.

மணி பத்து ஆகப் போகிறது.

ரஞ்சனிக்குத் 'திக்'கென்றது. பாபுவைக் காணோமே!—பெற்ற மனம் பித்து; ஆனால், பிள்ளை பாபுவின் மனம் கல்லா, என்ன? சூன்யத்தில் ஆளுகின்றவனை நம்புபவள் அவள்; கை குவிக்கிறாள்; கண்கள் குவிகின்றன. எப்படியோ, மகளின் பக்கத்தில் வந்து நின்றிருக்கிறாள். ஸ்லிப்பர்களில் தடுமாறியவள், ஏறிட்டுப் பார்த்தாள். அவள் முகத்தில் ஈயாடவில்லை; எதிரில் நின்ற கண்ணாடியிலிருந்து விலகி நின்றாள்.

ஆனால், நந்தினியின் பவுடர் வதனத்தில் ஈக்கள் ஆடின. அவை, விலக்கி வைக்கப்பட்டிருந்த இட்டிலிகளைச் சுற்றி ஆடிக்கொண்டிருந்திருக்கலாம்.

"நந்தினி..."

"..................."

"நந்தினி!— ஒருதரம், ரெண்டு தரம், மூணு தரம்...!"

அவ்வளவுதான்.

மறு இமைப்பில்—

கோபக் கனல் தெறித்திட வந்து நின்ற ரஞ்சனியின் கழலடியில் நெடுஞ்சாண்கிடையாக வந்து வீழ்ந்த நந்தினி, "தாயே! நான் உங்களோட மகள்தானே?...உங்க அன்பான கணவரோட பொண்ணுதானே நான்?...ம்...சொல்லுங்க!— ஒன்...டூ...த்ரீ!..." என்று ஓலம் பரப்பினாள்.

பெற்ற மகளின் உணர்ச்சிகள் இப்படிக் கிளர்ச்சி செய்யுமென்று பெற்ற அன்னை சற்றும் எதிர்பார்த்திருக்க முடியாது. நெஞ்சு பதை பதைத்தது. "நந்தினி, நீ எங்களோட மகளேதாண்டி, தாயே!" என்று விம்மி வெடித்தவளாக, நந்தினியின் இரண்டு கைகளையும் பற்றிப் பிடித்துத் தூக்கியெடுத்து, அவள் விளையாடிய மார்பகத்தில் அவள் முகத்தைப் பதித்து அணைத்துக்கொண்டாள் ரஞ்சனி.

பாசத்திற்குச் சிறை புகத் தெரிவதுபோலவே, விடுதலை பெறவும் தெரியுமோ?

"அம்மா...அம்மா...நான் செத்துப் பிழைச்சிட்டேனே, அம்மா!" என்று அந்த நாளில் வானத்துக்கும் பூமிக்குமாகக் குதிப்பானே பாபு, அப்படிக் குதித்துக் கும்மாளம் போட்டாள் அந்தப்பெண். அத்துடன் திருப்தி அடையாமல், தாய்க்குக் கன்னத்துக்கு ஒன்று என்ற கணக்கில் இரண்டு முத்தங்களையும் வழங்கினாள்.

ரஞ்சனியின் மேனி புல்லரிக்கிறது. பாபுவின் முத்தம் கிடைத்து எத்தனை வருஷம் ஆகிவிட்டது?—பரிதாபமாகச்

சுற்றுமுற்றும் நோக்கினாள். பாபு இன்னமும் ஏன் வரவில்லை? பாசம் உயிர்க்கழுவில் துடித்தது: 'கடவுளே!...'

''நான் இட்டிலி சாப்பிட்றேன், அம்மா.''

''ஊம்.''

''ஏம்மா, என்னமோபோலே இருக்கே?''

''ஒண்ணுமில்லே, நந்தினி.''

''நீ பொய் சொல்லுறே!''

''நான் ஏம்மா பொய் சொல்லப் போறேன்?''

''அதை என்னைக் கேட்டா?—பொய் என்கிறது என்ன? உண்மையை மறைக்கிறதுக்குப் பேர்தான் பொய். பொய் பேசித்தான் தீரணுமென்கிற ஒரு நெருக்கடியான சந்தர்ப் பத்தை உயிர்போற நிலைமையிலோ, இல்லே, மானம் போற நிலைமையிலோ, விதி உண்டாக்கினாலொழிய, பொய் பேசவே கூடாதின்னு நீயே எனக்குப் பாடம் படிச்சுக் கொடுத்திருக் கியே, அம்மா?—பின்னே, ஒரு அற்பமான பொய்யை ஏம்மா நீ சொல்றே?''

''நீ என்னம்மா சொல்லுறே, நந்தினி?''

''உன்னோட கண்ணு கலங்கிக்கினே இருக்குது; நீயானா, ஒண்ணுமில்லேன்னு பொய் பேசி மழுப்பித் தப்பிக்கிறியே, அம்மா?''

ரஞ்சனிக்கு அழுகையைத் தவிர்க்கும் உபாயம் விளங்க வில்லை. ''பாபுவை நினைச்சேன்; கண் கலங்கிருச்சு; அவ்வளவுதான்,'' என்று உயிரும் உள்ளமும் உருகித் துடிக்க விம்மினாள்.

''இந்தச் சின்னத் துப்புக்கூட எனக்குத் தெரியாமல் போயிடுச்சே!—நான் சுத்த மக்கு. இந்த லட்சணத்திலே, எனக்கு எல்லாம் தெரியும்னு கொஞ்சம் முந்தி, நான்

சம்பமும் சவடாலும் பேசினேனே?—பைத்தியக்காரி நான்!... அது போகட்டும். நீ கண் கலங்காதே, அம்மா. பாபு வந்திடுவான்; அவன் ரோசக்காரன் மாத்திரம் இல்லே; கெட்டிக்காரனும்கூட. இத்தனை நேரமாகியும், இன்னம் பாபுவைக் காணோமேன்னு நானும்தான் உள்ளுக்குள்ளே கவலைப்பட்டுக்கிட்டிருந்தேன்!'' என்று தாழ்குரலில் சொன்னாள் நந்தினி. பாசத்தின் சோகம் முகத்திலும் அப்பிக் கிடந்தது.

''சாப்பிடேன், நந்தினி.''

''நீயும் வாம்மா; சாப்பிடுவோம்.''

''நான் வரல்லே.''

''ஏனம்மா?''

''எனக்குப் பசி இல்லே; நீ சாப்பிடு.''

''எனக்கும் பசிக்கல்லே!''

''உனக்குப் பசியெடுத்து ரொம்ப டைம் ஆச்சின்னு அப்பவே சொன்னீயே?''

''அது ஒண்ணும் பொய் இடையாது. தம்பிப் பயல் வந்தானதும், நானும் உன் கூடவேதான் சாப்பிடப் போறேன், அம்மா!''

''உன் பிரியம்!'' கண் மூடிக் கண் திறப்பதற்குள்ளே, எப்படி இத்தனை சமர்த்துக்காரியாக ஆனாளாம் இந்த நந்தினிப் பெண்? தம்பி என்றால், அக்காள்காரிக்கு ஏழாம் பொருத்தம் ஆயிற்றே? அவள் மனம் மாறியிருக்கிறதா? இல்லே, மாற்றப்பட்டிருக்கிறதா? தனக்குத் தானே பெருமைப்பட்ட பாவனையிலேயே, முகம் களை கட்டியது. தன்னுடைய அன்புச் செல்வங்கள் புடைசூழ, காலைச் சிற்றுண்டியைத் தொடங்கி வைக்கப்போகும் நல்ல

பொழுதுக்காகவே தவித்துக்கொண்டிருந்தாள் ரஞ்சனி. சோதித்தது போதுமென்று இனிமேலாவது பாபு பிரசன்ன மாகித் தரிசனம் கொடுக்கலாகாதா?—விழிகளிலே பனிச் சிதறல்.

அழைக்கும் குரல், காற்றில் அழைக்கப்பட்டு வருகிறது.

உயிர்கொண்டவர், உயிர்கொண்டு அழைக்கிறரென்றல் கட்டாயம் அவராகவேதான் இருக்கவேண்டும். ஆமாம்; அத்தான்தான்!—தயாரிப்பாளரைச் சந்திக்கத் தயாராகி இப்போதுதான் போனர்!

"ரஞ்...ரஞ்...! இங்கிட்டுப் பாரேன்!"

பாபு!...

பெற்ற மனம் பித்து ஆயிற்றே?— ஆனந்தம் முரசு கொட்டியது. பாதங்கள் பூமியில் நிலைக்கவில்லை. "பாபு, ஏம்பா இத்தனை நேரமாயிடுச்சு?" உள்ளம் தவித்த தவிப்பில், பாசமும் தவித்தது; தாய்மையும் தவித்தது.

பாபு ஏன் இப்படி 'உம்மணமூஞ்சி' ஆகிவிட்டான்?

பாபுவைச் சுமந்தவளால், பாபுவின் பயங்கரமான மௌனத்தைச் சுமக்க முடியவில்லை. "பாபு!" என்று மறுபடி கூவினள் ரஞ்சனி.

பாபு: "......"

"நம்ம பாபுவுக்கு நம்ம பேரிலே கோபமாக்கும்!"

"ஏனுங்க?—நாம தப்பு கிப்பு பண்ணலீங்களே, அத்தான்?"

"நாம தப்பு பண்ணுமல் இருந்திருந்தால், அவன் எதுக்குக் கோபப்படப்போருன்?—தங்கக் கம்பி ஆச்சே நம்ப பாபு?"

இவர் என்ன புதிர் போடுகிறார்?

'ஐயையோ!'—நெருஞ்சி முள், நெஞ்சிலேகூட தைத்து விடுவது உண்டோ?

விடுகதை என்றால், அதற்கு விடை இருக்கத்தான் இருக்கும்.

ரஞ்சித் சொல்கிறார்: ''பாபு காலம்பற எட்டு, ஒன்பது மணிக்கெல்லாம் விடுதியிலிருந்து புறப்பட்டு இங்கே வந்திட்றது வழக்கம். மணி பத்தாகப் போகுது; இப்பத் தான் அவன் அவனோட வீட்டுக்கு வந்து சேர்ந்திருக்கான்; இல்லியா? இடைப்பட்ட இத்தனை நேரத்துக்கும் அவன் வந்து சேரலையே என்கிற கவலை நமக்குக் கொஞ்சத்துக்குக் கொஞ்சமானும் இருந்திருந்தால், கடைசிப்பட்சம், ஹாஸ்டல் நம்பருக்குப் ஃபோன் அடிச்சு அவனைக் கூப்பிட்டு, 'அவசரக் கூட்டம் நடக்கிறதாலேதான் இத்தனை லேட்; முடிஞ்சதும் வந்திடுவேன்' என்கிற நடப்பை அவன் வாக்குமூலமாவே கேட்டுக்கிட்டு, நாம நிம்மதியோட தப்பிச்சுக்கவும் முடிஞ்சிருக்கும். இப்ப நாம வகையாய் அவன் கையிலே அகப்பட்டுக்கிட்டோம்!— பாபுவோட குற்றச்சாட்டுக்கு நாம ரெண்டு பேரும் எப்படிப் பொறுப்பு ஆகிறோமோ, அதே விகிதாசாரத்திலேயேதான், அந்தக் குற்றத்துக்கு அவன் கொடுக்கக்கூடிய தண்டனையை ஆளுக்குப் பேர் பாதியாய்ப் பாகம் போட்டுக்கிடவும் பொறுப்பு ஆகவேணும். என்னோட பாதிக் குற்றத்துக்குக் கெஞ்சிக் கூத்தாடி அவன்கிட்டேயிருந்து மன்னிப்பு வாங்கிக் கிட்டேன் நான். உன்னோட பாதித் தப்புக்குப் பரிகாரம் தேடிக்கிடுறது உன்னோட சாமர்த்தியத்தைப் பொறுத்த சங்கதி; அப்பறம், அம்மா பாடு, பிள்ளை பாடு! என்ன, புரிஞ்சுதா, ரஞ்சனி?'' அவர் பிரசங்கம் காரசாரமாகவே அமைந்தது.

ரஞ்சித்தின் கெடுபிடிப் பேச்சு, ரஞ்சனியின் வயிற்றில் புளியைக் கரைக்கிறது. கலவரம் சூழ்ந்திட, இம்மிக் கணக்கில் விழிகளைப் படிப்படியாக உயர்த்தி, ஒரு நம்பிக்கையோடு, அருமையான பிள்ளை பாபுவை அருமை யாகப் பார்த்தாள்.

பாபுவா, கொக்கா?—அவன் அசையவும் இல்லை; அசைந்து கொடுக்கவும் இல்லை.

பாபுவின் இந்தச் சோதிப்பிலும் எப்படியாகிலும் தப்பி விட்டால் தேவலாம்!— ரஞ்சனியின் பெண் உள்ளம் தடு மாறியது; பொட்டுப் பொழுதுதான்; நிலையை உணர்ந் தாள்; பாபுவை நோக்கி நடந்தாள்; நடந்தவள், நின்றாள்; நின்றவளின் பார்வையில் பாபுவும் ஆண்டியாகவே தரிசனம் கொடுத்தபின், அந்த நிகழ்ச்சி அவள் நெஞ்சில் மின்ன லடிக்காமல் எப்படித் தப்பமுடியும்?

இடம்: பக்திச்சுவை சொட்டும் பழனிமலை ஆண்டியின் திருச்சந்நிதானம்.

நேரம்: மனம் கவரும் ரம்மியமான இளங்காலைப் பொழுது.

'அப்பனே!' ரஞ்சனியின் குரல் தழதழத்தது. தரிசனம் முடிந்து, குருக்கள் நீட்டிய விபூதியைப் பூசிக்கொண்டு, பிரசாதமும் கையுமாக, கணவர் மற்றும் குழந்தைகளோடும், குடும்ப நண்பர் மகேஷோடும் கோயிலைச் சுற்றி வலம் வந்த போது, நெற்றியில் பூசப்பட்டிருந்த திருநீற்றின் துகள்கள் காற்றில் சிதறி அவள் கண்களில் வீழ்ந்தன; எரிவும் கரிப்பும் மிஞ்சின; சுடுநீர் புரண்டது; தடம் மாறினாள்; தடுமாறினாள ரஞ்சனி.

மகேஷ் கவனித்துவிட்டார். 'ஆ!' என்று பதறிப் போனார்; பின்னுக்குத் திரும்பினார்; ரஞ்சனியை நெருங்கி னார்; அவளது நெற்றியில் அப்பிக் கிடந்த விபூதியை

டவலினல் பதனமாக ஒற்றிவிட்டார்; அப்புறம், வாயைக் குவித்து, அவள் கண்களிலே ஊதிவிட்டார்.

நடந்தது அவ்வளவேதான்!

மறுகணம்:

பதுங்காத புலிக்குட்டியாகப் பாய்ந்த பாபு, ஆவேசமாக மகேஷின் மார்பில் கையைக் கொடுத்து நெட்டித் தள்ளிவிட்டான்.

மகேஷ் கதி கலங்கினர்; கீழே சாயாமல் தப்பினர்; அவமானத்தால் கூனிக் குறுகி நின்றவர், நீலவானத்தை வெறுப்புடனும் விரக்தியுடனும் நோக்கினர்; அங்கே என்ன படம் ஓடியதோ? விழிகள் தளும்பி வந்தன; சமாளித்தார்.

''மகேஷ் ஸார்! நீங்க எங்க குடும்ப நண்பர் மட்டுமே தான்!''

பாபுவா இவ்வாறு பேசினன்?

மகேஷின் உள்மனம் வெடித்துவிடும் போலிருந்தது.

ரஞ்சனி சிலை ஆனள். ஆகவேதான், அவள் வாய் அடைத்திருக்கவேண்டும்.

''டேய், பாபு!''

ஒரே சீறலாகச் சீறித்திட்டி, பாபுவைத் தமது பற்களுக்கு இடையிலே போட்டுக் கடித்ததோடு அமைதியடையாத ரஞ்சித், ஒரே எட்டில் தாவிப் பாய்ந்து அவனுடைய பிஞ்சுக் கன்னங்களில் 'பளார், பளார்' என்று ஓங்கி அறைந்தார்!

பாபு அப்போது மட்டும் அசைந்தானு?—இல்லை, அசைந்து கொடுத்தானு? ஊஹூம்! எங்கேயோ சூன்யத்தை வெறித்து நோக்கிய நிலையில் நின்றுவிட்ட அவன், தன் இடது கன்னத்திலே திருஷ்டி சுற்றிப் போட்டுக்

கொண்டிருந்த பொல்லாத கறுப்பு மருவை வேண்டா வெறுப்புடன் நெருடிக் கொண்டே, எதுவுமே நடக்காத பாவனையிலும், கைப்பிடியாகப் பிடித்து நிறுத்தி வைக்கப் பட்ட மாதிரியிலும் நின்றான். அவன் ரோஷக்காரன்!—அதனால்தான், வெறும் மௌனப் பிள்ளையாராகவே காட்சி தர முடிந்தது.

தாய் கலங்கினாள்.

தந்தை வருந்தினார்.

தமக்கை தவித்தாள்.

விடிந்ததும் விடியாததுமாக, வெறும் வயிற்றோடு வீட்டுக்கு வந்த பாபு, ''நான் ஏதாச்சும் ஒரு ஹாஸ்டலிலே போய்ச் சேர்ந்திடப் போறேன்,'' என்று வெடிகுண்டு ஒன்றை வீசினான்.

வெடிகுண்டு வெடிக்காமல் தப்புமா?

ரஞ்சித் பதறினார்; துடித்தார். ''பாபு...பாபு!...'' என்று விம்மிப் பொருமினார்; ''பாபு, எங்களையெல்லாம் தனியே விட்டுட்டு நீ ஏண்டாப்பா தனியா ஹாஸ்டலுக்குப் போகவேணும்?'' என்று மன்றாடினார்.

பாபுவோ பழநி ஆண்டியாகவே சிரித்தான்! அவன் தான் சிரித்தானோ? இல்லை, விதியேதான் அவன் உருவில் சிரித்ததோ?—''நிஜம்மாவே நீங்க என்னோட அப்பாவாக இருந்திருந்தா, அப்படி வன்மத்தோடே என்னை அறைஞ்சிருக்கவே மாட்டீங்க!'' என்று நீதியின் தேவனாகத் தீர்ப்பு வழங்கினான்.

''ஐயையோ...தெய்வமே!'' என்று கூப்பாடு போட்டு அலறிவிட்டார் ரஞ்சித்.

பாபு இப்பொழுது மௌனப் புன்னகை சிந்தினான்.

கெஞ்சிக் கூத்தாடினர் பாங்கர்: "பாபு! நீ என்னோட பிள்ளையாய் இருந்ததாலேதான், உன்னை என்னாலே அறைய முடிஞ்சுது!" என்று கதறினர்.

பாபுவா மசிபவன்?—"சேர்ந்தா, ஹாஸ்டலிலேதான் சேருவேன்; இல்லாட்டி, செத்துப் போயிடுவேன்!" வெட்டு ஒன்று, துண்டம் இரண்டாகச் சொல்லிவிட்டான்.

"ஐயையோ!" என்று ஓலமிட்டாள் ரஞ்சனி. "பாபு! எங்க தெய்வமே! உன் இஷ்டப் பிரகாரம் நீ ஹாஸ்டலிலேயே சேர்ந்திடலாம். ஆனா, அசந்து மறந்துகூட நீ செத்துப் போயிடாதேப்பா!" என்று கையெடுத்துக் கும்பிட்டாள்.

"ஆமாப்பா; உன்னைப் பெற்ற புண்ணியவதியோட பேச்சையாச்சும் மதிச்சு நடப்பா, பாபு!" விக்கலுக்கும் விம்மலுக்கும் ஊடாக, ரஞ்சித் பேசியதென்னவோ ஆச்சரியம்தான்!

விதியைப் போலவே, அச்சுக்குலையாமல் மறுபடியும் சிரிப்பதற்குப் பாபுவால் எப்படித்தான் முடிந்ததோ?—அவன் தன்னுடைய வைராக்கியப்படி, எப்படியோ ஹாஸ்டலில் சேர்ந்துவிட்டான்!—பாபு ரோஷக்காரன்!...

மணி: பதினொன்று:

நெஞ்சத்திலே புரண்ட கண்ணீர் விழிகளிலும் புரளவே, சிலிர்ப்படைந்த ரஞ்சனி விழிப்பும் அடைந்தாள்; இனம் புரிந்தும், இனம் புரியாமலும் ஆட்டிப்படைத்திட்ட ஒரு பயங்கரப் பயத்தின் ஊடாக மறுபடி பாபுவை ஏறிட்டு ஊடுருவினாள். மைந்தனின் கோபமும் ஆத்திரமும் ஆதங்கமும் இன்னமும் தணியவில்லை என்பதை உணர்ந்து கொண்ட நேரத்தில், பாபு—மகேஷ் சம்பந்தப்பட்ட வேறு சில நிகழ்ச்சிகளும் இதுதான் சமயமென்று நினைவில்

படமெடுக்கத் தலைப்பட்டன. பயங்கரமான பயம் மேலும் பயங்கரமடைந்தது. நெஞ்சு வலித்தது. பாபுவைச் சமாதானப் படுத்திவிட்டால், எல்லாமே சரியாகிவிடும்; சரிப்பட்டுவிடும்!—பாவுக்குப் பசிக்கும்!— பாவம்! மௌனத்தைக் காலில் போட்டு மிதித்தவளாக, அடிமேல் அடி எடுத்து வைத்தாள். அன்புப் பிள்ளையின் பால் வழியும் வதனத்தை அன்புடன் நிமிர்த்திவிட்டாள்; ''பாபு, முன்னேயெல்லாம் நீ வர்ரதுக்குத் தாமதமானால், அப்பவே ஹாஸ்டலுக்கு 'ஃபோன்' பண்ணி விசாரிக்கலையா? என்னமோ, இன்னிக்குத் தவறிட்டேன்!—தப்புத்தான்! உன் அப்பாவை நீ மன்னிச்சிருக்க, உன்னைப் பெற்ற அம்மாவை மட்டிலும் நீ மன்னிக்காமல் இருக்கலாமா? வாப்பா, இட்டிலி சாப்பிடலாம்,'' என்று கெஞ்சினாள்; கொஞ்சினாள்.

பாபுவுக்குச் சிரிப்பதற்கு மறந்து போய்விட்டது; அவன் என்ன செய்வான்?— பாவம்!

டக்...டிக்...டக்...

''டேய் பாபு! என்னை மன்னிக்கிறதுக்கு உனக்கு இஷ்டம் இல்லேன்னா, உன்னோட ஆத்திரம் தீர, இப்பவே உன் கையாலே என் கழுத்தை நெறிச்சுப் போட்டுடா!... ஊம்...ஒன்...டூ...த்ரீ!'' என்று உத்தரவு போட்டாள் ரஞ்சனி.

'த்ரீ' என்னும் அந்த ஆணைச் சொல் எதிரொலித்துத் தேய்வதற்குள்:

''அம்மா!...அம்மா!...''

கதறிவிட்டான் பாபு. செருமல் தொடர, அன்னையின் கழுத்தைத் தடவித் தடவிப் பார்த்தான் அவன். தங்கக் கழுத்திலே பாம்பெனச் சுற்றிக் கிடந்த தங்கத் தாலியை எடுத்துக் கண்களில் ஒற்றிக் கொண்டான். நிம்மதிப்

பெருமூச்சுடன், தாய் வடித்துக் கொண்டிருந்த ஆனந்தக் கண்ணீரை வடித்துவிட்டான். அம்மாவின் அழகான புன்னகையைக் கண்டதும்தான் அவனுக்கும் நிம்மதி கனிந்திருக்கவேண்டும். ஏற்றிவிட்ட விழிகளைச் சற்றே தாழ்த்தியவனாக, ''அம்மா, அம்மா!...பசிக்குதம்மா எனக்கு!'' என்று குழைந்தான்.

''எனக்கும்தான்,'' என்று குறுக்கிட்டாள் நந்தினி.

''எனக்கும் கூடத்தான்!'' என்று பெருமிதத்தோடு சிரித்தாள் ரஞ்சனி.

''எங்கேம்மா உனக்குப் பசிக்குது?—நான் பத்துமாசம் குடியிருந்தேனே, இங்கேதானே?'' என்று விசாரணை நடத்திய சூட்டோடு சூடாக, தாயின் மணி வயிற்றிலே 'கிசு, கிசு' மூட்டினான் குறும்புப் பையன்.

வெட்கத்தில் பெருமை சுரந்திட, பெருமையில் மகிழ்ச்சி சுரந்து வழிகிறது.

ரஞ்சித் நல்ல மூச்சுவிட்டார்; அதோடு நிற்கவில்லை; ''எனக்கு மாத்திரம் பசிக்காமல் இருக்குமாக்கும்?'' என்று சிரிப்பைக் காட்டாமல், கெஞ்சுதலைக் காட்டினார்.

''நீங்க முன்னாடியே சாப்பிட்டாச்சுங்களே, அத்தான்?''

''உன் மகன் மட்டும் ஹாஸ்டலிலே சாப்பிட்டிருக்க மாட்டானோ?''

''நான் சாப்பிடல்லே!'' என்று விடை சொன்னான் பாபு.

''நானும் சாப்பிடல்லேதான்!'' என்று அடம் பிடித்தார் பாங்கர்.

''பொய்!... சுத்தப் பொய்!'' என்று தர்க்கம் பண்ணினாள் வீட்டுத் தலைவி. இப்படியும் குதர்க்கம் பேசுவாரா

வீட்டுத் தலைவர்?—அவளுக்குச் சிரிப்பை அடக்கிக் கொள்ள முடியவில்லை. பாபுவின் கள்ளம் கவடு இல்லாத செக்கச் சிவந்த கன்னத்தில் கரும்புள்ளி குத்தியிருந்த அந்தப் பொல்லாத மருவை நடுங்கும் விரல்களால் அன்போடு தடவிக் கொடுத்தபடி, ''எம்ப்பா, இவ்வளவு நேரத்துக்கு நீ காலை டிபன் சாப்பிடாமலா இருந்தாய்?'' என்று கவலையுடன் கேட்டாள் ரஞ்சனி.

நயம் கலந்த விநயத்தோடு புன்னகை புரிந்த பாபு சொன்னான்: ''நான் சாப்பிடல்லேன்னு சொன்னது வாஸ்தவந்தான். எங்க ஹாஸ்டலிலே நான் சாப்பிட்டது தோசை தான்; ஆனா, எனக்கு இட்லின்னாத்தான் பிரியம். இட்டிலி சாப்பிடலையேன்னு மனசிலே நினைச்சுக்கிட்டு, 'நான் சாப்பிடல்லே' அப்படின்னு பொத்தாம் பொதுவிலே ஒரு போடு போட்டேன். அப்பாவாலே நான் இப்ப அகப்பட்டுக் கிணு முழிக்க வேண்டிய தாச்சு!''

''சாமி, சாமி! என்னை வம்புக்கு இழுத்திடாதேப்பா,'' என்று பாபுவிடம் கேட்டுக் கொண்டபின், தமது 'இனிய பாதி' யிடம் முழு வடிவத்தில் திரும்பி, ''ரஞ்...நம்ம பாபுவுக்கு டிஃபன் கொடுத்திடு சீக்கிரம்; இல்லாட்டா, முருங்கை மரத்திலே மறுபடியும் ஏறிக்கிடுவான்,'' என்று அபாய அறிவிப்புக் காட்டினார் ரஞ்சித்.

''நான் ஒண்ணும் வேதாளம் கிடையாதுங்க, டாடி!''

''அத்தான், நீங்க சும்மா இருக்க மாட்டீங்க?... என்னோட மகன் பாபுவை என்னான்னு நினைச்சிட்டீங்க? பாபுவா ...இல்லே?''

''மம்மி! நான் கொக்கும் இல்லேயாக்கும்!''

''சபாஷ்டா, தம்பி!'' என்று கை தட்டினாள் நந்தினி. ''பாபுன்னா பாபுதான்!''

''புலே! அப்படிச் சொல்லு, அக்கா!''

"சரி, சரி, வாங்க, சாப்பிடலாம். இட்டிலியெல்லாம் இந்நேரத்துக்குக் காஞ்சு கருவாடாய்ப் போயிருக்கும்!" என்றாள் ரஞ்சனி.

"கருவாடுன்னுதான் எனக்கு ரொம்பப்பிடிக்குமே!" என்றார் ரஞ்சித்.

"இட்லிதான் அங்கே இருக்கும்; இஷ்டம்னா வாங்க, அத்தான்!"

"உன் இஷ்டம் தானே என் பாக்கியம், ரஞ்!"

அத்தான் 'வசனம்' பேசுவதைக் கை கொட்டி ரசித்து உற்சாகப்படுத்தலாமென்று அவள் எண்ணிக் கொண்டிருக்கையில், முகப்பிலிருந்து ஹாலைக் கடந்து இரண்டாம் கட்டின் வழியாகச் சாப்பாட்டுக் கூடத்துக்கு வழி அமைத்த நிலைப்படியை அலங்கரித்த பூந்திரை கண்களின் சிமிட்டலாக அசைவதைக் கண்டு கொண்ட ரஞ்சினி, யாரோ அந்நியர்கள் வருகிறார்கள் என்பதை உணர்ந்து, அத்தானை உஷாரிப்படுத்தக் கைகளால் ஜாடை காட்டினாள்.

அதற்குள்—

படாதிபதி அங்கே தோன்றிவிட்டார்.

ரஞ்சனி கல் தூணுக்குப் பின்னே ஒதுங்கினாள். முன் அறிவிப்பின்றித் திரையை விலக்கியவர் மகேஷாக இருக்க முடியாதென்று அவள் நம்பினாள். நினைத்தது சரி; மகேஷானால் முகப்பிலிருந்தே அட்டகாசமாகக் குரலெழுப்பிக் கொண்டல்லவா கம்பீரமாக வந்து நிற்பார்! இந்தக் கைலாசத்துக்குத் தெரிந்த இங்கிதம் இவ்வளவுதான்!—ஊம்!

ரஞ்சித் சுதாரித்துக் கொண்டார். "புறப்பட்டாச்சுங்களா, கைலாசம்?" என்று வினவினார்.

"ஐயா கையிலே சொல்லிக்கினு கிளம்பலாம்னுதான், வெளியிலே காத்திருந்தேன். நீங்க வராததினாலே, நானே

வந்திட்டேன். வந்ததும் ஒரு விதத்திலே நல்லதாயிட்டுதுங்க. நீங்களும் உங்க சம்சாரமும் உங்க குழந்தைங்களும் ஆள் மாற்றி ஆள் காரமாகவும் சாரமாகவும் டயலாக் பேசினதை யெல்லாம் நானும் திரை மறைவிலேருந்து ரொம்பவும் ரசித்தேனுங்க, பாங்கர் ஸார்! வாழ்க்கையை நாடகம்னு சொல்லக் கேட்டிருக்கேன்; ரிலீஸ் ஆகப்போற என் படத்திலே கூட இந்தக் கருத்தைச் சொல்லியிருக்கார் எங்க வசனகர்த்தா. அந்த வசனம் உண்மைதான் என்கிற உண்மையை இப்பத்தான் என்றைலே அனுபவ பூர்வமாக உணர்ந்து கொள்ள முடிஞ்சதுங்க; எப்படியோ, எல்லாருமாய்ச் சேர்ந்து பாபுவைச் சமதானப்படுத்திட்டீங்க. அந்த மட்டிலே, பருத்தி காஞ்சிக் கண்டாங்கியாய்க் காய்ச்சிட்ட மாதிரிதானுங்க, ஐயா!'' என்று சொல்லி, நாவற்பழச் சிவப்பில் இருந்த தடிமனான உதடுகளில் மெல்லிசான புன்னகையை மலரவிட்டார் கைலாசம். பாங்கர் யதார்த்தமான கலகலப்போடு இல்லாததைக் கண்டு, அவருக்கு உறுத்தல் எடுத்தது. ரஞ்சித்தின் சொந்தப் பிரச்சினையில் உரிமை எடுத்துக் கொண்டு குறுக்கிட்டதை அவர் விரும்பவில்லை போலிருக்கிறது. ''ஐயா, எல்லாருமாகச் சாப்பிடுங்க; டிபன் வேளையிலே பிச்சைக்காரனுட்டம் நான் வேறே குறுக்கிட்டிட்டேன்!'' என்றார்.

''அப்படியெல்லாம் சொல்லப்படாதுங்க, கைலாசம். உங்க தர்ம சிந்தை எனக்குத் தெரியும்: நீங்களும் எங்க குடும்ப நண்பர் மாதிரிதான்; வாங்களேன்; நீங்களும் இருக்கிற இட்டிலியை ஈவு போட்டுச் சாப்பிட்டுட்டுப் போகலாமே?''

கைலாசத்துக்கு வாயெல்லாம் தங்கப்பல்; வழுக்கைத் தலையைத் தடவிக் கொண்டார்; அது பத்திரமாகத் தப்பியதில் பரம திருப்தி; ''ரொம்ப நன்றிங்க, ஐயா. என் வயிற்றிலே 'கொக்கரக்கோ' ஓசை இன்னம் கூட அடங்கல் லேங்க,'' என்றார்.

''ஓஹோ! புஹாரி விருந்தோ?''

''கச்சிதமாய்ச் சொல்லிட்டீங்களே? ஆமாங்க; என்னோட படத்துக் கதாநாயகி குமாரி சாருகேசி விருந்து கொடுத்தாங்க!''

''அப்படியா? விருந்து கொடுத்தது சரி; ஆனா, பில் யார் கொடுத்தது?''

''பில் நான்தானுங்களே கொடுத்தாகணும்?''

ரஞ்சனிக்கு எரிச்சலான எரிச்சல்.

குமரிப் பெண்ணைப் பசி புரட்டி எடுக்கிறது.

''கோழி விருந்துக்கு நீங்க உங்க புது மனைவி கோகிலத்தையும் அழைச்சிட்டுப் போயிருக்க வேணும், கைலாஷ்!''

பாபு வேடிக்கை பார்க்கத் தயாரானன்.

''ஸார், எல்லாக் கதையும் தெரிஞ்சிருந்தும், என்னை இப்படி மடக்குறீங்களே? இந்தக் கோகிலம் நான் மன சொப்பிக் கொடுக்கக் கூடிய விருந்தை ஏற்கக் கூடிய அளவுக்கு எனக்கு உண்மையுள்ளவளாக இருந்திருந்தா, நான் ஏனுங்க குமாரி சாருகேசியோட துணையை விருந்துக்கு நாடப் போறேன்? என் முதல் பெண்டாட்டி நீலாட்சியோடே என்னோட மன நிம்மதியும் காலமாயிடுச்சுதுங்க; அவ புண்யவதி; அவளுக்குச் சாகத் தெரிஞ்சிட்டுது!— எனக்குத் தெரியல்லே: நான் பாவி!...''கைலாசத்தின் குரலில் சோகம் ஓங்கியிருந்தது.

ரஞ்சித்தின் மனிதாபிமான உணர்ச்சிகள் கைலாசத்திற்காக அனுதாபப்பட்டன; கண்ணீரை மறைத்துக் கொள்ளத் தலையை இறக்கிக் கொண்டார்.

ரஞ்சனி உருக்குலைந்தாள்: உருகினாள்; தவித்தாள்.

'பாவம்!'— இது பாபு.

படத் தயாரிப்பாளர் இனிமேல் புறப்பட்டுத்தான் ஆக வேண்டும்!—அவருக்குப் பணப் பிரச்னை தீர்ந்தது; படம் 'ரிலீஸ்' ஆகிவிடும். இங்கே பசிப் பிரச்சினை இனியாகிலும் தீர்வு காண வேண்டாமா?

''பாங்கர் ஸார், உங்க அன்புக்கு ரொம்ப நன்றிங்க.''

''செக் பத்திரம், கைலாசம்!''

''உங்க பணத்தை எப்படிப் பத்திரமாகக் காபந்து பண்ணிக்கிடுவேஞே, அதே மாதிரி, என் நாணயத்தையும் காபந்து பண்ணிக் காப்பாற்றிக்கிடுவேனுங்க, ஐயா!''

''சரி, புறப்படுங்க!''

கைலாசம் ஏனோ தயங்கினார்; கன்னங் கறுத்த கண்களை நிமிர்த்தி, தூண் மறைவில் நின்றிருந்த ரஞ்சனியின் திசைக்குத் திசைமாற்றி விட்டார். பிறகு. பாங்கரைப் பார்வையிட்டார். ''ரஞ்சித் ஸார், அண்ணியை ஒரு நிமிஷம் இப்படி வரச் சொல்றீங்களா?'' என்று வேண்டினார்.

எடுக்கப்பட்டுவிட்ட முள்ளின் முனை எப்படியோ தங்கியிருந்து குத்துவது போல வேதனைப் படலானார் ரஞ்சித். நெஞ்சப் பிசைந்து கொண்டார்: முதுகைத் திருப்பி.''ரஞ்'' என்று விளித்தார்.

தயங்கித் தயங்கி வந்து நின்றாள் ரஞ்சனி.

நிமிர்ந்தார் கைலாசம். ''பெண்ணாகப் பிறக்கிறத்துக்குத் தவம் செய்யவேணும்னு படிச்சிருக்கேன். அது. உங்கவரை, நூற்றுக்கு நூறு அர்த்தமுள்ள வாக்குத்தானுங்க. உண்மையான, நம்பிக்கையான, நாணயமான, விசுவாசமான உங்களை மனைவியாக அடைஞ்சிருக்கிற எங்க அண்ணன் ரொம்ப ரொம்பப் பாக்கியவானுங்க, அண்ணி!— உங்களை நமஸ்காரம் பண்றேனுங்க!'' என்று உணர்ச்சிப்

பெருக்குடன் பேசி, ரஞ்சனியின் கால்களைத் தொட்டு வணங்கிக் கண்களிலே ஒற்றிக் கொண்டபோது, தன் கைகளில் கண்ணீரின் சொட்டுக்கள் சிதறித் தெறிக்கவே, பதட்டத்துடன் எழுந்த கைலாசம், அதே பதட்டத்துடனே ஏறிட்டுப் பார்த்து, ''பாவி, நான் உங்களையும் கண்கலங்கிட வச்சிட்டேனே?'' என்றார்.

ரஞ்சனியும் பேசத்தான் நினைந்தாள்: ஆனால், பேச்சு வந்தால்தானே?

படபடத்து அடங்கியமழைத் தூற்றலில் புறப்பட்ட மண் வாசனை அடங்கவில்லை: தை மேகக் கறுப்பும்கூட அடங்கவில்லைதான்.

ரஞ்சித்தின் மனத்தை என்னவோ செய்தது!

கைலாசம் விடைபெற்ற சமயத்தில், பாபுவை நெருங்கி அவன் தோளில் தட்டி, ''பாபு, நீ தாம்ப்பா நிஜமான ஹீரோ!'' என்று புகழவும் தவறிவிடவில்லை.

பாபு தோளைத் தடவி விட்டவனாக, மீண்டும் சூன்யத்தை வெறித்து நோக்கினான்.

ஓ மேகா கூவுகிறது.

வேளை கெட்ட வேளையிலே, நந்தினி விலாசம் பங்களாவின் உணவுக் கூடத்தில் மணி பதினொன்றுக்குக் காலைச் சிற்றுண்டிக்கான சந்தடிகள் திரும்பவும் திரும்பின.

ரஞ்சனி சகஜ நிலையில் இயங்கினாள்; வெள்ளித் தட்டுக்களை ஒவ்வொன்றாக நகர்த்தி, தான் போட்டு வைத்திருந்த கணக்குப் பிரகாரம், இட்டிலிகளை எண்ணிச் சரி பார்த்து நிரப்பினாள்; பாபு, நந்தினி என்று பெயர் சொல்லிக் கூப்பிட்டு அவரவர்க்குரிய தட்டை நீட்டினாள். பீரோவிலிருந்து எடுத்த புதுப் பிளேட்டைச் சேலைத் தொங்கலால் துப்புரவாகத் துடைத்து, அதில் நான்கு

இட்டிலி வைத்தாள்! இது மகேஷுக்கு! எந்நேரத்துக்கு வந்தாலும், அவருக்காகவே காத்திருக்கும்!—அடுத்த தட்டை நகர்த்தினாள்; அது அவளுடையது; அதில் மூன்றே மூன்றைப் போட்டாள்: அத்தானுக்குரிய பிளேட்டில் ஒரேயொரு இட்டிலியை வைத்து, "இந்தாங்க," என்று கொடுத்தாள்.

"அடடே, எனக்கா? என் கணக்குத்தான் எப்பவோ தீர்ந்தாச்சே?" என்று மனைவியிடம் இடைமறித்தார் ரஞ்சித்.

"கணக்குத் தீர்ந்தா என்னுங்க? என்னுடையதிலே ஒண்ணைக் கொடுக்கிறேன். பரவாயில்லீங்க, அத்தான்; இந்தாங்க! கணக்கின்னு, ஒரு அட்ஜஸ்ட்மெண்ட் சகஜந்தானே?"

"ஓ! அப்படியா? வித் ப்ளஷர்!..." என்று விஷமப் புன்னகை ஒன்றைத் தூவி விட்டு, மனைவி கை கடுக்க நீட்டிக் கொண்டேயிருந்த தட்டைக் கை நோகாமல் வாங்கிக் கொண்டார் பாங்கர். பிறகு, ரஞ்சனியின் காதோடு காதாக "என்னோட கணக்கு பதினஞ்சு இட்லி ஆயிடுச்சு; அம்மாடியோ!" என்று கிசுகிசுத்தார்.

"சரி, சரி; இட்லியைத் தின்னுங்க!" என்று பச்சைக் கொடி காட்டினாள் ரஞ்சனி.

"நாங்களும் சாப்பிடலாமில்லையா?"

"ஓ!" என்று உத்தரவு கொடுத்தாள், அதற்கான உரிமையும் உறவும் பெற்றவள்.

"நீயும் சாப்பிடம்மா," என்று பாபு சொல்லி, இட்டிலியைப் பிட்டுத் தக்காளிச் சட்டினியில் தொட்டு வாயில் போட்டுக் கொள்ள முனைந்த நேரத்தில், புதிய வெள்ளித் தட்டு பாபுவின் கழுகுக் கண்களிலே பட்டுவிடவே "அந்தப் புதுப் பிளேட் யாருக்காம், அம்மா?" என்று விசாரித்தான்.

''மகேஷுக்கு!'' என்று ஓர் அழுத்தமான தொனியில் விடை கூறினாள் ரஞ்சனி.

''மகேஷுக்கா?''

''ஆமாம், மகேஷுக்கேதான்!—உன் அன்பு மகேஷுக்கேதான்!'' என்று ஒரு படி கூடுதலான அழுத்தத்துடன் தெரியப்படுத்தினார் ரஞ்சித்.

இட்டிலியும் கையுமாகவும் மௌனப் பிண்டமாகவும் காட்சியளித்த பாபுவின் இடது கை, அவனது கன்னங்கள் இரண்டையும் தடவிப் பார்த்துக் கொண்டபோது, அவன் கண்கள் தளும்பத் தொடங்கிவிட்டன.

ரஞ்சனிக்கு மனம் பொறுக்கவில்லை; ''சரி, சரி: சாப்பிடுப்பா, பாபு!'' என்று குரல் கம்மச் சொன்னாள்; அன்பு கம்மாமல் வேண்டினாள்.

'பஸ்ஸர்' ஒலிக்கிறது.

ரஞ்சித் கிளம்பினார்.

ரஞ்சனி முந்திக் கொண்டாள்.

அங்கே—

மகேஷ் காட்சி கொடுத்தார்!

தனியாக அல்ல!—

பெண் ஒருத்தியோடு!...

# அந்தி நிலாச் சதுரங்கம்

## 4: கேரளத்தின் பூஞ்சிட்டு!

மகேஷ்...!

*அன்பே வடிவமாக அமைந்திட்ட இன்னுயிர்த் துணைவரீ ரஞ்சித்தை வேடிக்கையானதொரு குதூகலத்துடன் முந்திக் கொண்டு, ஓட்டமும் நடையுமாக வெளிப்புறம் வந்து நின்ற ரஞ்சனிக்கு, இப்பொழுது இனம் விளங்காக ஒரு தவிப்பு மேலிட்டது; தவிப்பின் சல்லாபமான—வாத்சல்ய மான மன உணர்வுகளுடன் முகப்பு மண்டபத்தின் பிரதானமான வாசற் கதவுகளைத் திறந்ததுதான் தாமதம்; சூறைக்காற்றில் எதிர்பாராமல் சிக்கிக்கொண்டவளாக ஓர் அரைக் கணம் தட்டித் தடுமாறினாள்; மூச்சுத் திணறிற்று; வேர்த்துக் கொட்டியது!— எல்லாம் அரைக் கணம்தான்!—மறு இமைப்பில், அவள் சுயப் பிரக்கினையைச் சாமர்த்தியமாக மீட்டுக்கொண்டாள். மீட்டுக்கொள்ள வேண்டியவள் ஆனாள்!—"மகேஷ், வாங்க, வாங்க!"*

என்று அன்போடு வரவேற்ருள். உடன் நின்றுகொண்டிருந்த அந்தப் புதிய பெண்ணையும் அன்பிற்குக் கட்டுப்பட்ட தமிழ்ப் பண்பாடு குலுங்க இன்முகத்துடன் உள்ளே வரும்படி அழைத்தாள். எதிர்ப்புறத்துப் புல்வெளிக்குக் கரைகட்டிக் கண்சிமிட்டிச் சிரித்த பூச்செடிகளைத் தழுவித் தவழ்ந்து வந்த வாடைக் காற்று அவளுக்கு அப்பொழுது வெண்சாமரம் வீசத் தொடங்கியது நல்லதாகப் போய் விட்டது!—உள் மனத்தின் குறுகுறுப்பு அடங்கிக்கொண்டிருக்கவேண்டும்!

இந்தப் புதுமைப் பெண் யாராம்?

வெளிக் காற்றில் சூடு கூடுகிறது.

மகேஷ் ஏனே தலையைத் தாழ்த்தியவராக நின்ருர்; கண்களும் தாழ்ந்துவிட்டிருந்தன.

ரஞ்சனியின் மனத்தை என்னவோ செய்தது. கல் பட்டு, நீரலைகள் சிதறுவது உண்டல்லவா?— அப்படி, அவள் மனத்தில் என்னவெல்லாமோ நினைவுகள், எப்படியெல்லாமோ சலனம் கண்டன; சலனம் அடைந்தன. மனச்சலனத்தைத் திசை திருப்பவோ என்னவோ, காலடிச் சத்தம் கேட்கவே, அவள் திரும்பினுள். ரஞ்சனியின் ஊகம் என்றைக்குத்தான் பொய்த்ததாம்?—"அத்தான், நம்ம மகேஷ் வந்திட்டாருங்க," என்று சொன்னுள்.

தமது அருமை ரஞ்சனியைப் பார்த்த அதே கண்களால் மகேஷையும் பார்த்தபடி, ரஞ்சித் "வாங்க, வாங்க," என்று சலனச் சிரிப்புடன் முகமன் மொழிந்தார்; பெண் ஒருத்தி உடன் நின்ற விவரத்தை அப்போதுதான் அவரால் உணரமுடிந்தது; அந்தப் பெண்ணைப் பார்த்ததும், எடுத்த எடுப்பில் அவள் கேரளத்துப் பூஞ்சிட்டு என்பது அவருக்குப் புரிந்தது. அவள் பக்கம் பார்வையை மடக்கி, "வரணும்," என்று அவளையும் தம் பங்குக்கு வரவேற்ருர்.

கல் பட்டால், நீரலைகள் சலனம் அடைவது இயல்பு. ரஞ்சித் சலனம் அடைந்த மனத்தை அவருக்கே உரியதான முனைப்புடன் கட்டுப்படுத்திக் கொண்டவராக, இல்லறத்துக் கூட்டாளியை நோக்கி, ''ர...ஞ்! விருந்தாடிங்களை அழைச்சிட்டுப்போய் உள்ளே உட்கார வையேன்,'' என்றார்.

மகேஷ் தலையை உயர்த்தி, வசீகரமான புன்னகை ஒன்றையும் வெளியிட்டார்; பிறகு, ஆதரவானவருடைய நலத்தையும் குடும்பத்தினர் நலத்தையும் நேரிலும் விசாரித்தார்.

மகேஷின் நலன் பற்றிய விவரங்களை ரஞ்சித் நேரிடையாகவும் அறிந்து கொண்டார்.

''வாங்க, உள்ளே போகலாம். வாங்க மகேஷ்; நீங்களும் வாங்க; வந்த காலோடு நின்னுக்கிட்டு இருக்கிறது விருந்தினர்களுக்கும் அழகில்லே; வந்தவங்களை நிற்க வைக்கிறது எங்களுக்கும் அழகில்லே; வாங்க, வாங்க!'' என்று சொல்லிக்கொண்டே, அவர்களுக்கு வழிகாட்டுவது மாதிரி, முன்னே நடக்கலானாள் ரஞ்சித்தின் ரஞ்சனி.

வரவேற்புக் கூடம்.

மகேஷ் நேர்கொண்ட பார்வைகொண்டு ரஞ்சித்தைப் பார்த்துவிட்டு, பிறகு, கண்களைத் தாழ்த்தியவாறு ரஞ்சனியைப் பார்த்துக்கொண்டே, ''இவள்தான் ரதி; என்னோட கூட்டுக்காரியாக்கும்,'' என்று புன்னகையும் புது நிலாவுமாக, கேரளத்து மண்ணுக்கே உரித்தான செழிப்புடன் காட்சி தந்த ரதியை அறிமுகம் செய்து வைத்தார்; புன்னகை விளையாட்டில் வெட்கம் கூடுதல் அளவில் விளையாடிற்று.

அஞ்சலி முத்திரையை ரதி விலக்கிக்கொண்டாள்.

''ரொம்ப சந்தோஷம்!''

ரஞ்சித்—ரஞ்சனி ஜோடி, ஜோடியாகவே முறுவல் பூத்தனர்.

உச்சிப் பொழுது நெருங்கிவிட்டது.

இயற்கையின் இயல்பான அன்பிற்கு வாய்த்த ஓர் உறுத்தலாக வெயில் கோபாவேசமாகக் காய்கிறது; அந்தியில் மழை வந்தாலும் வரலாம்.

மகேஷ்—ரதி ஜோடி, ஜோடி சேர்ந்தும் ஜோடி சேர்த்தும் சோபாவில் அமர்ந்தார்கள்.

ரஞ்சித்தும் உட்கார்ந்துகொண்டார்; நெற்றி 'விண், விண்'ணென்று தெறிக்கிறது. உயிர்கொண்டவளை ஏக்கப் பெருமூச்சுடன் பார்த்த நேரத்தில், அவரது நெஞ்சத்தின் அடியில் அனுதாபம் பொங்கி மேலெழத் தொடங்கியது: 'பாவம், ரஞ்...!'— விழிகள் எரிச்சலுடன் நிறைந்தன. பதற்றத்தோடு அன்றையச் செய்திப் பத்திரிகைத் தாளை எடுக்கின்ற பாவனையில் கண்களை மறுபுறம் திருப்பிக் கொண்டார். இனிமேல் கவலை கிடையாது. ரஞ்சனியிடம் இப்போதைக்கு நான் அகப்பட்டுக் கொள்ளவே மாட்டேன். பூவின் சிரிப்பில் அவருடைய உதடுகள் உறவாடத் தலைப்பட்டன. "ரஞ், நீயும் உட்காரேன்," என்று உபசாரம் செய்தார். அவரது உள்மனம் எதையோ நினைவுகூர்ந்து துடித்தது!—சோதனையின் விதியாக அமைந்த அந்தப் பொல்லாத மாலைப்பொழுதின் நிகழ்ச்சியை மீண்டும் எண்ணிப் பார்க்கக்கூட அவர் அஞ்சினார். எங்கேயோ சூன்யத்தை வெறுத்து நோக்கியவண்ணம் நின்ற மனைவியை உட்காரும்படி மறுபடியும் கேட்டுக்கொள்ளவும் தவறிவிடவில்லைதான்!

இடதுகை நடுவிரலால் நெற்றியை லேசாகத் தடவிக் கொண்டே ஆற்றாமையுடன் கணவரைப் பார்வையிட்டாள் ரஞ்சனி. "அத்தான், இவங்களோடே சற்று நேரம்

பேசிக்கிட்டு இருப்பீங்களாம்; நான் போய் டிஃபனுக்கு ஏற்பாடு பண்ணிட்டு வந்திட்றேனுங்க,'' என்றாள்; டி. வி. பெட்டிக்கு அடியில் பிரத்தியேகமாகப் பத்திரப்படுத்தி வைத்திருந்த 'வனிதா' மலையாள இதழை எடுத்து அதை ரதியிடம் பான்மையுடன் கொடுத்தாள்.

'நன்னி' பறைந்தாள் ரதி. கண்களிலும் உதடுகளிலும் நன்றியறிவு துலாம்பரமாகப் பளிச்சிடுகிறது. ''அம்மா, ராவிலேயே நாங்க டிஃபன் கழிச்சிட்டோம்; ரொம்ப ஹெவியான சாப்பாடு; எங்க கேரளத்து நட்சத்திரம் மிஸ் மாலினி வச்ச விருந்தின்னா, சாமான்யமா இருக்குமா? மணி இப்ப பந்துரெண்டு ஆகப்போறது; டின்னரை நாங்க இங்கேயேதான் முடிச்சுக்கப் போறோம்,'' என்றாள் அவள்.

''ஆமாங்க, ரஞ்சனி,'' என்று மகேஷ் ஆமோதித்தார்.

ரஞ்சனிக்கு ஆச்சரியமாகப் போய்விட்டது!—ரதியின் பேச்சிலே, ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளாகத் தமிழும் மலையாளமும் எவ்வளவு அழகாகவும் பாசமாகவும் கூடிக் குலாவுகின்றன!—'ரதி எங்க வீட்டுக்குப் புதுசு; இங்கே காலைப் பலகாரம் சாப்பிடுறத்துக்கு ஏதோ சாக்குப்போக்கு சொல்றாங்க; சரி; ஆனா, மகேஷ் ஏன் தயங்கவேணும்?—ரதியோடே சேர்ந்து அவரும் 'ஆமாம், சாமி' போடுகிறாரே?—ஏன்?'

வீட்டுக்கு வந்திருந்த அந்நியப் பெண்ணை ரதியோடு சேர்ந்து கொண்டு, அந்நியோன்யமாகப் பழகிய மகேஷ் 'ஆமாம்' போட்டுக் காலை வேளைச் சிற்றுண்டி சாப்பிடாமல் தப்பிவிட முயற்சி செய்ததை ரஞ்சித் விரும்பவில்லை. ''மகேஷ்,'' என்று அழைத்தார்; ''நீங்க காலம்பற டெலிஃபோனிலே என்கிட்ட பேசின தாக்கல் தெரிஞ்சதுமே, என்னோட அன்பு ரஞ்சனி உங்களுக்காக இட்டிலியெல்லாம் ரெடி பண்ணி வச்சிட்டாளாக்கும்; நீங்களானா, உங்க ரதியோடு சேர்ந்துக்கினு டிமிக்கி கொடுக்கப் பார்க்கறீங்க;

ஆ), நாங்க ரெண்டு பேரும் உங்க ரெண்டு பேரையும் அவ்வளவு சுலபமாய்த் தப்பிச்சுக்கிட விட்டுடுவோமா, என்ன?'' என்று சற்றே தூக்கலான குரலில் பேசினார்.

மகேஷ் திகைத்தார்; முகம் மாறியது; ''நடந்த நடப்பை ரதி சொன்னாள்; அதனாலேதான், நானும் 'ஆமாம்' போட்டேன்; எங்க வார்த்தைகளை நீங்க நம்பாமல் தவறாக எடுத்துக்கிடுறதாலல், நானும் சரி, ரதியும் சரி, மறுபடியும் உங்க வீட்டிலேயும் காலைப் பலகாரத்தைச் சாப்பிட்டு வைக்கிறோம், மிஸ்டர் ரஞ்சித்!'' என்று இதமான குரலில் இணக்கம் தெரிவித்தார்.

''அப்படி வாங்க என் வழிக்கு!'' ரஞ்சனி தமாஷ் பேசினாள்; சிரித்தாள்; ''நான் உங்களுக்கோசரம் ரிசர்வ் செஞ்சு வச்சிருக்கிற இட்டிலி உங்களுக்காகவே இன்னமும் காத்துக்கிட்டு இருக்குதுங்க, மகேஷ். இப்ப அந்த இட்டிலிகளை நீங்க ரெண்டு பேரும் பாகம் பிரிச்சுக்கிடலாம்; அத்தோடே ரவா உப்புமாவும் உங்களுக்குச் சூடாகக் கிடைக்கும்; ஒரு நிமிஷம், எல்லோருமாய்ப் பேசிக்கிட்டு இருங்க; இல்லே, ரேடியோவைப் போடுங்க; இதோ, வந்திடுறேன், மகேஷ்,'' என்று 'படபட'வென்று சொல்லிவிட்டு, இரண்டாம் கட்டைத் தாண்டி ரேழியில் மடங்கிச் சமையல் கூடத்தின் உள்ளே மறைந்தாள் ரஞ்சனி.

அர்த்தமுள்ள புன்னகைப் பரிவர்த்தனையில் மூவரும் ஈடுபட்டிருந்தனர்.

வல்லிசாகப் பத்து நிமிஷங்களைத் தேயவிட்ட பிற்பாடு தான், ரஞ்சனி மீண்டாள்; அவளுக்கே உரித்தான பரபரப்புடன், அடுத்திருந்த உணவுக் கூடத்திலே சுழன்றாள்; தட்டுக்கள் தாளம் தட்டின; கரண்டிகள் சுருதி கூட்டின. பூந்திரை விலக்கிப் பூமணம் சொரிந்த மதுர கீதத்தின் இனிமையில் அவள் வெகு சுறுசுறுப்பாகவே இயங்கினாள்.

“வாங்க, ரதி; நீங்களும் வந்திடுங்க, மகேஷ்!” மறு மூன்றாவது நிமிஷத்தில் அழைத்தாள்.

ரதிதான் முதலில் எழுந்தாள்.

மகேஷ் இரண்டாவதுதான்.

“நீங்களும் வாங்க, ரஞ்சித்,” என்று கூப்பிட்டவர் மகேஷ்.

“கணக்குக்கு மீறி காலையிலேஇட்டிலி சாப்பிட்டாச்சுங்க. இனி, வயிற்றிலே இடம் கிடையாதுங்க!” என்றார் பாங்கர்.

“விருந்துசாப்பிடுறவங்களோட, விருந்து கொடுக்கிறவங்களும் கூடமாட உட்கார்ந்து சாப்பிடுறதுதானே நம்மோட சம்பிரதாயமாக இருந்து வருது?—சும்மா வாங்க; எங்களுக்கு மட்டும் பசிக்குதா, என்ன? ரஞ்சனி கோவிச்சுப்பாங்களேன்னு தான் ‘கட்சிப்’னு எந்திருச்சிட்டோம்,” என்று சொல்லி, ரஞ்சித்தின் கைகளைப் பற்றி அழைத்துச் செல்ல வேண்டியவர் ஆனார் மகேஷ்.

ரஞ்சித்துக்குத் தர்ம சங்கடமாகப் போயிற்று; “நானும் வந்தாச்சு, ரஞ்!” என்று மென்று விழுங்கினார். திரிசங்கு சொர்க்கம் என்கிறார்களே, அது இப்படித்தான் இருக்குமோ? கைகளை உதறிக் கொண்டார்.

விஷமச் சிரிப்புப் பயின்றாள் ரஞ்சனி. “உங்க விருந்துக்கு நீங்க இல்லாமலா? உட்காருங்க, அத்தான்,” என்று அன்பை வாரி வழங்கினாள். பிறகு விருந்தினரையும் அமரச் சொல்லி, பஞ்சு மெத்தை ஆசனங்களைச் சுட்டினாள். “எண்ணி நாலு இட்டிலிக்கு மேற்கொண்டுதான் நீங்க சாப்பிடுற பழக்கம் இல்லையேன்னு, உங்களுக்காக நாலே நாலு இட்டிலியை எடுத்துப் பத்திரப் படுத்தி வச்சிருந்தேன். நீங்களும் உங்க ரதியுமாய் ஆளுக்கு ரெண்டு மேனி சாப்பிடுங்க”, என்று சொல்லி குளிர்ப்பதன அறையைத்

திறந்து இட்டிலிகளைப் பங்கு வைத்து, அவரவர் தட்டுக் களில் வைத்தாள்; ஆவி பறந்த ரவை உப்புமாவில் ஒவ்வொரு சரண்டி போட்டாள். தக்காளிச் சட்டினி என்றால் மகேஷுக்கு உயிரும் பிராணனும். என்ன செய்யட்டும்?— நேரமாகிவிட்டதால், இப்போது அதன் சுவை கெட்டுவிட்ட மாதிரி தோன்றியது. ஆகையால், புதினாவையும் பச்சைக் கொத்தமல்லியையும் சேர்த்து வைத்து அரைத்துத் தாளித்துத் அருமையான துகையல் தயார் செய்து வைக்கச் சொல்லியிருந்தாள். எடுபிடிக் குட்டிக்கு நல்ல கைப் பதம் உண்டு. ஆகவே, துகையல் வாய்க்கு 'உணக்கை'யாகவே அமைந்திருந்தது. ஒரு சிட்டிகை தூள் உப்பையும் தூவி, பேருக்கு இரண்டு ஸ்பூன் வீதம் போட்டாள். ஊத்துக்குளி நெய் என்றால், மகேஷ் இஷ்டப்படுவார். ஊற்றினாள்! "ரதி, இனி உங்களுக்கும் இந்த வீடு சொந்தம்தான். வெட்கப்படாமல் சாப்பிடுங்க. மனசிலாயி....?" என்றாள்.

"சரி!"

"நீங்களும் 'செரி' சொல்லுங்க," என்று கேட்டுக் கொண்டு மகேஷ் பக்கம் பார்வையைப் பரப்புகிறாள் ரஞ்சனி.

"இப்பவெல்லாம் நான் 'செரி'ன்னு சொல்றதில்லையே ரஞ்சனி?"

பெருமையாக நகை சிந்திய கையோடு, தாலி கொடுத்த தயாளரை நாடினாள். ரஞ்சித்தின் முறை அல்லவா? ஒரு கரண்டி உப்புமாவைக் கொட்டினாள் ரஞ்சனி.

"போதும், ரஞ், போதும்! இரண்டாவது கரண்டியையும், அதாகப்பட்டது, உப்புமாவையும் நான் ஆசைப் பட்டுச் சாப்பிட்டு வச்சா, அப்பாலே, உனக்குத் தானே வீண் சிரமம்?" கையை அமர்த்தினார் தொழில் பிரமுகர்.

கண் ஜாடைகள். மிளகாய்ப் பொடியையும் நெய்யையும் கொணர்ந்தன. வேட்டியைத் தளர்த்தி விட்டுக் கொள்ளவும் அவர் மறக்கவில்லே; 'என் மகாராணி கை பட்டால் மிளகாய்ப் பொடிகூட மணக்குதே? இப்பவே கணக்குக்கு மிஞ்சிச் சாப்பிட்டிட்டேன்; போதும், போதும்!'—வேகமாக உண்டு முடித்து, வேகமாகவே எழுந்தார். பேஸினில் கையை அலம்பி, அருகில் கம்பியில் கிடந்த துருக்கித் தேங்காய்ப் பூத் துவாலேயில் கையைத் துடைத்து முகத்தை நிமிர்த்தி, நிலேக்கண்ணுடியில் நிலே பாய்ந்திருந்த முகத்தை ஊடுருவிப் பார்த்துச் சலனம் கண்ட நிலேயில், தமது இருப்பிடத்தில் வந்தமரலாஞர் ரஞ்சித்.

எதிரே:

சீமாட்டி டவலே ரதியிடம் நீட்டிஞள் ரஞ்சனி.

மகேஷுக்குக் கொடுக்கப்பட்ட ஜோஸ் துண்டு கை நழுவியது.

''பார்த்துக் கொடுக்கப்படாதா, ரஞ்?'' என்று கேட்டார் ரஞ்சித்.

ரஞ்சனியின் அழகு வதனம் சிறுத்தது.

மகேஷ் பிரமித்தார்.

''ரஞ்சனி, ஏன் ஒரு மாதிரி ஆயிட்டே?—சும்மாதான் கேட்டேன்; சாதாரணமாகத்தான் சொன்னேன். நீ துண்டை நீட்டினதையும் பார்த்தேன்; நீ நீட்டின துண்டை மகேஷ் வாங்கினதையும் பார்த்தேன்; நீங்க ரெண்டு பேருமே அளவுக்கு மீறின எச்சரிக்கையோடேதான் நடந்துக்கிட்டீங்க; ஆனலும், உங்க ரெண்டு பேரையும் மீறி, துண்டு என்னவோ கீழே விழுந்திடுச்சு து! பரவாயில்லே!'' வெகு அமெரிக்கையாகவேதான் ரஞ்சித் இவ்வாறு கூறிஞர்.

ஆனால்—

ரஞ்சனியின் வதனம் ஏனோ கறுத்தது.

மகேஷின் முகம் ஏனோ சுருங்கியது.

ஒரு மாத்திரைப் பொழுது கழிந்திருக்கவேண்டும்.

தலையைக் குனிந்தபடி, துண்டை எடுக்க முனைந்தாள் ரஞ்சனி.

அதற்குள், மகேஷ் எடுத்துக் கொண்டார்.

"ரஞ், என்ன யோசனையிலே மூழ்கிட்டே?— டேக் இட் ஈஸி, டியர்!... ஊம், எல்லாருக்கும் காஃபி கொண்டாந்து கொடேன்!"

வரவழைத்துக் கொண்ட புன்சிரிப்பைச் செவ்வதரங்களில் சதுரங்கம் ஆடச் செய்தவளாக, 'ஊம்' கொட்டி நகர்ந்தாள் இல்லத்தரசி.

அந்த டவல்கள் நினைவூட்டிய மலையாளச் சீமைச் சுற்றுலாவில் ரஞ்சித்தின் மனம் சுற்றி, பின்பு, திரும்பும் வழியில் பழனி மலையில் நடந்த பாபுவின் கோபாவேசப் படலத்தில் நிலைக்கத் தொடங்கியது; பாவம், மகேஷிடம் அன்று தினம் என்னுடைய பாபு எத்தனை நிரத்தாட்சண்யமாக நடந்து கொண்டு விட்டான்!... அவரது இதயத்தின் இதயம் தன்னுடைய செல்வத்திருமகன் பாபுவின் சார்பிலே மீண்டும் ஒரு தரம் மகேஷிடம் பாவமன்னிப்புக் கோருகிறது!...

சாப்பாட்டு மேஜையில் காப்பீ—டபரா அடுக்குகளைப் பரப்பினாள் ரஞ்சனி. உரிமையுடன் அண்டி வந்த ரதியிடம் அவளுக்குரிய காப்பியைக் கொடுத்துவிட்டு, அவள் நண்பர் மகேஷிடம் 'டிகாக்ஷன்' கம்மியாகப் போட்டிருந்த காப்பியைக் கொடுக்கும்படி வேண்டினாள். சர்க்கரை போடாமல்

கலக்கியிருந்த காப்பியைக் கணவரிடம் ஜாக்கிரதையாகவே நீட்டினாள்.

மனைவியின் எச்சரிக்கைப் பண்பு ரஞ்சித்தின் கண்களில் கண்ணீரை வரவழைத்தது. மனம் அடைந்த ஆதங்கத்தில் காப்பி வழக்கத்தைக் காட்டிலும் அதிகமாகக் கசந்து தொலைத்தது. "ரஞ்," என்று துணையை அழைத்து, அவள் காலை வேளை இட்டிலிகளைச் சாப்பிட்ட விவரத்தைக் கேட்டறிய முற்பட்ட போது, தான் நந்தினி, பாபு சகிதம் சாப்பிட்டு விட்டதாகப் பொய் சொன்னதை அவர் நம்பாமல் போகவே, கடைசியில் அவள் சாப்பிடவில்லை என்னும் உண்மையை அறிந்து வருந்தி, அவளுக்காக வருந்தி, அவளோடு உடன் சென்று அவளைச் சாப்பிட வைத்த பிற்பாடுதான், நல்ல மூச்சுவிடலானார்; அவள் குடித்த எச்சில் காப்பியில் அவருக்கும் துளி கிடைத்ததில் அவர் புதிதான அமைதியை அடைந்தார்; அந்த அமைதிகூட இனித்தது.

ரஞ்சனி விருந்து தயாரிப்பதில் விசேஷமான அக்கறையோடும், தனியான ஆர்வத்தோடும் முனைந்திருக்கின்றாள். ரதி ஏதாகிலும் 'ஒச்சம்' சொல்லிவிடக் கூடாது அல்லவா? கடைசிப்பட்சமாக, அவியல் கறியிலாவது தேங்காய் எண்ணெயைத் தாளிப்பதற்குச் சேர்த்துக் கொள்ள வேண்டும், அன்றைக்கு எர்ணாகுளத்தில் 'ஹோட்டல் இன்டர்நேஷனலில்' வைத்திருந்த அவியலைச் சுவைத்தும் ருசித்தும் மகேஷுடன் சேர்ந்துகொண்டு போட்டி போட்டுச் சாப்பிட்டதை இப்பொழுது அவள் நினைத்துப் பார்க்க வேண்டியவள் ஆனாள்.

வெய்யலில் விநாடிகள் ஊர்கின்றன.

ரஞ்சனி இல்லாமல், வரவேற்புக் கூடம் வெறிச் சோடிக் கிடந்தது.

பாங்கருக்கு உறக்கம் சொக்கியது; வேண்டியதும் வேண்டாததுமான நினைவுகளின் ஊளைச்சலில், மன உளைவு— 'டென்ஷன் மிகுதியடைய, அதன் எதிர்விளைவாக, ஓர் அயர்ச்சி மிஞ்ச, இப்போது தூங்கி ஏழ வேண்டுமென்ற உந்துதலை ஏற்படுத்திற்று. ஆனால், மீண்டும் அந்தப் பொல்லாத அந்தி மாலைப் பொழுது அவருடைய உள்மனத்தில் உட்புயலை ஏற்படுத்திவிடவே, சாய்மானத்தில் கற்சிலையாகச் சாய்ந்தார்!—மனம் எடுப்பார் கைப்பிள்ளை என்பது சரியாய்த்தான் இருக்கிறது!— ரஞ்சனியை, உயிரினும் இனியவளான ரஞ்சனியை நினைத்த நெஞ்சிலே, கேள்வி முறையில்லாமல் மகேஷும் பாயவே, ரத்த நாளங்கள் துடிக்கலாயின. 'ஈஸ்வரா!'— தியானநிலை நீடித்தது. மனத்துக்குச் சற்றே மாறுதல் கிடைத்தால் தேவலாம். ரேடியோவைத் திருப்பினால், அங்கே கங்கைக் கரையோரமும், கன்னியர்கள் கூட்டமும் நிர்த்துளிப்படுகிறது! முற்பகலில் அன்றைக்குப் பார்த்த, கேட்ட, அனுபவித்த பாரதாஞ்சலியின் ஒளி — ஒலிச் சிதறல்களும் அவருக்கு ஆறுதல் தரவே செய்கின்றன.

படு நாசூக்காகக் கொட்டாவி விட்டார் மகேஷ்.

பொன்னான சந்தர்ப்பம்.

இனி ஒரு வினாடிகூட தூங்காமல் தப்ப இயலாதுதான். ரஞ்சித்தின் கெட்டி அற்ப சொற்பமானதல்லவே!— ''மகேஷ், நான் ஒரு பத்து நிமிஷம் மாடிக்குப் போய்த் திரும்புவேன். நீங்க ஒரு காரியம் செய்யுங்க; நீங்க கீழே என்னோடே ரூமிலே, என்னோடே மெத்தையிலே கொஞ்ச நேரம் படுத்து எழுந்திருங்க; உங்களோட மிஸ் ரதி அடுத்த அறையிலே என்னுடைய ரஞ்சனியின் பட்டு மெத்தையிலே சற்று நாழி ஓய்வு கொள்ளட்டும்! எப்படி என் ஐடியா?''

''அருமையானதுங்க, ரஞ்சித்: ரெண்டு கல்லிலே ரெண்டு மாங்காய் அடிச்சிட்டீங்க! உங்களுக்கும் உறங்

கிறதுக்கு சான்ஸ் அடிச்சிட்டுது! எங்களுக்கும் ஓய்வுக்கு வழி கிடைச்சிட்டுதுங்க!''

''ஆறு, ஒண்ணு...!''

''ஒண்ணு என்றுங்க, ரெண்டாகவே சொல்லுங்க!''

''உங்க ரெண்டு பேரோட ஓய்வும் இப்போதைக்கு சென்ட் பர்சன்ட் தனிமையானதாக்கும்! .. ஆமாம், இப் போதைக்குத்தான்!''

''ஓஹோ! அங்கிட்டுப் போயிட்டீங்களா நீங்க?''

''நான் எங்கிட்டும் போயிடல்லே; போயிடவும் மாட்டேன்; என்னோட வழியே, அலாதி!—அந்த வழியிலே எந்த ஒரு சோதனையிலும் தப்பிதமே ஏற்படாது; ஏற்படவும் விட்டுவிட மாட்டேனாக்கும்!''

'மக்கள் குரல்' பொங்கல் சிறப்பிதழை ரதியிடம் நீட்டி, அதில் கடைசிப் பக்கத்தைப் பிரித்து, ரத்தியின் பொங்கல் வாழ்த்துக் கட்டுரையை வாசிக்கச் சொன்ன மகேஷ் திடுக்கிட்டுப் போனார்!...

ரதி: ''நான் இந்திக்குப் போனாலும், என் தாய்த் தமிழ்ப் படஉலகம் நெஞ்சிருக்கும்வரை நினைவிருக்கும்!''

''அய்யொடா!...ரத்தி மாதிரி என் ரதியும் நடிகை ஆயிட்டாளா, என்ன?''

உற்சாகமான நாணம் ஏந்துகிறாள் ஏந்திழை: ''என்னை இப்படிக் கலாட்டா பண்றதுக்கோசரம்தான் என்னை அப்படி வாசிக்கப் பண்ணினீளாக்கும்?''

''சும்மா ஒரு தமாஷ்; அவ்வளவுதான், ரதி!''

காதல் எனும் எழிற்கனவின் இனிய மயக்கத்தில் லயித்துக்கிடந்த அவ்விருவரின் ஆனந்தப் பரவசம் நின்று

நிலைத்திடவேண்டுமென்று அந்தரங்க சுத்தியோடு கவலைப் பட்டார் ரஞ்சித். 'மகேஷ் தனது முதல் காதலிலேதான் தோல்வி அடைஞ்சிட்டார்; பாவம், இரண்டாவது காதலிலேயாவது அவர் முழு வெற்றி அடைஞ்சால்தான் நல்லது. ரதிக்கும் மகேஷுக்கும் ஜோடிப் பொருத்தம் சரியாக அமைந்திருக்கிறதா என்கிற பரிசோதனையில் ஈடுபட்டவர்மாதிரி, அவர்கள் இருவரையும் உன்னிப்பாகவும் உறுத்தும் பார்த்தார்; பார்வையிட்டார். எடுத்த எடுப்பி லேயே, இருவருக்கும் ஊடே தாரதம்மியம் துலாம்பர மாகவே தெரிந்துவிடும்; மகேஷின் நரைமுடிகளால் வன வாசம் செய்யமுடியவில்லைதான்; ஆனாலும், அவருடைய இடது கன்னத்தில் ஏதோ ஒரு வடு விகாரமாகப் பளிச் சிடுகிறதே?—அதை ஒரு பொருட்டாக மதித்து அவரிடம் பிரஸ்தாபிப்பது அவ்வளவு நாகரிகமாக அமைய இயலா தென்கிற கண்ணியப் பண்புடனே அதைப்பற்றி இன்றையத் தேதிவரை அவரிடம்—மகேஷிடம் கேள்வி ஒன்றையும் கேட்கவில்லை ரஞ்சித்!—ஆனால், ரதி உச்சியில் நின்றாள்! அவள் அழகின் உச்சி ஆயிற்றே?—ஆமாம்; நேற்று மலர்ந்த புத்தம் புதிய ரோஜாப்பூ அவள்! ரோஜாப்பூவை அவள்! ரோஜாப் பெண் ரதி!...

மகேஷ் ஏன் அப்படி முகம் கறுத்துப் போய்விட்டா ராம்?—இன்னமும் ரஞ்சித்தின் சொற்கள் அவரது நெஞ்சிலே சுட்டுக்கொண்டிருந்தனவோ?

ரஞ்சித் மார்பகத்தைத் தடவி விட்டுக்கொண்டார்; என்னவோ ஓர் ஆறுதலான அமைதி இப்போது அவர் நெஞ்சில் ஒட்டியிருந்ததாக அவர் உணர்ந்தார். 'பாவம், மகேஷ்!' ஈரம் விழிகளிலும் நிழலாடிற்று. "நான் புறப்படறேன், மகேஷ்," என்று எழுந்தார். சாயந்தரம் முதல்வர் புரட்சித்தலைவரைச் சந்தித்தாக வேண்டும்!

ரஞ்சனியின் முகம் தெரிகிறது.

''ரஞ்...!''

''ஒண்ணுமில்லேங்க; சும்மாத்தான் வந்தேன்.''

''கொஞ்ச நாழி ஓடவெடுக்கணும் போலிருக்கு.''

''எனக்காகக் காத்திருந்தீங்களா?''

''நேரம் கெட்ட இந்த நேரத்திலேயா உன்னை எதிர் பார்ப்பேன்?

ரஞ்சனியை வெட்கம் தழுவியது.

ரதி புன்னகை செய்கிறாள்!

''ரஞ்சித், ஒரு நிமிஷம் உட்காருங்க; ரதியைப் பற்றி—என்னோட அன்பான ரதியைப்பற்றிச் சொல்லிடுறேன். என்கூடவே 'ஸ்பீட் வே' கம்பெனியிலே பணி செய்கிறாள் ரதி; ஸ்டெனோ டைப்பிஸ்ட். சொந்த நாடு பாலக்காடு; இங்கே எர்ணுகுளத்திலே பானர்ஜி சாலையிலே இருக்கக்கூடிய ஏலக்காய் வாரியத்துக்குச் சமீபமாய், கச்சேரிப்படிப் பக்கம் சொந்தக்காரங்க வீட்டிலே தங்கியிருக்காள்!—அலுத்துச் சலித்துப் போயிட்ட பாலைவனமான என் மனசிலே ஒரு குளிர்ச்சோலையை உண்டு பண்ணினதே ரதியோட மகத்தான—மாண்புமிக்க அன்புதான்!—ஆகவேதான், இந்த ரதியையே என் உயிர் வாழ்க்கைக்கு உயிர்த் துணையாக ஆக்கிக்கிடவேணும்னு முடிவு செஞ்சிருக்கேன்!... ஊர் உலகத்தைப்போல நானும் குடியும் குடித்தனமுமாய் ஆகிப்பிடவேணும் என்கிறது ரஞ்சனியோட ரொம்ப நாளையக் கவலை; என்னை மணவறையிலே சந்திச்சாத்தான், ரஞ்சனிக்கு மெய்யாகவே ஒரு சாந்தி ஏற்படுமென்கிறதையும் நான் அறிவேனுங்க!''

இருமல் செருமியது.

'ஃபில்டர் வில்ஸ்' ஓடி வந்தது.

''நான் ஊகிச்சது சரியாய்ப் போயிடுச்சுங்க, மகேஷ்; நீங்க சொன்னமாதிரி, நிஜமாகவே நான் சந்தோஷப்படுறேனுங்க; உங்க கலியாணம் நல்லபடியாகவே முடிஞ்சிட்டா' நான் உண்மையாவே அமைதியும் அடைவேனுங்க, மகேஷ்!'. உணர்ச்சி வயப்பட்டவளாகப் பேசினவள் ரஞ்சனியாகத் தானே இருப்பாள்?

''உங்களோட இந்த நல்ல முடிவிலே, நானும்தான் ஆறுதலடைகிறேன், மிஸ்டர் மகேஷ்!'' என்றார் ரஞ்சித்.

மகேஷ் சற்றே திரும்பி, ரஞ்சனியை நோக்கி, அமைதி கெடாமல் புன்னகை செய்தார். ''உங்க ரெண்டு பேரோட மகத்தான அன்பையும் அற்புதமான பாசத்தையும் நான் இன்றைக்கு நேற்றைக்குத்தானா புரிஞ்சுக்கப் போறேன்?—ஆனாலும், நாம என்னதான் நெருங்கியும் நெருக்கமாகவும் பழகினால்கூட, உள்ளன்பை வெளிப்படுத்திப் பரஸ்பரம் பரிமாறிக்கிடுறதிலே மெய்யாகவே மனசுக்கும் சரி, உடம்புக்கும் சரி, ஆரோக்கியமாகத்தான் இருக்குது! இப்படிப்பட்ட சமயங்களிலே, மரபார்ந்த சம்பிரதாயங்களுக்குக்கூட புதுசான அர்த்தம் கிடைச்சிடுறதுபோலவும் நமக்கு நாமே உணர்ந்துக்கிடுறதுக்கும் வாய்ப்பு வசதி ஏற்படவும் செஞ்சிடுது!—இல்லீங்களா, ரஞ்...?'' என்றார்.

'ரஞ்' என்றவுடன், ரஞ்சித்தும் மகேஷை ஏறிட்டு நோக்கினார்.

அதுபோன்றே, ரஞ்சனியும் கோலமதர் விழிகளை நிமிர்த்திக் குடும்பத்து நண்பரைப் பார்க்கலானாள்.

ரஞ்சித்தின் கண்களிலே கலக்கம்.

ரஞ்சனியின் நயனங்களிலே சலனம்.

மகேஷ் திடுக்கிட்டார்; விம்மிப் புடைத்திட்ட நெற்றியின் நரம்புகளை மூர்க்கத்தனமான ஆத்திர

வெறியுடன் அழுத்தி அழுத்தித் தேய்த்துக் கொண்டார்; முகமண்டலத்தில் கவிழ்ந்த துயர மேகங்களுக்கு மத்தியில் அந்த வடு. அசிங்கமான அந்தக் கரும்புள்ளிச் சாயல், வழக்கத்தை விடவும் கூடுதலான அலைக்கழிவோடு பளிச்சிட்டது. மறு விநாடியில், பித்துக் கொண்ட நிலையில், கண்களை மூடிக் கொண்டு சிந்தனை வயப்பட்டார். எதை நினைத்தார்? எதையோ நினைத்தார்!—நேத்திரங்கள் நனைந்தன; கண்ணீரின் நிறம் சிவப்புத்தானோ?— 'நான் புத்தி கெட்டவன்; அநியாயக்காரன்; துரோகி; பாவி; ஆத்திரக்காரன்! சே!' தெய்வத்தைக் கூவிக் கூப்பிட்டார்!— ''தெ ..ய்...வ...மே!''— தெய்வம் எங்கே?... எங்கே தெய்வம்?...

''மகேஷ்!''—ரஞ்சனி.

''மிஸ்டர் மகேஷ்!'' என்றார் ரஞ்சித்.

ரதி: ''ஆ!... என்டே மகேஷ்!''

மகேஷ் இப்பொழுதுதான் பூமிக்குத் திரும்பியிருக்கிறார். சொப்பனம் கண்டு விழித்தவராக விழித்தார்.

''ஏன் இப்படி உங்க பாட்டுக்குக் கண்ணீர் விடுறீங்க?'' என்று ஆதரவாகக் கேட்டார் சீமான்: 'புள்ளி'க்குக் கண்கள் கலங்கியிருந்தன.

ரஞ்சித்தைப் பரிதாபமாக ஏறிட்டுப் பார்க்கலானார் மகேஷ்.

ரஞ்சனிக்கு இப்போது நெஞ்சை என்னவோ செய்திருக்க வேண்டும்; தடவிக் கொடுத்தாள்; மௌனமான அதிர்வோடு, மகேஷின் அருகில் வந்து மௌனச் சிலையாக நின்றாள். மனப்பாம்பு ஏதேதோ நினைவுகளைப் படம் காட்டிப் படம் எடுத்தது; மகேஷின் ஓலத்திற்கான காரண காரியத்தை உணர்ந்தவள் போலவும், அதற்குத் தன்னால்

ஒன்றும் சமாதானம் செய்ய முடியாதது போலவும் வாயடைத்து நின்முன்.

''மகேஷ்...மகேஷ்!'' ரதி தவித்தாள்.

ரஞ்சித், ரஞ்சனி, ரதி ஆகிய மூவரையும் மாறிமாறி, மாற்றி மாற்றிப் பார்த்தார் மகேஷ். ''என்னவோ, தெய்வத்தைக் கூவி அழைச்சு அழவேணும் போலத் தோணிச்சு; அழுதேன்; என்னுடை உயிர்மூச்சு நின்னுத்தான், இந்த அழுகை நிற்குமுங்க, ரஞ்சித். அது போகட்டும்!'' என்று கூறிப் பேச்சைத் துண்டாடினார்; பிறகு, ரஞ்சனியின் பக்கம் திரும்பி, ''என்னமோ ஞாபகத்திலே, ரஞ்சித் கூப்பிடுற மாதிரி உங்களை 'ரஞ்' அப்படின்னு தெரியாத்தனமாக கூப்பிட்டிட்டேனுங்க; எனக்கு 'மாப்பு' கொடுத்திடுங்க,'' என்று கெஞ்சினார்.

அழகான அன்பும், கவர்ச்சியான அழகும் ஆரோக வித்திருந்த அதரங்கள் துடித்திட, ''பரவாயில்லேங்க, மகேஷ்,'' என்பதாக ஆறுதல் சொன்னாள் ரஞ்சித்தின் ரஞ்சனி. கண்களின் தொங்கலில், சுடுநீர் முத்துக்கள் தொங்கட்டான்கள் மாதிரி இரு முனைகளிலும் முனைப்புடன் ஊஞ்சலாடின.

ரஞ்சித் மார்பகத்தினின்றும் கைகளை விடுவித்துக் கொண்டவராகக் கண்ணியமானதொரு புன்முறுவலைக் கண்ணியமாக வெளியிட்டார், ''நீங்க போய்க் கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுத்துக்கங்க; டின்னர் ரெடியானதும் 'ரஞ்' வந்து எழுப்புவாள்; நீங்களும் போங்க, ரதி,'' என்றும் கூறினார். பட்டுச் சொக்காயைக் கையில் எடுத்துக் கொண்டார்; எழுந்தார்.

''அது சரி; நம்ம பாபுவை எங்கே காணோம்? இன்னிக்கு லீவு தானே? இங்கே வந்திருப்பானே?'' என்று விசாரணை செய்தவரும் மகேஷ்தான். விசாரிப்பைத் தொடங்கிய

போது அவரது தொனியில் ஒலித்த தைரியம், கேள்வியை முடித்தபோது அடங்கி விட்டிருந்தது.

''பாபு அவனோட ரூமிலே தூங்கிக் கிட்டிருப்பான்னு நினைக்கிறேன்,'' என்றார் பாங்கர். ''பாபுவைப் பார்க்கணுமா?'' என்று வினவினார்.

'ஊம்', கொட்டினார் மகேஷ்.

தேள் கொட்டின பாங்கில் ஒரு துடிப்பு ரஞ்சித்தின் மேனியில் ஊடுருவியது: ''அதுக்கென்ன?—பாபு தூங்காமல் முழிச்சுக்கிணு இருந்தால், தாராளமாகப் பாருங்களேன், மகேஷ்!'' என்று நல்ல குரலெடுத்து அனுமதியை வழங்கினார். ''பாபுவுக்கு உண்டான இடம்தான் உங்களுக்கு நல்லாத் தெரியுமே?—புறப்படுங்க; போனதும் வந்ததுமாய்த் திரும்பிடுங்க; நீங்க திரும்பினதும்தான், நான் மேலே மாடிக்குப் போகவேணும், மகேஷ்!'' இப்போது அவரது கண்டத்தில் சற்றே கடுமை ஊடாடியது.

''இதோ, வந்திடுறேன், ரஞ்சித்!'' என்று ஒரு புதிய தெம்புடன் கிளம்பினார் மகேஷ்.

''மகேஷோடு நீ வேணுமானாலும் போயேன், ரஞ்சனி?''

''நான் போகல்லீங்க, அத்தான்; நேரம் நெருங்கிக் கிட்டிருக்குதுங்களே?—விருந்துக்கு ஏற்பாடு செஞ்சாக வேணுமுங்களா?'' ரஞ்சனி சமத்காரமாகவும் சமர்த்தாகவும் பேசிவிட்டாள்.

''ஓ!... உன் இஷ்டப்படி நட, ரஞ்!''

மகேஷும் ரஞ்சனியும் எதிரெதிர்த் திசைகளில் மடங்க வேண்டும் போலும்!

# அந்தி நிலாச் சதுரங்கம்

## 5: பொங்கி வரும் பெருநிலவு!

*அன்பின் வழியது உயிர்நிலை!*

*அதோ, மிஸ்டர் மகேஷ்!...*

*உயிரின் நிலைத்த—நிலைபெற்ற அன்புடனும், அந்த அன்பில் ரசாயனமாற்றம் பெற்ற பாசத்துடனும், தன்னைத் தானே நினைத்துப் பார்த்தவராகவும், தன்னில்தானே இயங்கியும் இயக்கப்படும், அழுந்தியும் அழுத்தப்பட்டும் விதிச்சுழலிலே அகப்பட்டு அவதிப்பட்டவராகவும், ஒரு கணம் அப்படியே நின்று விட்டார் மகேஷ்! வேர்வை மடைமாறவும் மடைமாற்றவும் வழியின்றி, வாய்ப்பின்றி, வசதியுமின்றிக் கன்னங்களில் வழிய. வேர்வையில் இடது கன்னத்து மரு அல்லது வடு அலங்கோலமான அவலட்சணத்தோடு 'விதி'யாகச் சிரிக்க, அச்சிரிப்பை மனத்தால் படமாக்கிப் பார்த்த தருணத்தில், வேர்வையோடு சுடுநீரும்*

கூட்டுச் சேரலாயிற்று நெஞ்சக் கூண்டில் கசிந்து உருகிய கண்ணீர் மணிகள் இரண்டிலும் ரஞ்சனியும் பாபுவும் திசை மாறியும் இடம் மாறியும் சுழல ஆல வட்டம் சுழல, அந்தச் சுழற்சியில் இப்போது மகேஷும், கூடவே சேர்ந்து சுழன்றார்; சுழல வேண்டியவர் ஆனார்.

காலம் ஒரு செப்பிடு வித்தைக்காரன்!

கண்ணை மூடிக் கண்ணைத் திறக்கின்றார் மகேஷ் 'பா...பு...!—பாபு!' குறுகுறுத்த உள்ளத்தில் ஏக்கம் பின்னல் கயிறாக இறுகிப் பிணைக்க, ஏமாற்றத்தின் பிசிறுகளில், உள் மூச்சு வெளிவாங்கிக் கும்மிழ்களைப் பறிக்க, மீண்டும் மீண்டும் நீர்ச்சுழலிலும் சூறைக்காற்றிலும் சிக்கிக் கொண்ட உணர்வுகள் அவரை அலைபாயச் செய்தன; அலைக்கழிக்கவும் செய்திருக்கலாம்.

'நந்தினி விலாசம்' பங்களாவின் 'ஒமேஹா' குருவி ஒரு முறை கூவியது. அப்போது மணி ஒன்று, இல்லை, ஒன்றரையா?

ஆமாம்; அதுவேதான் மாஸ்டர் பாபுவின் அந்தரங்கத் தனி அறை!

கதவு. பாதி மூடியும் பாதி மூடாமலும் இருக்கிறது.

மகேஷ் கால்கடுக்க நின்றார்.

'பாபுவை எப்படியும், எப்பாடு பட்டாகிலும் இப்போது சந்தித்துப் பேசிவிடவேணும்; பாபுவை என்னைப் பரிபூரணமாகப் புரிஞ்சுக்கிடச் செய்வதற்கு, இதைக் காட்டிலும் இனியொரு அருமையான சமயசந்தர்ப்பம் வாய்க்கும்னு நம்பமுடியாது. என் ரதிக்கும் எனக்கும் இந்தத் தை முடிகிறதுக்குள்ளே முடிய வேண்டிய கல்யாணத்துக்கு முந்தியே, பாபு பிரச்னையும் குழப்பமில்லாமல் நல்லபடியாகவும், நல்லதனமாகவும் முடிஞ்சிட்டா, என்னைப் போலே

பாக்கியவான் இந்த மண்ணிலே வேறே யாருபே இருக்க மாட்டான்; இருக்கவும் முடியாது!—ஊம் பாபுவை என்னோடு வச்சுக் கிட்டால்தான, எம் மனசால மனசு நிலைக்கு வந்து, அமைதியடையும் போலத் தோணுது ரதியும் என் திட்டத்துக்கு ஓ—கே சொல்லி, சம்மதட சொல்லிட்டாளே? ஐயப்பா! குருவாயூர் அப்பனே!'— மூகத்தைத் துடைத்து, நெடுமூச்சைப் பிரித்து, அரைக் கணம் அஞ்சி ஒடுங்கி நின்றவர், மறுபடி சுதாரித்துக் கொண்டார்.

வேடிக்கையான தியாகராயநகர்!

கார்ச் சத்தம் ஓயாதோ? ஒழியாதோ?

தட்ட வில்லை.

ஆனால், கதவு திறந்தது.

'பாபு...!'—உள்ளே மகேஷ் விரைந்தார்: பாய்ந்தார் மகேஷ்.

ஓடக் காண்பது, பூம்புனல் வெள்ளம்.

ஒடுங்கக் காண்பதோ, யோகியர் உள்ளம்!

திருமூலரா, கொக்கா?''...

மகேஷ் மனம் ஒடுங்கிக் காணப்பட்டார்!—ஆனால் அவர் யோகி ஆகிவிடமாட்டார்; ஆகிவிடவும் முடியாது!— என்ன குழப்பம்? 'பாபு உறக்கத்திலே இருக்கானே?'—மின் காற்றைச் சட்டை செய்யாமல், அவருடைய 'பாலியஸ்டர் சட்டை ஈரமாகிக்கொண்டே இருந்தது. இருதயத்தின் இருப் பிடத்தை ஒருவெறுப்புடன்—விரக்தியுடன் தடவினார்: தடவி விட்டார். ''பாபு! பாபு!''—சொற்கள் விடுதலை பெற்றன ஆனால், பாபு தூக்கத்தினின்றும் விடுதலை பெற்றுவ தானே?—அவருக்கு நெருப்பில் நிற்பது போல் தோன்றியது

அவரையும் அறியாமல், அவருடைய தலை குனிந்தது; தாழ்ந்தது; பிறகு, பாபுவின் கட்டிலில் முழங்கைகள் இரண்டையும் பரப்பிக் கொண்டு, தன்னுடைய முகத்தைப் பால் வழியும் பாபுவின் முகத்துக்கு நேராகச் சாய்த்தபடி, பாபுவைப் பார்த்தார்; பார்த்தார்; அப்படிப் பார்த்தார்!- பாதைமாறி உதிர்ந்த ஒரு சுடர் முத்து, சொல்லி வைத்தது போல, அந்தப் பாலகனின் கள்ளம் கவடு அறியாத நிர்மல மான முகத்தில், இடது கன்னத்தின் கறுப்புப் புள்ளி மருவில் உதிர்ந்ததைக் கண்டதும், திடுக்கிட்டார்; நல்ல காலம், பாபு விழித்துக் கொள்ளவில்லை!—அவர் இப்போது தன்னு டைய இடது கன்னத்தின் அவலமான கரும் புள்ளிப் பரப்பை நடுங்கும் விரல்களால் தடவிக் கொள்ளத் தொடங்கினார்: நெஞ்சு விம்மத் தொடங்கியது.

கடிகாரத்திற்கும் இதயம் உண்டுதான்!

"பா..பு!"

ஊஹூம்!

பாபு உசும்பவே இல்லை!

'என்ன தீவினையோ? வினை தீர்க்கும் ஆறுமுகப் பெரு மானே!'—வினையை விதைப்பது உண்டா, என்ன? — என்னவோ, வினையை அறுவடை செய்வது போலவே, அவருள் ஏதோ ஒன்று சீறி அவருக்குச் சவுக்கடி கொடுத்துக் கொண்டேயிருக்கிறது!— ஏமாற்றத்தில் அறுப்புச் செய்யப் பட்ட ஏக்கத்தில், அவர் பாபுவின் தனிமையான அறை யினின்றும் வெளியேறினார். அங்கே திருவாளர் ரஞ்சித் தவியாய்த் தவித்துக் காத்துக் கொண்டிருப்பாரே...? போய்விட வேண்டும்!

குயில் ஒன்று கூவிக்கொண்டிருக்கின்றது. அழகாகவும் உருக்கமாகவும் கூவிக் கொண்டிருக்கிறது!—அதற்கு என்ன காதல் சிக்கலோ?

நேரெதிர்ப் பங்களாவில் மதிப்புக்குரிய திருமதி டி. ஆர் ராஜகுமாரி அன்போடும் ஆசையோடும் வளர்க்கும் குயில் அழகாகக் கூவுவதில் ஆச்சரியம் இல்லேதான்!—ஆனால், அது ஏன் இப்படிச் சோகக் கீதம் இசைக்க வேண்டும? அன்பு கொழிக்கின்ற இடத்தில், சோகத்திற்கும் இடம் இருக்குமா, என்ன?

மகேஷ் பிரமித்து நின்றார்!—ஆசைக்கனவு பலிக்காமல் தோல்வியடைந்திட்ட தனது முதற்காதலின் நெஞ்சுருக்கும் சோகக் கதையை அவர் அதே நேரத்தில் நினைவு கூர்ந்திருக்க வேண்டும்!— ''ர...!''—பெயரின் முதல் எழுத்தை உச்சரித்து, பெயருக்குடைய அந்தச் சீதேவியை விளித்து ஆறுதலடைய முயற்சி செய்த அவர், பெயருக்கு உரிய முதல் எழுத்தை உச்சரித்ததோடு நின்று விட்டார்; நிறுத்தி விட்டார். கொஞ்சப் பொழுதுக்கு முந்தி, சாதாரணமான டவல் ஒன்று அசாதாரணமான கசப்புச் சூழலே உருவாக்கி வேடிக்கை காட்டிய நேரத்திலே பேசிய ரஞ்சித்தின் சொற்கள் அவர் மனத்தில் இப்பொழுது கூட திரும்பத் திரும்ப ஒலித்தன; எதிரொலித்தன. ரஞ்சித் எவ்வளவு உயர்ந்த மனிதர்!— அன்பினலும், அபிமானத்தினலும், கருணையினலும் மனிதத்தன்மையினலும் உயர்ந்திட்ட அந்த மனிதரா இப்போது துரும்பைக் கூட தூணைகப் பெரிது படுத்திச் சலனம் அடையத் தொடங்கி விட்டார்! சாந்தியை அருளவல்ல தெய்வத்திற்குக் கூடச் சலனம் என்ற ஒன்று ஏற்படமல் தப்பாது போலிருக்கிறது!— இதயப் படுதாவில் நிழலாடிய ரஞ்சனியின் உயிர்ச் சித்திரத்திலே, இப்போது, பாபுவின் உருவமும் 'மிக்ஸ்' ஆயிற்று!— ''பா...பு!'' போய்விட மனமில்லாமல் நின்றார்: நிற்க மனமில்லாமல், போய் விடத் துடித்தார்.

பாபு எத்தனே அழகுக் குறியீடுகள் குலுங்க, அலுங்காமல் குலுங்காமல், உறங்கிக் கொண்டிருக்கிறன்!— பாரதியின் கண்ணபெருமானு இந்தப் பாபு?...

மகேஷ் எதை நினைப்பாராம்?

அவர் எதைத்தான் மறப்பார்?

நினைப்பதற்காகவும் மறப்பதற்காகவும்தான், ஆண்டவன் மனிதனைப் படைத்து, அவனோடு விளையாடிக் கொண்டிருக்கிறான?

விதியோடு விளையாடத்தான் மகேஷுக்குப் பொழுது சரியாகி விடுகிறது.

பின், மகேஷோடு விளையாடுவதற்கு ஆண்டவனால் எப்படி இயலும்?

'தெய்வமே!' என்று அங்கிருந்து நகர்ந்தார் மகேஷ். பின்கட்டில், ரஞ்சனி கோபத்தோடு எடுபிடிக் குட்டியைத் திட்டிக்கொண்டிருந்தது தெளிவாகக் கேட்டது. ரஞ்சனியின் கோபத்தை அவர் அறியாதவரல்லவே! — 'சுள்—சுள்' ளென்று கோபம் வந்துவிடும்; 'ஜல்—ஜல்'லென்று வந்த கோபம போய்விடுவதும் உண்டுதான்!—ஏதோ ஓர் உறுத்தல் மண் புழுவாகக் குடைகிறது; அரிக்கிறது; நச்சரிக்கிறது. ரஞ்சனியை நினைக்க முயன்றார்; ஆனல், தோன்றியவளோ ரதி!—ஓ!...ரதி!—என் ரதி! ரதிக்கு எல்லாக் கதையுமே தெரியும்!—செய்த பாவம் போதாதா?—ஆகவே, அவர் அவளிடம் எதையும் மறைக்கவும் விரும்பவில்லை; மறைத்து வைக்கவும் துணியவில்லை. மனத்தின் நீதிபதியின் கட்டளை அது. இனிமேலும் இங்கு தாமதிப்பது அநாகரிகம். ரஞ்சித்தைச் சோதித்துவிடுவதென்பது லேசான காரியம் அல்ல. கண்ணுடி ஜன்னலில் தரிசனம் தந்த வெம்மை நிரம்பின வெளி உலகத்தை ஏறிட்டுப் பார்த்தபோது, அவரது நெஞ்சத்தின் நெஞ்சத்தில், அந்தப் பயங்கரச் சோக நிகழ்ச்சி—ஓர் அந்திமாலையில் நடந்து முடிந்து விட்ட அந்தப் பயங்கரச் சோக நிகழ்ச்சி கருநாகமெனச் சீறிப் படம் எடுத்துப் படம் காட்ட எத்தனம் செய்தது.

''ஐயையோ!''—ஓலமிட்டவராக அங்கிருந்து ஓடிப்போய் விட முனைந்தார் மகேஷ்!—ரஞ்சித்—ரஞ்சனி குடும்பத்தின் நண்பரான மகேஷ்: 'ஞான் பாவப்பட்ட ஜென்மம்!...'

அப்போது:

கதவு திறந்த அரவம் கேட்டது.

அரவம் கண்ட பாவனையில், அச்சமடைந்து, திரும்பிப் பார்த்தார் மகேஷ்: ''பாபு...!'' என்று தன்னையும் மறந்து விட்ட நிலையில மகிழ்வின் பூரிப்புடன் கூவி அழைத்தவாறு, பாபுவிடம் பாய்ந்தார்.

''மகேஷ் ஸாரே!...நான் அவசரமாக பாத்ரூம் போய்க்கிணு இருக்கேனுக்கும்!''

''திரும்பி வா, பாபு; நான் காத்துக்கிட்டு இருப்பேன்!''

''ஏனும், ஸாரே?''

''உனக்காக!''

''எனக்காகவா?''

''ம்!...''

''ஏன்?''

''......''

''என்ன ஸார், பேச்சையும் காணும்? மூச்சையும் காணலையே? ஐயோ, பாவமே, பரிதாபமே!...போனவனுக்குத் திரும்பத் தெரியாதாக்கும்?...நீங்க வெளியே போங்க; எங்கே, வேகமாய்ப் போங்க, பார்க்கலாம்!... ம்...எங்க அப்பா உங்களைக் கூப்பிடுறமாதிரி இருக்கு; ம், ஜல்தி போங்க, ஸாரே!''

பாபு போய்விட்டான்.

மகேஷ் விரைவாகவும் போகவில்லை; மெதுவாகவும் போகவில்லை; அப்படியே, அடித்து வைத்த கல்லாகவே நின்றுவிட்டார். அவர் மனமும் கல்லேதானே? கல்லுக்கு ஏமாற்றத்தை அனுபவிக்கத் தெரியுமா, என்ன? கண்கள் குளமாயின. பாபு நெருப்பா? நெருங்கக்கூட முடியவில்லை. பழனிமலையில் அன்றொரு தினத்தில் அவன் தன்னை நெட்டித் தள்ளியதும் இப்போது சந்தடி சாக்கில் படம் காட்டியது. ''பா...பு!''—கன்னி மரியாளும் குழந்தை ஏசுவும் தீட்டப் பட்ட பாபுவின் அந்தச் சித்திரமும் இப்போது அவரது சிந்தையில் நிழலாடத் தவறவில்லை!

மௌனம் சிரித்தது!

மகேஷ் திரும்பினார்.

அங்கே:

ரஞ்சித் நின்றிருந்தார்.

''ரஞ்...ரஞ்சித், என்னை க்ஷமிக்கணும்.''

''ஊம்.''

''பாபு உறங்கிக்கிட்டு இருந்தான்.''

''ஊம்!''

''பாபுவோடே பேசிடலாம்னு பார்த்தேன்.''

''ஊம்.''

''ஆனா, முடியல்லேங்க.''

''ஊம்.''

''இப்போ, பாபு பாத்ரூம் போயிருக்கான்.''

''ஊம்.''

காலடி ஓசை கேட்டது.

விதிக்கு நடிக்கத்தான் தெரியும்; நடக்கவும் தெரிந்திருக்கிறது!...

அப்போது:

அங்கே—

பாபு மாத்திரம் நிற்கவில்லை.

ரஞ்சனியும் நின்றாள்!...

"அப்பா!" என்றான் பாபு.

ரஞ்சித் மட்டிலும் திரும்பவில்லை.

மகேஷும் திரும்பினார்!...

ரஞ்சனியின் இதயத்தில் வீழ்ந்த நெருப்பு அவளுடைய காற்பாதங்களில் சுட்டுப் பொசுக்கிவிட்டது போலவே துடித்தாள்; துவண்டாள்; தடுமாறினாள்; தத்தளித்தாள்!

ரஞ்சித்தின் சிவந்திருந்த விழிகள் மேலும் சிவந்தன!

விருந்தாளியாக வீடு தேடி வந்திருந்த மகேஷை சூட்சுமமான ஆத்திரத்தோடு விநயமாக முறைத்து வெறித்துப் பார்த்துக்கொண்டே, "அப்பா!" என்று அன்பின் பாசம் முழக்கம் செய்திட அழைத்து, ரஞ்சித்தின் கைகளைப் பிடித்துக்கொண்டான் சிறுவன் பாபு! மணிப்பயல் பாபு!

மகேஷைப் பேய் அடித்ததா?—அவருக்குச் சொந்த பந்தம் பூண்ட மனம் 'பாபு! பாபு!' என்று வெகு ரகசியமாகக் கூவி அழைத்துக்கொண்டே இருக்கிறது!—மனக் குரங்கின் கண்களில் ரத்தம் உருகிக் கசிந்து கரைந்து கொண்டே இருக்கிறது!—பாவம்!

எங்கேயோ பூவரசம்பூ பூத்திருக்கிறது

''மிஸ்டர் மகேஷ்!''

''ஸார்!''

''பாபுவோட—எங்க பாபுவோட நீங்க என்னமோ பேசவேணும்னு சொன்னீங்க; இல்லீங்களா?''

''......ஊம்!''

''பேசறதுதானே?''

''.........''

''என்ன, மௌனம் சாதிக்கிறீங்க, மகேஷ்?''

''ஸாரே!''

''பேசுங்க, மகேஷ். பாபுவோடே பேசுங்க!''

''.........''

''ஊம்!''

''வந்து......''

''அதுதான் வந்திட்டீங்களே?''

''ஸார், ரஞ்சித் ஸார்!''

''ரஞ்சித் செத்துப் போயிடல்லே; செத்துப் போயிடவும் மாட்டான்! எங்க பாபுவோடே — நம்ம பாபுவோடே — உங்க பாபுவோடே பேசுறதுக்கு ஏன் இப்படிப் பயந்து சாகறீங்களாம்?—பாபுவோடே பேசுங்க, மகேஷ்!''

ஆடு திருடிய கள்ளனைப்போலே, 'திருதிரு'வென்று விழிக்கிறார் மகேஷ்; சுடுநீர்ச் சரம் நீள்கிறது; சுடுகிறது.

ரஞ்சனி கால் பாவி, கால் பரப்பி, கால் பதித்து நின்ற உயர்ரகப் பளிங்குக் கல்தரை, அப்போது தூக்குமேடையாக உருவெடுத்து விட்டிருக்க முடியாதுதான்.

பாபு சிரிக்கிறான்; சிரிக்கிறான்; சிரித்துக்கொண்டேயிருக்கிறான்!

பாபுதான் விதியா?

இல்லை...

விதிதான் பாபுவோ?

மௌனத் தீ கொழுந்துவிட்டெரிந்தது.

மௌனத்தின் பிண்டமென நிலைகுலைந்தும் நிலை கலங்கியும் நின்ற மகேஷின் உள்ளத்தில் ஏக்கமும் ஏமாற்றமும் பிய்த்துப் பிடுங்கித் தீர்த்தன; நரகவேதனை அவரைச் சித்திரவதை செய்தது.

"பாபுவோட பேசலீங்களா, மிஸ்டர் மகேஷ்?" என்றார் பாங்கர்.

"ஊம், பேசவேண்டியதையெல்லாம் பேசிடுங்களேன், மிஸ்டர் மகேஷ்!" பாங்கரின் பாங்கியான ரஞ்சனி.

"ஓ, பேசலாமே, ஸாரே!" என்று அனுமதி அளித்த வருகை, மகேஷ் நின்ற இடத்தை அண்டினான் பாபு விதியாகவே அண்டினான் பாபு!

"ஊஹூம், நான் பேசல்லே; பாபுவோடே நான் பேசல்லீங்க!" விம்மினார் மகேஷ். சட்டைப்பையின் உட்புறத்தில் அஞ்ஞாத வாசம் செய்த அந்தச் சின்னஞ்சிறிய துண்டுக் கடிதத்தை வெளியே எடுத்தவர், மறுபடி அதைச் சட்டையின் பைக்குள்ளாகவே மறைத்துத் திணித்தார்.

ஆ!...

"மிஸ்டர் மகேஷ், உங்களை எனக்குத் தெரியாதா?" சிரித்தார் ரஞ்சித்.

குலை நடுங்கினார் மகேஷ்; இடப்புறத்தில் நின்று விடாமல் ஓடிக் கொண்டிருந்த இருதயத்தை அழுத்தித் தேய்த்துக் கொண்டார் ''மிஸ்டர் ரஞ்சித்!'' விம்மினார்.

ரஞ்சனியின் கண்கள் அவளது காற் பெருவிரல்களையே இன்னமும் பார்த்த வண்ணம் இருக்கின்றன. உள்ளத்தின் உள்ளம் '144' போட்டது; ஊகூம், அழக் கூடாது; இந்நேரத்தில், அழவே கூடாது!—ஆனால், அவளது எழில் விழிகள் அழத் துடித்தன; சதுரங்கம ஆடிய கண்ணீர்த் திரையில், பொல்லாத அந்த அந்திமாலைப் பொழுது இப்போது ஊடும் பாவுமாகப் படம் வேறு காட்டித் தொலைக்கிறது!— 'தாயே, மாங்காட்டுக் காமாட்சி!... என்னை ஏன் இப்படி நித்த நித்தம் உயிர் செத்துச் செத்து, உயிர் பிழைக்கச் செய்கிறே?... அன்றைக்கே நான் செத்து மடிஞ்சிருக்கப்படாதா?'—மனம் அழுதது; புலம்பியது: 'ஆமாங்க, அத்தான். நான் புண்ணியவதிதாங்க; பாவப் பட்ட இந்தப் பெண் ஜென்மத்துக்கு உங்களோட எல்லையில்லாத அன்பின் மூலம், ஈடுஎடுப்பில்லாத உங்களோட கருணையின் மூலம் எனக்குப் பாவவிமோசனம் கிடைக்கிறத்துக்குப் பூர்வ ஜென்மத்திலே புண்ணியம் செஞ்சிருந்த நான், வாஸ்தவத்திலேயே புண்ணியவதியே தானுங்க, அத்தான்!'—பத்து வருஷத்துக்குமுறல் ஓயாதா? ரஞ்சனி, ''அ..த்...தான்! ''என்றுகதறினாள்!

மின்னல் முழங்காமல் இடி விழுந்து விட்டமாதிரி, பதறினார் ரஞ்சித்; ''ரஞ்..!'' என்று அலறினார்; ஓடினார்.

''அம்மா!... அம்மா!''

பயத்துடன் தாயைக் கட்டிப் பிடித்துக்கொண்டு கவலையுடன் செருமினான் பாபு.

குற்றம் பார்க்கில், சுற்றம் இல்லை!

மகேஷ் ஒதுங்கியும் ஒதுக்கமாகவும் நின்றார்.

''பொல்லாத சொப்பனம் கண்டு பயந்திட்டேனுங்க, அத்தான்!'' என்று பயத்தோடு அழுதவளாக, அத்தானின் மாண்புமிக்க மார்பில் தலையைச் சாய்த்துக் கொண்டாள் ரஞ்சனி. ஆருயிர் மைந்தனின் அணைப்பில், அவளைச் சுட்டுக் கொண்டேயிருந்த கண்ணீர், இப்போது தான் சிறுகச் சிறுகக் குளிர்ச்சி அடைந்து கொண்டிருக்கிறது.

அதோ:

ரதி!

மன்மதனின் ரதி அல்லள்!

மகேஷின் ரதி!

உரியவளுக்கு விடுதலை அளிக்கிறார் உடையவர்.

யார் இவன்?...

பாபுவுக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது; அதே எரிச்சல் பண்புடன், மகேஷையும் எரிச்சலோடு பார்த்தான்; பார்வையிட்டான்.

ரஞ்சித் பணத்தில் புழங்குபவர்: ஆகவே, வரவு—செலவு, லாப—நஷ்டம் எல்லாம் தெரிந்தவர். ஆனால், அன்புக்குக் காட்டுப் படும்போது, அந்த அன்பெனும் மகுடிக்குக் கட்டுண்ட நல்ல பாம்பாகவே ஆகிவிடும் மகத்தான மனிதத் தன்மை பெற்ற ஓர் அபூர்வப் பிறப்பை எடுப்பதும் வழக்கம்!—''மகேஷ்!'' என்று கூப்பிட்டார். மலர்ச்சியுடன்!

மகேஷ், குற்றவாளிக் கூண்டில் நீதிபதியின் சந்நிதானத்தில் நிறுத்தப்பட்ட கைதியாக நின்றவர், தாழ்ந்து குனிந்திருந்த தலையை மெள்ளமெள்ள நிமிர்த்திப் பார்க்கலானார்.

''மகேஷ், உங்க ரதி நிற்கிற இந்த லோகத்துக்கு நீங்க இப்போது திரும்பியிருப்பீங்கண்ணு நம்புறேன்; ஊற்றுத் தண்ணீரை எந்த வெள்ளமும் எப்போதும் கொண்டு போயிட முடியாதுங்க! பாபுவை நீங்க எப்போது

வேணுமானாலும் பார்க்கலாம்; பாபுவோடே பேசலாம்!... ஊம்: மனசைச் சமாதானப் படுத்திக்கிட்டு வாங்க, சாப்பிடு வோம்,'' என்று மகேஷை நோக்கிச் சொல்லிய பெருந்தனக்காரர் ரஞ்சித் இப்போது இல்லத்தரசியின் பக்கம் திரும்பி, ''ரஞ், இப்பவே நேரம் ரொம்ப ஆச்சு; சீக்கிரம் விருந்துக்கு ஏற்பாடு பண்ணு; நாம் எல்லாருமே ஒரே பந்தியாய்ச் சாப்பிடப் போறோம்; உள்ளே நடுக் கூடத்திலேயே ரத்தினக் கம்பளத்தை விரிச்சிடு; ஏ. ஸி. யையும் போட்டுடணும்! பாவம், நம்ம மகேஷ் பேயடிச்ச மாதிரி இருக்கார்; சூட்டுக்கு ஏ. ஸி. ஒத்தடம் கொடுக் கட்டுமே!'' என்றார்.

மகேஷ் சிரிக்க முயல்கிறார்!

பாபுவுக்கு அடியும் புரிய வில்லே: நுனியும் விளங்க வில்லே.

பாபுவைப் பிரியம் கனியப் பார்த்தாள் ரதி.

பாபுவே முகம், சுளிக்கிறான்!

நந்தினிப் பெண் மேலே, அதாவது, மாடியில் குளியல் கழிந்துக் கொண்டிருக்கிறாள் போலும்!

'சூ, மந்திரக்காளி!' போட்டு வரவழைக்கப்பட்ட மென்னகையை வெளிக்காட்டியவாறு, அங்கிருந்து நகர்கிறாள் ரஞ்சனி!

ரஞ்சித் தமக்கே உரித்தான பெருந்தன்மை கனியத் தமக்குத் தாமே சிரித்துக் கொண்டார்!..

பிற்பகல்:

மணி இரண்டு; நிமிஷம் ஏழு.

நடுக்கூடம்.

இப்போது, அதுவே உணவுக்கூடம்.

குளிர்ப்பதனக் காற்று.

நீலப் பாதரச ஒளி.

ஊதுவத்தி வாசனை.

ரத்தினக் கம்பளங்கள்.

பந்தி ஆரம்பம்.

கிழக்கில், ரதி—மகேஷ் ஜோடி.

மேற்கே, ரஞ்சித்—ரஞ்சனி இணை.

தெற்கே, நந்தினி.

வடக்கு: பாபு.

தஞ்சாவூர்த் தலைவாழை இலைகள்.

கொத்துச் சட்டிகள்.

சோற்றுப் பாத்திரம்.

தக்காளி, முருக்கங்காய், பச்சை மிளகாய்+பச்சை கொத்தமல்லி=சாம்பார்!

ஆமாம்; பருப்பு இல்லாமல் சாம்பார் இல்லை.

சோமையாவுக்கும் நன்றி.

அதோ, எடுபிடிக் குட்டி செவகி ரெடி!

புதுப் பாவாடை, சட்டை: பலே ஜோர்தான்!

'ஒமேகா'வுக்கும் இதயம் இருக்கிறது; இதயம் என்று ஒன்று இருக்கும் பட்சத்தில், இதயத் துடிப்பு இருப்பதும் சகஜமே.

ரஞ்சித் எழுந்தார்; பனியனுக்கு வெளியே நரிப்பல் டாலர் மைனர் சங்கிலி 'டால்' அடிக்கிறது; மைனர் செயின் அவருக்குப் படுஎடுப்பு; அவர் நாளும் பொழுதும் மைனர்தானே?—எழுந்தவர். மேலே அண்ணாந்து நோக்கினார்; கண்களில் 'ப்ளாக் அண்ட்நைட்' சிகப்பு மறைந் திருந்தது; 'ஷவர் பாத்' அவருக்குப் புதிய தெம்பை ஊட்டியிருக்கலாம்; 'ஓல்ட் ஸ்பைஸ்' புதிய உணர்வைத் தூவிவிட்டிருக்கவேண்டும். அவரது கண்கள் நாற்புறத்திலும் ரங்கராட்டினைய சுற்றும். கரங்கள் குவிகின்றன!

அதோ, மனிதச் சாதி—சமுதாயத்தின் சீர்திருத்த வாதி: அண்ணல்!

பாரதி: 'வாழ்க, நீ எம்மான்!'

அங்கே: அண்ணா அறிஞர்.

விவேகானந்தரும் இருப்பார்.

தாகூர், இதோ.

'வா, இந்தப் பக்கம்!'—வந்தவர்: தமிழகக் காந்தி.

ஆம்; அவர்தான் "கல்கி!"

ஒன்றே தேவன், ஒருவனே தெய்வமாக, தெய்வங்கள் பல!—அதோ, அதோ!...

"ஊம், நெய் ஊத்து!"

"ஆகட்டுமுங்க, ஐயாவே!"

"அப்பறம்...?"

"பருப்பு!"

ஊத்துக்குளி மணம் மகா அற்புதம், போங்கள்!

அடடே, போய்விடப் போகிறீர்கள்!

பிரா, உஷார்!

விருந்து ஆரம்பமாகிறது.

''சாப்பிடலாமா?'' என்று கேட்டார் குடும்பத்தின் முதல்வர்.

''ஓ!'' என்றவர்கள் பாபுவும் நந்தினியாகவுமே இருக்க வேண்டும்.

''சாப்பிடலாமா, மகேஷ்!''—ரஞ்சனி.

''ஊம்!''

''ரஞ், சாப்பிடலாமில்லே?''

''ஓ!''

சோற்றுக் கவளங்கள் உருள்கின்றன

''ஊம், சாப்பிடுங்க, ரதி!'' என்றான் வீட்டுக்குத் தலைவி

''சரி!''

முதற்பிடிச் சோற்றுக்கே பாங்கரின் கணக்கில் ஏப்பம் ஒன்று ஆதாயம் ஆகிறது.

சோற்றைப் பிசைந்தவள், நாணத்தின் மென்மையுடன் சற்றே தயங்கியவாறு, தன் காதலர் மகேஷ் சாப்பிட்ட பின்னரே சாப்பிடவேண்டுமென்று காத்திருந்தவள்போன்று, அவரைப் பரிவோடும் பிரேம பாசத்தோடும் ஏறிட்டு நோக்கி, ''ஹாய், மகேஷ்! உண்ணுங்க; வயநேரம் நமக்குச் சோலி உண்டில்ல?'' என்று தூண்டினாள் ரதி. கழுத்துச் சங்கிலியின் பதக்கத்தில் ஒற்றைக் கல் வெள்ளை மூக்குத்தி முகம் பார்த்தது; அகமும் பார்த் ருக்கும்; நெளிநெளியாக அலைபாய்ந்த மயிர்க் கற்றையைத் தளரமுடிந்து தலைவாரிப் பின்னியிருந்த சடைப் பூக்கள் தலைகாட்டிக் கண்காட்டி, முகமும் காட்டின.

ரஞ்சனிக்கு மனத்தில் கடுகத்தனை களிப்புக்கூட கண் சிமிட்டவில்லை; சாதத்தை அள்ளி, நெய்யும் பருப்பும் பிரிந்து விடாமல் பிசைந்தவள், தலையை அச்சத்தோடும் அயர்வோடும் நிமிர்த்தினாள்; மகேஷ் இன்னமும் கல்லாய்ச் சமைந்திருந்த கோலம் அவளைக் கம்பளிப் புழுவாக அரிக்கவே, ஓரக்கண்ணால் பார்வை வலையை விரித்தாள்: ''ஏன் இப்படி என்னவோ ஒருமாதிரி உட்கார்ந்திருக்கீங்க? சாப்பிடுங்க, மகேஷ், சாப்பிடுங்க,'' என்று தயவாக வேண்டினாள்.

ரஞ்சனியின் நினைவூட்டலுக்காகவே காத்திருந்தவர் போல, உதடுகளில் சன்னமான முறுவலைப் பின்னப்படாமல் தூவினார்; முதல் கவளச் சோற்றை நொடியில் உருட்டி, நொடியில் வாய்க்குள்ளே போட்டுக்கொண்டார்.

ரஞ்சித் நயமாக மட்டுமல்ல, விநயமாகவும் சிரித்து வைத்தார்: ''என்னோட ரஞ்சனி சொன்னால்தான், எங்களோட மகேஷ் கேட்பது வழக்கம். சரி, சரி: வேகம் ஊணு கழியுங்க, மகேஷ் ஸாரே!'' சாந்தியைக்காட்டாமல், சலனத்தைக் காட்டிக்கொண்டிருந்த அப்பேதைய மனத்தின் நிலையிலே, அந்த அந்திமாலைப் பொழுதின் பயங்கரமான சோகக்கூத்து, விதியின்ஒருநாடகத்தை முடித்த துயரக்கூத்தாக முடிந்திட்ட ஆறாத் துயரம் அப்போதும் அவரை அரிக்கவும் நச்சரிக்கவும் மறந்துவிடவில்லை; ரத்தக் கண்ணீரின் கசிவில் மகேஷ் நேர் முனையிலும் ரஞ்சனி எதிர்முனையிலும் மாறிமாறிச் சுழன்றனர்; 'ஆண்டவனே'— மனம் அலகிலா விளையாட்டுடையானைப் பிரார்த்தனை செய்தது; ஆனால், பிரார்த்தனைக்கு இரங்கி, ஆண்டவன் இறங்கிவரவில்லை; 'நினைத்தேன்; வந்தாய்' என்கிற கதையாக, பாபு ஓடோடி வந்தான்; தரிசனம் தந்தான். 'பாபு!...' நெஞ்சில் பதம் பிடித்துப் பரதம் ஆடிய பாபு, அதோ, நினைவுக்கு உத்தாரம் தருகின்ற பாவனையில், சாப்பிட்டுக் கொண்டிருக்கிறான்!— 'பாபு!... எங்க அருமை

மகனே!'' பொட்டுப் பொழுதில், பொடி பட்ட மாதிரி, விழிகள் தளும்பிவிட்டன.

திகில் அடைந்தாள் ரஞ்சனி. ஆசை அத்தானை— தன்னுடைய அருமையான உயிருக்கும் பெருமையான மானத்துக்கும் சரித்திரமேன்மை கொண்ட ஒரு கல்வெட்டுத் தூணாக விளங்கிக் கொண்டிருக்கும் அன்பு அத்தானைப் பதற்றம் மூள, அப்பதற்றம் நெருப்பாகத் தகிக்க உற்றுப் பார்த்தாள்; உறுத்துப் பார்த்தாள் அவள். அவள் ரஞ்சனி ரஞ்சித்தின் ரஞ்சனி; ரஞ்சித்திற்கே உடைமை பூண்ட ஆசை ரஞ்சனி; அருமை ரஞ்சனி! ''அத்தான், சாப்பிடுங்க; வந்திருக்கிற விருந்தாளிகளை அழைச்சுக்கிட்டு, சாயரட்சை எங்கெங்கோ போகணும்னு 'ப்ரொக்ராம்' போட்டீங்களே? சல்தி பண்ணிச் சாப்பிடுங்க; சாப்பிட்டு ரெஸ்ட் எடுத்து எழுந்திருச்சதும், காஃபி சாப்பிடலாம்; அப்பறம், வெளி யிலே புறப்பட வேணுங்களா? ஊம், சீக்கிரம் சாப்பிடு வீங்களாம்!—நம்ப பாபு மாதிரி நல்ல பிள்ளை ஆச்சே நீங்க! வேணும்னு, 'ஓரே ஒரு ஊரிலே ஓரே ஒரு ராஜா!' கதை சொல்லட்டுங்களா? ஊம், சரிதான்; சீக்கிரம் சாப் பிடுங்க, அத்தான்; உங்க ஆசைப்படி, நானும் உங்களோடே சரிசமமாய்க் குந்திச் சாப்பிட ஒப்பலீங்களா?...இப்பவும் என் பேச்சுக்கு மதிப்புக்கொடுத்து, மரியாதை கொடுத்துச் சாப்பிடுங்களேன், அத்தான்!'' மேல் மூச்சு, கீழ் மூச்சு வாங்கியது; இருதயம் எப்படி அசுரகதியில்—'டக்டக்' சத்தத்தை எழுப்பித் தொலைகிறது! பொங்கி வரும் பெரு நிலவாகவும் புன்னகையின் புது நிலவாகவும் அவள் பரிணமிக்கிறாள். ரஞ்சனியின் பொன்நகைப் புன்னகையில் ஸ்ரீரஞ்சனி புன்னகை புரிகிறது.

ரஞ்சித் உயர்ந்தவர்; ஆகவேதான், அவரால் விழிகளை உயர்த்திட முடிந்தது; நேர்கொண்ட பார்வை நேர்க்கோ டென விரிந்தது; ரஞ்சனியை ஊடுருவினார்; எம்பெருமா னுக்கு உடைய எம்பிராட்டியின் அன்பு விண்ணப்பமாகவே

ரஞ்சனியின் சொற்களை அவர் வாங்கிக்கொண்டார். நிர்மலமான அந்தக் கோலமதர் விழிகளிலேதான் எத்தனை குழந்தைத்தனம், பிழையற்ற பாவம், பரிவு, பாசம், நேசம்!—ஆஹா!...என் ரஞ்சனி அன்போடு கேட்ட எதைத்தான் நான் இதுவரை மறுத்திருக்கிறேன்? அவள் கேட்டு 'இல்லை!' என்றேனா?—அல்லது, 'முடியாது!' என்று தான் சொன்னது உண்டா? அவள்தான் என் உயிர்; எனக்கு உயிர்; அவளது உயிர்தான் எனது உயிர்!—அவள் அன்பு அப்படி; பாசம் அப்படி; நேசம் அப்படி! ஆனதாலே தான், அவள் கேட்டு, நான் அன்று தொட்டு இன்று பரியந்தம் நான் எதையுமே மறுதளித்தது கிடையாது; இடையிலே கிடையாது! என் உள்ளம் தொட்டவள் ஆயிற்றே?—அன்பு ஒருபோதும் கேட்பதில்லையாம்; கொடுக்கத்தான் செய்யுமாம்!—மகாத்மாவை நான் மறுக்க முடியாதுதான்!—ஆனாலும், எங்கள் அன்பு, அதாவது, எனக்கும் ரஞ்சனிக்கும் இடையிலான உயிர்களின் பாற் பட்ட அன்பு—உள்ளங்களின் பாற்பட்ட அன்பு கேட்பதும் உண்டுதான்!—கேட்கப்படும் கையில், கொடுப்பதும் உண்டு! அன்பு என்னும் மகத்தான அற்புதச் சக்தி கொடுக்கல்—வாங்கல் விவகாரத்திலேதானே உயிர்கொண்டு விளங்க முடிகிறது! அந்திமாலைச் சோகத்தில் சலனம் அடைந்த நெஞ்சம் அந்திநிலா ஆனந்தத்திலே அமைதி அடைந்திட, சுயப்பிரக்ஞை பெற்றார் ரஞ்சித்!—ஆம்! ரஞ்சனி கோபப் படுவதற்கு முன்னதாக, நல்ல பிள்ளையாக உண்டுமுடித்து, மறுபடியும் ஏப்பம் விட்டுவிடவேண்டும்!—"ரஞ்!...என்னுடை அன்புத் தெய்வமே! ரஞ்!'—திட்ட வட்டமானதொரு புதிதான—நூதனமான உற்சாகத்தோடு சாப்பிடத் தொடங்கினார்; ரஞ்சனியையும் உண்ணும்படி ஏவினார்; பாபு, நந்தினியையும் மறந்து விடுவாரா, என்ன?—"மகேஷ்—ரதி! வேகம் பண்ணி உண்டு முடியுங்கோ!" என்று கூறி, 'சிவாஜி' பாணியில் 'கோ'வில் ஓர் அழுத்தமும் கொடுத்தார்.

தமிழ் முதல்வனுக்குப் பூந்தமிழால் மாலை இடுகிறாள் பக்திடபெண் ஒருத்தி!

மறுகணம்:

கூடத்தில் புண்ணிய பூமியின் கறைபடாத, கரை காணாத, புனிதமான, பொற்புடைய அமைதி ஆனந்த மாகவும் அற்புதமாகவும் ஆட்சி நடத்தியது.

"இன்று புதிதாய்ப் பிறந்தோம் நாம்!' என்கிற பாணியிலே, அவரவர்கள் குதூகலத்துடன் உணவுகொண்டனர்.

குற்றம் நீங்கின அமைதியும், மன்னிப்பில் கிட்டிய ஆறுதலும், சலனம் க ந்த சாந்தியும், சமாதானத்திடைச் சஞ்சரித்த நம்பிக்கையும் அப்போது அவர்களுக்கு மத்தியில் கண்களுக்குப் புலனாகாத கடவுள் மாதிரியும், அதைவிடவும், கண்ணுக்குள் தெரியாத விதிபோலவும் விளையாடின; விளையாட்டுக் காட்டின!

மகேஷ் பக்கம் ரஞ்சித் பார்வையைச் செலுத்தினார்.

ஒரு சிலிர்ப்பு.

மகேஷ் அதோ, தலைநிமிர்ந்து ரஞ்சித்தை மட்டுமல்லாமல், ரஞ்சித்தின் ரஞ்சனியையும் சுத்தமான தைரியத்தோடு பார்க்கிறார்; பார்வையிடுகிறார்.

ஜோடிச் சிரிப்பு.

ரதுக்கென்ன?— அவள் ராஜாத்தி!—மலையாளப் பூங்குயில்!—'சில்ப்பக்காரி' யாக்கும்!—தம்புராட்டியும் அவளே! சொப்பனங்கள் அவளுடைய பட்டுக் கரு நீல விழிகளிலே சொகுசாக ஆனந்தச் சல்லாபம் செய்தன போலும்! பின்னே, அவள் ஆனந்தமாகச் சாப்பிடக் கேட்கவேண்டிய தில்லை.

மணிப்பயல் பாபு அபூர்வரகம்; இலையைக் காலி பண்ணி விட்டான்; வழக்கத்தைக் காட்டிலும் அதிகமாகவே சாப்பிட்டுவிட்டான்!

''பழனி மலை ஆண்டியே! ''உனக்கு என்ன வேணும்?'' என்று விசாரணை நடத்துகிறாள் ரஞ்சனித் தாய்!—'பாபுவை அடுத்த வருஷம் ஹாஸ்டலுக்கு அனுப்பவே கூடாது; இங்கேயே தான் வச்சுக்க வேணும்: பாபு இங்கே இல்லாட்டி, எனக்குப் பைத்தியம் பிடிச்சிடும்!'

பாபு: ''எனக்கு நீதான் வேணும், அம்மே!'' அசல் பழனி ஆண்டியும் அன்னை உமையவளிடம் இப்படித்தான் புராணக்காலத்திலே வசனம் பேசியிருப்பான்!—''அச்சனும் தான் எனக்கு வேணுமாக்கும்!'' நிஜார்ப் பையைச் சாகச மான சாமர்த்தியத்தோடு தடவிப் பார்த்துக் கொள்கிறான் வாண்டுப்பயல்.

ரஞ்சித் வாய்விட்டுச் சிரித்தார். ''உன் அப்பாவையும் அம்மாவையுந்தான், நீ பிறந்த அந்த நிமிஷத்திலேயே உனக்கென்று எடுத்துக் கிட்டியேடா, தெய்வமே!'' உண்மையான கண்ணீருக்கு இடம் பொருள் எல்லாம் துச்சம், தூசுக்குச் சமம்!

ரஞ்சனி மனம்விட்டுச் சிரிக்கிறாள்;

''ஆமாம்ப்பா! நீ எப்பவுமே எங்க தெய்வமேதான்! உன்னோட அப்பாவுக்கும் அம்மாவுக்கும் நீ எப்பவுமே அருமை பெருமையான பிள்ளையே தாண்டா, பாபு ராஜாவே!'' உந்திக் கமலத்தினின்றும் கொப்புளித்த கண்ணீர் கண்களில் நிரம்பி வழிந்தது.

'ஆ!'—மகேஷ் திடுதிப்பென்று ஏன் அப்படிக் கதிகலங்குகிறார்? சட்டைப் பையைக் குழப்பத் தோடும் கலவரத்தோடும் தடவித் தடவிப் பார்க்கிறார்: வேர்வை எட்டிப் பார்க்கிறது.

நந்தினி தயிர் ஊற்றிக் கொண்டதும், அவளுக்குப் பிடித்தமான துகையல் கிடைத்தது. வாய்க்கு உறைத்தது; நெஞ்சுக்கு இனித்தது. பிடிச் சோறு அதிகமாகவே சாப்பிட்டாள். "தாங்க் யூ, மம்மி!"

'ஓ.கே' சொல்லி, பாசத்தின் நன்றியை நன்றியுடன் அங்கீகரித்தாள் ரஞ்சனி.

"அம்மா, பாயாசம்!" என்று கேட்டுக் கொண்டு ஓடோடி வந்து, அம்மாவின் மடியில் துள்ளலோடு குந்திக் கொண்டான் பாபு. அம்மாவின் இலையிலேயே பாயசத்தைப் போடச் சொல்லிச் சமர்த்தாகவும் சாப்பிட்டான். அம்மாவின் பங்குக்கு உபரியாகக் கிடைத்த முந்திரிப்பருப்பு; ஐந்து; அப்பா தந்ததோ ஆறு. அவனுக்கென்று கிடைத்தது ஒன்றே ஒன்றுதான்! இருந்து விட்டுப் போகட்டுமே!— உபரியாகத்தான இப்போது ஆதாயம் கிடைத்து விட்டதே? ஐயையோ!—அத்தனை முந்திரிப் பருப்புக்களும் கண் மூடிக் கண் திறப்பதற்குள், வாய்மூடி வாய்திறப்பதற்குள் எங்கோ மாயமாய் மறைந்து விட்டனவே!

ரஞ்சனி மண்ணுக்கும் விண்ணுக்குமாகப் பறந்தாள் பத்து வருஷத்துச் சோகம் பத்து நிமிஷத்திலே காற்றாய்ப் பறந்து விட்டது போலவும் ஆறுதல் பெற்றாள்; பாபுன்னு பாபுதான்!— பாபு சாப்பிட்ட மிச்சத்தில் மேலும் இரண்டு கரண்டி ஊற்றச் சொல்லிச் சுவைத்துச் சாப்பிட்டாள். பாயசம் இன்றைக்கு 'ஏ, ஒன்!— ஏலக்காய் அமர்க்களமாக மணக்கிறது!

"இன்னம் கொஞ்சம் பாயசம் வாங்கிக்கிடுங்க, மகேஷ்!" என்று சொல்லி உபசரித்தார், விருந்த படைத்தவர்.

"போதுமுங்க" என்றார் மகேஷ்.

"ரதிக்கு இன்னும் ஒரு கரண்டி பாயசம் ஊத்துடி, செவகி," என்றாள், விருந்து தயாரித்த ரஞ்சனி.

''ம்..மதி...மதி!''

''போதுமாம்டி; நிறுத்திக்கடி, தாயே!''

மதி வந்த ஒப்பனையில், பல் எல்லாம் தெரியக் காட்டி அசடு வழிய நகர்ந்தாள் ஏழைச் செவகி. அவள் பாடு இன்றைக்கு வேட்டைதான்!— ''ஊம், வயிறு வெடிக்கச் சாப்பிட்டாகணும்!'' என்று செல்லம் காட்டி, அன்பு காட்டி, வீட்டுத் தலைவியே பரிமாறும் போது, செவகிக் குட்டி பாவம், திக்குமுக்காடித் திணறி விடப்போகிறாள்!

முதன் முதலில், இரண்டாவது ஏப்பத்தையும் அதிகார பூர்வமாகப் பிரகடனம் செய்தார் ரஞ்சித்.

அவரவர்கள் எழுந்தார்கள்.

இம்முறை, ஜாக்கிரதையாக நீட்டின கைப்பிடித் துண்டை வெகு ஜாக்கிரதையாகவே வாங்கிக் கொண்டார் மகேஷ்.

இப்போதும், ரஞ்சித் புன்னகை செய்கிறார்.

அந்நேரத்திலே—

பூஜைவேளையில் கரடி புகுந்தது.

அதாவது, சாப்பாட்டு வேளையில், இந்நாட்டு மன்னர் ஒருவர் பிரசன்னமானார்; அந்த நடுத்தெரு நாராயணனுக்கும் அங்கே விருந்து கிடைத்தது.

பிச்சைக்காரனுக்குக் கொண்டாட்டம்!

ரஞசனிக்கும்தான்.

மற்றுமோர் ஆச்சரியக்குறி!

அதோ பாருங்கள்!—கைப்பிடிக் கடிதத்துடன் தன்னுடைய தனி அறையை இலக்கு வைத்து ஓடிக்கொண்டிருக்கிறான் மாஸ்டர் பாபு!...

# அந்தி நிலாச் சதுரங்கம்

## 6: பொன் அந்தி!

பொன் அந்தி மாலைப் பொழுது!

அரசியலைக் கசடறக் கற்று, அதற்குத்தக நிற்கக்கூடிய உண்மையுள்ள அரசியல்வாதியைப் போலே, நிதானமான அமைதியுடன் அழகாகத் தரிசனம் தருகிறது அந்திமாலை; மஞ்சள் கிரணங்கள் மனோகரமாகப் பளிச்சிடுகின்றன.

புல்வெளிப் பூங்காற்று பதமாகவும் இதமாகவும் வீசுகிறது.

ரஞ்சனிக்கு வெட்கம் வந்துவிட்டது, வெட்கம்!

பின்னே, என்னவாம்?

'அவளை விழுங்கி ஏப்பம் விட்டுவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பேன்!' என்கிற பாவனையில் தன்னுடைய உயிரின் மறுபாதியான பிரியமானவளை — பிரியமானவளான

ரஞ்சனியை வைத்த கண் வாங்காமல், ரஞ்சித் அப்படியே பார்த்தது பார்த்தபடி பார்த்துக்கொண்டே இருந்தால், அவளுக்கு வெட்கம் வருவது இயற்கைதான்!

பச்சைக் கிளி வெள்ளை வாயாகப் பேசிற்று.

"ரஞ், நான்தான் உன்னைக் கூப்பிட்டேன்!"

மோகம் தழைத்துச் செழித்துக் கடைக்கண் பணிபுரியும் மோஹினிச் சிலைக்குச் சமதையாக அழகு காட்டி, அந்தம் காட்டி, அன்பையும் காட்டிப் புன்னகை சேர்த்தாள் அன்புடையாள். அவளது மஞ்சள் முகம் பொன் மஞ்சளில் பூக்கோலம் இட்டிருக்கலாம். காஞ்சிப்பட்டின் பொன் வண்ணம், அவளுடைய பொன்மேனிக்குப் பொட்டு இட்டு அழகு பார்த்திருக்கக்கூடும்.

"ரஞ்!..."

சற்றே சரிந்த குழலை எழில் கொஞ்சும் ஆருயிர் ரஞ்சனியின் மார்பகத்திலிருந்து எழில் கெஞ்ச விலக்கி விட்டபின், சிறிதாகக் கசங்கியிருந்த சோளியின் இடது புறத்துச் சரிகைக் கரைக்கட்டைச் சரிசெய்து விட்டதில் பாங்கருக்கு நிம்மதியான நிம்மதி கனிந்தது. அந்த நிம்மதியில், ரஞ்சனியின் தாலிச்சரட்டை 'நிமிண்டி' அழகு பார்த்த சாதுரியமும் சேர்த்தி.

"இனியாச்சும் சும்மா இருக்க மாட்டீங்களா, அத்தானே?"

கண் அடித்துக் கண் சிமிட்டி, அர்த்தமுள்ள புன்னகையைப் பொன் நகையாக்கிச் சூட்டி மகிழ்வதில் ரஞ்சித்துக்கு நாளும் பொழுதும் ஒரு களிப்பு. கண்ணன் மட்டிலுந்தான் தீராத விளையாட்டுப் பிள்ளையாக இருக்க வேண்டுமென்பதாக எந்த விதியும் சட்டம் படிக்கவில்லைதான்!

சோமையா மூப்புத் தெரியாத விதத்தில் ஓடி ஆடிப் பணி செய்துகொண்டிருந்தார். நந்தினி விலாசத்தில் அவருடைய அந்தரங்கபூர்வமான பணியும் பாசமும் கிட்டத்தட்ட பத்தொன்பது ஆண்டுகளின் சரித்திரத்தைக் கொண்டது அல்லவா? அறந்தாங்கிச் சீமையிலிருந்து இங்கே சென்னைப் பட்டணத்திற்கு, ஆசைக்கு ஒரு பெண்ணாக நந்தினி பிறந்த தருணத்தில் வந்தவர் அவர்; ஆஸ்திககு ஓர் ஆணாகப் பாபு அவதரித்த நேரத்தில் அவர் அடைந்த மகிழ்வுக்கு அளவே இல்லை!

''அ...த்...தான்!''

கைப்பிடி நாயகனைக் காதலாகிக் கசிந்து உருகி விளித்தாள் ரஞ்சனி.

''என்ன, ரஞ்சனி?''

''.......''

''சொல், ரஞ், சொல்!''

''நம்ப பாபு...''

''பாபு...?''

''நம்ம பாபுவை நாம நம்ம வீட்டிலேயே எப்பவுமே வச்சிக்கிட்டால்தான், எம் மனசு என்னமோ சமாதானமும் அமைதியும் அடையும்னு தோணுதுங்க, அத்தான். உங்களுக்கு நான் இப்பிடிச் சொல்றது ஆச்சரியமாயிருக்கும்; ஏன், திகைப்பாகவும் இருக்கலாமுங்க! —நான் பயப்பட்ட—பயப்பட்டுக்கிட்டே இருக்கிற நெருப்பு, என்னோடே பக்கத்திலேயே இருக்கவேணும்னு, நான் ஆசைப்படுறேனுங்க; அது மட்டுமில்லே; அந்த நெருப்பைச் சதாசர்வகாலமும் தொட்டுத் தொட்டு ஆனந்தப்படவேணும் என்கிற ஒரு விசித்திரமான ஆசைக்கும்கூட நான் இப்ப ஆளாகிட்டேன்;

ஆளாக்கப்பட்டுவிட்டேன்!—ஆமாங்க, அத்தான்!... எனக்குப் பைத்தியம் கியித்தியம் பிடிச்சிடலீங்க, அத்தான்!— என்னை நம்புங்க, அத்தான், நம்புங்க! என்னோட இந்தப் பேச்சை நீங்க நம்பாட்டி, அப்பறம், என்னையும் மீறி, அல்லது, உங்களையும் மீறி, நான்... நான்...?''—தொடர்ந்த பேச்சினைத் தொடரமாட்டாமல், விக்கிவிக்கி—கேவிக்கேவி அழுதாள் ரஞ்சனி.

அந்த நெருப்பையே விழுங்கிவிட்டவராகத் துடித்தார்; துடிதுடித்தார் ரஞ்சனியின் ரஞ்சித் ''ரஞ்சனி!—நீ எங்காச்சும் போயிடப் போறியா, என்ன?'' என்று நெருப்புச் சுடுகிறமாதிரி, நிர்த்தாட்சண்யமாகவே கேட்டு விட்டார் அவர்.

மறு நொடியிலே—

''அத்தான்!'' என்று ஓங்காரக் காளியென ஓலமிட்ட வளாக, அத்தானை மயிரிழை ஒட்டுறவில் ஒட்டி உறவாடி, நேருக்கு நேராக வெறித்து நோக்கியவாறு, அத்தானின் புதிதான பிஸ்கட் கலர் ஜிப்பாவை மூர்த்தண்யமான வெறியோடு பற்றினாள்: ''என்ன கேள்வி கேட்டுப்பிட்டீங்க, அத்தான்?—என்னைப் பார்த்து, உங்க ஆருயிர் ரஞ்சனியைப் பார்த்து, எத்தனை பயங்கரமான—மோசமான—கேவலமான கேள்வியைக் கேட்டுப்பிட்டீங்க நீங்க?''—ரஞ்சனி வெடித்து விடவில்லை; விம்மல்கள்தாம் வெடித்தன. அவளுள் கொழுந்துவிட்டெரிந்த தீக்கங்குகளில் ரஞ்சித் சமர்ப்பித்த கண்ணீர் சிந்திச் சிதறவே, மறு இமைப்பில் அவள் அடங்கி விட்டாள்; எரிந்த தீயும் அவிந்துவிட்டது போலும்!— ''அத்தான், நான் எங்கேயும் போயிடப் போறதில்லீங்க; போயிடவும் மாட்டேன்; என் உயிரை விட்டுட்டு, நான் எங்கேயும் போயிடவே மாட்டேனுங்க, அத்தான்!... மனிதாபிமானத்தோடே நம்புங்க, அத்தான்!'' குமுறல் வெறி அடங்கிய அவளுடைய தெய்வமணிக் கரங்கள்,

தன்னுடைய தங்கக் கழுத்தில் தவழ்ந்து ஊசலாடிய தங்கத்தாலியை அக்கினியைச் சாட்சியை வத்துத் தனக்கு அர்ப்பணம் செய்த ஆருயிர் ரஞ்சித்தின் சுடுவிழி வெள்ளத்தை வழித்து விடுவதில் இப்பொழுது முனைப்புடன் முனைந்திருந்தன. 'எனக்கு அன்றைக்குப் பாவமன்னிப்பை அருள் பாலித்த என் சுவாமி—எனக்கு அன்றைக்குப் பாவ விமோசனத்தை வழங்கின என் ஸ்ரீராமபிரான் எத்தனை பயங்கரமாகச் சோதித்து என்னை உயிர்க்கழுவிலே ஊசலாடி உருக்குலையச் செய்துவிட்டாரே?—ஐயையோ, தெய்வமே!...என் தெய்வமே!' உள்ளம் உள்ளுக்குள்ளாகவே செருமிப் பொருமிக் கொண்டேயிருந்தது!

ரஞ்சித் சிறுபிள்ளை மாதிரி அழுதுகொண்டே, தன்னுடைய சிவகாமியான அருமைச் சீதேவி ரஞ்சனியை—சீதாப்பிராட்டியுமான ரஞ்சனியை ஏறிட்டுப் பார்த்து, அவளுடைய பார்வையை மாயத்திரையாக மறைத்த கண்ணீரைத் துடைத்தார். ஆருயிரின் அழகான தாழ்வாயை நிமிர்த்தினர்: பேசினர்:

"நீ என்னை விட்டுப்புட்டு எங்காச்சும் போயிடுவீயோன்னு, நான் கடவுள் சத்தியமாய் உன் பேரிலே சந்தேகப்படல்லே! ஊகூம்; ஒருநாளும் அப்படிச் சந்தேகப் படவேமாட்டேன்; என்னோட உயிருக்கே ஒரு அர்த்தமும் அன்பும், தருமமும் சத்தியமுமாக விளங்கிட்டு இருக்கிற உன்னை—எனக்குத் தெய்வமான உன்னை ஐயப்பட்டேன்னு, நான் மனுஷனாகவும் இருக்கமுடியாதே, ரஞ்சனி?—நீ கொஞ்ச முந்தி மனசொடிஞ்சு பேசின தோரணையிலே, உன்னோட அருமை பெருமையான உயிர் உன்னையும் மீறி, அல்லது, என்னையும் மீறிப் பிரிஞ்சிடுமோ என்னமோன்னு நான் கதிகலங்கித்தான், நான் அப்படி ஒரு கேள்வியை உன் கையிலே, கேட்டிருக்கேன்; வாய் தவறித்தான், 'நீ எங்காச்சும் போயிடப் போறீயா?' அப்படின்னு கேட்க நேர்ந்திடுச்சு! நான்தான் புத்திகெட்டு, கேட்கக்கூடாததை

உன்கிட்டே கேட்டுப்பிட்டேன்; நீயும் துரும்பைத் தூணுக்கிப் பெரிசு படுத்தி, இல்லாததையும் பொல்லாத தையும் எண்ணி எண்ணிக் குமுறிக் கொந்தளிக்கலாமா, ரஞ்சனி?—மன்னிக்கப்பட்டவங்க எல்லாருமே, எப்பவுமே, சமுதாயத்தின் மத்தியிலே குற்றவாளிகளாகவேதான் காட்சி தரவேணும்னு விதி ஒண்ணும் இல்லே!—தவிரவும், மன்னிக்கிறவங்க எல்லோருமே தெய்வங்களாகத்தான் இருப்பாங்க என்கிறதுக்கும் விதியாலே சாட்சி சொல்ல வாய்க்காதுதானே?''

பேச்சு முடிந்தது.

பெருமூச்சு முடியவில்லே

அன்பைக் கொடுத்து, அன்பை வாங்கிக்கொண்டதன் விளைவாக, மனச்சுமை குறைந்தமாதிரி உணரலாஞர், 'கொடுக்கல்—வாங்கல்' தொழில் அதிபர் ரஞ்சித்.

பொன் மாலேயில் புன்னகை மணம் கமழ்கிறது.

இப்பொழுதுதான், சோமையாவின் நடமாட்டம் தெரிந்தது.

''அத்தான், நாம பேசிக்கிட்டிருந்ததை இந்நேரம் பெரியவர் சோமையா கேட்டுக்கிட்டு இருந்திருப்பார் போலிருக்குங்க!''

''கேட்டுக்கிட்டுப் போகட்டுமே ரஞ்சனி?—சோமையா நம்ப குடும்பத்து நண்பர்களிலே ஒருத்தர்தானே?—அது போகட்டும்!—பாபுவைப் பத்தி நீ சொன்ஞய்;நம்ப பாபுவை நம்மகூடவே இங்கேயே எப்போதுமே வச்சிக்கிட்டால்தான் நல்லது! இந்த முடிவுக்கு, உன்னேப்போலவே நானும் வந்து எத்தனேயோ நாள் ஆயிடுச்சே, ரஞ்..?''

''மெய்யாகவா, அத்தான்?''

''ஊம்...!''

மறுவினாடியில்:

சலசலப்புக் கேட்கிறது.

அதோ, பாபு ஓட்டமும் நடையுமாகப் பெற்றவர்களை நோக்கி வந்துகொண்டிருக்கிறான்!...

பாபு, ஆடும் கலாபமயிலாகவும், ஓடும் கவரிமானாகவும் ஒருசேரத் தரிசனம் தந்தபடி, பெற்றோர்கள் முன்னிலையில், ஓட்டமும் நடையுமாக வந்து நின்றான்; திருச்செந்தூர்க் குமரனுக்குப் பால் அபிஷேகம் செய்யும்பொழுது, 'அவன்' முகத்திலே பால் வழியாதா?—அப்படி, பாபுவின் வதனத்திலும் இப்போது, பால் வழிந்தது. மணிப்பயல் புத்தம் புதிதானதோர் அமைதியோடு காணப்படுகிறானே?

''பாபு!'' என்று அன்போடும் பாசத்தோடும் அழைத்து, அருமைத் திருமகனை ஆரத்தழுவி; இரண்டு கன்னங்களிலும் மாறிமாறி இரண்டு முத்தங்களை வழங்கிய முதற்பெருமை அப்போதும் பெற்றவள் ரஞ்சனிக்குத்தான் கிட்டிற்று. பாபுவுக்கு இதுமாதிரி முத்தம் கொடுத்து எத்தனை நாட்கள் ஆகிவிட்டன!—ஆனந்தக் கண்ணீர் ஆடிப்புனலென ஓடுகிறது. பாபுவை இங்கே நிலைப்பாக அமர்த்தி வைத்துக் கொள்ளுவதற்கு எப்பாடு பட்டாகிலும் வழிவகை செய்வதாக அத்தான் சற்றுமுன் உத்தாரம் கொடுத்திருந்த ஆறுதலில் அவளது பெண் மனம் நிரம்பவும் அமைதியடைந்தது.

ரஞ்சித்தின் உந்திக் கமலத்தைவிட்டுப் புறப்பட்ட பாசம் அவருடைய கண்களில் சங்கமம் ஆகவே, பாசக் கண்ணீர் ஒன்று, இரண்டு, மூன்று என்று நன்முத்துக்களாக உதிர்ந்தன. அதே சூட்டோடு, நீள்மூச்சும் நீளமாகப் பிரியத் தலைப்பட்டது. தலையும் இல்லாமல், காலும் இல்லாமல், வெறும் முண்டம் கணக்காக, ஏதோ ஓர் உறுத்தல் அவருடைய உள்ளத்தின் ஏதோ ஒரு முடுக்கில்

அரித்தெடுத்துக் கொண்டேயிருந்த பயங்கரமானதோர் அவலத்தை அறிவு பூர்வமாகவும் அவரால் உணர முடிந்தது!—விதியின் வினையும், வினையின் விதியும் வேடிக்கை மனிதர்களைப்போல் சித்திர விசித்திரமாக ஒன்று சேர்ந்து விளையாடிய," அல்லது, விளையாட்டுக் காட்டிய அந்த அந்தி நேரத்துத் துயரக் கூத்து, உச்சகட்டத்திலே, மனிதத் தன்மையின் மிகமிக மகத்தானதான திரும்பு முனையாக அமைய நேர்ந்த நேரத்திலே, மங்கலான ஒளியும் அன்பு மயமான சோகமும் காட்டி அந்த அந்தி நிலா உதயமான ஆச்சரியத்தையும் அற்புதத்தையும்கூட அவரால் மனப் பூர்வமாகவும் உணர முடிந்தது!...

அப்பாவுக்குத் தன் நினைவை ஊட்ட மகனால்தான் முடியும்; முடியவும் முடிந்தது.

அம்மாவுக்குச் சிரிப்பை ஊட்டவும் அந்த மகனாலே தான், இந்த மகனாலேதான் முடியும்; முடியவும் முடிந்தது.

ரஞ்சித் விழித்தார்: பாபு பிரச்னையை வெற்றியோடு முடித்தால்தான், என் ரஞ்சனி உயிர்தறிப்பாள்! அந்தத் துப்பு தெளிவாகவே புரிகிறது!

ரஞ்சனியும் சேர்ந்து விழித்தாள். பாபுவை இனி இங்கேயே, எங்களுடனேயே எப்போதும் தங்கச் செய்து விட்டால்தான், நான் உயிர் பிழைப்பேன்; மீண்டும் ஒரு பிறவி எடுத்து, அதாவது, மூன்றுவது பிறவி எடுத்து, நான் பிழைக்கவும், உயிர் பிழைக்கவும் முடியும்! "ஆமா; இது சத்தியம்!"...

தாயையும் தந்தையையும் பார்க்கப் பார்க்கப் பாபுப் பையனுக்குச் சிரிப்புச் சிரிப்பாக வந்தது. மாளாத சிந்தனையிலே மீளமாட்டாமல், மாய்ந்து போய்விட்டார் களே இவர்கள்?—இவர்களுக்கு அப்படி என்ன தீராத பிரச்னை ஏற்பட்டுவிட்டதாம்?—'ஒண்ணுமே விளங்கக் காணுமே?—பகவானே!'

பிஞ்சு நெஞ்சரங்கில் ராமகிருஷ்ண பரமஹம்ஸரும் விவேகானந்த சுவாமிகளும் பாபுவின் ஆதாரனையை ஏற்பதற்கும், அவனிடம் மின்சக்தியாகப் புதியதொரு வல்லமை பீறிட்டுப் பாய்வதற்கும் கனகச்சிதமாக இருந்தது. மனதில் விளைந்த நெகிழ்ச்சியில், கண்களிலே முத்தங்கள் விளைகின்றனவே! காறசட்டையின் இடது பக்கப் பையை ஒரு பதட்டத்தோடு சோதித்தான். அந்தக் கடிதம் அவனைத் துறந்தோ, மறந்தோ எங்கேயும் போய்விடமுடியாது!

வாழ்க்கையே ஒரு பொம்மலாட்டம்தான்!

இளவரசுப் பட்டம் பாபு எதற்காகவோ தனக்குத் தானே—தன்னில்தானே அமர்க்களமாகவும் அட்டகாசமாகவும் புதிராகவும் சிரித்துக்கொள்கிறான்

ரஞ்சித் கவலைமிஞ்சி, மனையாட்டியை நோக்கினார்.

ரஞ்சனியோ ஆதங்கம் அலைபாய, கைப்பிடி நாயகனைப் பார்த்தாள்.

அப்பா—அம்மாவின் அந்தரங்கமான பார்வைப் பரிவர்த்தனையின் முன்கதைச் சுருக்கத்தை அறியாதவனாக, அவர்கள் இருவரையும் ஒரு விநயத்துடன் நயமாகவே பார்த்துவைத்தான் பாபு.

'பாபு முகசுடாச்சுதே? என் இஷ்டப்படி இவன் இங்கேயே இனிமேலே தங்கிறத்துக்குச் சம்மதிக்க மாட்டானே, என்னவோ?'—ரஞ்சித்தின் குறை இது.

'பாபு விதியாட்டமே சிரிக்கிறதைப் பார்க்கையிலே, நெஞ்சுக்கு நீதி கிடைக்கிறதுக்குப் பதிலா, பயமில்ல கிடைச்சிடும் போலிருக்குது? எங்களோட ஆசைக்கனவுப் பிரகாரம் எங்க பாபு எங்ககூட இங்கேயே தங்கிக்கிடுறத் துக்குச் சம்மதிக்கமாட்டானோ?'—பித்துக்கொண்ட பெற்ற மனம் இப்படியாகத்தானே ஏங்கிற்று.

வேளைகெட்ட வேளையிலே, சாயந்தரப் பலகாரம் தயாராகிவிட்ட தகவலை அறிவிக்க எடுபிடிச் செவகி வந்து சேர்ந்தாள்.

பாபுவுக்கு இப்போதே நாக்கில் நீர் சொட்ட ஆரம் பித்தது.

வந்த காரியம் முடிந்துவிடவே, சிறுமி அங்கிருந்து நகரவேண்டியவள் ஆனாள்.

''அக்கா...அக்கா,'' என்று கூப்பாடு போட்டான் சிறுவன். ''இன்னிக்கு என்ன பலகாரம் பண்ணியிருக்கி யாம்?'' என்று கேட்டான்.

''எல்லாம் ஒனக்குப் பிடிச்சதுதானாக்கும்,'' என்று 'பிகு' பண்ணினாள் சின்னப்பெண்.

''எனக்கு என்னென்னமோ பிடிக்கும்; இப்ப ரெடியாகி இருக்கிற டிஃபனைச் சொல்லப்படாதா, அக்கா?''

''சொல்றேன், சொல்றேன்; ஆமா, ஒனக்குப் பிடிக்கக் கூடிய பட்சணத்தோட பேரையெல்லாம் சொல்லு, பார்க்கலாம், பாபு!''

''அந்தப் பேர்களைச் சொன்னா, உன்னாலே எப்படிப் பார்க்கமுடியும்?—கேட்கத்தானே முடியும்?''

செவகியை வாரம் ஒருதரம் வசமாக மடக்காவிட்டால், பாபுவுக்குப் பொழுது போகாது.

அவள் 'இதோ, பார்த்துக்கொள்' என்கிற பாவனையில், எண்ணெய் வழிந்த முகாரவிந்தத்தில் அசடும் வழிய நின்றாள். பலகாரம் சுட்ட தேங்காய் எண்ணெயில்—விருந் தினர்களுக்கென்று பிரத்தியேகமாகக் கொள்முதல் செய் திருந்த தேங்காய் எண்ணெயில், முகமும் முகமும் வைத்த மாதிரி, ஒரு கை அள்ளி, அதைத் தன்னுடைய முகத்திலே

அள்ளித் தெளித்துக் கொண்டிருக்க மாட்டாள்தான்! காரணம் இது: அவளுக்குத் தேங்காய் எண்ணெய் கட்டோடு பிடிப்பது கிடையாது. வெட்கத்தோடு கண்களை உயர்த்தினாள்: ''பாபு, சொல்றேன்; கேட்டுக்கிடு. ஒனக்குப் பிடிச்ச ரவாகேசரியும் நந்தினி அக்காள் விரும்புகிற வெங்காயப் பஜ்ஜியும் செஞ்சிருக்குது; அப்பறம், மலையாள நாட்டு விருந்தாடிங்களுக்காக கீரைவடையும் காத்திருக்குது!'' பாபுவின் மறு கேலிப் பேச்சுக்குக் காத்திராமல், செவகி அங்கிருந்து நடையைத் தொடர்ந்தாள்.

பாபுவுக்குப் பாதங்கள் மண்ணிடை நிலைக்கவில்லை. ஓட்டமாக உள்ளே ஓடிப்போய், ரவா கேசரியை ஒருகை பார்த்துவிடவேண்டுமென்கிற ஆர்வம் மேலிட்டது. பெற்றோர்களைப் பரிதாபமாகப் பார்த்தான் ''கிளம்புங்க, போகலாம்,'' என்று தூண்டினான். ''டிஃபன் சாப்பிட்டானதும், உங்ககிட்டே ஒரு முக்கியமான விஷயத்தைச் சொல்லப் போறேன்,'' என்றும் முத்தாய்ப்பு வைத்தான்.

பாபு என்ன புதிர் போடுகிறான்?

ரஞ்சனிக்கு ஒன்றுமே புரியவில்லை.

ரஞ்சித்துக்கும் பிடிபடவில்லை.

அவர்கள் இருவரும் பாபுவை ஏக்கத்துடனும் உருக்கத்துடனும் பார்த்தார்கள்! பாபுவின் தரப்பிலிருந்து அந்த முக்கியமான விஷயத்தை அப்போதே வரவழைத்துத் தெரிந்துகொண்டு விடவேண்டுமென்ற ஆர்வத்துடிப்பு அவர்களது பார்வையில் பிரதிபலித்தது.

பாபு சாமான்யமான பிள்ளையா? அசையவில்லை; அசைந்துகொடுக்கவும் இல்லை. ''வாங்க, போவோம்,'' என்று கூறி, பெற்ற தாய் தந்தையைப் பற்றிப் பிடித்துக் கொண்டு முகப்பு மண்டபத்தைக் குறி வைத்து நடக்கத் தொடங்கினான்.

முகப்பு மண்டபத்தில் முல்லை மணம் கமழ்ந்தது.

அங்கே:

மகேஷ்—ரதி இணை, இணைந்தும் பிணைந்தும் சோபாவில் அமர்ந்திருந்தனர்.

"மகேஷ், எழுந்திருங்க; டிஃபன் சாப்பிடுவோம்," என்றார் ரஞ்சித்.

"ரதியும் வரணும்," என்றாள் ரஞ்சனி.

"நீங்க ரொம்ப முன்னாடியே எந்திருச்சிட்டீங்களா, மகேஷ்?"—ரஞ்சித் வினவினார்.

"ஆமாங்க, ரஞ்சித்; எழுந்து குளிச்சு, ட்ரஸ் மாற்றிக்கிட்டு நானும் இங்கனே வந்தேன்; சொல்லி வச்சமாதிரி, ரதியும் வந்திட்டா; நாங்க ரெண்டு பேருமே உங்களைத் தேடி அங்கே வரலாம்னுதான் யோசிச்சோம்; ஆனா, நீங்க ரெண்டுபேரும் என்னமோ முக்கியமாய்ப் பேசிக்கிட்டு இருந்தமாதிரி தோணுச்சு; அதுதான், நாங்க இங்கேயே உட்கார்ந்திட்டோம்," என்று விவரம் சொன்னார் மகேஷ்.

"ஓ. கே!"

முன்னே நடந்த ரஞ்சித்தைப் பின்னே தொடர்ந்தனர் மகேஷும் ரதியும்.

ரஞ்சனி எப்போதோ உள்ளே போய்விட்டாள்!

ஆமாம்; அதுதான் சிற்றுண்டிக் கூடம்.

சந்தனப் புகைச் சுருள்கள் பின்னமடைந்து விடாமல், சன்னமாக வளைந்தும் நெளிந்தும் பரவிக்கொண்டிருந்தன.

அங்கே, பாபுதான் முதன்முதலில் ஆஜர் கொடுத்திருந்தான். ரவா கேசரி இவனை என்ன பாடு படுத்துகிறது, பாருங்கள்!

பேஷ்!—நந்தினி, பாரதப் பண்பாட்டின் பவித்திர மான குண நலன்கள் நிதானமாய்க் குலுங்கிட, அமைதியாக வந்து அமைதியாக நின்றாள். நலஃகாலம், கம்மிஸ், மாக்ஸி அது இதுவென்று பூச்சாண்டி காட்டவில்லை; அதுவரை க்ஷேமம்; பாவாடை—தாவணியில் பவித்திரமான அழகு பான்மையுடன் பிரகாசிக்கிறது; நெற்றிக்கும் இட்டுக் கொண்டிருக்கிறாள். நாளை, திங்களன்று 'எகனுமிகஸ்' பரிட்சையாம்; வகுப்பில் நடப்பதுதான்; படித்திருப்பாள்; சாயங்காலம் ஆறு முப்பத்தைந்துக்குத் தொலைக்காட்சி அழைக்கத் தொடங்கிவிட்டால், அப்பால் எந்தப் பட்டணம் எப்படிக் கொள்ளை போனாலும்கூட, அவளை யாரும் லேசில் அழைத்துவிட முடியாது. சிவாஜியோ, எம்.ஜி.ஆரோ, இல்லை, ஷோபாவோ, ராதிகாவோ, யாரோ இன்னும் கொஞ்ச நாழிகையில் நடிக்கப் போகிறார்கள். வெள்ளிக்கிழமை 'ஒளியும் ஒலி'யில் ஷோபா ஒளி கூட்டி, ஒலி கூட்டியது, மனத்தைத் தொட வில்லையா?—சுசீலாவுக்கென்று அப்படியொரு தெய்வீகக் குரல்! ஒன்று: அந்தக் காலத்திய ஔரங்கசீப் இந்தக் காலத்தில் உயிரும் உடம்புமாக இருந்திருந்தால், அந்த மனிதரும் சுசீலாவின் பாட்டுக்களில் மனத்தைப் பறிகொடுக்காமல் தப்பித்துக் கொள்ளவே முடியாது.

வழக்கப்படி, மகேஷ் தன் அருகில் ரதியை அமர்த்திக் கொண்டார்.

ரஞ்சித் நாகரிகமான மெல்லிய களைப்புடன் அமர்ந்தார்.

ரஞ்சனி கேசரித் தட்டுடன் வந்தாள்.

உடன், செவகியும் வந்தாள்.

"நீயும் உட்கார்ந்து, மத்தியான்னம் மாதிரி, எங்களோடவே டிஃபன் சாப்பிடலாமே, ரஞ்?"

''உங்க ஆசைப்படி, ராத்திரி வேணும்னு, நான் உங்ககூட உட்கார்ந்து சாப்பிட்றேனுங்க; இப்பைக்கு என்னை விட்டுடுங்களே, அத்தான்!''

தப்பிதமாக நடந்து கொண்ட விவரம் அறியாப்பாலகி, செய்த தப்பை மறைத்திட, விதரணையுடன் முந்திக் கொண்டு தந்தையைப் பரிதாபமாய்க் கெஞ்சுவது உண்டு.

இந்த உதாரணம்தான், அச்சமயத்தில் ரஞ்சித்தின் சிந்தையில் பளிச்சிட்டது. ''சரி; தேவியின் இஷ்டம், என் பாக்கியம்!'' அவருக்கே ஆகிவந்த படாடோபச் சிரிப்பு: அச்சிரிப்பில் அவருக்கே உரியதான பட்டவர்த்தனமான அன்பு; அந்த அன்பிலே, அவருக்கே இயல்பாக அமைந்த ஆன்ம நேயம்!—மறுபடி, சிரிப்பொலி; காந்தி நாணயங்கள் குலுங்குமே, அப்படி.

கூடத்தில், களை கூடுகிறது.

பாபு ரோஷக்காரன்!...

தட்டோடு வந்த ரஞ்சனி எடுத்த எடுப்பில் தன் அருமைச் செல்வனுக்குத்தான் முதன் முதலில் கேசரியை வைத்தாள்.

பாபுவுக்கு நாக்கில் ஊறிக் கொண்டிருந்த நீர் இப்போது வாய்க்கு மடை மாறியது. மகேஷ் பக்கம் அவன் ஏறிட்டுக்கூடப் பார்க்கவில்லை. ''ரவாக் கேசரிக்கு மெட்ராஸ்லே ஆர்யபவன்தான் பிரசித்தம்; நாமகூட ஒருவாட்டி ஐலண்ட் க்ரவுண்டிலே சர்க்கஸ் பார்த்திட்டு அங்கே போய் எல்லாருமாய்ச் சாப்பிட்டிருக்கோம்; ஆனா, இப்ப அம்மா செஞ்சிருக்கிற இந்தக் கேசரி அதைவிடவும் அற்புதமாய் அமைஞ்சிருக்குதுங்க, அப்பா,'' என்று சான்றிதழ் வழங்கினான்; கையோடு இன்னொரு பிடி கேசரியையும் வாய்க்கு வழங்கினான்; 'நப்பு' கொட்டிக் கொண்டான்.

ரஞ்சித்துக்கு ஆனந்தம் பிடிபடவில்லை!—வாழ்க்கையென்றால், இதுதான் வாழ்க்கை; மனைவி மக்களுடன் மனமகிழ்ச்சியோடும் மனநிறைவோடும் இருப்பதற்கு உண்மையிலேயே கொடுத்துவைத்திருக்க வேண்டும்; இப்படிப்பட்ட பாக்கியம் எல்லோருக்கும் கிடைத்துவிடுகிறதா, என்ன?—கேசரியில் ஒரு துணுக்கு உள்ளே போனதும், குதூகலச் சிரிப்பு வெளியே வந்தது. "ரஞ்சனி, இங்கே வாயேன்; சீக்கிரம் ஓடிவாயேன்," என்று அலட்டினார். கொண்டவள் —உயிர் கொண்டவரின் ஆணைப் பிரகாரம் ஓடிவந்தவளின் சோற்றுக்கையில, அத்தனைபேர் முன்னிலையில், ஒரு முத்தம் கொடுத்தார். "நிஜமாவே ரொம்ப அற்புதமாய் கேசரியைக் கிண்டியிருக்கே," என்றார்.

நாணிக் கண் புதைக்கிறாள் ரஞ்சனி.

வெங்காயப் பஜ்ஜியில் தேங்காய் எண்ணெய் வாடை அமர்க்களப்படுகிறது.

"வெங்காயப் பஜ்ஜின்னா நேக்கு ரொம்பவும் பிடிக்கும், ரஞ்சனி அம்மா; ரொம்ப நன்னாச் செஞ்சுட்டேள்!" என்றாள் ரதி.

ரஞ்சனியின் கண்களில் விஷமப் புன்னகை ஒளியாடியது. சாடை காட்டிச் சிறுமியை அழைத்தாள். "உனக்கும் ஒரு பாராட்டுக் கிடைச்சிட்டுது; இந்தா," என்று சொல்லி அவளுக்குத் தன் பங்காக முத்தம் ஒன்றைத தந்தாள்—கையில்!

"பாபு!"

ஏறிட்டு விழித்தான் பாபு.

யார் அழைப்பதாம்?

மகேஷா?

இல்லை.

பின்னே?

ஓ!—ரதி அம்மாவா?

' பாபு. பஜ்ஜி ரொம்ப உச்ரமா இருக்கில்ல?'' என்று அபிப்பிராயம் கேட்டாள் கேரளப் பூங்குயில்.

''ஓ!'' என்று ஒய்யாரமாக விடைமொழிந்தான் பாபு!

ஒரு சிதம்பர ரகசியம்!—பாபு இன்னமும் வெங்காயப் பஜ்ஜியைத் தொடவே இல்லே!

ரஞ்சித்துக்கும் ரஞ்சனிக்கும் சிரிப்பைத் தடுத்துக் கட்டுப்படுத்த முடியாமலே போய்விட்டது.

ரதியின் சந்திரபிம்ப வதனம், மேகத்துண்டத்திடம் பலாத்காரமாகச் சிக்கிக் கொண்ட பிறை நிலவுக் கீற்றை நினைவூட்டும் பாங்கில் சிறுத்துக் கறுத்தது. ''பாபுவுக்கு என்னேயும் பிடிக்கல்லே போலிருக்கு!''

''நல்லவங்களை நேக்குக் கட்டாயம் பிடிக்குமே? ஞான் இப்போழ் பஜ்ஜி கழிக்காம்!'' பாபு இப்போதுதான் பஜ்ஜியைத் தொட்டான்; நிஜார்ப் பைக்குள்ளே பள்ளி கொண்டிருந்த அந்தத் துண்டுக் கடிதத்தை மறுபடி தொட்டுச் சரி பார்த்துக் கொள்ளவும் மறக்கவில்லே. படு சுட்டி மட்டும் அல்ல; படு சமர்த்துங்கூட!

பொங்கு விரி காவிரியாக வேர்வை பெருகுகிறது.

இந்தப் பேரதிசயத்துக்கு ஆளான புள்ளி!—சரிதான்; மகேஷ்தான்! பாவம், அசந்து மறந்துகூட அவர் பார்வை பாபுவின் பக்கமே திரும்பவில்லே!

ரஞ்சனியை ரஞ்சித்தும், ரஞ்சித்தை ரஞ்சனியுமாக ஒரு கேள்விக்குறியோடு பார்த்துக் கொண்டார்கள்: பாபுப் பயல் என்ன புதிர் போடப் போகிறுனும்?—பகவானே!...

உடலுக்கு இதமளிக்க முயற்சி செய்யும் செயற்கைக் காற்று உள்ளத்துக்கு—உள்ளங்களுக்கு இயற்கையாக இதமளிக்கத் தவறிவிடுவதும நடைமுறையில உண்டு.

செவகிக் குட்டியோடு காப்பி தீர்ந்தது: சுபம்!

தாம்பூலத் தாம்பாளம் வந்தது.

செட்டிநாட்டு உருப்படி.

கோட்டையூர் மீ. சுப., திருமண நாளின்போது பரிசளித்தது அது.

புது மெருகு மாறவில்லை.

ரஞ்சித்துக்கும் சமயங்களில் இப்படி நாணம் வருவது இயல்பு!— மணவறையில, மாலையும் கழுத்துமாக, மங்களமும் மாங்கல்யமுமாகத் தம் அருகில் தொடையோடு தொடை சேர்ந்து, தோளோடு தோள் சேர்ந்து, வாத்ஸல்யமான சல்லாபக் குதூகலத்துடன் வீற்றிருக்கும் ரஞ்சனி என்னமாய் ஒரக்கண்ணுல் பார்த்து எவ்வளவு அழகாகப் புன்னகை செய்கிருள்!—தன்னுணர்வுகொண்டு, உள்ளம் கொண்டவளைப் பார்த்தபோதும் அந்த நாணத்தைக் காட்டினுல், 'ரஞ்' நையாண்டி பண்ணமாட்டாளாக்கும! ஆனுலும், அவளும் அர்த்தப்புஷ்டியோடு பதிலுக்குப் புன்னகை செய்தது அவரை என்னவோ செய்திருக்கவேண்டும். 'எச்எம்டி' யில் பத்துமணியைப் பொருததி வைத்துப் பார்த்தபோது, அவர் வெளியேற்றிய பெருமூச்சு ராத்திரி வரையிலும்கூட பெரிதாக நீண்டு விடும் போலிருந்தது இருந்திருந்தாற்போலலே, மனக் கடலில் ஆறுதல் அலையொன்று அடித்தது. மத்தியானம் ஒய்வுப் பொழுது நல்ல பொழுதாகச் சிருங்காரமாகக் கழிந்தது!—பிறந்த மேனியாகப் போதத்தையும் போதை யையும் ரசனையோடு தரிசிப்பதென்பது அபூர்வமான நடப்புத்தான்!

''இந்தாங்க, பிடியுங்க, அத்தான்!''

''என்ன, சாபமா?'' என்று சாணக்கியத் தந்திரத்தோடு கேட்டுக்கொண்டே, தமது உயிரினும் மேன்மை தங்கிய ஆருயிர் ரஞ்சனியின் தளிர்க்கரங்களைப் பிடித்துக்கொண்டார் ரஞ்சித்!

''ஊஸ்...என்னுங்க அத்தான் இப்படி......? அந்நியமானவங்கஎல்லாம இருக்கிறது மறந்துபோச்சுதா?'' காதும காதும் வைத்தவிதமாகச் செல்லமாகக் கோபப் பட்டுக் கைகளையும் விடுவித்துக்கொண்ட பெருமை திருமதி ரஞ்சித்தைச் சார்ந்தது; சேர்ந்தது

மகேஷ் குனிந்த தலையை இன்னமும்கூட நிமிர்த்த வில்லை.

ஜாடை தெரிந்துகொள்வதில் ரதி கெட்டி. ஆகவே தான், சற்றுமுன்னம் வந்து சேர்ந்த 'மெயில்', 'மாலை முரசு' பத்திரங்களில் மூழ்கிவிட்டிருந்தாள்.

பாங்கரின் அன்புக்கணக்கில் தாம்பூலமும் ஆதாயப் புள்ளியில் சேர்க்கப்படுகிறது.

''மகேஷ், பீடா எடுத்துக்கிடுங்க; உங்களுக்குப் பிடித்தமான ஸ்பெஷல் பீடாதானுங்க!'' என்றாள் ரஞ்சனி. ''நீங்களும் ஒண்ணு எடுங்க!'' என்பதாக ரதிதேவிக்கும் குறிப்புக் கொடுத்தாள்.

''ரஞ், மகேஷுக்கும் மகேஷோட ரதிக்கும் உன் கையாலேயே தாம்பூலம் கொடுத்திடேன்!'' என்று ஆலோசனை வழங்கினார் ரஞ்சித்.

ரஞ்சனி நூறு சதவீத அளவிலான எச்சரிக்கையுடன், இட்ட பணியைத் தட்டாமல் நிறைவேற்றினாள்.

நந்தினி விலாசம் உரிமையாளர்: 'சபாஷ்!'

''மிஸ்டர்...மகேஷ்!...''

இடைவெளி கொடுத்து, எதிரொலி கொடுத்த அழைப்புக் குரல் மகேஷைத் தூக்கிவாரிப் போட்டது. ரஞ்சித் தன்னை 'மிஸ்டர்' போட்டு இங்கிலீஷ்காரர்மாதிரி அழைக்கும் சமயத்திலெல்லாம் அவருக்கு நுரைஈரல் நுங்கும் நுரையுமாக ஆகிவிடுவது புதிதான அனுபவம் அன்று. ''சொல்லுங்க, மிஸ்டர் ரஞ்..சித்,'' என்று கேட்டுக்கொண்டார்.

மகேஷ் பேசிய பேச்சில் தொனித்த போலித்தனம் காரணமாக, 'மிஸ்டர்' மரியாதையை அவரிடமிருந்து ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை ரஞ்சித். எனவே, அவர் குரலில் இப்போது கடுமை சற்றே கூடுதலாக ஒலித்தது. ''நீங்க எங்க பாபுவோடே பேசவேணும்னு ஆசைப் பட்டீங்களே?—இப்போ வேணும்னு பேசுங்களேன்: பாபு வோட ரூமுக்கு அழைச்சுக்கிணு போய், அவனோடு தனிமையிலே மனம்விட்டும் பேசலாமே, மிஸ்டர் மகேஷ்?'' என்றார்.

''............''

''கேட்கிறேனே?''

''நான் பேசல்லீங்க, மிஸ்டர் ரஞ்சித்!''

''ஏன்?''

''பாபுவோடே நான் பேச விரும்பல்லேங்க!''

அடிநாளிலே, பசிபிக் மகாசமுத்திரத்திலே, அணுப் பரிசோதிப்பின்போது, அணுக்குண்டுகள் இவ்வாறுதான் வெடித்திருக்குமா?

''ஓஹோ!... அப்படியா?''

ரஞ்சித் திடுக்கிட்டார்; திகைத்தார்; தவித்தார்; தடுமாறினார். எத்தனை நிட்டூரமாகத் தீர்ப்புக் கொடுத்து விட்டார் மகேஷ்!— 'நான பாபுவோட பேச விரும்பல் லேங்க!' மனம் கலங்க, கண்கள் கலங்கின. இந்நிலையிலே, உயிரைக் குடித்து ஏப்பம்விடக்கூடியதான அந்த அந்தி யாலேச் சோக நாடகம்—ஒரே களமும் ஒரே அங்கமும் கொண்டதாக விளங்கிய அந்தத் துயரக்கூத்து அவரது இதயமேடையில் மறுபடி நிழலாடாமல் தப்ப முடியாமலும் போய்விட்டது: கசிந்து உருகிய சுடுநீர்ப்படலம், அந்தச் சோக நாளின் தேதிப்படத்தைக் காண்பிக்கவும் தவறிவிட வில்லை. அடித்து வைக்கப்பட்ட கருங்கற் சிலைம திரி, 'கம்' மென்று உட்கார்ந்திருந்த மகேஷின் போக்கு அவரைச் சாறு பிழியவே, "மிஸ்டர் மகேஷ்! எந்தக் கோட்டையைப் பிடிக்க ப்ளான் போடுறீங்க? பிடிச்ச கோட்டை போதாதா?" என்று கேட்டுவிட்டார்

கப்சிப்!

வெற்றிலைத் தட்டுடன் உள்ளே சென்ற ரஞ்சனி, இரவுச் சாப்பாடுபற்றி விவரம் அறிவதற்காகத் திரும்பி ஒரு நிமிஷம்கூட ஆகியிருக்கவில்லை; சுடர்மணித் தீபமாக அல்லாடித் தள்ளாடினாள்.

"மதியத்திலே நீங்க எங்க பாபு கையிலே என்னவோ பேசவேணும்னு நினைச்சீங்க; ஆனா, இப்போ உங்க மனசான மனசு ஏனோ மாறிப்போச்சு! அது போகட்டும்!—பாபு கிட்டே ரகசியமாக அப்படி என்னதான் பேச நினைச்சீங் களாம்? அதையாச்சும் சொல்லலாமா, மிஸ்டர் மகேஷ்?"

"அது என் சொந்த விஷயம், ரஞ்சித், ஸாரே!" என்று மிக அமர்த்தலாகவும் வெகு கண்டிப்பாகவும் பதில் கூறினார் மகேஷ்!—ரஞ்சனி—ரஞ்சித் குடும்பத்தின் உயிர் நண்பரான மிஸ்டர் மகேஷ்!

''பேஷ், பேஷ்! நல்லாய்ச் சொன்னீங்க; உண்மையை உண்மையாய்ச் சொல்லிட்டீங்க!...மிஸ்டர் மகேஷ்!— உங்களை எனக்குத் தெரியாதா?...''

ரஞ்சித் ஆத்திரம் தாங்காமல், சத்தம் போட்டுப் பேசினார்; நெஞ்சில் வீரிட்டுப் பீறிட்ட வெஞ்சினம் பற்களில் நெரிபட்டு நிர்த்துளிப்பட்டது; அகன்று விரிந்த கண்கள் மறுபடிச் சிவப்பேறிச் சிவந்தன; கண்ணின் கருமணிகள் கண்ணீரில் பளபளத்தன. சொந்த விஷயம்!—எது சொந்த விஷயம்? என் பாபுவோடே—எங்க பாபுவோடே பேசறதும் பேசாததும் உன் சொந்த விஷயமா?—'அட, பாவி!...' வேர்வை, முத்துக் குளித்தது.

ரஞ்சித்தின் கோபம் மகேஷுக்குத் தீரத் தெளியத் தெரியும்; ஆகவே, அவர் மறுபேச்சாடத் துணியவில்லை; தலைகுனிந்தார்: 'ஐயய்யோ...பாபு!...சோட்டானிக்கரைப் பகவதி அம்மே!' ஈரவிழிகள் என்ன காவியம் படிக்கின்றன வாம்?

ரஞ்சனி—ரஞ்சித்தின் மனையாட்டி—பாபுவின் அன்னை தவியாய்த் தவிக்கின்றாள்; தண்ணீராய் உருகுகின்றாள்!...

ரதி அகம் சிணுங்கினாள்.

நந்தினிக்குக் காப்பிச் சுவைப்பு மாறிவிட்டது; அல்ல, மாற்றப்பட்டது.

இளங்கன்று பயம் அறிவதில்லை!—ஆவேசமும் ஆத்திரமுமாக மகேஷை வெறித்தும் முறைத்தும் பார்த்தான் பாபு;

மகேஷ் பதுங்கினார்; ஆனால், அவர் புலியல்லவே!—அவர் மனிதர்!—ஆகவே, என்னவோ ஓர் உறுத்தல் அச்சப்படுத்தவே, அச்சத்தில் விளைந்த ஆற்றாமையுடன் இருக்கையினின்றும் மெதுவாக எழுந்தார்; நெற்றித் திட்டில் ஒற்றிக் கிடந்த வேர்வை, இப்போது சிறுகச்

சிறுக உலர ஆரம்பித்திருந்தது. சந்தனப் பிறைக் கீற்று இப்போது துலாம்பரமாகவே தெரிகிறது.

பாபு இளங்கன்றுகத் துள்ளி எழுந்தான்; அவன் பயம் அறிந்தவன்தான்; ஆனாலும், இப்போது அவன பயப்பட வில்லை!— நான் ஏன் பயப்படவேண்டும்? மகேஷ் எழுந்து நின்ற எதிர்த் திசையை நோக்கி நடந்தான். "மகேஷ் ஸாரே! என்கிட்டே நீங்க பேசுறதும் பேச விரும்பாததும உங்க சொந்த விஷயம்னு சொன்னீங்க; ரொம்ப சரி· ஆனா, நீங்க என் கையிலே என்னவோ பேச நினைச்சீங்க தானே?— உங்களோட அந்த ஒரு எண்ணம் என்னையும் சம்பந்தப்படுத்தாதுங்களா? அப்படியானா, அந்தச் சம்பந் தத்தை வச்சுப் பார்த்தாக, அது என்னோட சொந்த விஷயமாகவும் ஆகிடாதுங்களா?— ஆகையினாலேதான், இப்ப நானே உங்களை வலியத் தேடி வந்து நிற்கிறேன்; சொல்லுங்க, ஸாரே!—அப்படி என்ன பெரிய விஷயத்தை நீங்க என்கிட்டே பேச நினைச்சிருந்தீங்க?— சொல்லுங்க. மகேஷ், சொல்லுங்க!" அவன் பேச்சில் அதிகாரம் மேலோங்கியிருந்தது.

ரதியின் சந்திரப் பிறை நெற்றியில் பளிச்சிட்ட அம்மன் குங்குமத்தில் கேள்விக் குறியும் அதிசயக் குறியும் கொக்கி இட்டுப் பின்னியும் மின்னியும் பளிச்சிட்டன. அவளது விழி நோக்கில், மகேஷ் ரங்கராட்டினம் சுற்றியிருக்க வேண்டும்.

ஆமாம்; மகேஷ் ரங்கராட்டினம்தான் சுற்றிக் கொண் டிருந்தார்!— 'பாபு!...என் அருமைப் பாபு...அன்புப் பாபு!. என்டே பாபு!... நீ என்னை இப்படிச் சோதிக்கலாமா? இது தகுமா?—தர்மமா?'— ஏதோ ஒரு தீர்மானத்துக்கு வந்துவிட்டது போலவும், அப்படிப்பட்டதொரு முடிவுக்கு வருவதைத் தவிர வேறு மார்க்கமே கிடையாது என்கிற ஒரு தவிர்க்க முடியாத நிர்ப்பந்தத்துக்கு ஆளானவர் போலவும்—ஆளாக்கப்பட்டவர் போலவும் தோன்றிய—

தோற்றமளித்த மகேஷ், பையப் பைய விழிகளை உயர்த்திப் பின்பு, கண்களையும் உயர்த்திப் பாபுவை இப்போது நேருக்கு நேராகப் பார்த்தார்: பார்வையிட்டார்!— "பாபு!" என்று கம்பீரமாகக் குரல் கொடுத்தார்.

பாபுவும் ஏறிட்டு நிமிர்ந்து, தலையை நிமிர்த்தினன்!

ரஞ்சனி தீக்கணப்பின் நடுவில் அகப்பட்டுச் சிக்கிக் கொண்டவளாகத் துடித்தாள்; தடுமாறினாள்; தத்தளித்தாள்; அன்றைக்கு. ஸ்ரீராமபிரானின் சோதனைக்கு ஆளாகி அக்கினிப் பரீட்சைக்குத் தயாராக நின்ற 'புனையா ஓவியம்' இன்று, இப்போது அவள் நெஞ்சிலும் நினைவிலும் புனைந்த ஓவியமாகி நிழலாடிச் சிரித்திருக்க வேண்டும்; விதியாகவே வினைசூழச் சிரித்திருக்கவேண்டும்!...

வெறி பிடித்தவராகவும் பைத்தியம் பிடித்தவராகவும் நெஞ்சைத் தடவித் தடவி, இருதயத்தைக் தேடிக் கண்டு பிடித்துப் பிசைந்து கொண்டிருந்தார் ரஞ்சனியின் உயிர்த் துணைவர் ரஞ்சித்!— பாபுவின் அன்புத் தந்தை ரஞ்சித்! உயிர் மானம் உயிர்க் கழுவில் ஊசலாடிக்கொண்டிருந்தது.

இப்போது:

பாபு நடந்தான்.

பாபு, விதியாக நடந்தான்.

மகேஷ் நின்ற இடத்தை நோக்கி நடந்தான் பாபு.

பாபுதான் விதியா?

விதிதான் பாபுவா?

"ஊம்; சொல்லுங்க, மகேஷ் ஸாரே!" என்றான் பாபு. களங்கம் இல்லாத அவனுடைய கண்களிலே, ஆத்திரம் இருந்தது. பால் வழிந்த பிஞ்சு முகத்திறகுக் களங்கத்தைக் கற்பிப்பது போன்று அவனது இடது

கன்னத்தில் அமைந்திருந்த அந்தக் கறுப்பு நிற மரு இப்போது வினையாகச் சிரித்தது.

மகேஷ், ''பாபு!...'' என்று மறுபடி விளித்தார்; விளித்தவர், ஏனே, மறு விநாடி மௌனம் சாதித்தார்; தனது இடது கன்னத்தில் இருந்த பொல்லாத அந்தக் கறுப்பு வடுவை — அசிங்கமாகக் காட்சியளித்த அந்தக் கறுப்பு மருவை நடுங்கும் விரல்களால் தடவினர்; தடவிக் கொண்டிருந்தார்.

பாபுவுக்குச் 'சுரீர்' என்னும் விநோதமான ஓர் உணர்வு நெஞ்சம் முழுவதிலும் பரவத் தொடங்கியது. 'என்ன அதிசயம் இது?—மகேஷ் ஸாரோட இடது கன்னத்திலே இருக்கிற கறுப்பு மரு—வடு மாதிரியே, என்னோட இடது கன்னத்திலேயும் ஒரு கறுப்பு மரு — வடு இருக்குதே? என்ன வேடிக்கை இது?'— பிஞ்சு மனம் ஏனே தவிக்கிறது!— எப்படியோ தவிக்கிறது! அவனையும் மீறி, அவனுடைய நிர்மலமான கண்கள் கலங்கவும் தொடங்குகின்றன.

''பாபு, நான் உன் மேலே வச்சிருக்கிற பரிசுத்தமான அன்பையும் துல்லிதமான பாசத்தையும் ஆண்டவன் அறிவான்; ஆனா, நீ அறியமாட்டே!— நான் உன்கிட்டே பிரியம் கொண்டிருக்கிறது மாதிரியே, நீயும் என்கிட்டே பிரியம் கொள்ளவேணும் என்கிறது என் ஆசை; இந்தப் புனிதமான ஆசை அநியாயமாய் நிராசையாக ஆகிடப் படாதேன்னுதான், நான் உன் மனசான மனசை மாற்றி, என் பக்கம் நல்லபடியாகத் திருப்பவும் நினைச்சேன்; அதனுலேதான், நான் உன்னைத் தனிமையிலே கண்டு உன் கிட்டே பேசவும் நினைச்சேன்!... கதை இவ்வளவுதான், பாபு!'' உணர்ச்சி வசப்பட்ட நிலையில் வார்த்தைகளைக் கொட்டி அளந்து, டக்கென்று பேச்சை நிறுத்தி விட்டார் மகேஷ். கழுத்துப் புறத்தில் வழிந்த வேர்வை, வழிந்து கொண்டே இருக்கிறது; வேர்வையில் விழிநீரும் கலக்கிறது.

அவரது பார்வை முதலில் ரஞ்சனி மீதும், பிறகு, ரஞ்சித் பக்கமும் சாய்ந்தது: 'ஐயப்பா! என்னைச் சோதிச்சிட்டாரே!... ஞான் நிரபராதியாகும்!.....' நெஞ்சத்தின் நெஞ்சம் பாவத்தின் மன்னிப்பில் உருகியது; உருக்குலைந்தது: "பாபு...பாபு!'

ரஞ்சனியின் உயிர் இயங்கத் தொடங்கிகிறது.

ரஞ்சித் அமைதியாகப் புன்னகை செய்கிறார்.

'ஓமேகா' சிட்டுக் குருவி ஆறு முறை, முறை வைத்துக் கூவியது.

அந்தி மயங்குகிறது; மயங்கிக் கொண்டிருக்கிறது.

பாபு, மீண்டும் கூப்பிட்டான்: ''மகேஷ் ஸார்!''

''சொல்லு, பாபு!''

''நான் ஒண்ணும் சொல்லப் போறதில்லே; கேட்கப் போறேன்!''

''ஊம், கேள்!''

''நீங்க என்மேலே இவ்வளவு அன்பும் பாசமும் வச்சிருக்கிறதுக்குக் காரணம் என்னுங்க, மகேஷ்? உங்களுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம், மகேஷ் ஸாரே? ஊம், சொல்லுங்க!'' என்று ஆணையிட்டான் பிஞ்சுப் பாபுப் பயல்.

ரஞ்சனிக்குத் 'திக்'கென்றது: ''கிருஷ்ணபரமாத்வே!''

ரஞ்சித் மலைத்தார்: 'கண்ணபிரானே!'

மகேஷ் விம்மினார்: ''நான் மனுஷன்!— அதுதான் உனக்கும் எனக்கும் உண்டான சம்பந்தம்!...''

''ஓஹோ?...அவ்வளவேதானே?...'' என்று ஓங்காரமிட்டுச் சிரித்தான் பாபு!—நிஜார்ப் பைக் கடிதமும் அவனோடு சேர்ந்துகொண்டு சிரித்திருக்கலாம்!

மகேஷ் திடுக்கிட்டார்.

"உங்களை எனக்குப் பிடிக்கல்லேங்க, மகேஷ்! ஆகச்சே, நீங்க என்னை மறந்திடுங்க, மகேஷ் ஸாரே!" என்று தீர்ப்பு வழங்கினன் மணிப்பயல் பாபு!...

பாபுதான் விதியோ?

விதிதான் பாபுவோ?

"ஐயையோ, பாபுவே!" வீரிட்டு அலறினர் மகேஷ்.

பாபு இப்போது அன்னை ரஞ்சனியின் அன்பான மடியில் வந்து விழுந்தான். அவனுடைய நிர்மலமான அழகு விழிகளினின்றும் கண்ணீர் முத்தங்கள் சிந்திச் சிதறிக் கொண்டிருக்கின்றன. அவனுடைய நாசித் துவாரங்கள் அம்மா ரஞ்சனியின் நாசித் துவாரங்களைப் போன்றே அச்சுக் குலையாமல் அதிக அழகுடனும் மிகுந்த கவர்ச்சியுடனும் புடைத்துப் புடைத்து அடங்குகின்றன.

"பாபு! பாபு!" என்று குரல் தழதழக்க விளித்த ரஞ்சனி, தன் அருமைப் பிள்ளையாண்டானுக்கு இரண்டு கன்னங்களிலும் மாறி மாறி மாற்றி மாற்றி முத்தம் கொடுத்தாள். இடது கன்னத்தின் மருவில் பதிந்த முத்தத்தில், ஒரு சொட்டுக் கண்ணீரும் பதிந்தது!

பாபு கெட்ட கனவு கண்டவன் போலவே, வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தான்.

ரஞ்சனி பதறினள்.

ரஞ்சித் தவித்தார்.

பாபு, அந்தக் கூடத்தின் கீழ்த்திசைச் சுவரில் பளிச்சிட்ட அந்தச் சித்திரத்தை—மணியம் வரைந்த அந்தச் சித்திரத்தையே வைத்த விழி வாங்காமல் பார்த்தான்; அப்படிப்

பார்த்தான்; ''அம்மா, அம்மா! அது என்ன படம் அம்மா?'' என்று வினவினான்.

''ஓ, அதுவா? உனக்குத் தெரியாதா பாபு?— அதுதான் பரசுராமர் படம்!''

''ஓஹோ! அப்பாவோட ஆணைக்கு கீழ்ப்படிஞ்சு, தப்புப் பண்ணிட்ட தாயையே வெட்டிப் போட்ட அந்தப் பரசு ராமரா?— எங்களுக்குக்கூட பரசுராமர் கதை இந்த வருஷம் பாடத்திலே வந்திருக்குது, அம்மா!"

''அப்படியா?''

ரஞ்சனியின் சமர்த்து யாருக்கு வரமுடியும்?

''அம்மான்னு அம்மாதான்! என் அம்மாவுக்கு எல்லாம் தெரியுது!'' என்று ஆனந்தப் பரவசத்துடன் பெருமை அடைந்த பாபு, அந்தப் பெருமையை நிதர்சனமாகப் பிரகடனப்படுத்தும் பாவனையிலே, தன் அன்னைக்கு— அன்பும் பாசமும் கொண்ட தன் அன்னைக்குத் தன் பங்கிற் காகவும் முத்தங்களை வழங்கினான்; வாரி வாரி முத்தங்களை வழங்கினான்.

''பாபு!'' ரஞ்சனி விம்முகிறாள்!

காலடி ஓசை கேட்கிறது.

ரஞ்சித் ஏறிட்டு விழித்தார்.

''நாங்க புறப்பட்றோமுங்க, மிஸ்டர் ரஞ்சித்!'' என்றார் மகேஷ்—ரதி சகிதம் நின்ற மகேஷ்.

''எங்கே புறப்பட்டுட்டீங்க?''

''ரதியோட சினிமா ஸ்டார் சிநேகிதி பங்களாவுக்கு!— அங்கே போயிட்டு, அப்படியே ராத்திரிக்கே நாடு போக வேணுமுங்க!'' என்றார் மகேஷ்.

ரஞ்சித்துக்கு அதிர்ச்சி ஏற்பட்டது; மறு நொடியில், அவரது இதழ்களில் புன்னகை விளையாடத் தொடங்கியது: ''வீடு தேடி வந்த விருந்தாடிங்க, ஒரு ராத்திரி கூட இங்கே எங்களோடே தங்காமல் போனால், நல்லா இருக்குங்களா, மகேஷ்?... ஊகூம்; நான் உங்களை லேசிலே விட்டுட மாட்டேன்; என்னோடே ரஞ்சனியும் உங்களை விட்டுப்புட மாட்டாள்! நான் சொல்றதைக் கேளுங்க: இப்ப நாமஃ அதாகப்பட்டது, நீங்க, உங்க ரதி, நான், என் ரஞ்சனி, நம்ப பாபு...அப்புறம் எங்க நந்தினிக் குட்டி எல்லோரும் கொஞ்ச நேரம் டி. வி. பார்க்கிறோம்; ரேடியோ கேட்கிறோம்; பின்னே எல்லோரும் 'டாஜ்' போய் ஒரு ஸ்பெஷல் காஃபி சாப்பிடறோம்; பின்னே, நேரே மெரினா போறோம்; அப்புறம் நாம் பங்களாவுக்குத் திரும்புறோம்; விருந்து சாப்பிட்றோம்; ராத்திரி இங்கேயே படுத்துத் தூங்குறோம்; நாளைக்கு நீங்க கொச்சின் எக்ஸ்பிரஸிலே நாடு போறீங்க!' என்று ரஞ்சித் தமது திட்டத்தைத் திட்டவட்டமாக வெளியிட்டார். அவரது சொற்களில் அவருக்கே ஆகிவந்த அன்பு பண்புடன் வெளிப்படுத்தப்பட்டது. உதட்டுச் சிரிப்பில் தற்போது சிலிர்ப்பும் கூடியது; கூடிவந்தது. இடையிலே, ஒரு சலசலப்பு நிகழ்ந்துவிட்டது!— ஏதோ ஒரு சலனம்; சலனத்தின் ஆட்டபாட்டம்!—அன்புப் பரிமாறலில் இம் மாதிரியான சலசலப்பு ஏற்படும்போது, அந்த அன்பிற்குப் புதியதான அரும் பதவுரை கிட்டுமோ, என்னவோ?— தலையை உயர்த்தி மகேஷை நோக்கினார் அவர்.

ஆனால்:

மகேஷ் வழக்கம் போலவே இப்போதும் மௌனப் பிண்டமாகக் காட்சி கொடுத்தார். ரதியைப் பார்த்து, அவளது இணக்கமான முகக் குறிப்பை உணர்ந்து கொண்டவர் போல் ரஞ்சித்தை நோக்கினார்.

''ஊம், 'சரி' சொல்லிடுங்க, மகேஷ்!'' என்று கேட்டுக் கொண்டாள் ரஞ்சனி.

''சரி!...'' என்று விடை கொடுத்தார்; விடை சொன்னார்!— சொன்னவர் சாட்சாத் மிஸ்டர் மகேஷ்தான். ரஞ்சனியின் சொல் அவருக்கு 'இலட்சுமணன் கோடு' அல்லவா? ஏன், ரஞ்சித்தின் பேச்சையும் அவர் என்றைக் குமே தட்டியது கிடையாதுதான்!...

ரஞ்சனி வசீகரமான தன் உதடுகளில் புன்னகை அணிகிறாள். ஓர விழிப் பார்வையால் மகேசை அளந்த போது, மாரகச் சேலை சற்று நழுவி விட்டது. சுயப் பிரக்ஞை நழுவியதால் வந்த வினை!

ரஞ்சித் ஓடிப்போய், மனைவியின் சரிந்த புடவையைச் சரி செய்தார். பரவாயில்லே!...என்று தட்டிக் கொடுத்தார்.

''சரிதானே, ரஞ்சித்?''—மகேஷ்.

நாளைக்கு மதியத்திலாவது முதல்வரைக் கோட்டையில் போய்ச் சந்தித்துவிட வேண்டும்!— ''ஆல் ரைட்!...ஓ.கே!'' என்று ஆமோதித்தார் திருவாளர் ரஞ்சித். மறுகணம்! அவர் விடுகதைச் சிரிப்பொன்றை எதிரொலிக்கச் செய்யவும் மறந்துவிடவில்லை!...

# அந்தி நிலாச் சதுரங்கம்

## 7: பாபுவின் தெய்வ அவதாரம்!

தமிழ்ச் சாதி —சமுதாயத்தின் பண்பாடு தழுவிய நெறிமுறைகளுக்கும், மண் வாழ்க்கையின் முன் —பின் கதையின் பாற்பட்ட காரண காரியங்களுக்கும் தக்கபடி, மென்மையான நல் உணர்ச்சிகளுக்கு எளிதிலே ஆளாகி விடுகின்ற மனப்பாங்கும் மனப்போக்கும் கொண்ட பாங்கர் ரஞ்சித், நல் இணக்கமான 'சரி' என்னும் ஒப்புதலை மகேஷ் சொல்லக் கேட்ட மாத்திரத்தில், மண்ணிலிருந்து விண்ணுக்கும், விண்ணிலிருந்து மண்ணுக்குமாகப் பறந்தார்; பறந்துகொண்டிருந்தார்.

அந்தி மயங்குகிறது. மயக்குகிறது!

அசோக மரங்களைக் கட்டி அணைத்த பூங்காற்று, கட்டிளங்காளையின் புது ரத்தத்தை நினைவூட்டுவது

போன்று, இளமைக் கோலம் தாங்கிச் சிருங்கார ரசம் குலுங்கத் தவழ்ந்து விளையாடிக்கொண்டிருந்தது.

குறளி வித்தை செய்து தங்கள் வாயை யாரோ அடைத்துவிட்டமாதிரி, மகேஷூம் ரதியும் வாயைத் திறக்கமாட்டாமல் அப்படியே நின்றுகொண்டிருந்தார்கள்.

ரஞ்சித்தின் பார்வை இப்போதுதான் குமாரி ரதியிடமிருந்து திரும்பியது! செயற்கையின் கண்படாமலே, இயற்கையிலேயே எத்தனை அழகோடு பொலிகிறாள் இந்த ரதிப்பெண்!—வசீகரமான வடிவ அமைப்பு இம் மாதிரிப் பெண்களிடம் கூடியும் கைகூடியும் சரண் அடைவதற்கும் கேரளத்தின் உன்னதமான மண்வளம்தான் மூலாதாரம் ஆகியிருக்கவேண்டும்.

மென்மையான கனைப்புச் சத்தம் மென்மையாக ஒலித்தது.

ரஞ்சித் திசைமாறித் திசை மறுகினார்.

ஓ!...ரஞ்...தான்!

இளமை திரும்பும்போது, அது ஊஞ்சலாடாமல், வெறுமனே கால் கடுக்க நிற்பதில்லை.

"என்ன, ரஞ்சனி?" என்று கேட்டார் பாங்கர்; சொற்களில் தடுமாற்றம் தெரியவில்லை. குற்ற உணர்வு தெரிந்தது. ஓரக்கண்ணில் ரதியை ரசித்ததை யூகித்திருப்பாளோ ரஞ்சனி? "அப்புறம் ப்ரோக்ராம் என்ன?" என்று தூண்டினார்.

"என்னுங்க அத்தான், இப்படிக் கேட்கிறீங்க? நீங்க சொன்னதுதான் ப்ரோக்ராம்!—முதலிலே டி. வி; அப்பறம், ரேடியோ; பின்னே, டாஜ்; பிறகு, பீச்...கடைசியாய்ச் சாப்பாடு!"

''சாப்பாடு முடிஞ்சதும்...?''

''சாப்பாடு முடிஞ்சதும்.......''

''ஊம்!''

''வேணும்னு, ஏதாகிலும் ஃபிலிம் போகலாம்!''

''ஃபிலிமுக்குப் போகாட்டி?''

''போகாட்டி, ஹாயாக எல்லாரும் தூக்கம் போட வேண்டியதுதானுங்க, அத்தான்!''

''நடுவிலே ஒரு ஐய்ட்டம் விட்டுப் போச்சுதே, ரஞ்?''

''அத்தான், நீங்க வாயைத் திறந்தாலே, எனக்குத் திகீர்னு ஆயிடுது; நீங்க விடுகதை போடுறதைப்பத்தி எனக்கு யாதொரு ஆட்சேபணையும் கிடையாது; ஆனா, போடுற புதிருக்கு உண்டான விடையையும் சொல்லிடுங்க; உங்களுக்கு ரொம்பப் புண்ணியம் கிடைச்சிடும்; ஏன், தெரியுங்களா? அற்பமான, சின்னச் சின்ன விஷயத்துக் கெல்லாம்கூட மூளையைப் போட்டுக் குழப்பிக்கிடுற மன நிலையிலே நான் இப்போது இல்லீங்க, அத்தான்!''

''அப்படி என்ன இப்போ வந்துடுச்சு உனக்கு?''

''எனக்கு ஒண்ணும் வந்திடல்லேங்க!''

''பின்னே? உடம்புக்கு ஏதாச்சும் வந்திடுச்சுதா?''

''உடம்புக்கு எதுவும் வந்திடல்லே!''

''பின்னே?''

''பின்னே, என் மனசுக்குத்தான்...!''

''உன் மனசுக்கு என்ன ஆச்சாம்?''

''மனசு கெட்டுப் போச்சுங்க!''

''மனசு கெட்டுப் போச்சா?''

''...........''

''ஏன், என்ன காரணம்?''

''...........''

''சொல்லு, ரஞ்; நான் விடுகதை போடுறேன்னு எம் மேலே குற்றம் சாட்டிட்டு, இப்போ நீயே விடுகதை போட்டா, நான் என்ன செய்வேனும்? விளங்கிற மாதிரி யிலே, புட்டு வச்சுப் பேசினால்தானே, எனக்குச் சங்கதி புரியும், ரஞ்சனி?''

''நல்ல அத்தான் நீங்க!''

''நான் நல்ல அத்தான் இல்லாமல், மறுகா, கெட்ட அத்தானு, என்ன?''

''ஐயையோ! துரும்பைத் தூணாய் வளர்க்காமல், கொஞ்ச நேரம் என்னை நிம்மதியாய் இருக்க விடமாட் டீங்களா, அத்தான்?''

''ரஞ்......!''

''...........''

ரஞ்சனியின் மனம் கெடும்படி ஒரு சொல் சொல்லி விட்டால்கூட, மனமறியாமல் தவறிவிழுந்த அச்சொல் லுக்காகக் கெஞ்சிக் கூத்தாடி அவளிடம் கழுவாய் சம்பாதித்துக் கொண்டால்தான் ரஞ்சித் மனச்சமாதானம் அடைவது நடைமுறை; அப்படிப்பட்ட மனப்போக்கும் மனப்பக்குவமும் கொண்டிருந்தவர், இப்போது மாரிபு துடித்திடச் செயலிழந்து, செய்வகை அறியாமல், கதி கலங்கி நின்றுவிட்டதில், ஆச்சரியம் இல்லைதான்! இல்லக் கிழத்தியின் பொற் கரங்களைப் பொன்னைப் போற்றுவது போலப் பற்றிக்கொண்டார் அவர்; கண்ணனின் கோப

நேசத்தில் ஆறுதலும் தென்பும் பெற்ற அர்ஜுனனின் மாதிரி, மனைவியின் மேனி ஸ்பரிசத்தால் விளைந்த ஆறுதலுடனும் தெம்புடனும் புதிய விழிப்புப் பெற்ருர்; "ரஞ்சனி, உன்னோட மனசு புண்படும்படி நான் ஒண்ணும் சொல்லலையே?" என்று பரிதாபமான கெஞ்சுதலுடன் கேட்டார். "நாம தூங்கறதுக்கு முன்னுடி, நம்மோட பாபு பிரச்னைக்குத் தீர்வு காணவேணுமேன்னு ஞாபகப் படுத்த நினைச்சேன்; அவ்வளவுதான் கதை," என்று விடுகதைக்கு விடையும் விளக்கமும் அளித்தார் லட்சாதிபதி.

ஆகாயத்தில் மகுதிப் புருக்கள் சிறகடித்துப் பறந்து கொண்டிருந்தன.

பூமியில் ரஞ்சனியின் உள்ளம் அமைதியில் ஆனந்த நடனம் ஆடிக்கொண்டிருந்தது; ஆகவே, அவள் பெருந் தன்மையோடு மனம் திறந்து சிரித்தாள்: "அவ்வளவு தானு கதை? நல்லாய்ச் சொன்னீங்க போங்க...அத்தான்!" என்ருள்.

ரஞ்சித் முகப்புப் பக்கம் போய்விட முனைந்தார்.

"அத்தான்! என்ன போறீங்க?" என்று கூவி, அத்தானின் கையைப் பிடித்து இழுத்தாள் ரஞ்சனி.

"நீ போகச் சொன்னுய்; நான் போனேன்!"

"ஓ மை குட்னெஸ்!" என்று வாய் திறந்து சிரித்தாள் ரஞ்சனி. "இது ட்ரை ஜோக்!—ஆனுலும், என்னோட அன்பு அத்தானுக்காகத்தான் சிரிச்சு வச்சேன்!" என்ருள்.

"ஓ!"

"ஊம்! எனக்காகவேண்டி, எத்தனையோ செஞ்சிருக்கிற தர்மப் பிரபுவாச்சுங்களே நீங்க! பாழும் இந்த உடம்பிலே உயிர்னு ஒண்ணு ஒட்டிக் கிடக்குதின்ன, அதுக்கு நீங்க தானுங்களே மூலகாரணம்!"

''என் உடம்பிலே உயிர் தங்கியிருக்கிறதுக்கும் நீதான் காரணம், ரஞ்சனி!— அது சரி; நம்மகிட்டே என்னமோ முக்கியமான விஷயத்தைச் சொல்லப் போறதாக நம்ப பாபு சொன்னுனே? அந்த ரகசியம் என்ன ஏதுன்னே புரியமாட்டேங்குதே?''

''ஆமாங்க, அத்தான்; ஒருவேளை அது சிதம்பர ரகசியமோ, என்னமோ?''

''இருக்கும், இருக்கும்!''

''ஆமா; சிதம்பர ரகசியம்னு அது என்னுங்க, அத்தான்?''

''அதுவும் சிதம்பர ரகசியம்தான்!''

''சொல்லுங்க, அத்தான்!''

''தெரிஞ்சால்தானே சொல்வேன்?''

''நல்ல அத்தான்!''

''இன்னொரு தரமும் நான் உனக்கு நினைவூட்டுகிறேன்: நான் நல்ல அத்தான் என்கிற உண்மையான நடப்பை நான் மனிதாபிமானத்தோட உன் சந்நிதானத்திலே ஊர்ஜிதம் செஞ்சு வருஷம் பத்து தாண்டிப்போயிடுச்சு, ரஞ்!''

ரஞ்சனிக்குப் பேச நா எழவில்லை. ''உண்மைதானுங்க, அத்தான்!—அந்த மகத்தான சத்தியத்தை— கண்ணியமான உண்மையை—உன்னதமான தருமத்தை, நீங்க கொடுத்த இந்த உயிர், இந்தப் பத்து வருஷத்திலே, ஒவ்வொரு நிமிஷத்திலேயும் கை தொழுதுகிட்டே இருக்குது என்கிற உண்மையான நடப்பும் உங்களுக்குத் தெரிஞ்சதுதானுங்களே, அத்தான்?'' பேச நா எழுந்து, எப்படியோ, ஒரு வாறுகப் பேசி முடித்தாள், அவள்.

மனம் நெகிழ்ந்து, உணர்ச்சி வயப்படலானார் நந்தினி விலாசம் ரஞ்சித்; ''தாய் அறியாத சூல் உண்டா? உன்னை அறிஞ்சவன் நான்; உன்னை உணர்ந்துகிட்டவன் நான்; உன்னை உடலாலும், உள்ளத்தாலும், உணர்வாலும், உண்மையாலும், சத்தியத்தாலும், தருமத்தாலும் புரிஞ்சுக்கிட்டவனும் நானேதான்! சரிதானே, ரஞ்?'' என்பதாக விசாரணை நடத்தினார்.

''என்னோட தெய்வ அத்தான் சரியாய்த்தான் சொல்லுவாங்க; சொன்னால், சரியாகத்தான் இருக்குமுங்க!''

''பாபு நம்பளைச் சோதிச்சுப் பிறந்தவன், ரஞ்சனி!''

''நம்மளைச் சோதிக்கப் பிறந்தவனும் இதே பாபு தானுங்க, அத்தான்!''

மருண்டார் ரஞ்சித்.

ரஞ்சனி மிரளவில்லை.

பூந்தோட்டப் புல்வெளி வெளிச்சம் போட்டது.

முகப்பு மண்டபத்தில் ரதி—மகேஷ், ஜோடி சேர்த்து, ஜோடி சேர்ந்து மின்னினார்கள்.

ரஞ்சனியின் ஓரக்கண்களில் ஓரம்கட்டி, ஓரம்காட்டி நீர்த்துளிகளைச் சுண்டி எறிந்தவர் சாட்சாத் ரஞ்சித்தால்

விம்மியவளும் ரஞ்சித்தின் ரஞ்சனிதான்!...

''திரும்பவும் யோசனையிலே மூழ்கிட்டியே, ரஞ்சனி?''

''திரும்பவும் யோசனை என்னை மூழ்கடிச்சுக்கிட்டு இருக்குங்க, அத்தான்!—தெய்வம்தான் புதிர் போடும்னு கேள்விப்பட்டிருக்கேன்; ஆனா, இப்ப நம்ப பாபுவே நம்மளுக்குப் புதிர் ஆகிட்டானே, அத்தான்?''

''பாபுவைச் சாமான்யமாக நினைச்சிட்டியா, ரஞ்? அவன் தெய்வம்; அவன்தான் நம்மோட தெய்வம்!''

''அப்படின்னு, அவன்—நம்ப பாபு இந்த ஜன்மத்திலே என்ன அவதாரம் எடுத்திருக்கானும், அத்தான்?''

''ஸ்ரீராமபிரான் அவதாரமாக இருக்கலாமோ, ரஞ்சனி?''

''கிருஷ்ண பரமாத்மாவின் அவதாரமாகவும் இருக்கலாமே, அத்தான்?''

''பிரகலாதனுகக்கூட இருக்கலாம், ரஞ்...!''

''நந்தகோபாலனுகக்கூட இருக்கலாம், அத்...!''

''பாலமுருகனுகவும் அவதரித்திருக்கக்கூடும்!''

''கூடும், கூடும்!''

''ஏன், பரசுராமர் அவதாரமாகவும்கூட இருக்கலாம் அல்லவா, ரஞ்...?''

''அ...த்.......!''

ரஞ்சனி தொடர்ந்த அழைப்பிற்குத் தொடர் சேர்ப்பதற்குள்—

பாபு ஓடிவந்து தாயின் மடியில் வீழ்ந்தான்.

''பாபு, என் தெய்வமே!...எங்க தெய்வமே!...பாபு... பாபு!'' என்று உணர்ச்சிப் பெருக்குடன் விளித்த அன்பு அன்னை ரஞ்சனி, தன் அன்புத் தெய்வத்தின் கன்னங்களில் மாறி மாறி—மாற்றி மாற்றி முத்தம் கொடுத்தாள்.

''அழுறியா, அம்மா?'' என்று பதட்டத்துடன் கேட்டான் அருமைப் பிள்ளை.

''நான் ஏன் அழப்போறேன், பாபு?'' என்று கெட்டிக் காரியாகவே தப்பித்துவிட்டாள் ரஞ்சனி.

''அதுதானே பார்த்தேன்?—என் அம்மா எதுக்கு அழவேணும்? தப்புச் செஞ்சவங்கதான் லோகத்திலே அழுவாங்களாம்!—எங்க குருஜி பிரார்த்தனையப்ப அடிக்கடி சொல்லுவாங்களே!'' என்று வியாக்கியானம் படித்து நிறுத்தினன் பாபு.

''பாபு, நீ நிஜமாவே சாதாரணப் பிறவியே இல்லேப்பா!''

''ஐயையோ, என்னைத் தெய்வமாக ஆக்கப் பார்க்கி றியா, அம்மா?''

''பின்னே என்னவாம்?—நான் உன்னைத் தெய்வமாகப் பார்க்கத் தொடங்கி வருஷம் பத்து ஆகிடுச்சே, பாபு?'' மறு தரமும் பாசத்தின் முத்தங்கள் பரிமாறப்பட்டன; பகிரங்கமான அன்போடு புன்னகை புரிந்தாள்; ரகசிய மான பாசத்தோடு கண் கலங்கினாள் அவள்!—அன்பு ராஜ்யத்தின் மகாராணி அவள்!—அவள் ரஞ்சனி.

''அம்மா, அம்மா!... நீ என்னைத் தெய்வமாகப் பாவிப்பதைப் பார்க்கையிலே, நீ என்கையிலே வரம் கிரம் கேட்பாய் போலிருக்குதே, அம்மா?''

''ஆமா, பாபு ராஜா! கட்டாயம் வரம் கேட்பேன்!''

''ஊம், ஆல்ரைட்! வரம் கேள்; இதோ, கொடுக் கிறேன்!''

''ஊகூம்; இப்ப கேட்கமாட்டேன்; சமயம் பார்த்து, சந்தர்ப்பம் பார்த்து, எனக்கு அவசியப்படும்போது, நான் உன்கிட்டே கேட்கக்கூடிய வரத்தை நீ தப்பாமல் கொடுத்தாக வேணுமாக்கும்!''

''ஓ! ரெடி!'' என்று சொல்லிக் கும்மாளத்துடன் பெற்ற தெய்வத்தைப் பாசம் மேலிடக் கட்டிப்பிடித்து, அன்பு மேலோங்க முத்தங்களை வாரிவாரி வழங்குகிறான் பாபு!—ஒருவேளை, பழனிமலை ஆண்டியான பாலமுருகனே இப்படிப் பாபுவாக அவதாரம் எடுத்து, இங்கே ஜனனம் எடுத்திருப்பானோ?

அம்மா ஆனந்தக் கண்ணீரை ஆனந்தமாக வடிக்கிறாள்.

மகன் திணறுகிறான்; ''கண்ணீர் வடிக்கிறீயா, அம்மா?'' என்று கேட்கிறான்.

''ஆமாப்பா, பாபு; இது ஆனந்தமான கண்ணீராக்கும்!''

''அப்படியானால், சரி, அம்மா!''

செல்வன் பாபுவைச் செல்லமாக ஏற இறங்கப் பார்க்கிறாள் ரஞ்சனி; பாபுவின் சின்ன உருவத்திலே, கோடரியும் கையுமாகப் பெரிய உருவத்தில் பரசுராமர் தோன்றினார்!—பாபுவின் தாய், நந்தினி இல்லத்தின் தலைவியாகித் தவித்தாள். பட்டுக் கருநீல விழிகளில் கட்டுமீறின புதுவெள்ளம் நுங்கும் நுரையுமாகக் கொப்புளிக்கிறது.

ரஞ்சித் பையப் பையத் துணைவியையும் குமாரனையும் நெருங்கினார்; தைமாத மேகமென அவரது முகம் கறுமை கண்டிருந்தது. பாபு, என்னவோ முக்கியமான சேதியைச் சொல்லப் போவதாகப் புதிர்போட்டு, 'சஸ்பென்ஸ்' போட்டானே? என்ன புதிராம் அது?—தங்கட்குத் தெய்வமாக ஆகிவிட்டிருக்கும் அருமைமிகு பாபு இந்த ஜன்மத்தில் என்ன அவதாரம் எடுத்திருப்பான் என்ற சர்ச்சையில் தாமும் ரஞ்சனியும் ஈடுபட்டிருந்த காலை, 'ஏன், பரசுராமர் அவதாரமாகவும்கூட இருக்கலாம் அல்லவா, ரஞ்...?' என்பதாக எதிர்க்கேள்வி கேட்டது நெஞ்சிலும் நினைவிலும் பளிச்சிடவே, அவரது நேத்திரங்களில் கருமணிகள்

பளபளத்தன. விதி ஆடத் தொடங்கிய அந்திமாலைச் சதுரங்க விளையாட்டு, விதியின் எழுத்தைக் கிழித்தெறி வதைப்போலே, ரஞ்சித்—ரஞ்சனி தம்பதி மேற்கொண்ட சவாலின் ஒரு தார்மிகமான நல்ல முடிவின் பேரில் தொடர்ந்து. பின், அது அந்திநிலாச் சதுரங்க விளையாட்டாக உருக்கொண்டு, உருமாறி, அவ்விளையாட்டு விதிக்குத் தோல்வியை ஏற்படுத்திவிட்ட அந்தமான அந்த நிகழ்ச்சியையும் அவரது மனமென்னும் நல்ல பாம்பு படம் எடுத்துக் காட்டியது!—சோகமயமான நெடு மூச்சில், கண்ணீரின் அன்புமயமான ஈரம் தடம் பதிந்தி ருந்தது.

தன்னுடைய முதற்காதல் நிறைவேறாத—நிறைவேற்றப் படாத ஆறாத துயரத்தில்—ஆற்றப்படாத துயரத்தில் மனம் வெறுத்து, உயிர் வெறுத்து, உயிரைப் போக்கிக் கொள்ள முயன்ற ஒரு கருக்கலில், ஈடுஎடுப்பில்லாத ஓர் ஆதரிச விடியலாகத் தோன்றி, தன்னுடைய உயிரையும் உயிர்மானத்தையும் காத்து, பின்னர், அமிர்தயோகம் கூடியதொரு சுபயோக சுபதினத்திலே, அக்கினியைச் சாட்சிவைத்து, அம்மி மிதித்து, அருந்ததி பார்த்துத் தன் கைத்தலம் பற்றித் தனக்குத் திருப்பூட்டிய அந்த ஏழைப் பங்காளன் ரஞ்சித்தை—இந்த அன்புத் தெய்வம் ரஞ்சித்தைக் கூர்த்தமதிபதிந்துப் பார்வையிட்டாள் அபலை ரஞ்சனி; நெஞ்சின் அலைகள் விதியின் அலைகளாகிக் கத்தின; ஆட வந்த பொற்பாவை, பதம் மாறும் பொழுது, பாவத்தை மாற்றிக்கொள்ளும் கதையாக, முகத்தில் சோகத்தை அழித்து, மகிழ்வை எழுதினாள் ரஞ்சனி; அப்பால், பாபுவைக் கூப்பிட்டாள்.

பாபுவின் புதிருக்கு இனியாகிலும் நல்லவிடை கிடைத்து விட்டால் தேவலாம் என்கிற உணர்ச்சியில் அமைதியைச் சேகரம் செய்தவாறு, பாபுவை நோக்கினார் ரஞ்சித்.

அப்பாவையும் அம்மாவையும் ஒருசேரப் பார்த்தான் பாபு.

விதிக்குப் பேசத் தெரியாது.

ஆனால்—

பாபு இதோ, பேசப்போகிறான்!

மகேஷ் அதோ, நடந்து வருகிறார்!

"அம்மா, மத்தியான்னம் நான் முக்கியமான விஷயத்தைச் சொல்லப்போறதாகச் சொன்னேனே?— அது என்ன விஷயம்னு உன்னாலே கற்பனை செய்ய முடிஞ்சுதா, அம்மா?"—பாபு வினாக் கணையைத் தொடுத்தான்.

எதிர்பாராமல் தவறிழைத்து, எதிர்பாராமல் சட்டத்தின் விலங்குப் பிடிக்குள்ளே சிக்கிக்கொண்ட பெண் ஒருத்தி, மான அவமானத்தால் அஞ்சி ஒடுங்கித் தவித்துத் தடுமாறும் கோலத்தில், கோலவிழிகளில் சஞ்சலம் மாக்கோலம்போட, நிலைகுலைந்தாள் ரஞ்சனி. சிவந்த அதரங்கள் வெளுத்தன; பிதுங்கின; நயனங்களின் நிலையும் அப்படியே!

"நீங்களாச்சும் அந்தத் துப்பைத் துலக்கமுடியுமா, அப்பா?"

"ஊகூம்!"

"சரி; நானே சொல்லிட்றேன்: ராத்திரியிலிருந்து இங்கேயே, என்னோட பங்களாவிலேயேதான் நான் தங்கிப் படிக்கப்போறேன்!— ஹாஸ்டலிலே காலம்பறவே தேவையான அனுமதியையும் வாங்கிக்கிட்டேன். இனியாச்சும் நீ ராத்திரியிலே நிம்மதியாகப் படுத்துத் தூங்குவேதானே, அம்மா?"

''சத்தியமாய் இனிமேலே நான் ஆனந்தமான நிம்மதியோடே அழகாகப் படுத்துத் தூங்குவேண்டா, பாபு. எட்டிப் போயிட்ட தெய்வம் என்கிட்டே ஓட்டி வந்ததுக்கப்பறம், நான் அமைதியாக உறங்குறதுக்குக் கேட்கவா வேணும்?''

''உங்களுக்குத் திருப்திதானே, அப்பா?''

''நிச்சயமாக!—நல்ல காலம், எங்களை நீ நல்லதனமாய்க் காப்பாத்திவிட்டாய், பாபு! நீ நல்லா இருக்கணும்; விஷ் யூ ஆல் த பெஸ்ட், மை டியரஸ்ட் பாபு!...''

''தாங்க் யூ, ஸோ மச், டாடி!''

இயற்கைத் தாய் அவ்வப்போது சீதனம் தரும் பூங்காற்றை நன்றியுணர்வோடு வஞ்சனையின்றி அனுபவித்துப் பழகிய ரஞ்சித், இப்போது சற்றுக்கூடுதலான நிம்மதியோடு அந்திமாலைத் தென்றலை அனுபவித்தார். 'பாபு பிரச்னை தீர்ந்தது!' என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டு பெருமிதம் அடைந்த சடுதியில், மனக்குதிரை கடிவாளத்தைக் கழற்றி வீசிவிட்டு, காலத்தை ஊடுருவி முன்னும் பின்னுமாகப் பாய்ந்து பாய்ந்து திரும்ப எத்தனம் செய்யவே, அவருக்குச் சொந்தமான மனத்தில், பத்து வருஷத்துக்கு முந்திய அந்த அந்திநிலாச் சதுரங்கத்தின் முன்கதையும் பின்கதையும் அச்சுப்பிசகாமல் முத்துக் கோத்தமாதிரி ஏடுவிரிந்தன; சுடு வெள்ளத்தில் சோகப் பெருமூச்சு விரிந்தது. 'பாபுப் பிரச்சினை எங்கே தீர்ந்தது?—எப்படித் தீரமுடியும்? அது ஆண்டவன் மனசு வச்சு நல்ல விதமாய் தீர்த்தாகவேண்டிய பிரச்னை ஆச்சுதே? ஈஸ்வரா!... சின்னக் கறுப்பர் ஸ்வாமியே! எங்களை நல்லபடியாய்க் காப்பாத்திடு! நானும் என் ரஞ்சனியும் தெய்வமாய்ப் பாவிச்சுக்கிணு வருகிற எங்க பாபுவை எங்களோட ஆயுசு பரியந்தம் எங்களுக்குத் தெய்வமாகவே விளங்கும்படி செஞ்சுப்பிடு, அப்பனே, அம்மையப்பனே!' கண்ணீரைப்

பாபு பார்த்துவிடப் போகிறான்!— ரஞ்சித் அசகாய் சூரர்!

பெற்ற புண்ணியவதிக்கு அழகு காட்டி அவளோடு விளையாடவும் விளையாட்டுக் காட்டவுமே இனிமேல் பாபுவுக்குப் பொழுது சரியாகுதுதான்!

ஓ!—மகேஷ்!

''வாங்க...வாங்க,'' என்று வரவேற்றார் அன்புச் சீமான்.

அப்போது:

அந்தி மடந்தையின் மசக்கை தீர்ந்து, நிலவுக் கரு வளர்ச்சி அடைந்திருந்தது.

''எல்லாரும் வெளியிலே போயிட்டு வரலாம்னு சொன்னீங்க; புறப்படலாமா, ரஞ்சித்?—சமயம் ஆகிக்கிட்டு இருக்குதுங்களே?''

''வாஸ்தவந்தான்; பத்து நிமிஷத்திலே புறப்பட்டால் போச்சுங்க, மகேஷ்,'' என்றார் ரஞ்சித்; பாபுவை நோக்கி, ''பாபு ஸார், புறப்படலாமா?'' என்றார்.

''நான் எவர்ரெடி, ஸார்!'' என்று வாய்கொள்ளாமலும், களிப்புக்கொள்ளாமலும் சிரித்தான் பாபு.

''நீதான் எவரெடி ஆச்சுதே, பாபு?''

''ஆமா, ஆமா!...''

''மாஸ்டர் பாபுவின் கூடவே நானும் பின்தொடர்ந்து மெட்ராஸிலே ஒரு 'சோஷல் ரவுண்ட்' போயிட்டு வாரதுக்கு வாய்ச்சிருக்கிறது இதுதான் முதல் சந்தர்ப்பம்னு நான் நம்புறேன்; இல்லையா, பாபு?'' என்று கேட்டார் மகேஷ்.

"உண்மைதானுங்க, மகேஷ் ஸாரே!—ஆனு, இதுவே தான் அநேகமாகக் கடைசிச் சந்தர்ப்பமாகவும் இருக்கும்னும் நான் நம்புறேன்!" என்று முகத்தில் அடிக்காத குறை யாகக் கூறினுன் பாபு.

மகேஷுக்கு முகம் செத்துவிட்டது. கண்களில் மஞ்சி விரட்டுக் காளையாகச் சுடுகின்ற கண்ணீர் சுட்டதுடன் நிற்காமல், முட்டவும் செய்தது. 'பாபு...பாபு!'—உள் மனம் விம்மிப் புடைத்துச் செருமிப் பொருமியது. பாபு தப்பிப் பிறந்த இனிய செய்தியைக் காலம் கடந்து கேட்டதும் கேட்காததுமாக, உடனடியாகக் கொச்சி யினின்றும் பறந்து வந்து பாபுவைத் தெய்வமாகவே தரிசித்து மகிழ்ந்து கண்ணீர் சிந்தி, அவனுடைய இடது கன்னத்துக் கறுப்பு மருவைக்கண்டு நிலைகலங்கித் தடுமாறிய நிலையில், அவனது உதடுகளில் முத்தம் கொடுத்துப் பிரிந்த அந்த நாள் அவருடைய மௌனக் கண்ணீரில் மலர்ந்து மறையவும் தப்பவில்லை!—பழைய ஞாபகத்தில் ஷர்ட் பையைத் துழாவியதும்தான், பையில் பத்திரப்படுத்தி வைத்திருந்த கடிதம்—பாபுவுக்கு வரைந்திருந்த கடிதம் மாயமாக மறைந்துவிட்ட விவரத்தையும் புதிய ஞாபகத் தில் பதித்துக்கொள்ளவும் வேண்டியவர் ஆனுர் அவர். எங்கே போய்விட்டது அந்தக் கடிதம்?

வண்டுகளின் இதமான ரீங்காரம்.

மலர்களின் சுகந்தச் சிரிப்பு.

அந்தி நிலவின் ஆனந்த ராகம்.

"மிஸ்டர் மகேஷ், நாமெல்லாம் வெளியே போய்த் திரும்பியானதும், உங்க கையிலே ஒரு லெட்டர் கொடுப் பேன்!"

"செரி!"

""சரின்னு சொல்லுங்க; நீங்க இப்ப இருக்கிறது தமிழ் மண்ணுக்கும்!""

""சரி, பாபு!""

""ஓ. கே!""

ரஞ்சனியின் முகத்திலே ஈ ஆடவில்லை!

ரஞ்சித் இமைக்க மறந்திருப்பார், பாவம்!

ஆகாயக் கப்பல் எங்கேயோ பறந்தது.

அந்த ஸ்தலத்தில் ரதி வந்ததுதான் தாமதம்; அங்கே ஜனநாயகப் பண்புடன் விசித்திரமான பரபரப்பு அரசாளத் துவங்கியது.

மறு பத்தாவது வினாடியில்:

அவர்கள் அனைவரும் திட்டமிட்டபடி, நிகழ்ச்சி நிரல் ஒழுங்குமுறையாகவே நடந்தேறிற்று.

தொலைக்காட்சி: பலே ஜோர்!

வானொலியில், ஜானகி, டி. எம். எஸ், ஜேசுதாஸ் பாடல்கள் படு டக்கர்!

'ஹோட்டல் டாஜ் கொரமாண்டெல்': ""வருக, வருக! உங்கள் வரவு நல்வரவாகுக!""

மெரினாக் கடற்கரையின் சிலம்பொலியில், நந்தினி விலாசம் குடும்பத்தினரும் ரதி—மகேஷ் ஜோடிக் காதலர்களும் கும்மாளமிட்டுச் சிரித்த சிரிப்பொலி இரண்டறக் கலந்து எதிரொலித்தது.

ஆனால், ஒன்று:

பாங்கர் ரஞ்சித் இட்டதுதான் சட்டம்! அவருடைய அன்பில் குறுக்கிட யாருக்குத்தான் தைரியம் வரும்?—

பரீஸின் பணவீக்கம் குறைந்தது!—ரஞ்சித் என்றால், ரஞ்சித் தான்!

இரவு வந்தது.

பங்களா வந்தது.

இம்பாலாவும் வந்தது.

ரஞ்சித்—ரஞ்சனி ஜோடி, இன்றைக்கு விடியலிலே தான் கலியாணம் பண்ணிக்கொண்டவர்கள் மாதிரி, கம்பீரத்தோடும் மலர்ச்சியோடும் அமைதியாகவே காரின் பின் ஆசனத்திலிருந்து இறங்கினார்கள்.

பின்புறத்து இருப்பிடத்தின் இருமுனைகளின்றும் தாவிப் பாய்ந்து வெளியேறிய பெருமைக்கு உகந்தவர்கள் அக்கா நந்தினியும் தம்பி பாபுவும்தான்.

இளைய நிலா, கடைக்கண் பணியில் ரசனையோடு ஈடுபட்டிருக்கிறது.

இளைய ராஜாப் பயல் பாபு எந்தக் கோட்டையைப் பிடிப்பதற்காகவோ ஆழ்ந்த சிந்தனையில் ஆழ்ந்து விட்டிருந்தான். சுட்டிப் பயலுக்கு அதற்குள் அப்படி என்னதான் மாளாவ சிந்தனை வந்து தொலைத்ததோ, தெரியவில்லை!—பால் வழியத்தக்க தன்னுடைய பிஞ்சு முகத்தின் இடது கன்னத்திற்குத் திருஷ்டி கழித்த அந்த ஓர் அவலட்சணச் சின்னத்தை—இயற்கையின் விதி முத்திரை குத்தியிருந்த அந்தக் கறுப்பு வடுவை—மருவை விரல்கள் நடுங்கத் தடவி விட்டுக் கொண்டேயிருந்தான். அதே நேரத்தில், மகேஷின் இடது கன்னத்தில் தரிசனம் கொடுத்த இதே மாதிரியான அன்னங் கரிய தழும்பு—மரு அவனுடைய பால் மணம் மாறாத பச்சை மனத்தில் பயங்கரச் சிவப்பாக அபாய அறிவிப்புச் செய்யவும் தவறி விடவில்லை இப்போது அவன் சிந்தனை முனைப் படையத் தொடங்கியது; மலர்ந்த

பூக்களாக மலர்ந்திருந்த விழிகள் கன்றிச் சிவந்து வந்தன; அவை கலங்கவும் தொடங்கின. 'என்ன ஆச்சரியமாம் இது? மகேஷோட இடது பக்கக் கன்னத்திலே இருக்கிற அசிங்கமான கறுப்பு மரு மாதிரியே, என்னோடை இடது கன்னத்திலேயும் ஒரு கறுப்பு வடு அலங்கோலமாய் விழுந்திருக்கிறதே? சே!... உப்புச் சப்பு இல்லாத இந்த அசிங்கத்தை பாவம், அம்மாகிட்டேயோ, இல்லாட்டி அப்பாகிட்டவோ கேட்டாக்க, அவங்க கை கொட்டிச் சிரிக்க மாட்டாங்களாக்கும்?— ஆண்டவனின் சிருஷ்டி ரகசியங்களிலே இதுவும் ஒண்ணுக இருக்கலாம்னு கடைசிப் பட்சவிளக்கம் ஒண்ணைச் சொல்லிட்டு அவங்க 'தெய்வமே' ன்னு தப்பிச்சிக்கிடப் போறுங்க!... மருவும் ஆச்சு; மண்ணாங்கட்டியும் ஆச்சு!— மகேஷ் யார்? நான் யார்? எனக்கும் அந்த ஆளுக்கும் என்ன சம்பந்தமாம்?—என்னமோ அதிசயக் கூத்தாட்டம், சொல்லி வச்சாப்பிலே எங்க ரெண்டு பேர் இடது கன்னங்களிலேயும் கடவுள் எங்களைப் பிண்டம் எடுத்துப் போடுறப்பவே ஒரு பாழாய்ப்போன மருவை உருட்டித் திரட்டி வச்சுப்பிட்டான்!— அவ்வளவுதான் கதையும் காரணமும்!— மகேஷ் எக்கேடும் கெட்டுப்போய்த் தொலையட்டும்! எனக்கு என்ன வந்ததாம்?' நிச்சலனமாய்க் கைகளை உதறிவிட்டு, முகத்தின் வேர்வையை முழங்கையால் துடைத்த வண்ணம், நிர்மலமான விழிகளால் அன்னையைத் தேடினுன் பாபு.

ரஞ்சனி ஒயிலோடு கைகளை வீசியவளாக முகப்பை நோக்கி நடந்து கொண்டிருக்கிருள். வீடு தேடி வந்திருக்கும் மகேஷ்—ரதி விருந்தினர்களுக்கு இராச் சாப்பாட்டுக்கு வழி பண்ண வேண்டாமா?—ஒன்பது மணிக்காகிலும் இலைபோடா விட்டால், அத்தான் குதித்து விடமாட்டாரா? சாது மிரண்டால் காடு கொள்ளாதாம்!—இந்த அத்தான் சாதுவான 'சாது'வா, என்ன!—அம்மாடியோ!—ஆனல், ஒரு விதி—விலக்குக்குக் கட்டுப்படுபவர்!— இவர் வள்ளுவம்

வருத்த அன்பு உடையார் அல்லவா?— 'என்னோட அன்பு அத்தானுக்கு-என்னோட அன்பான தெய்வத்துக்கு உரித்தான அந்த நன்றிக்கடனைத் தீர்க்க நான் இன்னம் ஏழேழு ஜன்மங்கள் எடுத்தாலும், போதாதே!— அத்தான்!— என்னோட தெய்வமே! என் சுவாமியே!... சாகவேண்டிய என்னை உயிர் பிழைக்கப் பண்ணியதோடு நில்லாது, எனக்கு ஒரு கவுரவத்தையும் மானத்தையும் வாழ்க்கையையும் அருள்பாலித்து, என்னையும் இந்தச் சமூகத்தின் வீதிகளிலே தலை நிமிர்ந்து, தலையை நிமிர்த்தி நடக்கப் பண்ணிய உங்களுடைய மகத்தான அன்புக்கு என் வரையிலும் ஒரு மகத்தான சரித்திரமே உண்டுங்க; ஆமாங்க, அத்தான்! நான் செஞ்ச மன்னிக்க முடியாத— மன்னிக்கக் கூடாத அந்த மகாப் பெரிய பாவத்துக்கு பரிகாரமாகவும்—நீங்க செஞ்ச ஈடு இணையில்லாத புண்ணியத்துக்கு ஈடாகவும் என்னோட இந்தப் பொல்லாத உயிரை உங்களோட அன்பே உருவான காலடியிலே காணிக்கை செலுத்தினுல், ஒரு சமயம், என்னோட ஆவி வேகுமோ, என்னமோ?— தெரியலீங்க, அத்தான்! நான் பாவிங்க, அத்தான்!— அத்தான், நான் துரோகி! ஐயையோ, இன்றைக்கு ராத்திரிப் பொழுது எப்படித்தான் கழியப் போகுதோ?—மனசும் மனச்சாட்சியும் கிடந்து அடிச்சுக் கிட்டே கிடக்குதே?.. நான் என்ன செய்வேன்? தெய்வமே! அத்தான்...அத்தான்!.. ஐயையோ, தெய்வமே!'— பாபு, எடுத்திருப்பது பரசுராமரின் அவதாரமாகவும் இருக்கலாம் அல்லவா என்பதாகக் கொஞ்சம் முந்தி அத்தான் விதியைப் போலப் பேசினுரே? ஏன்? 'பாபு!—என் தெய்வமே, என் ராஜாவே! நான் மனப்பூர்வமாகத் தயாராகிடுறேன்; எனக்கு நீயே விதியாக ஆகிப்பிடு, மகனே!—ஆமாண்டா, என் தெய்வமே!'— தலை சிதறும் தேங்காயாக வெடித்துச் சுக்கல் நூறாகச் சிதறிவிடும் போலிருக்கிறது. யாரோ அழைக்கிறுர்கள். அத்தானாக இருக்க முடியாது. 'மா!' அப்படின்னு சத்தம் கேட்ட மாதிரி இருந்தது. பாபுவாகவே

இருக்கவேண்டும்; பாபுவாகவே இருக்கட்டும்! தலையை ஒடித்துத் திருப்பினுள் ரஞ்...சனி. அத்தனை வெறுப்பு, ஆத்திரம், விரக்தி!—பாவம், என்ன வந்துவிட்டதாம் இந்த மஹாலக்ஷ்மி ரஞ்சனிக்கு?

"அ...ம்...மா!" என்று கூவி அழைத்து ஓடி வந்து நின்முன் பாபு, அம்மாவை ஒரே வாயில் விழுங்கி ஏப்பம் விட்டுத்தான் மறுவேலை பார்ப்பது என்று கங்கணம் கட்டிக் கொண்டவன் மாதிரி, அப்படிப் பார்த்தான், பார்வையிட்டான் பாபு! மறு இமைப்பிலே தன் அன்னைத் தெய்வம் இல்லாவிட்டால், அப்பால், இந்தப் பூவுலகம் அசல் சுடுகாடாகவே மாறி விடாதா என்னும்படியான ஞானேதயம் பெற்றவன் போலே, பார்வையில் ஒரு கனிவை—மல்கோவா மாங்கனியின் கனிவை ஏந்தி அமைதியாகவும் ஆறுதலாகவும் பெருமையாகவும் முந்நூறு நாள் சுமந்தவளை முந்நூறு தடவை ஏற்றிப் போற்றிய பெருமிதத்துடன் அவன் பார்த்தான்; பார்வையிடலாஞன்.

இப்போது:

ரஞ்சனிக்குப் போன உயிர் திரும்பிற்று. "பாபு, என்னப்பா அப்படிப் பார்க்கிறே?—இப்பத்தான் அம்மாவை முதன் முதலாகப் பார்க்கிறீயா, என்ன? எடுத்த எடுப்பிலே நீ என்னை ஒரு மாதிரியாகப் பார்த்த அந்தப் பார்வையைக் கண்டதும் என்னுேட ஈரல் குலையே நடுங்கிப் போயிடுச்சாக்கும்!" அவள் குரல் கம்மியது; கம்மியில்லாமல் விழிகளில் நீர்முத்துக்கள் திரண்டன.

"சும்மா விளையாட்டுக்காகத்தான் அப்படி முதலிலே பார்த்தேன்; உன்னை 'டெஸ்ட்' பண்ணனும்னு தோணுச்சு பார்த்தேன்; அவ்வளவுதான். இந்த அல்பக் காரியத்துக்காக நீ கண் கலங்கலாமா, அம்மா?" என்று பதற்றத்தோடு கேட்டான் பாபு.

''உன்னைப் பெற்ற அம்மாவைச் சோதிச்சுப் பார்க்க ணும்னு உனக்குத் தோணிடுச்சா என் தெய்வமே, பாபு?''

''சும்மா ஒரு தமாஷ் பண்ணினேன்; அதுக்காக, சும்மா சும்மா என்னைத் தெய்வமாக ஆக்கிப்பிடுறீயே, அம்மா?''

''பெற்லவளையே 'டெஸ்ட்' பண்ணத் துணிஞ்ச மகன் தெய்வமாக இல்லாமல், வேறு யாராக இருக்க முடியும்?— நீயே சொல்லுப்பா!'' என்று வேண்டிக் கேட்டுக் கொண் டாள் தாய்க்காரி.

''நீ என்னென்னமோ பேசறீயே, தாயே?'' நிலத்தடி நீர் மண்பரப்பில் பொங்குமே, அப்படி, பாபுவின் சிறிய கண்களில் பெரிய நீர்த்துளிகள் பொங்கின.

''சரி, சரி. அது போகட்டும். ஒண்ணு கேட்பேன்; பதில் சொல்லுவியா, பாபு?''

''ஓ! ஒண்ணு என்ன, ஒன்பதாவே கேளேன், அம்மா!''

''உன்கிட்டே ஒன்பது கேட்க எனக்குத் தெரியாது; ஒண்ணு மட்டும் கேட்டுட்றேன், பாபு!''

''ஓ!''

வாணி ஜெயராமின் வீணைக் குரல் எங்கு ஒலித்தாலும், அது தன்னை இனம் காட்டிக் கொள்ளத் தவறுவது அரிது!

இசையில் அம்மாவும் லயித்தாள்.

மகனும் மெய்ம் மறந்தான்.

''கேட்கட்டா?''

''அப்பவே 'ஓ' சொல்லிட்டேன்!''

சிரிப்புக்கு ஒரு ரஞ்சனிதான் இருக்கமுடியும்.

புதுக்கவிக்கு ஒரு மேத்தா இல்லையா? அப்படித்தான்.

பாபுவிடம் கேட்க வாயெடுத்தாள் ரஞ்சனி. அதற்குள், அவள் திருஷ்டியில், ரதியோடு அத்தான் உரையாடிக் கொண்டிருந்தது தொலைதூரக் காட்சியாகத் தெரியவே, கைந்நொடிப் பொழுதுக்குத் தடுமாற்றம் அடைந்து, அதே கைந்நொடிப்பொழுதில் நிலையைச் செப்பனிட்டுக் கொண்டவளாகக் கேள்வியைக் கேட்டாள்: ''பாபு, நானும் உன் அப்பாவும் உன்னைத் தெய்வமாகப் பாவிச்சு வாரதாகச் சொன்னேம்!''

''மறுபடியும் பூச்சாண்டி காட்ட ஆரம்பிச்சிட்டியா, அம்மா?''

''பெற்ற தாய் தன் மகனுக்குப் பூச்சாண்டி காட்டினல், அப்பறம் உலகம் அழிஞ்சிடாதா, பாபு? ஆனா, நீ எனக்குப் பூச்சாண்டி காட்டினல், நான் அதையும் வரவேற்கத் தயாராவே இருக்கேன். ஆமாம்!''

''உன்னைப் புரிஞ்சுக்கிட எனக்கு வயசு பத்தாது, அம்மா! சரி, சரி; அப்பா கூப்பிடப்போறாங்க. அடடே, மகேஷை விட்டுட்டு அப்பாவோடே ரதி பேசிக்கிட்டு இருக்காங்க போலிருக்குதே, அம்மா?'' என்று எதிர்த் திசையைச் சுட்டிக்காட்டினன் பாபு.

''பேசிறதினலே, பெண்ணேட கற்போ, இல்லே ஆணேட கற்போ கெட்டுப்போயிடாது, பாபு!...இப்படி, மனசுக்கு ஏதாச்சும் ஒரு மாற்றம் சமயங்களிலே தேவைப் படுறது இயற்கைதான்!'' என்ருள் ரஞ்சனி; நெஞ்சைத் தடவி விட்டுக்கொண்டாள்.

''விட்டகுறையைத் தொட்டகுறையாக நீ ஏதேதோ பேசுருய்; இதையெல்லாம் நான் என்ன கண்டேன்? நான் பாவம், பச்சைப்பிள்ளை, அம்மா!'' என்று பரிதாபக் குரலெடுத்துச் செப்பினன் பாபு:

''மெய்தான்; நீ பச்சைப் பாலகன்தான்; அதனாலே தான், சிவப்புப் பாலகனாகத் தெய்வ அவதாரம் எடுக்க முன்வந்திருக்கே?...ஆமா; தெய்வத்தோட திருவிளையாட லிலே உனக்கு எந்த அவதாரம் ரொம்ப ரொம்பப் பிடிக்குமாம்?...என்னோட பாபு என்கிட்டே ஒளிவுமறைவு இல்லாமச் சொல்லுவானாம்!—தெய்வமாச்சே? மனுஷங் களே அபூர்வமாக மெய் பேசத் துணிகிறப்ப, தெய்வம் பொய் பேசினால், அவதாரம் என்கிற அந்தஸ்துக்கு என்ன தான் மரியாதை இருக்கமுடியும்?—பாபு, நீ என் தெய்வம் மட்டுமில்லே, நீ என் ராஜாவும்தான்! சொல்லு, கண்ணு, சொல்லு!'' என்று தவப்புதல்வனின் தாழ்வாயைப் பற்றியவாறு, ஆனால், அவனுடைய இடப்புற மருவைத் தீண்டாதபடி, கெஞ்சினாள் ரஞ்சனி; கொஞ்சியவளும் அதே அசல் ரஞ்சனிதான்!

''சொல்லிப்பிடுவேன்!''

''ம்!''

''சொல்லிப்பிடட்டுமா?''

''ம்!''

''சொல்லிப்பிடுவேன்!''

''ஓ! மேளதாளத்தோட சொல்லிடுடா, பாபு!''

''ஒன்...டு...''

''ஊம், த்ரீ!...சொல்லிப்பிடுடா, என் கண்கண்ட தெய்வமே பாபு!''

''ஓ. கே! — த் ரீ! — இதோ, சொல்லிப்பிட்டேன்: எனக்கு...?''

''உனக்கு?...ம்...டிலே செய்யாமல் சொல்லிடுடா, என் பாபுத் தெய்வமே!''

''எனக்குப் பரசுராமர் அவதாரம்தான் ரொம்ப ரொம்பப் பிடிக்கும்!''

''ஆ!''

அதிர்ச்சி அடைந்த புண்ணியவதி, ரஞ்சனிதான்!— அதாவது, திருமதி ரஞ்சித்தான்!

தாய் அடைந்த அதிர்ச்சியில், பிள்ளையும் அதிர்ச்சி அடைந்திருக்கவேண்டும்.

இன்னமும்கூட, ரஞ்சனி தன்னுடைய மார்பகத்தைத் தேய்த்துவிட்டுக் கொண்டுதான் இருக்கிருள்.

''நெஞ்சு வலிக்குதா, அம்மா? நான் தடவிவிடட்டுமா, அம்மா?''

''ஊம்!''

பாலமுதம் பருகித்திளைத்த தாயின் மார்பைப் பாசத்தின் செறிவு சிலிர்த்திடத் தேய்த்துவிட்டான்; தடவிவிட்டான். கண் முனைகளில் ஈரம் கசிந்தது. ''இப்ப வலி நின்னிடுச்சுதா, அம்மா?''

''ஆமாப்பா; இப்ப வலி நின்னுபோச்சு!''

''அப்படின்னு, திரும்பவும் வலி எடுக்குமா, அம்மா?''

''ஊம்!''

''ஏம்மா அப்படி?''

''அது என்னேட விதி, பாபு!''

''நீ என்ன அம்மா சொல்றே? உன் பேச்சே எனக்குப் புரியலேயே, அம்மா?''

''என் விதி உனக்கு எப்படிப்பா புரியும்?''

''நீ என்னம்மா சொல்லுறே?''

"நான் என் விதியைச் சொல்றேண்டா, பாபு!"

"உன் விதின்னா...?"

"என் விதிதான்!"

"நீ என்னத்தையோ எங்கிட்டேயிருந்து மறைக்கிறயே, தாயே?"

நெருஞ்சி முள் மறுபடி தைத்தது!

துடிக்கிருள் தாய்.

பாபுவா இப்படிப் பேசுகிருன்?

ஓ!—பாபு தெய்வம் ஆயிற்றே?

ரஞ்சனிக்கு வாய்விட்டு 'ஓ' வென்று கதறிக் கதறி அழவேண்டும் போலிருந்தது. பாபு லேசில் விட்டுவிடுவாளு? அவன் மனிதப்பிள்ளை அல்லவே!

"பாபு!"

"பேசு, அம்மா; மனசைத் திறந்து பேசு, அம்மா; உன் நெஞ்சிலே இருக்கிற கஷ்டத்தை என் கையிலே ஒளிக்காமல் மறைக்காமல் சொல்லிடு, அம்மா! உன்னோட சங்கடம் எதுவாளுலும் சரி, அதையெல்லாம் ஒருநொடியிலே நான் தீர்த்துப்பிடுறேன், அம்மா!"

"மனுசங்களோட கஷ்ட நஷ்டங்களைத் தீர்க்க தெரிஞ்சவன்—தீர்க்க முடிஞ்சவன்தான் ஆண்டவன்!—நீ எனக்குத் தெய்வமாய் வாய்ச்சிருக்கையிலே, நான் ஏன் எதுக்கும் பயப்படப்போறேன்! எதையோ நினைக்கிறேன்; மனசு ஏனே குற்றுயிரும் குலை உயிருமாகத் துடிக்குது!"

"அப்படி எதைத்தான் அம்மா, நினைக்கிறே?"

"அதெல்லாம் உனக்கு இப்ப விளங்காதடா, என் தெய்வமே!"

''இப்ப விளங்காட்டி, பின்னே எப்பத்தான் விளங்கு மாம்?''

''காலம் வருறபோது எல்லாம் தன்னலே உனக்குப் புரிஞ்சிடும்!''

''எதையும் இப்ப நீ என்கிட்டே சொல்லமாட்டே தானே!''

ரஞ்சனி தொண்டையைக் கனைத்துக் கொள்ள வேண்டியவள் ஆனுள்!

''பாபு, அம்மா பேரிலே நீ கோபப்படாதேடா, கண்ணே! நீ கோபப்பட்டால், உன் அம்மாவுக்கு இந்தப் பூலோகத்தில் வேறே போக்கிடம் உண்டா? புகலிடம்தான் ஏது, பாபு?— நீ மிரண்டால் இந்தப் பங்களா நிச்சயம் தாங்காது: தாங்கவே தாங்காதப்பா! ஏன், தெரியுதா? நீ என்னோட தெய்வம்; எங்களோட தெய்வம். இல்லையா, பாபு? தெய்வம் தப்பித்தான் பிறக்கும்; அதுதான் தெய்வத்தோட விதி!—ஆமா, தெய்வத்துக்கும் விதி உண்டு. அது மாதிரி, நீயும் தப்பிப் பிறந்தவன் தான்; ஏன்னு, நீ என்னோட தெய்வம்; எனக்குத் தெய்வம் நீ! ஆனபடியாலேதான், நான் என்னோட உயிரையே உங்கிட்டே பணயம் வச்சி ருக்கேன்; இப்படிப்பட்ட நிலவரத்திலே, என் மனசான மனசை ஒருநாள் இல்லாட்டி ஒரு நாளைக்கு உன்கிட்டேத் திறந்து காண்பிக்காமல் தப்பி விடுவேனு?—அப்படிக் காண்பிக்கத் தவறினல், பின்னே, அந்தப் பாவத்தையும் பழியையும் சுமந்து கரைக்கிறத்துக்குப் புதுசான கங்கை யைத்தான் தேடிப் போகவேணும் நான். எதுக்கும் நேரம் காலம் வரணும்: அப்ப, என்னோட இந்த நெஞ்சை—நீ சப்பிச் சப்பிப் பால் குடிச்சு ஊட்டி அடிச்ச இந்த நெஞ்சை ஒரே மூச்சிலே பிளந்து உன்கிட்டே காட்டாமல் இருந் திடுவேனு? நான் உன் அன்பான அம்மா இல்லியா? இப்போதைக்குப் பெரிய மனசு பண்ணி எனக்குத் துளி

தாழி விடுதலை கொடுத்திடு, அப்பனே பாபு! நான் போய்ச் சாப்பாடு தயார் செஞ்சாகணும்; தேடி வந்தவங்களுக்கு பசி அறிஞ்சு சோறு படைக்கலேன்னு, விருந்தோம்பலுக்கே மரியாதை கிடைக்காது.'' மார்பகம் எப்பி எம்பித் தாழ்ந்து அடங்கிக் கொண்டேயிருக்கிறது.

அதற்குள்:

சின்னதாக ஓர் ஆலோசனையைச் செய்தான் சின்னப் பையன் பாபு. தனக்கும் மகேஷுக்கும், அதே இடது கன்னங்களில் ஒரே அச்சான கறுப்பு மரு—வடு தோன்றியிருப்பதற்கான காரண காரியத்தை அம்மா முன்னே வைத்து விளக்கம் தெரிந்து கொண்டால்தான், தன் பிஞ்சு இதயம் அமைதி காட்டுமென்று தோன்றியது. ஆனால்- அம்மாவுக்கோ தலைக்குமேல் அலுவல்கள் காத்திருக்கின்றன. பின்னொரு சமயம் கேட்டுத் தெரிந்தால் போயிற்று; இன்னொரு சிதறல். கேட்டான். ''ஆமா; பசி அறிஞ்சு சோறு படைக்கணும்னு என்னமோ சொன்னியே, அம்மா? அப்படியானா, மகேஷ் பசி உனக்குத் தெரியுமோ?'' என்று சந்தேகம் கேட்டான்.

சுரீர்!......

''மகேஷின் பசி எனக்குத் தெரியும், பாபு!''

''எப்படியாம்?''

''அவர் எனக்குத் தெரிந்தவராக்கும்!''

''எப்படி?''

''எப்படின்னா...? எனக்குத் தெரிஞ்சவர்னா, தெரிஞ்சவர் தான். அவ்வளவுதான்!''

பாபு குழம்புகிறான்!—அம்மா குழப்புகிறார்களே?—''அது போகட்டும்; மிஸ்டர் மகேஷ் ஸாருக்குச் சொந்த ஊர் எது, அம்மா?'' என்பதாக மறு கேள்வியை முடுக்கி விட்டான்.

''தஞ்சாவூர்.''

''அடடே, உன் ஊர்தானா? இந்தச் சிதம்பர ரகசியத்தை அப்பவே சொல்லியிருந்தா, எனக்குத் தலைவலியாவது மிஞ்சியிருக்கும்; உனக்கும் தொண்டைத் தண்ணி வற்றியிருக்காது. இல்லியா, அம்மா?''

''சரி, சரி. இனியாச்சும் ஆளை விடுறியாப்பா?''

''இன்னம் ஒரேயொரு சங்கதி மிச்சம் இருக்குது, அம்மா. மகேஷ் ஸாரோட ஸ்நேகிதி ரதியோட பசியும் உனக்குத் தெரியுமோ?''

அவள் எதிர்மறையில் தலையை உலுக்குக் குலுக்கினாள்.

''ஒருவேளை, ரதியோட பசி நம்ப அப்பாவுக்குப் புரிஞ்சிருக்கலாமோ?''

''பா...பு!''

தீப்பந்தம் ஏந்தக் கூவினாள் ஏந்திழை.

புயலிடைச் சிக்கிக்கொண்ட அகல் ஆனான் பாபு; உயிர் தத்தளித்தான்; அஞ்சி ஒடுங்கியவனாக, அம்மாவை மெள்ள மெள்ள, மெல்ல மெல்லப் பரிதாபமாய்ப் பார்த்தான்: ''அ...ம்...மா!''

புயல் வருவதும் தெரியாது; போவதும் தெரியாது.

''பாபு, நீ சின்னப் பிள்ளை!''

''ஆமா, நிஜம்தான், அம்மா. நான் சின்னப்பிள்ளைதான்; அதனாலேதான், நான் சின்னப்பிள்ளை என்கிற உண்மையை மறக்காது இருக்கேன்; நெஞ்சை ஒளிச்சு வஞ்சகம் பேச எனக்குத் தெரியாதம்மா; நீ பெற்ற பிள்ளை பொய் பேசுவேனா? அப்படிப் பொய் பேசினால்தான், பொய் பேசின எவன் வாய்க்குப் போசனம் போட ஒப்புவியா,

அம்மா?.. ஆளு, நீதான் என்னை அடிக்கொரு வாட்டி 'தெய்வம், தெய்வம்'னு தலையிலே தூக்கி வச்சு ஆடிக்கிட்டு இருந்தே!''

வாழைப்பழத்தில் ஊசியைச் செருகி விட்டானே பாபு?

இப்போது உயிர் துடிக்க வேண்டிய சீட்டு ரஞ்சனியின் மண்டை ஓட்டிலே விழுந்து தொலைத்தது. பாபுவாவது சின்னப் பிள்ளையாவது! ஊகூம்!—''பாபு, என் தெய்வமே!'' என்று உணர்ச்சிகள் கொப்புளிக்க விளித்துக் கொண்டே ஆருயிர்த் திருமகனை ஆரத் தழுவி உச்சி நுகர முயன்றாள் அன்னை.

ஆனால்—

பாபு, ஆயர் குலக் கண்ணனென நழுவி விட்டான். ''ஐயையோ! மறுபடியும் என்னைத் தெய்வமாக ஆக்கிப் பிடாதே, தாயே! நீ ஒருவேளை என்னைத் தெய்வமாக ஆக்கினாலும்கூட, நான் இனிமே ஒருக்காலும் தெய்வமாக ஆகவே மாட்டேனுக்கும்!'' கைகொட்டி நகைத்தான் சுட்டி.

''நீ தெய்வமாக ஆகவே மாட்டியா, என்ன?... அப்படியானா, நான் கேட்கிறப்ப, கேட்கிற வரத்தை எனக்குக் கொடுக்கிறதாக வாக்குக் கொடுத்தியே, பாபு?— அது என்ன ஆவதாம்?'' இருதயத்தைப் பற்றின்றிப் பற்றியவாறு, தொண்டை வற்ற, நம்பிக்கை வறட்சியோடு கேட்டாள் பாபுவின் தாய். பாபு தெய்வமாக ஆகவே மாட்டானுமே?— அப்படியென்றால், ஒரு சமயம் பரசுராமர் அவதாரம்தான் எடுப்பானோ, என்னவோ?

தைத்துவிட்ட முள்ளை முள்ளைக்கொண்டோ, இல்லாவிட்டால், முள் வாங்கியைக் கொண்டோ பிடுங்கி வீசி எறிந்தால் மட்டுமே, முள்ளின் உபாதை நிரந்தரமாக விடுபட முடியும்!

ரஞ்சனியால் தைத்த முள்ளின் புரையோடிய வலியைத் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை.

பாபுவின் இதழ்கள் அசைந்த அரவம் கேட்டதும், அரவம் கண்ட பாவனையில் நடுநடுங்கி நிமிர்ந்தாள் பெற்றவள்.

"அம்மா, கண்ணுக்குத் தெரியாத தெய்வத்தாலே மட்டுந்தான் வரம் கொடுக்க முடியுமா?" என்று வினுச் சரம் தொடுத்தான் பாபு. "ஏன், கண்ணுக்குத் தெரிகிற மனுசங்களாலேயும் வரம் கொடுக்க முடியாதா, அம்மா?" என்று தொடர்ந்தான்.

"முடியுமா?"

"முடியாதா?"

"எப்படி முடியும்?"

"எப்படி முடியாது?— சொல்லேன், அம்மா!— அப்பாவை நீ கலியாணம் பண்ணிக்கிட்ட அந்த நாளிலிருந்து இந்த நாள் பரியந்தம், அப்பா உனக்கு ஒரு வரத்தை— ஒரேயொரு வரத்தைக் கூடவா வழங்கவில்லை?—நெஞ்சிலே கையை வச்சுச் சொல்லேன், அம்மா!"

திரும்பவும் 'விதி' கணை தொடுக்கிறது.

திரும்பவும் நெஞ்சின் மரண வலி விதியாகத் திரும்புகிறது.

ரஞ்சனி கதறுகிருள்: "எனக்கு உயிர்ப் பிச்சை தந்து, மடிப் பிக்சை தந்த என்னுேட அன்புத் தெய்வம், ஆமா, உன்னுேட அன்பான அப்பா எனக்கு மனப்பூர்வமாய் வழங்கிய மகோன்னதமான வரமே நீ தாண்டா, பாபு!"

''பின்னே என்னம்மா?— நானும் ஒரு சராசரி மனித் ஜன்மமாகவே இருந்து, அதாவது, நீ பெற்ற பிள்ளையாகவே இருந்து, நீ கேட்கிற வரத்தை, நீ கேட்கிற சமயத்திலே கட்டாயம் நானும் வழங்கிடுறேன், அம்மா!— என்னைப் பத்து மாசம் சுமந்து பெற்ற புண்ணியவதியான உன் மேலே ஆணை வச்சு, சத்தியம் வச்சுச் சொல்லிட்டேன், தாயே!''

பாபுவுக்கு உடல் சிலிர்த்தது.

பாபுவின் ரஞ்சனிக்கு உள்ளம் சிலிர்த்தது.

''ரொம்ப ரொம்பச் சந்தோஷமாகப் போச்சு, பாபு; நீ மகா கெட்டிக்காரப் பிள்ளை; இத்தனை தெய்வாம்சம் கொண்ட உன்னை நான் என் வயித்திலே சுமக்கிறதுக்கு பாக்யம் செஞ்சிருந்த நான் உண்மையிலேயே கொடுத்து வச்சவள்தான்! நான் மறு தரமும் சொல்லுகிறேன்: நீ தெய்வமாக ஆனாலும் சரி, ஆகாட்டாலும் சரி!— அது உன்னோடே சொந்த விவகாரம்!— ஆனா, என் வரையிலே நீ எப்பவுமே என்னோடே தெய்வமேதான்! உன்னை நான் தெய்வமாகப் பாவிக்க ஆரம்பிச்சதுக்கப்புறம், இங்கே எனக்குக் குறுக்கே பரசுராமருக்கு என்ன வேலை?... நல்ல பொழுதாய்த்தான் விடிஞ்சிருக்குது; தொட்டதெல்லாம் தலைவலி; தொட்டதுக்கெல்லாம் தலைவலி!... நான் புறப்பட்றேன், மகனே!''

மகனது அனுமதி தாய்க்கு அவசியம் கிடையாது.

அங்கே—

பழனி மலையில் பழனி ஆண்டியின் வடிவம்: சிலை.

இங்கே, பாபுவுக்கும் சிலை நிலைதான்.

நந்தினி விலாசம் பெருமனையின் பெருமாட்டி ரஞ்சனியின் பார்வையில் இப்போது வழக்கம்போலே மகேஷ்—ரதி

ஜோடி இணையிரியாமல் காட்சியளித்ததில், அவளிடமிருந்து ஓர் ஆசுவாசப் பெருமூச்சு, புற்றைவிட்டு வெளியேறும் பூநாகமாகப் புறப்பட்டது.

அம்மாவை அழைப்பான் மகன்.

மகனை அரவணைப்பாள் அம்மா.

''அம்மா, இப்போ நான் உன் கையிலே ரெண்டு லெட்டர் கொடுக்கிறேன்; நீ சமயம் வாய்க்கையில், படிச்சுப் பார்!''

''ஆகட்டும்; அப்படியே செய்வேன்,'' என்று உறுதி கொடுத்து, கொடுக்கப்பட்ட கடிதங்களைப் பத்திரமாக வாங்கிக் கொண்டாள் ரஞ்சனி.

''திருப்தி தானே, பாபு''

''பரமதிருப்தி, அம்மா!''

மரங் கொத்திப் பறவையின் தலைக் கொண்டைச் சிவப்பு, முகப்பு மண்டபத்தின் வெண்ணிலவில் பாங்காகப் பிரதிபலிக்கிறது.

# அந்தி நிலாச் சதுரங்கம்

## 8: தெய்வமாம் தெய்வம்!

தெய்வமாம், தெய்வம்!...

*நல்ல வேடிக்கைதான்!*

*நல்ல விளையாட்டுத்தான்!*

பாபுவுக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது; ஆத்திரம் ஆத்திரமாக வந்தது; கோபம் கோபமாக வந்தது!— 'அம்மா சுத்த மோசம்!— சிருஷ்டியின் ரகசியத்தைத் துப்புக் கண்டுப் பிடிப்பதற்கு லாயக்கு இல்லாத ஒரு வாண்டுப் பயலைத் தெய்வமாக ஆகச் சொல்லுறாங்களே!— சே, தலைவலியாய்ப் போச்சுதே?— இந்த மகேஷ் எப்பத் தான் அவரோட நாட்டுக்குப் போய்த் தொலைவாரோ, தான் ஹாயாக இந்த நந்தினி விலாசத்திலே முன்னைமாதிரி நிம்மதியாகவும் சந்தோஷமாகவும் ஆடிப்பாடி விளையாடு

லேனே?" பாறுங்கல்லைக் கட்டி விட்டமாதிரி, கனத்தது: நெஞ்சு கனக்கும்போது, கண்களும் கனக்கவே செய்யும்; சுடுநீரின் முத்தங்கள் அவனுடைய கதுப்புக் கன்னங்களில் முத்தமிட்டன; ஒரு சொட்டுக் கண்ணீர், அவனது இடது கன்னத்துக்கு அவமானம் கற்பித்துக்கொண்டிருந்த அசிங்க மான கறுப்பு மருவில்—வடுவில்—மச்சத் தழும்பில் தவழவே அவன் நெருப்புச் சுட்டு விட்டமாதிரி பதறினான்; துடித் தான்; சுடுநீர் என்றால், சுடாமல் இருக்க முடியாதுதான்! திரும்பிப் பார்த்த அவனது பிஞ்சு மனத்தின் கூத்தரங்கில் மகேஷ் திரும்பிப் பார்க்கவே, அவன் தன்னுடைய கையி லிருந்த ஊது வத்தியை வீசி எறிந்தான், வீசியெறியப்பட்ட ஊது வத்தி மணக்குமா?— ஓ, அங்கே அம்மாவின் உருவம் நிழலாடுகிறது!—அதனாலேதான் மணம் பரப்புகிறது!

'ஓமேகா" பூஞ்சிட்டுக்குக் கடமை ஒன்றில்தான் கண்! இரவு மணி எட்டு ஆகி விட்டதாம்; சொல்கிறது,

மானிடர்களுக்குக் கண்ணெல்லாம் அவரவர்களின் சுய நலத்திலேதான் கண் கொத்திப் பாம்பாகக் கட்டுண்டு கிடக்கிறது!

ஊதுவத்தி நெஞ்சைத் தொட்டு நினைவைத் தொட்டு மணக்கிறது,

பாபுவுக்கு ஊதுவத்தி என்றால், சின்னஞ்சிறு பிராயம் முதலாகவே நிரம்பப் பிடிக்கும். அப்பா சொல்லித் தந்த பாடம் அது; நேற்றுச் சொன்னமாதிரி இருக்கிறது.

"பாபு, இங்கே இந்தப் பரிசுத்தமான பூஜை அறையிலே கொலு இருக்கிற மாங்காட்டு ஆத்தாளோட சந்நிதானத் திலே மணம் பரப்பிக்கிணு இருக்கிற இந்த ஊதுவத்தியிலே தான் மனித வாழ்க்கையோட தத்துவமே அடங்கிக் கிடக்குது; மானுடப் பிறப்பு என்கிறது தவஞ் செஞ்சு கிடைக்கக் கூடியது; அப்படிப்பட்ட அபூர்வமான மனிதப்

பிறவிக்கு ஒரு அர்த்தம் இருக்க வேணுமா? அதனாலேதான், ஆண்டவன் அன்பு என்கிற அற்புதமான தத்துவத்தையே உண்டாக்கிக் கொடுத்திருக்கான்; அந்த அன்பின் சக்திக்கு அழகான சாட்சியைச் சொல்லத்தான் அதோ, ஊதுவத்தி தன்னை அழிச்சுக்கிட்டு, ஆனந்தமான வாசனையைத் தெய்வத்துக்கு 'நைவேத்தியம்' பண்ணிக்கிட்டிருக்குதாக்கும்! அன்பின் காலடியிலே சரணாகதி அடைகிற மன்னிக்கக் கூடாத, மன்னிக்க முடியாத எந்தப் பாவமும் கூட விடி மோட்சம் பெறாமல் தப்பவே முடியாது! இதுவேதான் அன்போட சக்தியுமாகும்! தன்னையே அழிச்சுக்கக்கூடிய ஒரு இக்கட்டான நெருக்கடி நிலைமை ஏற்பட்டாலும் சரி, மனிதர்கள் மனிதாபிமானத்தோடே அன்பை வாழ்த்தவும் வணங்கவும் தவறக்கூடாது! இன்னொரு நடப்பையும் முந்தி ஒரு வாட்டி அம்மாகிட்டே நான் சொன்னப்ப, நீயும் இருந்தாய்; திருப்பியும் சொல்றேன்: நான் மற்றவங்க கிட்டே அன்பைக் காட்டினேன்; தெய்வம் என் பேரிலே அன்பைக் காட்டிச்சு! அதனாலேதான் அன்றைக்கு ஆண்டியாக இருந்த உன் அப்பன் இன்றைக்கு பணம் காசோடவும் சீரும் செல்வாக்கோடவும் இந்தச் தமிழ்ச் சமூகத்திலே நல்ல பேரோடு தலைநிமிர்ந்து நடக்கவும் முடியுது! அங்கே பாரு, பாபு!—அந்த ஊதுவத்தி தன்னையே முழுமையாக எரிச்சுக்கிட்டுது; ஆனாலும், ஊதுவத்தியோட அந்தத் தெய்வ மணம் இன்னமுங் கூட நாலா பக்கத்திலேயும் எத்தனை அற்புதமாய்க் கமழ்ந்துக்கிட்டு இருக்குது. கண்டியா, பாபு?—இதுமாதிரி, நாம மற்றவங்ககிட்டே காட்டுற அன்பு நாளும் பொழுதும் உயிர் வாழக்கூடிய அன்பாகவும் இருக்க வேணும்; உண்மையான அன்புக்கு லாப நஷ்டக் கணக்கைப் பார்க்கிறத்துக்கு நேரம் இருக்காது!— ஆமா; அன்பு உடையவங்க எல்லாம் உடையவங்கதான்!— மறந்திடாதே! அதாவது, மற்றவங்ககிட்டே அன்பைக் காட்டுறதுக்கு நீ மறந்திடாதே! நீ நன்றிக்கடன் பட்டவன்; அதனாலே, நீ

காட்டக்கூடிய அன்பு பிற்காலத்திலே ஒரு சரித்திரத்தைப் படைக்கக்கூடியதாகவும் அமைஞ்சிடலாமே?"..

தந்தையின் அனுபவ ரீதியான பேச்சு பாபுவின் குருத்து மனத்தில் இன்னமும் ஒலித்துக்கொண்டிருக்கிறது; எதிரொலித்துக் கொண்டிருக்கிறது; மேனியின் சிலிர்ப்பு இன்னமும் அடங்கவில்லே; ஒடுங்கவில்லே; 'அப்பான்னு, அப்பாதான்; அப்பாவேதான்!' பெருமையான பெருமிதத்தில் மிதந்தான் மணிப்பயல், 'எத்தனே பெரிய விஷயத்தை எத்தனே எளிமையாய் விளங்க வச்சிட்டாங்க அப்பா!'— அவன் பெருமையும் பெருமிதமும் மேலும் ஓங்கின.

அங்கே டி. வி.யில் என்னவோ படம் நடந்து கொண்டிருந்தது.

அக்கா இனிமேல் படம் முடிந்ததும்தான், மூச்சு விடுவாள்; மூச்சுக் காட்டுவாள்!—நல்ல நந்தினி அக்கா!—நாளைக்குப் புருஷன் வீட்டுக்குப் போனுல், அடுப்படியிலும் ஒரு டி. வி. பெட்டியை வாங்கி வைத்துக் கொள்வாள் போலிருக்கிறது. விதி எழுதி வைத்த மாதிரி, என் இடது கன்னத்திலேயும் மகேஷ் இடது கன்னத்திலேயும் ஒரே மாதிரியான கறுப்பு வடுக்கள் தென்படும் அதிசயக் கூத்தைப் பற்றிச் சந்தேகம் கேட்டால், என் மனசுக்குச் சமாதானம் உண்டாகிற விதத்திலே ஏதாகிலும் விளக்கமாகச் சொல்ல மாட்டாளோ?—'அதெல்லாம் ஒண்ணும் பெரிய சமாசாரம் இல்லே; நீ போய்ப் பாடத்தைப் படிடா, தம்பி!' அப்படியென்று என்னேப் படிக்கச் சொல்லி உபதேசம் செய்து விட்டு, அவள் தன் போக்கிலே படத்தைப் பார்க்கத் தொடங்கிவிட்டாளே?— இந்தச் சங்கதி பெரிய சங்கதியாக இருந்திருந்தால், அக்கா என்கிட்டே சொல்லாமல் இருந்திருக்கமாட்டாள்!— மருப் பிரச்னே எக்கேடு கெட்டுப் போகட்டும்! எனக்கும் மகேஷுக்கும் ஏதாகிலும் சொந்த

பந்தம் இருந்தாலாவது, நான் மனத்தைப் போட்டுக் குழப்பி கொள்ளலாம்!—ஆனால், நான் யாரோ? மகேஷ் யாரோ?— 'சே! பெரிய சனியனாய் போச்சே? சே!'

மறுபடி, அப்பா 'சடுகுடு' ஓடிவந்து மகனது பிஞ்சு நெஞ்சிலே குதித்தார். தன் மீது உயிரையே வைத்திருக்கும் தன் தந்தையைப் பற்றின பல்வேறு அன்பான பசுமை நினைவுகளில் மெய்ம் மறந்தான் அவன்; அவனுடைய விழிகள் கண்ணீரைக் கூட்டுச் சேர்க்க மறக்கவில்லை. அன்பான அப்பாவை அன்பாக நினைத்தவன், அம்மாவை மாத்திரம் அக்கணத்திலே நினைத்திட மறந்துவிடுவானா?— 'அம்மா, எந் தெய்வமே! முந்தித் தவம் கிடந்த உன்னோடே அன்பான வயித்திலே முந்நூறு நாள் குடியிருக்கக் கூடிய பெரிய பாக்கியத்தை எனக்குத் தந்து, எனக்கு உசிரையும் உள்ளத்தையும் தந்த உன்னையே இன்னம் ஏழேழு பிறப்புக்கும் என்னோடே தாயாக அடையக்கூடிய பாக்கியத்தையும் பொசிப்பையும் எனக்குத் தந்துப்பிடு, தாயே!' அன்று உண்ட தாய்முலைப் பாலமுதம் இன்று நன்றியின் கண்ணீராகப் பெருக்கெடுத்து ஓடுகிறதோ?— 'நீயே எனக்குத் தெய்வமாக ஆகிட்ட பிற்பாடு, நான் உனக்கு எப்படித் தெய்வமாக ஆக முடியுமாம், அம்மா?...நல்ல அம்மா...!'

பாபுப் பையனுக்குச் சொந்தமான அறையில் இப்போது பூந்திரை விலக்கி, வானத்துப் பால் நிலவு தவழத் தொடங்குகிறது.

செவகி அக்காவை அம்மா அதிகாரம் பண்ணிக கொண்டிருக்கிறார்கள்!

"அம்மா!"—தனக்குத் தானாகவும் தன்னில் தானாகவும் அம்மாவை விளித்தான் பாபு!—'பாபு, நீ என்னோடே தெய்வம்; எனககுத் தெய்வம் நீ; அதனாலேதான், நான் என் உயிரையே உன்கிட்டே பணயம் வச்சிருக்கேன். இப்படிப்பட்ட நிலைமையிலே, என் மனசான மனசை

ஒரு நாள் இச்சீராட்டி ஒரு நாள் உன்கிட்டே திறந்து காண்பிச்சாமல் தப்பிடுவேனு, என்ன? அப்படிக் காண்பிக்கத் தவறினல், பின்னே, அந்தப் பாவத்தையும் பழியையும் சுமந்து போய்ச் சரைக்கிறதுக்குப் புதுசாய் ஒரு கங்கையைத் தான் தேடிப் போகவேணும் நான். எதுக்குமே நேரம் காலம் வரவேணும்; அப்போ, என்னோடெ இந்த நெஞ்சை— நீ சப்பிச் சப்பிப் பால் குடிச்சு ஹூட்டி அடிச்ச இந்த நெஞ்சை ஒரே மூச்சிலே பிளந்து உன்கிட்டே காண்பிக்காமல் இருந்திடுவேனு?.. நான் உன் அன்பான அம்மா இல்லையா, பாபு?..."

சிறுகச் சிறுகக் கண்கள் நனையத் தலைப்படுகின்றன, இளம் மார்பு 'டக் டக்' கென்று அடித்துக் கொள்ளத் தலைப்படுகிறது: 'அம்மா, என்னென்னமோ பேசிட்டியே, அம்மா?"— ஐயையோ! வெளியே ஓடிவிடவேண்டும்; இல்லையானல், மண்டை பிளந்து விடும்! ஊகூம்!— வெளியே ஓடிவிடக்கூடாது; என் அம்மாத் தெய்வத்திடம், என் தெய்வ அம்மாவிடம் ஓடிவிட வேண்டும்!—அப்போதுதான் என் தலை தப்பமுடியும்!—நான் தப்பிப் பிழைக்கவும் முடியும்!—நான் தப்பிப் பிறந்தவன் ஆயிற்றே?— அம்மா வாய்க்கு வாய் சொல்லமாட்டார்களா?—'அம்மா! என்னோடெ தெய்வமே!"

"பாபு...பாபு!"

பெற்றெடுத்த புண்ணியவதியைத் தவிர, பாபுவை இவ்வளவு பாசத்தோடும் இத்துணை பரிவோடும் இத்தகைய பதற்றத்தோடும் அழைத்திட யாரால் முடியும்?

'நான் கொஞ்சம் முன்னே, 'அம்மா, அம்மான்னு அலட்டினது எப்படிக் கேட்டிருக்கும்? அவங்க அப்ப உள்ளே அடுப்படியிலே இருந்தாங்களே?'—சின்னப் பிள்ளைக்குப் பெரிய ஐயம் புறப்பட்டது.

அதே சடுதியில்:

"பாபுவின் பேரிலே நான் வச்சிருக்கிற துல்லிதமான அன்பும் அயனான பாசமும் உன்னைக்காட்டிலும் மயிரிழையும் குறைஞ்சது கிடையாது!' என்று சொல்லாமல் சொல்வதைப் போன்று, அங்கே பாபுவைப் பெற்ற அப்பாவும் அப்போது பிரசன்னமானார்.

இப்போது—

பாபுவுக்குத் திக்குமுக்காடிப் போய்விட்டது. தாய்க்கும் தகப்பனுக்கும் ஊடாக, ஊடும்பாவுமாகச் சேய் அகப்பட்டுக் கொண்டால், நிலைமை இவ்வாறுதான் அமையுமென்பதற்கு யதார்த்தமான உதாரணமாகத் திகழ்ந்தான் பொடியன்.

என்ன?

பொடியனா பாபு?

பாபுவா பொடியன்?...

பாபுவைத் 'தெய்வமே, தெய்வமே!' என்று போட்டி போட்டுக்கொண்டு அப்பாவும் அம்மாவும் தலையில் தூக்கி வைத்துக் கூத்தாடுகிறார்கள்.

பாபுவோ, தனக்குப் பரசுராமர் அவதாரம்தான் இஷ்டம் என்கிறமாதிரி பேசிவிட்டான்.

இந்நிலையில்—

மீளவும் அன்பின் போட்டி ஆரம்பமாகிவிட்டது.

அன்பு மீளமுடியாமல் தவிக்கத் துவங்குகிறது.

"இங்கே வாயேன், பாபு!"

இது அப்பா.

"ஊம், ஜல்தி!"

தூண்டுதலுக்குப் பேர்: ரஞ்சனி.

இருந்திருந்தாற்போன்று, பாபுவுக்கு ஒரு சந்தேகம் கண்சிமிட்டியது. 'சற்றுமுந்தி நான் மாடியிலேயும் கீழேயும் அப்பாவோட அந்தரங்க அறையையும் அம்மாவுக்குச் சொந்தமான கூடத்தையும் ஒரு அலசு அலசினதை இவங்க ரெண்டுபேரும் உளவு அறிஞ்சுதான் வழக்கப்படி என்னைக் கண்டிக்க இப்படி இழுத்துக்கிட்டுப் போறுங்களோ?' சின்னப்பிள்ளையின் சின்னமனம் வேண்டாத ஆராய்ச்சியில் வேண்டா வெறுப்புடன் பின்னிக்கிடந்த சூட்டோடு சூடாக, ஓட்டமும் நடையுமாகப் பாய்ந்து சென்ற பெற்றோர் களோடு உடன் தொடர்ந்து, நின்று நிலைத்த இடத்தை ஏறிட்டுப் பார்த்தபோது, அவன் கண்களில் அடுத்த முறை யாகவும் அந்தப் பரசுராமர் அட்டகாசமான அமர்த்த லோடு காட்சியளித்தார்!

'எனக்குப் பரசுராமர் அவதாரம்தான் ரொம்ப ரொம்பப் பிடிக்கும், அம்மா!' அவன் தன்னையும் அறியாமல் தன்னுடைய இடது கன்னத்தின் வடுவைத் தடவி பார்த்துவிட்டு, பிறகு, தனது இடது பக்கத்து இருதயத் திற்குத் தடவிக் கொடுக்கவும் ஆரம்பித்தான். வடுவின் நினைவு அவனை மகேஷை நினைவுகூரச் செய்யவும், மறக்கவில்லை!—'மகேஷ், நீ யார்?'

என்னவோ, முகப்பில் சத்தம் கேட்டாற்போல இருந்தது.

திரையை நீக்கியும் பார்வையை நீவியும் பார்த்தான் பாபு. நான் தொலைபேசியில் கேட்டுக்கொண்டதற்கு இணங்கி, தோழன் அசோகன் ஹாஸ்டலிலிருந்து என்னு டைய பெட்டி படுக்கையை எடுத்துக்கொண்டு ராத்திரியே இங்கு வந்து சேர்ந்தால் தேவலாம்!

''பாபு!'' அழைத்தாள் அம்மா. கொஞ்சப் பொழுதுக்கு முன்னதாக, 'எனக்குப் பரசுராமர் அவதாரம்னுதான் ரொம்ப ரொம்பப் பிடிக்கும்!' என பாபு கருத்துத் தெரி

வித்தது அவளிடம் மனக்குகை ஒலியமென நின்றது; நிலைத்தது. 'அதிசயப் பிறவியான, அன்புமிக்க என்னோட தெய்வமான பாபு, கிருஷ்ணன், முருகன்னு ஏதோ ஒரு அவதாரம் எடுக்காமல், யாரோ ஒரு முனிவரோட கடைசி மகனான அதிசயப்பிறவியான பரசுராமர் அவதாரத்தை எடுப்பானுமே?'—முன்னைவிட அதிகப்படியான வலியும் வேதனையும் தற்போது அவளது முதுகுப்புறத்திலிருந்து வெளிக்கிளம்பிற்று. இவ்விதமான நினைவுச் சருகுகள், அவளுடைய மனச்சாட்சியின் தீச்சுடரில் வெந்து சாம்பலாகக் காத்திருந்தனவோ, என்னவோ?

''பாபு, நீ உன் அம்மா கையிலே கொடுத்த ரெண்டு லெட்டரையும் வாங்கிக்க; இந்தா!''

மின்விளக்குகள் 'சடக்'கென்று நின்றன; நின்ற சுவடு காட்டாமல், 'சடக்'கென்று எரியவும் செய்தன.

நையாண்டித்தனமான சாகசமும், குறும்புத்தனமான சூட்சுமமும் விழிகளில் விதியாகச் சிரிக்கக் கடிதங்களை வாங்கிக்கொண்டான் பாபு. முனைப்பான யோசனையில் முனைந்தவனாக, பொல்லாத தீவினையாகப் பளிச்சிட்ட அந்தக் கன்னங் கறுத்த மருவை—வடுவைச் சீற்றமும் வேதனையும் தாங்காமல் தடவிக்கொண்டேயிருந்தான். ''இந்த வடுப் பிரச்னையை, அதாகப்பட்டது, எனக்கும் மகேஷுக்கும் ஒரே மாதிரியாக இடது கன்னத்திலே அநாகரிககாக மரு விழுந்திருக்கிற சிருஷ்டி ரகசியம் பத்தின பிரச்னையை இந்த நல்ல சந்தர்ப்பத்திலே அப்பாகிட்டேயும் அம்மாகிட்டேயும் கேட்டா, என்னவாம்?'—எண்ணத்தைச் செயலாற்ற எண்ணியவனின் இதயத்தின் இதயத்தில் அம்மா பேசிய பேச்செல்லாம் எதிரொலிக்கவே, ஓர் அரைக்கணம் தடுமாறி, மறு அரைக்கணத்தில் சுய உணர்வை மீட்டுக்கொண்டு, பிரச்னையைப் பெற்றவர்களின் சந்நிதியில் முன்னே வைக்க வாயைத் திறந்தான் பாபு.

அத் தருணத்தில்:

சோமையா வந்து நின்றார்; "சின்ன எஜமானரைத் தேடி யாரோ அசோகனும் வந்திருக்குதுங்க," என்றார்.

பாபு கடிதங்களைக் கையிலே ஏந்தியவனாக, முகப்பு மண்டபத்துக்குப் புறப்பட ஆயத்தப்படுகிறான்.

"பாபு, இந்த ரெண்டு லெட்டரையும் என்ன செய்யப் போறே?" என்று விசாரணை செய்தார் நந்தினி விலாசத்தின் பாங்கர் ரஞ்சித்.

"லெட்டர் ரெண்டையும் ஊறுகாயா போடமுடியும்?— மூச்சுக்காட்டாமல், இது ரெண்டையும் மிஸ்டர் மகேஷ் கையிலே ராத்திரி விருந்து முடிஞ்சதும் ஒப்படைச்சிடுவேன்," என்று விவரத்தைத் தெரியப்படுத்திவிட்டுத் தலையை உயர்த்தினான் பாபுப் பயல். அவன் திருஷ்டியில் இப்போதும் பரசுராமரின் சித்திரம் வினையெனப்பட்டுத் தெறித்தது. மின்வெட்டும் நேரம் சிலை ஆனான்; மறுகணம் சிலைக்கு ஜீவன் வந்தது. "ஒரு செகண்டிலே வந்திட்டேன்," என்று சேதி சொல்லிவிட்டு, அங்கிருந்து விரைந்தான்.

ரஞ்சனி ஊமைவலி தாளாமல் திண்டாடுகிறாள்.

ரஞ்சித் நெஞ்சுவலி தாங்காமல் தத்தளிக்கிறார்.

இந்தப் பாபு, பழனிமலை ஆண்டியா, என்ன?

உண்மைதான்! பாபு, பழனிமலையின் ஆண்டியாகத்தான் இருப்பான்!

பின்னே, பரசுராமரின் அவதாரம்தான் தனக்கு மிகவும் இஷ்டப்படுமென்பதாகப் பயங்காட்டவில்லையா இந்தப் பாபு?

ஆமாம்; பாபு அதிசயமான பிறவி; பிறப்பு! தப்பிப் பிறந்தவன்; தப்பிப் பிழைத்தவனும் அவனே!...

ராகங்களிலே, அபூர்வமான ரகம், அவன் அபூர்வராகம்!

அப்படியென்றால், வாழ்க்கை எனப்படுவது இசை மன்றம் கணக்குத்தானா?...

ரஞ்சனியின் நினைவலைகள் ஆர்ப்பரிக்கின்றன; முகம் வேர்வையில் நனைகிறது; ஈரப்பூபதத்தில், பேசும் விழிகளின் பேசாத கண்ணீரும் சேர்த்தி என்றைக்கும் இல்லாத திருநாளாக, இன்றைக்கென்று காலை முதலே இனம்புரிந்த அச்சமும், இனம் புரியாத ஏக்கமும், வாய்விட்டுச் சொல்ல வொண்ணாத தவிப்பும், மனம்விட்டு அழுது தீர்க்க முடியாத உருக்கமும், மனச்சாட்சி குற்றுயிரும் குலை உயிருமாகத் துடிதுடித்த அடி நெஞ்சை அடியும் முடியும் இல்லாமல் அரித்து அரித்துத் தின்று கொண்டிருந்த அந்தப் பயங்கர மான—மகாப் பயங்கரமான நரக வேதனையையும் அவள் உள்ளூற உணர்ந்து கொள்ளத் தவறி விடவில்லைதான். என்னவோ நடந்துவிட்டது!...ஆனாலும் என்னவோ நடக்கப் போகிறது!

காக்கை எங்கேயோ, ஏனோ கரைகிறது.

'ஆத்தாளே, மாங்காட்டு ஆத்தாளே!'

ரஞ்சனி விம்முகிறாள்.

சோதனை இல்லையென்றால், வாழ்க்கை இல்லையா?

சோதனை இல்லையென்றால், தெய்வமே இருந்திருக் காதோ?—இருந்திருக்க இயலாதோ?

'தாயே!'

விம்மல், தொடர் கதை; தொடரும் கதை.

'நான் மகாபாவி!... மன்னிக்க முடியாத பாவி நான் மன்னிக்கக் கூடாத துரோகி நான்!... ஐயையோ, அந்தச் சோதனை ஏன் ஏற்பட்டுத் தொலைச்சுது?...ஈஸ்வரா!'

நெஞ்சின் வலி மிஞ்சுகிறது.

மின்காற்று இதம்பதமாக வீசும்.

அந்தச் சடுதியிலும்கூட,ரஞ்சனி அந்த விதிக்கூத்தை—வினைக்கூத்தைத் திரும்பிப் பார்க்கிறாள்; பார்க்க வேண்டியவள் ஆகிறாள்!— விதி ஆடத் தொடங்கிய அந்தி மாலைச் சதுரங்க ஆட்டம், விதியின் எழுத்தைக் கிழித்து வீசியதைப் போன்று ரஞ்சித்—ரஞ்சனி ஜோடி மேற்கொண்ட புரட்சிச் சவாலின் தார்மிகமான புனித முடிவின் பேரில் தொடர்ந்து பிறகு, அது அந்தி நிலாச் சதுரங்க ஆட்டமாக உருக் கொண்டு, அந்த ஆட்டமும் அந்த விளையாட்டும் கடைசியில் விதிக்குத் தோல்வியை ஏற்படுத்திக் கொடுக்க நேர்ந்த அந்தச் சித்திர—விசித்திர நிகழ்ச்சி, இப்போதும் அவள் ரத்தத்தை உறையச் செய்யத் தவறி விடவில்லைதான்!— 'ஐயையோ!'— தன் மார்பகத்தை— அன்பு அத்தான் ரஞ்சித்தும் அருமை மகன் பாபுவும் ஆசை தீர விளையாடிய தன் மார்பகத்தை அழுத்தி அழுத்தித் தேய்த்துவிட்டாள்.

அப்படியென்றால், சோதனையின் வெற்றி தோல்வியை நிர்ணயித்து முடிவை வெளியிடுகின்ற ஒரு சதுரங்க ஆட்டம் தான் இந்த உலக வாழ்க்கையா?

இன்றைக்குக் கபாலம் கட்டாயம் வெடித்துச் சிதறி விடும்!...பேஷாக வெடிக்கட்டும்; சிதறட்டும்!

அத்தான் மறுபடி சிரிக்கிறார்: அவருக்கு மட்டிலும் உரியதான அளப்பரிய அன்புடன் சிரிக்கிறார்.

ரஞ்சனி கதறுகிறாள்: 'அத்தான், என் சுவாமியே! சாக வேண்டிய என்னை உயிர் பிழைக்கப் பண்ணியதோடு

தில்லாது. எனக்கும் ஒரு கௌரவத்தையும் மானத்தையும் வாழ்க்கையையும் அருள்பாலித்து, என்னையும் இந்தச் சமுதாயத்தின் வீதிகளிலே தலை நிமிர்ந்து, தலையை நிமிர்த்தி நடக்கப் பண்ணின உங்களோட மகத்தான அன்புக்கு என் வரையிலும் ஒரு மகத்தான சரித்திரமே உண்டுங்க!... ஆமாங்க, அத்தான்!— நான் செஞ்ச மன்னிக்க முடியாத மன்னிக்கக் கூடாத அந்த மகாப் பெரிய பாவத்துககுப் பரிகாரமாகவும்—நீங்க செஞ்ச ஈடு எடுப்பில்லாத மகாப் பெரிய புண்ணியத்துககு நன்றிக் கடனுகவும் என்னோட இந்தப் பாழும் உயிரை உங்களோட அன்பே வடிவான காலடியிலே காணிக்கை செலுத்திறுஞ்தான், என்னோட ஆவி வேகுமோ, என்னமோ?'—புலம்பல் நிற்கக் காணோம்! தன் முதற்காதல் தோற்ற விரக்தியில் செத்து மடியவிருந்த தன் உயிரைக காத்து, மானத்தையும் காத்து, தனக்கும் ஒரு வாழ்வை அளிகக அன்போடு முன் வந்து, தன் கழுத்தில் தாலி கட்டிய அத்தான், அப்போதும் வழக்கம் போல நெஞ்செங்கும் நீக்கமற நிறைந்திருக்கக் கண்டாள் அவள்!—அத்தான், என் சுவாமியே! இந்தப் பாவியை ரட்சிக்கச் சிலுவையை ஏந்தி, அன்பின் அவதாரம் எடுத்திருககிற என்னோட கர்த்தரே!...

பாதங்களும் நனைகின்றன.

பாவமன்னிப்பில், வாழ்க்கை சீரடைந்துவிடாதா?

"தெய்வமே!"

பாபு ஓடோடி வந்து, அன்னையின் நெஞ்சகத்திலே 'தொபுகடீர்' என்று குதித்தான். பாபு தெய்வமேதான்!.. பழநி ஆண்டித் தெய்வமேதான்!

எதை நினைப்பாள் ரஞ்சனி?

ரஞ்சனி எதைத்தான் மறப்பாள்?

நினைவும் மறதியும்தான் கூட்டிக் கழிக்கையில், வாழ்க்கையாக உருக்காட்டுப்படலம் வாசிக்கிறதோ?

அப்படியென்றால்—

மறைப்பதும் வெளிப்படுத்துவதும் வாழ்க்கையாக ஆகாதா? ஆவதும் இல்லையா?

சே!...

என்ன வாழ்க்கை!

வாழ்க்கையாம், வாழ்க்கை!...

மண்!

வெறும் மண்!

இந்த மண் வாழ்வே மண்!...

மறுபடியும் பாபு, பழனி அப்பன் ஆகிவிட்டானே?—பழனி மலையிலே, சுவாமி தரிசனம் முடிந்து, திருநீறு பூசிக்கொண்டதும், அது தன்னுடைய கண்களில் தெறித்து கண்களின் கரிப்பும் எரிச்சலும் மிஞ்சியதைக் கண்ட மகேஷ், பதைத்து நெருங்கித் தன் கண்களை அன்புடன் ஊதிவிட்ட காட்சியைக் கண்ட பாபு உடனே மகேஷை நெட்டிப் பிடித்துத் தள்ளிவிட, இதன் விளைவாக, அத்தான் சினமடைந்து தன் அருமைப் பாபுவை அறைந்த காட்சி படம் காட்டியது. தன்னை அவ்வளவு சுளுவிலே யாருமே ஏமாற்றிவிடவோ, அல்லது விலக்கி வைத்துவிடவோ முடியாதென்று என்ன வெல்லாமோ பேசிய பாபுவின் சொற்கள் ஒலிக்காட்சி ஆயின. 'பாபு, நீ என்னென்னமோ பேசுறே; ஏதேதோ கேட்கிறே!—இனியும் என்னாலே உங்கிட்டேயிருந்து தப்ப முடியாதப்பா!...தப்பவே முடியாதடா!...' பரசுராமர் ஏன் அப்படிக் கபடமாகச் சிரிக்கவேண்டும்?... 'மாங்காட்டுக் காமாட்சித் தாயே!'

ரஞ்சித்தும்கூட தமது அருமைப் பெண்டாட்டியைப் போலவே அப்போது பழனி மலையிலேதான் இருந்திருக்க வேண்டும்!—'நிஜமாவே, நீங்க என்னோடே சொந்த அப்பாவா இருந்திருந்தா, இப்படி வன்மத்தோடே என்னை அறைஞ்சிருக்கவே மாட்டீங்க!' தரையில் கடல் அலையால் தூக்கி வீசப்பட்ட கெண்டையின் துடிப்பைக் காட்டிலும் ஒருபடி கூடுதலாகவே அவர் துடித்தார். 'அப்பனே பாபு! என்னோடே தெய்வமே!...எங்களோட தெய்வமே!' பாபுவின் அவதாரப் பிரச்னையில், தங்கள் மைந்தன் பரசுராமராகவும் அவதாரம் எடுத்திருக்கலாமே என்பதாக ரஞ்சனியிடம் சொன்ன சொற்களில், அவர் மனச்சான்று நெகிழ்ந்து தவித்தது. திரையிட்ட சுடும் நீரில் பரசுராமரின் படம் மறுபடி திரையிடப்பட்டது. 'ஈஸ்வரா!'

"ரஞ்!...கண்ணைத் துடைச்சுக்க சீக்கிரம்!"

"நீங்களும் மூஞ்சியைத் துடைச்சுக்கங்க, அத்தான்!"

இளவரசுப் பட்டம் தரித்த பாபுப்பயல் சொன்னால், சொன்னதுதான்! வந்துவிட்டான்; ஓடி வந்துவிட்டான்; ஹாஸ்டலிலிருந்து கொண்டுவந்து சேர்க்கப்பட்ட பெட்டி படுக்கைச் சாமான்கள் புடைசூழ ஓடோடி வந்துவிட்டான்! அவன் கைகளிலே அந்த இரண்டு கடிதங்களும் வெகு காபந்தாகவே ஊஞ்சலாடின; ஊசலாடின.

இந்த மனிதச் சாதி, கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திலிருந்து பேசிப்பேசி அப்படி என்னதான் பிரமாதமாகச் சாதித்துவிட்டதாம்?

எனவேதான், இந்த இருபதாம் நூற்றாண்டில், கடிதங்களும் பேசவேண்டியதாகிறது:

ஒன்று:

"என் பிரியமான பாபு!

நீ இல்லாமல் நான் இல்லை!... ஆகவே, நீ என்னோடு கொச்சிக்கு வந்து விடுவாயா? ஏன், தெரியுமோ?

நீ இல்லாமல், நான் இல்லை!...

பிரியமான,

மகேஷ்!"

இரண்டு:

"மகேஷ் ஸாரே!

நீங்கள் இல்லாமல் நான் இருப் பேன்.

ஆகவே, நீங்கள் உடனே இங்கிருந்து புறப்படவும்.

பிரியமில்லாத,

ஏ. பாபு!"

மஹா விஷ்ணுவின் கைச் சக்கரத்தை நயந்துபெற்று, அதைத் தன் காலில் கட்டிக்கொண்ட பாவனையில்தான் பாபு ஓரிடத்தில் நிற்காமல் நிலைக்காமல் சதா சுற்றிக் கொண்டே இருப்பான். பாபுவுக்கு எப்போதும் அவசரம்; எதிலும் அவசரம்!—மேலும், இது அவசரயுகம், பாருங்கள்! "அப்பா, அம்மா! மதியம் விருந்து முடிஞ்ச நேரத்திலே நம்மவீட்டுப் பேஸினுக்குக் கீழே கிடந்த மகேஷோட லெட்டரையும் அதாவது, அந்த மகானுபாவர் எனக்கு வரைஞ்ச இந்த லெட்டரையும், இதுக்கு உண்டான என் பதில் கடிதத்தையும் இப்பவே அவர் கையிலே

ஒப்படைச்சிடப் போறேன்; பிரச்னைன்னு, அதை அப்பவே தீர்த்துக் கட்டிப்புடவேணும்; இல்லாட்டி, எனக்கு மண்டை வெடிச்சிடும்! அப்படியே, நம்ப பங்களாவை என் சிநேகிதனுக்குச் சுற்றிக் காண்பிச்சிட்டு, நொடியிலே திரும்பிட்டேன்; ராத்திரிக்கு மகேஷ் ரதி ஜோடிக்கு வைக்கிற விருந்திலே, என்னோடே அசோகனும் கலந்துக்கிடுவானுக்கும்!'' பாபு அங்கிருந்து பாய்ந்தோட எண்ணினான்; எட்டிநின்ற சிநேகிதனை எட்டியே நிற்கச் சொன்னான். பாதங்களை நகர்த்தியிருப்பான்.

அதற்குள்:

அங்கேயே வந்துவிட்டார் மகேஷ். தனியாக, அதாவது, ரதித் துணை இல்லாமல், தனியாக வந்திருந்தார். வந்வவர், பாபு நீட்டிய கடிதங்கள் இரண்டையும் கை நடுங்க வாங்கிக்கொண்டார்; வாசித்தார்; கார்கால நீர் மேகம் அவர் முகத்தில் கூடாரம் போடுகிறது!—''கொஞ்சம் வெளியே போயிட்டு வந்திடுறேனுங்க,' என்று சொல்லிவிட்டு, மரணதண்டனைக் கைதியின் குலை நடுக்கத்துடன் அங்கிருந்து பிரிந்தார்.

ரதிதேவி உள்ளே நந்தினிதேவியோடு படம் பார்த்துக் கொண்டிருக்கலாம்! பொய் அல்ல!—நாளை நமதே!

மேலே: நிலா!

அந்தி நிலாவா?

கீழே: ரஞ்சித்—ரஞ்சனி தம்பதி!

அதோ, சூன்யம் அவ்விருவரையும் பார்த்துச் சிரிக்கிறது; கைகொட்டிச் சிரிக்கிறது; விதியாகச் சிரிக்கிறது; ஏன், வினையாகவும் சிரிக்கிறது!

ஏன்?...

ஏன்?

ஏன்?...

"ரஞ், அழாதேம்மா; அழப்படாது; இனிமே அழுது என்ன புண்ணியம், ரஞ்...?"—ஆறுதல் சொல்லி, ஆருயிர்த் துணைவியின் அன்புக் கண்ணீரை அன்பின் நெகிழ்வுடன் விலக்கினார் பாங்கர் ரஞ்சித்.

"நீங்களும் அழறீங்களே?... அழாதீங்க, அத்தான்!... ஆண்டவன் அழுதால், இந்த மண் பொறுக்காதுங்க!" செருமிப் பொருமியவளாக, இன்னுயிர்த் துணைவரின் அன்புக்கு ஆதரிச வடிவம் அமைத்த விழிநீரை வழித்தாள் ரஞ்சனி—திருமதி ரஞ்சனி ரஞ்சித்.

எதுவுமே நடக்காததுமாதிரி, அவர்கள் இரண்டுபேரும் ஒரு மாற்றம் வேண்டி முகப்புக்கு வந்து, தனிமையில் ஒதுங்கினார்கள்.

அவர்கள்: ரஞ்சித்+ரஞ்சனி!

அவள் தன்னுடைய மார்பைத் திரும்பத் திரும்பத் தடவிவிட்டாள்; தடவிக்கொடுத்தாள்.

வலிபொறுக்காமல் தடுமாறி, தத்தளித்து, தவித்துக் கொண்டேயிருந்த அருமைமிகு மனைவியைப் பார்க்கப் பார்க்க, அவளது பெருமைமிகு கணவருக்கு உயிர்மூச்சு நின்றுவிடும் போலிருந்தது; ரஞ்சித் தமது பங்குப் பணிக்காகத் தம்முடைய நெஞ்சகத்தை வருடிவிடலானார். தொட்டடுத்த விநாடியில், கைவிரல்கள் இடுப்பைத் துழாவின.

"என்ன தேடுறீங்க, அத்தான்?" என்று கேட்டாள் உரியவள்.

"மாடியிலே என்னோட காத்ரெஜ் மேஜை டிராயர்ச் சாவியைத் தேடினேன்," என்றார் உடையவர்.

''அங்கேயே விட்டுட்டு வந்திட்டீங்க போலிருக்கு!''

''ஆமா, ஆமா; நினைப்பு வந்தாச்சு; அங்கே மேஜை மேலேதான் போட்டுட்டு வந்தேன்!''

''நம்ப ஸி. ஐ. டி. பாபு அங்கே போகையிலே, மேஜையைத் திறந்து உங்க 'பெர்ஸனல்' டயரியைப் படிச்சிட்டான்னு, என்ன ஆகிறதாம்?''

''நம்ம பாபு அந்தரங்கமான அந்த டைரியைப் படிக்க வேணும்னுதான், அப்படி மேஜைமேலே சாவியைப் போட்டுப்பிட்டு வந்திருக்கேனாக்கும்!''

''அத்தான்...'' என்று பதறிவிட்டாள் ரஞ்சனி.

''எடுத்ததுக்கெல்லாம் உணர்ச்சி வசப்பட்டு அவதிப் பட்டது போதாதா?—பத்து வருஷமாகத் தெரிஞ்சுக்காமல் இருந்த தன் கதையை இனியாகிலும் நம்ப பாபு தெரிஞ்சுக்கிட வேணாமா, என்ன?'' குரலைத் தாழ்த்தியும், அன்பை உயர்த்தியும், நெஞ்சை ஒளித்தொரு வஞ்சகம் இல்லாமல், சூழ்நிலையை எடுத்துக்காட்டினார் பாங்கர்.

அவள் 'ஜடம்' ஆனாள். இருதயத்தின் இடப்பக்கநோவு அதிகரித்தது; வழக்கத்தைவிடவும் அதிகப்படியான அழுத்தத்தோடு நெஞ்சிற்குத் தடவிக் கொடுத்தாள்; வளையல்கள் முகப்பு ஒளியில் வைரம் கக்கின; ஜாதி ரோஜாப்பூவின் இதழ் ஒன்று இடதுபுறக் காலடியில் தஞ்சம் அடைந்தது. 'பாபு தன்னோட பயங்கரக்கதை காரணத்தை அறிய நேர்ந்தால், என்னோட கதி என்ன ஆகுமோ? பாபு, என் தெய்வமே!—பரசுராமர் அவதாரம் எடுத்துவிடுவானோ பாபு? அயர்வோடும் களைப்போடும் மார்பகத்தைத் தடவிக் கொண்டேயிருந்தாள்.

''ரஞ், நான் வேணும்னு உன் நெஞ்சைத் தடவி விட்டா?''

"நீங்களா?" மிகப் புதிதான வெட்கத்துடன் விழிகளை இறக்குகிருள் ரஞ்சனி.

மௌனம்.

"ஆச்சரியமாயிருக்கே உங்க பேச்சு? திருநீலகண்டரோட வைராக்கிய நோன்பு பத்து வருஷம் கழிச்சு இப்பத்தான் பூர்த்தி ஆகிறதுக்கு வேளை பார்த்திருக்குப் போலே!"

"எதுக்கும் வேளை கூடிவர வேணுமா, ரஞ்சனி?"

காற்றில் சிக்கி அலையத்துடிக்கும் விளக்கு தப்பி விடும் போது, விளக்கின் ஒளி பிரகாசமாகவே அமைவதற்குச் சரியாக, ரஞ்சினியின் சோகம் சூழ்ந்த வதனம் பளிச் சென்று மலர்ச்சியை அடைந்திட, "அப்படீங்களா? சரி, சரி; விருந்துமுடிஞ்சானதும், பத்து வருஷம் கழிச்சுத் திறக்கப் போற நம்மோட பள்ளி அறையிலே நீங்க எனக்குத் தடவிக் கொடுங்க, போதும்; இப்ப வேணுங்க; உடம்பை என்னமோ செய்யுதுங்க, அத்தான். நான் போறேனுங்க!" என்று சொல்லி அங்கிருந்து நகர்ந்தாள் தலைவி.

பதற்றம் மேலிட, "போட்டுவாரேன்னு சொல்லேன், ரஞ்!" என்று கேட்டுக் கொண்டார் தலைவர்.

அழகான மூரல் சிந்துகிருள் பேரழகி: "ஊம்..., போயிட்டு வாரேனுங்க, அத்தான்!"

"ஆமா, உடம்பை என்ன செய்யுதாம்!"

"என்னமோ செய்யுதுங்க!"

"உன்னைப் பார்த்தால், என்னமோ எனக்குப் பயமாய் இருக்குது. அசந்தும் மறந்தும்கூட, மூணுவது தடவையாக வும் செத்து மடிஞ்சிட பிரயத்தனம் செஞ்சிடாதே, ரஞ், என்ன, சரிதானே?" தரும தேவதையின் முகத்தை நிமிர்த் திக் கெஞ்சினர் தருமப்பிரபு.

ரஞ்சனி இப்போது அழகாக, வெகு அழகாகவே சுடு நீரையும் சிந்துகிறாள்: ''என்னோட அன்புக் கடவுளைத் தனிமையிலே தவிக்கச் செஞ்சிட்டு, நான் இனிமே அப்படியெல்லாம் செஞ்சு வைக்கமாட்டேனுங்க, அத்தான். நான் போய்வரட்டுங்களா? தலைக்குமேலே வேலை ரொம்பக் கிடக்குதுங்க, அத்தான்!'' இடதுகை மோதிரத்திலும் ஈரம் சொட்டுகிறது.

மௌனம் சம்மதம் தந்தது.

''அத்தான் அத்தான்! பரசுராமர் கதையைக் கொஞ்சம் சொல்லுங்களேன்!''

''உனக்குத் தெரியுமே? நம்ம பாபு கூட மதியத்திலே சொன்னனே?''

''உங்க வாயாலே கேட்கணும்னு ஆசையாஇருக்குதுங்க, அத்தான்!''

எங்கோ இடித்த இடி இங்கே தலையிலே விழுந்துவிட்ட மரண வேதனையில், நாடித் துடிப்பு நின்றுவிட்டமாதிரி உணர்ந்தார் பாங்கர்: ''ஜமதக்னி முனிவரோட சம்சாரம் ரேணுகாதேவி; அவள் வழக்கப்படி மண் பிடிச்சுப் பானை செஞ்சு தண்ணி கொண்டார ஆற்றங்கரைக்குப் போனப்ப, வானத்திலே யாரோ கார்த்த வீர்ய அர்ச்சுனன் என்கிற கந்தர்வன் ஒருத்தனைப் பார்த்த மாத்திரத்திலே, மனசு மோகத்தாலே தடுமாறிப் போயிட்டதாலே, பானை செஞ்சு தண்ணியைக் கொண்டுபோக முடியாமல் போயிடுச்சு; கற்புநிலை தவறின மனைவியை முனிவர் மன்னிக்கத் தயாராக இல்லை. ஆகச்சே, அவர் தம்மோட கடைசிமகனை பரசுராமரைக் கூப்பிட்டார். அவனைப்பெற்ற தாயை அவனோட கோடரியினாலே வெட்டிச் சாய்க்கும்படி ஆணையிட்டார். பரசுராமர் தந்தையின் உத்தரவை நிறைவேற்றிட்டான்!''— சலனத்தின் உணர்ச்சிகளைக் கட்டுப் படுத்திக்கொண்டு கதையை முடித்துவிட்டு, வெகு எச்சரித்

கையோடு முகத்தை நிமர்த்திப் பார்த்தபோது, அருமை ரஞ்சனி அதற்குள் அங்கிருந்து போய்விட்டது தெரிந்தது. மனச் சாட்சி விம்ம, மனம் விம்மியது; மனம் விம்ம, மனக் கண்களும் விம்முகின்றன.

பசி வந்திடப்'பற்று'ம் பறந்துவிடுமாமே?

'ஒமேகா' பூஞ்சிட்டுக்கு கடமைப்பசிதவிர,வேறு எந்தப் பசியும் வராது. அது, 'இரவு மணி ஒன்பது' என்றுகூவி முடித்ததும், விருந்தை வேடிக்கை பார்க்க ஆரம்பித்தது.

வாக்குத் தவறமாட்டாள் நந்தினி விலாசத்தின் ஜீவன் ரஞ்சினி; உயிரான—உயர்வான அத்தானோடு, கூடவே அமர்ந்தாள்.

ரதி, மகேஷ் ஜோடியை இனி யாராலும் பிரித்துவிட முடியாது.

எதிரும்புதிருமான ஆசனங்களில் நந்தினியும் பாபுவும்.

பாபுவுக்குப் பக்கத்து நாற்காலியில் அவன் தோழன். அசோகச்சக்கரவர்த்தி, பங்களாவுக்குப் புதிது!

செவகி வெறும் பொம்மை.

மற்றப்படி, அவரவர்கள் வேண்டியதை வேண்டிய மட்டும் எடுத்துப் போட்டுச் சாப்பிடவேண்டும்.

இங்கே திருவாளர் ரஞ்சித்தான் விதி!

முட்டை ஆம்லெட், தந்தூரி ரோஸ்ட், விரால்மீன் குழம்பு; செம்மீன் இல்லாமலா? புஹாரி நல்ல மனிதர்.

தொலைபேசி விளித்தது.

விரைந்தார் ரஞ்சித். கவியரசோடு அன்பில்பின்னிப் பிணைந்து உரையாடுவவதென்றால், அவருக்குச் சாப்பாடு கூட மறந்து போய்விடுவது வழக்கம். ஆனாலும், இப்போது

இவர் மறந்துவிடாமல், சாப்பாட்டுக்குத் திரும்பினார்!— விருந்தினர்களை மதிக்கவேண்டும்!

மகேஷ் பெரிதாகவே ஏப்பம் விட்டார்.

ரஞ்சனி மட்டிலும் மகேஷுக்குச் சளைத்து விடுபவளா?

ரஞ்சித் அனுசரணையாக ரசித்து, அமரிக்களமாகச் சிரித்தார்.

மகேஷ் கைகழுவி முகம் துடைத்தார்.

பாம்பைக் கண்டு பயந்து ஒதுங்கின பாவனையில், மகேஷை விலக்கி வைத்து நடந்தான் பாபு.

மகேஷை உற்றுப் பார்த்தான் அசோகன். பாபுவிடம் மெதுவான குரலில், "டேய்! இந்த ஆள்தானே உன் அப்பா?" என்று விசாரணை செய்வான்.

நாவினால் சுட்ட சொல்லைத் தாங்கும் இதயம் பாபுவுக்கு இல்லை; துணுக்குற்றான்; துடிதுடித்தான். "ஏண்டா அப்படிக் கேட்டே?" என்று ஆத்திரம் புழுதி எழுப்பக் கோபாவேசமாகக் கேட்டான் பாபு.

"உனக்கு இருக்கிறதாட்டமே அந்த ஆளுக்கும் மூஞ்சியிலே கறுப்பான மறு இருக்குதே, அதை வச்சுக் கேட்டேன். இப்படிப்பட்ட அதிசயமான ஒற்றுமை, அப்பா—பிள்ளைக்குத்தான் வாய்க்கும்னு சொல்லி விக்கிடுவாங்க!.. அதான் கேட்டேன்!"

"போடா, போடா, முட்டாள் ராஜா! அந்த ஆள் யாரோ? அவர் எங்க குடும்பத்துக்கு வேண்டப்பட்டவர்; மலையாள நாட்டிலே கொச்சியிலே இருக்கார். வந்த உனக்கு நானும் என் தாயார் தகப்பனாரைக் காண்பிக்கல்லே; நீயும் கேட்டுக்கிடல்லே!— சரி, தொலையட்டும். அங்கே பார், யாதொரு விஷமோ, விஷமமோ இல்லாம, அன்பு

என்கிற சக்திக்கும் தத்துவத்துக்கும் உயிரும் உடம்புமா அமைஞ்ச ஒரு சாட்சி மாதிரி, பேசிக்கிட்டு இருக்கிறது தான் என் அப்பா. தன்னோட அன்பான உசிரைத் தன் அன்பான அத்தான் கையிலே— ஆமாண்டா, என் அப்பா கையிலே ஒப்படைச்சிட்டு நிம்மதியாய், பூவும் பொட்டுமாக இருக்காங்களே, அந்தச் சீதேவியேதான் என்னைப் பெற்ற புண்யவதி!''

பாபுவிடம் மன்னிப்புக் கோரிய சக்கரவர்த்தி, கைகளைக் குவித்துப் பாபுவின் பெற்றோர் அமர்ந்திருந்த திசைக்கு ஒரு கும்பிடு கொடுத்தான். ''நான் புறப்படறேன், பாபு'' என்று பயணம் சொல்லிக் கொண்டான்.

''வண்டியிலே போறீயா, அசோக்?''

''இண்ணைக்குப் போயிடலாம்; நாளைக்குநான் வண்டிக்கும் வாசிக்கும் எங்கே போவேன்?''

''சரி, நீ புறப்படு; நான் எங்க அம்மாவுக்காக டாக்டரை வரவழைக்கணும்'', என்று கூறி, நண்பனுக்கு டாடா சொன்னான்.

''அம்மாவைப் பத்திரமாய்ப் பார்த்துக்கிடு, பாபு!''

''ரொம்பத் தாங்க்ஸ்!''

திரும்பும் போதும், பாபுவைப் பரசுராமர் சந்தித்தார்!

நந்தினி விலாசம்.

அடுக்கு: மூன்று

மேலைநாட்டுப் பாணியில் திட்டமிட்டு நிர்மாணிக்கப் பட்டது அந்தக் கூடம்.

ரஞ்சித், நாட்டுப் பணிகள் மற்றும் பொது நலப் பணிகளிலும் அன்போடும் பற்றுதலோடும் அக்கறையுடனும் உண்மையாகவும் விசுவாசமாகவும் ஈடுபட்டிருப்பதால், இத்தகைய பணிமுறைத் தொடர்புகளில் அவ்வப்போது இங்கே வருகை தரும் முக்கியமான அந்நியர்களுக்கு மட்டிலுமே இக்கூடத்தில் விருந்து கொடுப்பார் ரஞ்சித்.

டக்...டிக்...டக்!

ஒமேகா பூஞ்சிட்டுக்கு இதயம் உண்டு; மணி, இரவு ஒன்பது, ஐம்பது.

ரஞ்சித் என்றும் இல்லாத புது நாளாக இப்போது, அந்த விருந்தறையில் மிகத் தீவிரமான சிந்தனைக் கடலில் அகப்பட்டுக்கொண்டு கரையேற வழி தெரியாமல் மூழ்கித் தத்தளித்துக் கொண்டிருந்தார். அருமை ரஞ்சனி மாத்திரம் பத்து விநாடிக்கு முன்னர் ஓடோடி வந்து கதவுகளைத் தட்டியிருக்காமல் போயிருந்தால், அவர் எப்போதோ சாசுவதமாகவே கரை சேர்ந்திருப்பார். வளைகுடா நாடுகளில் விருந்தினர்களுக்குச் சமூக அந்தஸ்தைப் பிரதிபலிக்கும் வகையில் வழங்கப் படுகிற 'கா வா' எனப்படும் ஏலக்காய்க் காப்பியை ஏலக்காய் வாரியத்தின் செய்முறைக் குறிப்புப்படி தயாரித்துக் கொண்டிருப்பதாக முன்னறிவிப்புச் செய்ய ஓடோடி வந்திருக்கிறாள் மகராஜி!— அபாய அறிவிப்பு திசை மாறிவிட்டது!— பழனியப்பா!... காமாட்சி!...

ஊதுவத்தியின் தியாகத்தில் பிறந்த மணம் தெய்வ மணமாகத்தானே இருக்கமுடியும்?

பாங்கருக்கு இப்போது நல்ல மூச்சுத் திரும்பியது. மெய்யாகவே அதிசயம்தான். தன்னுணர்வோடு சுடுநீர்ப் படுதா விரித்த கண்களைத் திறந்தார்.

அதோ, வள்ளுவர்!

சாந்தி மகாத்மாவும் இருந்தார்!

இருவரும் இங்கே நிரந்தரமான பிரதம விருந்தினர் களாக்கும்!

ரஞ்சித் வியாபார ரீதியிலே, லட்சக்கணக்கில் புழங்கு பவர்; அன்பு முறையிலே கோடிக்கணக்கில் புழங்குவார். அப்படிப்பட்ட புள்ளி இப்போது தனிமையில், தன்னந் தனிமையில் அழுதார்; அழுதார்; அழுதுகொண்டே யிருந்தார்!—'ரஞ்..! கண்ணே ரஞ்சனி! அன்பே ரஞ்சனி! ஆருயிரே ரஞ்சனி! இனி நான் என்ன செய்வேன்?—பாவம் நீ என்ன செய்யப் போறே, ரஞ்?'—அந்தரங்கமான மேஜை டிராயர்ச் சாவி கையில் விதியாகச் சிரிக்கவே, அவர் திடுக்கிட்டார்! விதியாவது, வினையாவது, மண்ணாங்கட்டி யாவது!— 'எங்க ஸி. ஐ. டி. பாபு, மேஜையிலே நான் விட்டுட்டு வந்த சாவியை உபயோகப்படுத்தி, என்னோட அந்த ஊதா டயரியைப் புரட்டித் தன்னோட கதைகாரணத் தைப் பத்து வருஷம் கழிச்சு இன்னைக்காகிலும் தெரிஞ்சுக் கிடுவானு நான் மனப்பூர்வமாய் நம்பினேன்; அவன் அதிசயமான பிறப்பு இல்லையா?— என் சாவிக்கொத்தைத் தொடவே கிடையாது. அவன் மானஸ்தன்; ரோஷக்காரன் சின்னப்பிள்ளையா அவன்?—இல்லே; இல்லவே இல்லே!— பழனிமலை ஆண்டி மட்டும் பெரிய பிள்ளையா, என்ன?... ஆனா, பாவுக்கு பரசுராமரோட அவதாரம்தான் பிடிக்கு மாமே?...ஈஸ்வரா! இன்றையப் பொழுது எப்படி விடியப் போகுதோ, தெரியலையே?...' பாபுவின் நினைவுகளில் மகேஷ் ஒன்றிக் கலக்காமல் இருக்க முடியுமா?— முடியாது; முடியவே முடியாதுதான்!...மகேஷ் இந்நேரம் ரதியின் துணை இல்லாமலே, நிம்மதியாக உறங்கிக் கொண்டிருப்பார்! பாவம்!' சுயப் பிரக்ஞை சிலிர்த்தெழுந்தது. ரஞ்சனியை இன்னமும் காணோம்!— "ரஞ்...ரஞ்!" சத்தம் கொடுக் காமலே, சத்தம் போட்டு அழைத்தார் பாங்கர் ரஞ்சித்.

என்னவோ ஒரு குருவி அபசகுனம் பிடித்த முறையில் கத்தியது.

"ரஞ்...ரஞ்!"

இருட்டறையில் உலகம் இருக்கிறதோ?—இல்லை, காதல் இருக்கிறதோ?

ரஞ்சனி அப்போது ஒளிமயமான பள்ளி அறையில் தான் இருந்தாள். 'ரஞ்..ரஞ்!'—அத்தான் அவசரமாகக் கூப்பிடவே, அவள் அந்த ஏலக்காய்க் காப்பிக் கோப்பையை கைநடுங்க அவசரமாகத் தனியே பிரித்து எடுத்துக் கொண்டாள்!—அவளுக்கு அந்தக் கோப்பை நன்குக அடையாளம் புரியும்!— சற்று முன்னே, என்னவோ ஓசை கேட்டது; இப்போது, கேட்கவில்லை! திறந்திருந்த கதவைச் சாத்தக் கூட நினைவின்றி, வேர்வையையும் கண்ணீரையும் துடைத்துக்கொண்டே இடது கைக் கோப்பையை அழுத்தமாகவும் வலது கைக் கோப்பையை மிருதுவாகவும் பிடித்தவாறு, வெளியேறினாள். 'பாபு! பாபு!' அல்லும் பகலும் அவளுக்குப் பாபுவின் ஞாபகம்தான்! பெற்றவளுக்குப் பிள்ளை நினைவு, ஊனும் உயிருமாக ஊடுருவித் துளைத்து, ரத்தத்தின் ரத்தமாகப் பரவிப் பாய்வதுதானே வாழ்க்கையில் பாசத்தின் வரலாறு ஆகிறது! மேனி அல்லாடித் தள்ளாட, அங்கிருந்து வெளியேறுகிறாள்! தெய்வத்தைத் தேடி ஓடி வருகிறாள்!—முகூர்த்தப் பட்டும், பட்டுச் சரிகைச் சோளியும் இன்றும் கூட, ரஞ்சனிக்கு எவ்வளவு பொருத்தமாகவும் எடுப்பாகவும் அமைந்திருக்கின்றன!

"அ.....த்!"

"ரஞ்...!"

"இன்னம் பாபு வரல்லீங்களா?"...

''இல்லேம்மா!''— இதயத்தின் புயல் விழிகளில் சங்கமமாகிச் சுடுநீர் உருவாகிக் கொண்டிருக்கவே, ரஞ்சித் தடுமாறினார். இன்னுயிர் நேசக்கிழத்தி ரஞ்சனி கோப்பைகளை நகர்த்தியும் பிரித்தும் வைப்பதை, அவர் ஊன்றிக் கவனிக்கவும் செய்தார்: 'ரஞ்!'

ரஞ்சனி அந்தப் பரசுராமரின் படத்தை எதிர்ப் பக்கத்தில் தொங்க விட்டாள். அவளுடைய நீல நயனங்கள் இப்போது துலாம்பரமாகவே—பரிசுத்தமாகவே காணப்படு கின்றன!

மறுபடி, முன்னை மாதிரி, சத்தம் கேட்டது.

பாபு!...

''அம்மா! நான் யார்?'' என்று விதியாகிக் கேள்விக்கணை ஒன்றை அன்பான அன்னையின் அடிவயிற்றிலே—அவன் பத்து மாதம் குடியிருந்த அடிவயிற்றிலே வீசி எறிந்தான் பாபு.

ரஞ்சனி துளிகூட திடுக்கிடவில்லை. பூவும் பொட்டும் சிரித்தன!

ரஞ்சித் திடுக்கிட்டார்: அன்றொரு நாள் பழனிமலையில், 'நிஜமாகவே நீங்க என்னோட சொந்த அப்பாவாக இருந் திருந்தால், இப்படி வன்மத்தோட என்னை அறைஞ்சிருக்கவே மாட்டீங்க!' என்று பாபு விளையாக மாறிக் கேட்ட சுடுசொற்கள் மீண்டும் எதிரொலித்தன. சுட்டன.

''சொல்லு, அம்மா, நான் யார், அம்மா?''

''நீ பாபு!'' என்றாள் அன்னை.

''அது தெரியும்; ஆனா, நான் யார்னுதான் தெரி யல்லே!''

''பாபு, நீ என் பிள்ளை; எங்க பிள்ளையாக்கும்!'' மகத்தான அன்பையும் பாசத்தையும், ஊசலாடிக்கொண்டேயிருந்த தன்

னுடைய உயிரில் குழைத்துப் பதில் சொன்னுள் ரஞ்சனி!—'நீங்க நிஜமாகவே என் சொந்த அப்பாவாக இருந்திருந்தால், இப்படி என்னை வன்மத்தோடே அறைஞ்சிருக்கவே மாட்டீங்க!' என்று அன்று பழனியில் விதியாகக் கேட்ட பாபுவின் கேள்வி, அந்நேரத்தில் அவளது பெற்ற மனத்திலும் ஒலித்தது.

"தாயே, சத்தியம் பேசவேண்டிய நேரம் இது; என்னோட சொந்த அப்பா யாராம்? சொல்லு, அம்மா!".

ரஞ்சனி விதியின் நாயகி ஆனுள்; சிரித்தாள்; விதியாகச் சிரித்தாள்; வினையாகவும் சிரித்தாள்; 'டக்'கென்று எழுந்தாள்; கவனமாக நடந்து, அந்த ஏலக்காய்க் காப்பிக் கோப்பையை எடுத்தாள்; அந்தக் காப்பியைப் பருக முனைந்தாள்.

பாபு, "என்னோட கேள்விக்குப் பதிலைச் சொல்லிட்டு, நீ அந்தக் காப்பியைக் குடிக்கலாம்!" என்று ஆணையிட்டு, அந்தக் காப்பிக் கோப்பியைப் பறித்துக்கொண்டான்!

"உன் சொந்த அப்பா மிஸ்டர் மகேஷ்தான், பாபு!", அலறிக் கதறினுள் ரஞ்சனி!—பாபுவைப் பெற்ற அன்னை ரஞ்சனி!...

"ஐயையோ... தெய்வமே!"—பாபு தலையில் அடித்துக் கொண்டு ஓலமிட்டான். தாயிடமிருந்து பறித்துக்கொண்ட அந்தக் காப்பியை இப்போது அவன் குடிகக முனைந்தான்

"பாபு, அந்தக் காப்பியிலே விஷம் கலந்திருக்கேன்! ஐயையோ!...குடிச்சிடாதேப்பா!...பாபு...இந்த ஒரேயொரு வரத்தைமட்டும் நீ தந்திடு, போதும்! பாபு...பாபு!" ஓலமிட்டுப் பாய்ந்து அந்தக் கோப்பையை இப்போது அன்னை கைப்பற்றினுள்: "பாபு, பத்து வருஷத்துச் சோகக் கதையை என் வாயாலேயே சொல்லிட்டேறன்; அதுதான் நியாயம், தருமம்: சத்தியம் பேசவேண்டிய நேரம் இல்லையா, பாபு?—

சொல்றேன்: நானும் மகேஷும் உயிருக்குயிராய் ஒருத்தரை ஒருத்தர் நேசிச்சோம்; ஆனா, எங்க முதல் காதல் நிறை வேறல்லே; அந்த ஏக்கத்திலே, நான் செத்துப்போயிடப் பிரயத்தனப்பட்டப்ப, இவர்—என் அன்பு அத்தான் என்னைக் காப்பாற்றி, என் சுழுத்திலே மஞ்சள் தாலியையும் கட்டினுங்க; எங்களைத் தேடிச் சிதேவி வந்தா; எங்க நந்தினி பிறந்தாள்!— அப்பறம்...அப்பறம். ஒரு சமயம் சாகப் பிழைக்கக் கிடந்தேன்; டாக்டருங்கனெல்லாம் என்னைக் கைவிடப்பட்ட நெருக்கடியான அந்தச் சோதனை நேரத்திலே, இந்தப் பாவியாலே என்னுடைய முதல்காதலைக் கைவிடமுடியல்லே. மகேஷைக் கடைசியாக ஒரு தரம் பார்த்திடவேணும்னு ஆசைப்பட்டேன்; என் அத்தான் கிட்டே சொன்னேன்; மகேஷ் ஒரு அந்திப்பொழுதிலே வந்து சேர்ந்தார்; அப்போ, விதி இப்படியான சதுரங்க விளையாட்டை ஆடிப்பிடும்னு நானே, இல்லே, மகேஷோ கடவுள் சத்தியமாய் நினைக்கவே கிடையாது; மகேஷைக் கண்டடியும், எனக்குப் புது உயிர் வந்திட்டமாதிரி இருந்திச்சு; நாங்க ரெண்டுபேரும் என் அத்தான் ஒப்புதலோடே, மாடியிலே தனி அறையிலே பேசிக்கிட்டிருந்தோம்; எங்களையும் மீறி, எங்களையும் அறியாமல், நாங்க...நாங்க... ஐயையோ...!'' ரஞ்சனிக்குத் தொண்டையை அடைத்தது.

''ஐயையோ, அம்மா!'' மறுபடியும் பாபு தன் மண்டையைப் பிய்த்துக்கொண்டான்; தன்னுடைய அழகான இடது கன்னத்திற்குத் திருஷ்டி சுற்றிப் போட்டுக் கொண்டிருந்த அந்தக் கறுப்பு நிற மறுவை—தழும்பு மச்சத்தை-வடுவைப் பிய்த்தெறியமுற்பட்டவனைப்போலவே, அந்தத் தோல்பகுதியைச் சுரண்டிவிடத் தொடங்கினன்.

''பாபு!...''

இப்போது ரஞ்சித்தின் அன்புப்பிடிக்குள் சிக்கிக் கொண்டான் பாபு!...

ரஞ்ஜித் பேசலானார்: "பாபு! உன் அம்மா—என் மனைவி ரஞ்சனி, தான் செஞ்சிட்ட மன்னிக்கமுடியாத—மன்னிக்கக் கூடாத அந்தப் பாவத்துக்கு ஈடுசெஞ்சிட, மறுமுறையும் செத்துப்போயிடத் துணிஞ்சிட்டா; அப்போதும் நான்தான் அவளைத் தடுத்தேன். ஏன், தெரியுமாப்பா?—நான் வள்ளுவத்தை நம்புகிறவன்; என்னோட உயிரை நான் காப்பாற்றாமல் இருக்கமுடியுமா?—அன்பு இல்லாமல், வெறும் எலும்பைத் தோலினாலே போர்த்திக்கிட்ட வெறும் உடம்போடே நான் நடமாட ஒப்பல்லேப்பா!— எனக்கு வள்ளுவருக்கு அடுத்தபடியான ஆசான் மகாத்மா!—நீதி, நியாயங்களை எதிர்பாராமல், நான் அன்பின் சட்டத்தின் பாதங்களிலே அன்போடவும், இரக்கத்தோடவும் மனிதாபிமானத்தோடவும் சரண் அடைஞ்சேன்!—என் ஆருயிர் ரஞ்சனியின் பாவத்துக்குப் பாவ மன்னிப்புக் கொடுக்கவும் முன்வந்தேன்!...நீ உருவான அந்த முதல்காதலின்சின்னமான கருவைக் கட்டிக் காப்பாற்றிடவும் துணிஞ்சேன்!—அந்தி மாலையிலே விதி ஆடத் தொடங்கின சதுரங்க விளையாட்டு நல்லபடியாகவே—என் விதிப்பிரகாரமே நல்லபடியாகவே முடிஞ்ச நேரத்திலே, அந்திநிலா உதயமாகிடுச்சு, பாபு! —ஆனா, பத்து வருஷத்திலே இந்த ரகசியத்தை நாங்களே உன்கிட்ட சொல்லிப்பிடத்தான் நித்த நித்தம் தவிச்சோம் ஆனா, அந்தப் பாழும் விதி, இந்தக் கறுப்பு மரு—வடுமூலம் இப்பத்தான் அந்த ரகசியத்தை உடைச்செறிய வேளை பார்த்திருக்குது!...பாபு! பாபு!... என்னோட அன்பான ஆருயிர் ரஞ்சனி—உன்னோட அன்பான தாய் ரஞ்சனி, என் வரைக்கும் எப்போதுமே தீக்குளித்த சீதாப்பிராட்டியேதான்! ஆமாப்பா, பாபு!...ஆமாம்!" கட்டுமீறிய உணர்ச்சிகளால் கட்டுண்டிருந்த பாங்கர் ரஞ்சித், சின்னப்பிள்ளை மாதிரி விம்மிக்கொண்டேயிருக்கிறார்!

பாபு இப்போது பழனிமலை ஆண்டியாகக் கல்லாய்ச் சமைந்தான்; மறு இமைப்பில், தாயிடம் ஓடி, அவள்

கைப்பற்றியிருந்த அந்த நச்சுக் கோப்பையை வல்லமையோடு பறித்துப் பருகத் தொடங்கினுன்.

''ஐயையோ, பாபு!... பரசுராமராக மாறத் தவறிட்ட நீ, இனிமேல் தெய்வமாகவும் மாறவேண்டாம், அப்பனே பாபு! என் அப்பனே பாபு...!''

பாபு சிரிக்கிருன்: ''இப்பத்தான் எனக்கு நல்ல ஞாபகம் வருது! தாயே! நீங்க இந்தக் காப்பியிலே கலந்தது விஷப்பொடி இல்லே!—அந்த விஷத்தூளை நீங்க எடுத்து வச்சப்ப, நான் துப்பறிஞ்சு, மேஜைக்கு அடியிலே ஒளிஞ்சிருந்து, அதை மாற்றிப்பிட்டேன், அம்மா...!''

''பாபு!'' கதறிஞள் ரஞ்சனி.

பாபு அன்னையின் அன்புமிகுந்த அணைப்பில் கதறுகிருன்.

''அம்மா, நான் அவமானச் சின்னமா, தாயே?...'' என்று உயிர் ஒடுங்க, உள்ளம் ஒடுங்கக் கேட்டான்; கதறிஞன்; புலம்பிஞன் பாபு!

ரஞ்சனியின் அன்பான மார்பகம் கதறியது; அலறியது; கசிந்தது; வழிந்தது!

''பாபு, என் மகனே! நீ அவமானச் சின்னம் இல்லேப்பா!—இல்லவே இல்லே, பாபு!... நீ என்னோட புனிதமான பாசத்தின் அன்புச் சின்னம்! .. இந்தப் பாவியை ரட்சித்துச் சிலுவை சுமந்த என் ஏகநாதரான அன்பு அத்தானோட விலைமதிக்க முடியாத தெய்வீகமான தியாகத்துக்கு வாய்ச்சிட்ட அன்போட அடையாளம் நீ, பாபு!...''

''தாயே, என் தெய்வமே! நீ பெற்றெடுத்த பாபுவாகவே நான் இனி இருந்திடுறேன், அம்மா...!''

''பாபு!''—ரஞ்சனி விம்மிஞள்.

ரஞ்சித் அலறிஞர்: ''பாபு...! பாபு!''

பரசுராமருக்கு அழத்தெரியவில்லை!—பாவம்!...

ஊதுவத்தி அற்புதமாகவே மணம் பரப்பிக்கொண்டிருக்கிறது!

ஏலக்காய் காப்பிக்கு ஈடு ஏது?

அப்போது:

கீழே, கூக்குரல்:

ஓடினார்கள்.

"அய்யோ!... என்டே பர்த்தாவு மகேஷ் மறிச்சுப் போயி...!"

ரதி—மகேஷின் ரதி, கூக்குரலிட்டுப் புலம்புகிறாள்; நெற்றிச் சந்தனக் கீற்றும் புலம்புகிறது!...

மகேஷ் இனிமேல் பேசமாட்டார்!—அவருடைய அந்தப் பாழும் கறுப்பு மச்சம்—மரு—வடு எதுவுமே இனிப் பேசாது; பேசவே பேசாது!...

தோழி கலாவோடு நின்றாள் நந்தினி.

ரஞ்சனி, விதியின் தலைவியான ரஞ்சனி தன்னுடைய கூந்தல் பூக்களைப் பிய்த்து வீசி எறிந்தாள்.

"அப்...!" பாபு ஓலம் பரப்பினான்; கைகள் குவிகின்றன!...

"ரஞ்...என்னோட அருமை ரஞ்!"—விம்மி வெடித்தார் ரஞ்சித்—ரஞ்சனிக்கே உரித்தான ரஞ்சித். காலடியில் தஞ்சமடைந்து கிடந்த அந்த ஜாதி மல்லிகைப் பூக்களை தனக்கே உரிய ரஞ்சனியின் கூந்தலில் மறுபடியும் சூட்டினார்.

''அத்தான், என்னோட அன்புத் தெய்வமே! என்னோட அன்பான கர்த்தரே!''—ரஞ்சனி விம்மினாள்; விம்மினாள்; விம்மிக்கொண்டேயிருந்தாள்!...

''அ...ப்...பா!... எங்களோட கண்கண்ட தெய்வமே!...''—விம்மி வெடித்தவனாக, திருவாளர் ரஞ்சித் அவர்களின் அன்புக் கழலடியில் தஞ்சம் அடைகிறான் மணிப்பயல் பாபு!

அதோ, பார்க்கிறீர்களா?

ஊதாப்பூ வானத்திலே, அன்பின் ஆதரிச வடிவமாகத் தரிசனம் தந்த அந்தி நிலா, இப்போது பூரணமான அன்பின் நிதர்சனமான வடிவெடுத்துப் புதிதானதும் புனிதமானதுமான ஒரு சதுரங்க ஆட்டத்தை விளையாடத் தொடங்குகின்றது!...

வாழிய செந்தமிழ்!

●●●

wrapper printed by :

prabhu printing house,. Madras-17